2983

T.N.C.A. Debates

Official Report

Vol 41

No 3

C

29th April 1987

D
V211,31 'N87
N87·41·3
136528

வெளியீடு 25-5-1988 Issued 25-5-1988

2483

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 29, 1987-தொகுதி 41-எண் 3
Wednesday, the 29th April 1987 Volume 41-No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136527
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

29—4—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 503—547 |
| 2 தகவல் கோரல்— | |
| உள்ளாட்சிப் மன்றப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்க உரிமையளிக்கும் சட்டம் .. | 547—549 |
| 3 விதி 111-ன்கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை— | 549—550 |
| 4 அறிவிப்புகள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் .. .. .. | 550—551 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் .. | 551—552 |
| (இ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987. (ஆ.இ.) .. .. | 576 |
| (ஈ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987. (ஆ.இ.) .. .. .. .. | 576 |
| 5 கவன ஈர்ப்பு— | |
| (அ) குத்தாலம் ஒன்றிய விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் வழங்குதல். | 552—555 |
| (ஆ) திருச்சி மாவட்டம் முதுவத்தூர் மினி சிமிண்ட் ஆலை மூடப்பட்டிருத்தல் .. | 555—557 |
| (இ) வேளச்சேரி குடிநீர்த் திட்டத்தில் சைதை மடுவன்கரைப் பகுதிகள் இணைக்கப் படாதது .. .. .. .. | 558—561 |
| (ஈ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படும் நிலை .. .. .. | 561—563 |
| (உ) கன்னியாகுமரி மாவட்ட சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை .. | 563—564 |
| (ஊ) திருநெல்வேலி மாவட்டம் அம்பை வட்டத்தில் சாலைகள் மேம்பாட்டுப் பணி .. .. .. .. | 565 |
| (ஏ) கோவையில் சிலர் கள்ளச் சாராயம் அருந்தி மரணம் .. .. .. | 565—567 |

| | பக்கங்கள் |
|---|---|
| (ஏ) திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் ஆலயப் பணியாளர் போராட்டம் .. .. | 567—569 |
| (ஐ) சொத்து மதிப்பு வழிகாட்டிப் பட்டியலை பொதுமக்கள் பார்வைக்கு வைக்காதது. | 570—574 |
| (ஒ) தஞ்சை மாவட்டம் வெங்காரமாவடி கிராமத்தில் ஆதி திராவிட நலப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைத்தல் | 574—575 |
| 6 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. .. | 576 |
| (ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. | 577 |
| 7 வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு —தொடர்ச்சி. | 577—752 |
| (அ) கோரிக்கை எண் 36 — பாசனம் | |
| (ஆ) கோரிக்கை எண் 37 — பொதுப்பணிகள் —கட்டிடங்கள் | |
| (இ) கோரிக்கை எண் 38 — பொதுப்பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும். | |
| (ஈ) கோரிக்கை எண் 52 — பாசனம் குறித்த மூலதனச் செலவு. | |
| (உ) கோரிக்கை எண் 53 — பொதுப் பணிகள் —கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | |
| * திரு. சா. ஜெயச்சந்திரன் .. | 582—588 |
| * திரு. மு. ஜான் வின்சென்ட் .. | 588—595 |
| * திரு. அ. பிரணவநாதன் .. | 595—602 |
| திரு. துரை கோவிந்தராசன் .. | 602—616, 694 |
| திரு. கோ. வீரய்யன் .. | 616—624 |
| திரு. எப். எம். இராசரத்தினம் .. | 624—630 |
| திரு. ஆ. சந்திரசேகரன் .. | 630—634 |
| திரு. கே. குப்புசாமி .. | 634—641 |
| திரு. க. திருமலைச்சாமி கவுண்டர் .. | 641—646 |





| | பக்கங்கள் |
|---|---|
| திரு. த. பழனி .. | 646—651 |
| திரு. யு. பி. மாதையன் .. | 651—656 |
| திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் .. | 656—660 |
| திரு. எம். வி. இரத்தினம் .. | 660—665 |
| * திரு. மா. மணிமாறன் .. | 615, 666—675, 679—680, 703—704 |
| திரு. பி. என். இராமச்சந்திரன் .. | 675—684 |
| * திரு. வி. சுப்பிரமணியன் .. | 684—687 |
| திரு. வே. கு. சின்னசாமி .. | 687—691 |
| * திரு. மு. இராசாங்கம் .. | 692—697 |
| திரு. க. பாலசுப்பிரமணியன் .. | 697—703 |
| திரு. மா. சுந்தரதாஸ் .. | 704—717 |
| மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் .. | 577—582, 669, 695, 719—750 |
| 8 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 753 |

1987, ஏப்ரல் 29, புதன்கிழமை.

சித்திரை 16, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி".

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன; அதுபோல் குடிகள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 544 முதல் 548 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

### சத்துவாச்சாரி—வேலூர் புறச்சாலை அமைத்தல்.

544—(*வினா எண் 7535) திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி—வேலூர் புறச்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கிற வேலூர் நகரத்தில் புறச்சாலை மிகவும் அவசியம் என்று கருதி, தேசிய நெடுஞ்சாலையிலே புறச்சாலை அமைப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு ஏறக்குறைய ஓராண்டு நிறைவுற்றிருந்தாலும் இன்னும் அந்தச் சாலை வசதி செய்து தரப்படாமல் இருப்பதால் அங்கே அந்த நகரத்தின் உள்ளே பேருந்துகள் செல்வதற்கு—கடப்பதற்கு—ஏறக்குறைய 1 மணி நேரம் ஆகிறது. அதை உடனடியாக முடித்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. 16—4—1987-லே அதற்கு ஒப்புதலை மத்திய அரசாங்கம் தந்துள்ளது. எனவே, விரைவாக வேலையைத் துவக்க இருக்கிறோம். துவக்கியபின் நிச்சயமாகக் குறிப்பிட்ட காலத்திலே அது முடிக்கப்படும்.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புறச்சாலை வேலூரிலே இருக்கிற சத்துவாச்சாரியிலே முள்ளிப்பாளையப் பக்கத்திலே போய்ச் சென்றடைவதாக இருக்கிறது. இருந்தாலும்கூட அந்தப் புறச்சாலையைச் சற்று மாற்றி அமைத்தால் இன்னும் நீண்ட நாட்களுக்கு உண்டான திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கருதி பல்வேறு பகுதியிலே இருக்கிற இடங்களையெல்லாம் இப்பொழுது வீட்டு மனைகளாகப் பிரித்து, அந்த வீட்டு மனைகளினூடே அந்தச் சாலைகள் விரிவாக்கப் பணி தடைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்றினால்தான் அந்தச் சாலைகளுக்கு உரிய மரியாதை உரிய நோக்கிலே பொது மக்களால் கிடைக்கும். எனவே, அந்தச் சாலைப் பணியை விரைவுபடுத்தி, அந்தச் சாலையை முள்ளிப்பாளையத்தில் இருக்கிற பட்டுக்கோட்டை அழகிரி நிறுவனத்தினுடைய கட்டிடம் வரை மேலும் நீட்டித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அது முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 34 இலட்சத்திலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ரூ. 15 இலட்சத்திலே நிலம் கையகப்



படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, என்ன திட்டம் இடப்பட்டதோ, எப்படி அந்தச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டதோ, அந்த வகையிலேதான் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது அதிலே சேர்ந்திருக்கிறதா இல்லையா என்பது எனக்கும் தெரியவில்லை. எனவே, ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி அந்தப் பணியை நாம் துவக்கலாம்.

**திரு. கோ. இரகுபதி:** தலைவர் அவர்களே, இந்தச் சத்துவாச்சாரி-வேலூர் புறச்சாலைக்கு நீண்ட நாட்களாகத் திட்டமிட்டு, அதற்கு அனுமதி பெறுவதற்கு மத்திய சர்க்காரை அணுகி, அதில் ஏற்பட்ட காலதாமதத்தை நம்முடைய தமிழக அரசு ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. அந்தக் காலதாமதம் மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டதா, அல்லது நம்மால் ஏற்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நாம் எடுத்துக் கொள்கிறபொழுது, அதனுடைய முழுமையான செலவு என்ன என்பதைப் பற்றி முழுமையாக நாம் ஆய்வு செய்வதில்லை. எனவே, அந்த ஆய்வு செய்யாத காரணத்தால், அரசாங்கம் கொள்கை அளவிலே அத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று ஏற்றுக்கொண்ட பின்பு மற்றைய ஆய்வுகளை மேற்கொள்கிறோம். எனவே, அந்த ஆய்வு எவ்வளவு காலம் நடக்க வேண்டுமோ, அதற்குரிய காலத்திலே முடிக்கப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, திட்டம் துவக்குவதற்காக அரசாங்கம் உத்தரவிட்ட காலத்திலே இருந்து கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டதாக நமக்குத் தோன்றுகிறது. எனவேதான், முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் அனுமதி அளிப்பதற்கு முன்னாலேயே அதனுடைய முழுமையான ஆய்வையும் செய்து முடித்து, முழுமையாக அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்று இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அப்படி வருகின்ற பொழுது அரசாங்கம் உத்தரவிட்டு உடனடியாக வேலையைத் துவங்குவதற்கான வாய்ப்பு இந்த முறையிலே இப்பொழுது இருக்கிறது. இந்த நேர்வில் பழைய முறையைக் கடைப்பிடித்த காரணத்தால் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதைப்போல் தெரிந்திருக்கலாமேயொழிய, அரசாங்கத்தினுடைய அனுமதி

வாங்கி மற்ற எல்லா ஆய்வுகளையும் செய்கிற அந்தக் காலத்தைத் தான் இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி இப்போது நமக்குக் கிடைத்து விட்டது. எனவே, அந்த வேலையைத் துவக்குவதற்கு எந்தத் தடையும் இல்லை.

**மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தல்.**

545—(*வினா எண் 11631) **திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தி இரண்டு பேருந்துகள் மாறி செல்லும் பாலமாக மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்த்தஞ்சை மாவட்டத்தின் ஏறத்தாழ பாதிக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு தஞ்சையிலிருந்து செல்ல வேண்டுமென்றால், இந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பஸ் போக்குவரத்துக்கும், மற்றப் போக்குவரத்துகளுக்கும் இடையூறாக இருப்பதால் அந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்த இந்த ஆண்டாவது அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகப் பழைய பாலமாக இருக்கிறது. எனவே, அதை அகலப்படுத்துவது என்பது சரியாக இருக்காது. புதிய பாலம் தான் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு 42 லட்ச ரூபாய் ஆகும் என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ள நிதிவசதி இல்லாத காரணத்தினால் வருகிற ஆண்டிலே அதைப்பற்றி யோசிக்கலாம்.



**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்னார்குடி கீழ்ப்பாலமானது கீழ்த் தஞ்சைப் போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கிறது. அதை மாற்றி புதிய பாலம் கட்டவேண்டுமென்று நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்தும் மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே பரிந்துரை செய்தும் இதுவரையில் அது கட்டப்படவில்லை. எனவே வருகிற ஆண்டிலேயாவது புதிய பாலத்தைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா? அதைப் போலவே மன்னார்குடி-திருவாரூர் சாலையை இருவழிச் சாலையாக ஆக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருந்தாலும், இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கக் கூடியவைகள் மிகவும் முக்கியமானவைகள் என்று எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆர்வம் இருந்தாலும் நிதிப் பற்றாக்குறை காரணத்தினால் எடுத்துக்கொள்ளவில்லை. வருகிற ஆண்டிலே பரிசீலனை செய்யலாம் என்று நான் ஏற்கனவே சொன்னேன். வருகிற ஆண்டிலே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்னார்குடி கீழ்ப்பாலமானது மிகவும் பழைய பாலமாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு 42 இலட்ச ரூபாய் செலவு செய்யவேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ளவிரும்புவது, அந்தப் பாலம் பழைய பாலமாக இருக்கிற காரணத்தினால் அதிலே ஏதாவது பழுது ஏற்பட்டால் அல்லது அது உடைந்துவிட்டால், சீர்காழியிலிருந்தோ அல்லது பட்டுக்கோட்டையிலிருந்தோ மன்னார்குடிக்குச் செல்லவேண்டுமென்றால் அந்தப் பாலம் வழியாகத்தான் செல்லவேண்டும்—நிச்சயமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுவிடும். ஆகவே,

அதன் அவசியம் கருதி உடனடியாக இந்த ஆண்டாவது அதை எடுத்துக் கொண்டு அந்தப் பகுதியிலே போக்குவரத்து தடை ஏற்படும் நிலைமை ஏற்படாமல் நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே எடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லை. காரணம், திட்டங்கள் தீட்டப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டு விட்டது பல்வேறு காரியங்களுக்காக. ஆகவே அதை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பில்லை. வருகிற ஆண்டிலே எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தேன். எடுத்துக் கொள்வதற்கு முன் இடையூறு ஏற்பட்டால், தற்காலிகமாக மாற்றுவழி ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன். எனவே அந்த அச்சம் தேவையில்லை என்று கருதுகிறேன். எதிர்காலத்திலே அதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

### அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுளி ஒன்றியம், நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம்.

*546—(* வினா எண் 12326)* **திரு. வெ. சொ. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி திருச்சுளி ஒன்றியம் பரளச்சி-வடக்கு நத்தம் சாலையில் வடக்கு நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) வினாவில் குறிப்பிடப் படும் பணியினை ரூ. 5.00 இலட்சம் செலவில் எடுத்துச் செய்ய 1987-88 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



### பெரியார் மாவட்டத்திலிருந்து சென்னைக்கு சிறிய விமானப் போக்குவரத்து.

*547—(* வினா எண். 13431)* **திரு. கு. அ. செங்கோட்டையன், திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. பு. கோ. நாராயணன், திரு. வே. கு. சின்னசாமி மற்றும் திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வாயுதூத் (சிறிய விமானம்) விமானப் போக்குவரத்து அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து தனியாக பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டு ஈரோடு அதன் தலைநகராக ஆக்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்டம் தமிழகத்திலேயே மஞ்சளிலே முதலிடம் வகிக்கிறது. அதைப்போலவேதான் பெரியார் மாவட்டந்தான் கரும்புச் சர்க்கரையிலே முதலிடம் வகிக்கிறது. அதைப்போலவே புகையிலை ஏற்றுமதியிலும். வெளிமாநிலங்களிலிருந்து அங்கே வருகிறவர்களுக்கு அதிகமான கஷ்டங்கள் ஏற்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, பெரியார் மாவட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரவணைப்பிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முயற்சியால் எவ்வளவோ வளம்பெற்றிருக்கிற நோக்கிலே பெரியார் மாவட்டத்திலே வாயுதூத் என்ற வகையிலே சிறிய விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயுதூத் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னாலும்கூட 50 ஏக்கர் நிலப்பரப்பு அளவில் அதைச்

(முற்பகல் 10-10)

செய்ய வேண்டியிருக்கிறது. அந்தத் தளம் Run way -அமைப்பதற்காக ஏறக்குறைய ரூ. 60 இலட்சம் குறைந்தபட்சம் ஆகும் என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலே நாம் கேட்கும்போது, மாவட்டந்தோறும் அதை அமைக்க வேண்டுமென்ற ஆவலோடுதான் நாம் கேட்கிறோம். அப்படி முடியாது என்று சொன்னாலுங்கூட, தஞ்சாவூரிலே ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது. சேலத்திலேயும், திருநெல்வேலி மாவட்டத்திலே கயத்தாறிலேயும் அதுபோன்று அமைப்பதற்கு அவர்கள் ஏற்கனவே ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் புதிதாக இப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருப்பது ஊட்டியிலே இப்படி அமைக்க வேண்டுமென்று. அதேபோன்று, பெரியார் மாவட்டத்திலே ஈரோடுக்குப் பக்கத்திலே அமைக்க வேண்டுமென்ற ஆலோசனையும் இருக்கிறது. அதேபோன்று பாண்டிச்சேரியிலே அமைக்கப்படுமேயானால் கடலூரிலே நாம் கேட்க வேண்டியிருக்காது. ஒருவேளை, பாண்டிச்சேரியிலே அதை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லையென்றால், கடலூரிலே அமைக்க வேண்டுமென்று நாம் கேட்கலாம் என்று இருக்கிறோம். இப்படிப் பல்வேறு இடங்களிலே எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ அங்கேயெல்லாம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டாலும் மத்திய அரசாங்கத்திலேயிருக்கிற குறுகிய நிதி வசதி காரணமாக, அவர்கள் இதையெல்லாம் செய்வதற்குச் சாத்தியக்கூறு செய்து கொடுத்தால், அதாவது மாநில அரசு பொறுப்பேற்றுக் கொண்டு, செலவு செய்து கொடுத்தால் நாங்கள் அதை இயக்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். இவை எல்லாவற்றிலும் பொறுப்பேற்றுக் கொள்ள, இன்றைக்கிருக்கிற நிதிப் பிரச்சினையின் காரணமாக மாநில அரசுக்கு நடைமுறையிலே சிக்கலாக இருக்கிறது. இருந்தாலும் இதைப்பற்றி வலியுறுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தோடு நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே, ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். புரட்சித் தலைவர்கூட, மத்திய அரசாங்கம் பொறுப்பைக் கொஞ்சம் ஏற்றுக்கொண்டால், நாமும் அதோடு சேர்ந்து, செய்வதிலே பெரிய பிரச்சினை இருக்காது என்று தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, ஒரு நல்ல சூழ்நிலையிலே அது வெற்றிகரமாக அமையும் என்று நம்பிக்கையோடு இந்த முயற்சியை எடுத்துக்



**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் வேறு எந்த எந்த இடங்களுக்கு வாயுதூத் விடுவதைப் பற்றி அரசு பரிந்துரை செய்திருக்கிறது அல்லது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது? சேரன்மாதேவிக்கு வாயுதூத் விடுவதற்கு கோரிக்கை வந்திருக்கிறதா? அதோடு அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னதையொட்டி ஒரு முக்கியமான விஷயத்தை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ரன் வே அமைப்பதற்கு ரூ. 60 இலட்சம் செலவாகும் என்று சொன்னார்கள். திண்டுக்கல்லில் தனிப்பட்ட ஒருவர் விமானம் வைத்துக் கொண்டிருக்கிறார். அரசாங்கம் முன் வந்தால் குறைந்த அளவு வாடகைக்கோ, அல்லது பராமரிக்கவோ முன்வந்தால் போதும், கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார். பெரிய கோவில் பழனி, கோடை வாசஸ்தலமான கொடைக்கானல் இவையெல்லாம் அருகில் இருக்கின்றது. எனவே, அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள முன் வருவார்களானால், அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல்லுக்கு வாயுதூத் விடுவதற்கு, மற்ற ஊர்களைவிட முன்னுரிமை கொடுத்து, அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, சேரன்மாதேவிக்கும் வேடசந்தூருக்கும் கட்டாயமாக இந்த மாதிரி தளம் அமைக்கின்ற ஆலோசனை அரசாங்கத்திடத்திலே இப்பொழுது இல்லை. (பலத்த சிரிப்பு) ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு என்ற இடத்திலே அதற்காக இடம் பார்க்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே நிச்சயமாக, சிறப்பாக முடியும் என்று கருதுகிறேன். அது முடிகிறபொழுது சேரன்மாதேவியும் சேர்ந்து பயன்பெறும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

அடுத்து, திண்டுக்கல்லைப் பற்றிச் சொன்னார்கள். மதுரைக்கு மிக அருகிலே இருந்தாலுங்கூட, திண்டுக்கல்லுக்கென்று தனியாக வாயுதூத் விமானம் வருவதற்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும் என்று நான் நம்புகிறேன். தனியாரிடத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். 60, 70 ஏக்கரிலே அப்படி அமைத்திருக்கிறார்களா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஒருவேளை [illegible]

அரசினுடைய நிறுவனம் அதை ஒப்புக்கொள்ளுமேயானால், அதைப்பற்றி நிச்சயமாக நாம் ஆலோசிக்கலாம். அந்த வாய்ப்பு இருந்தால் மத்திய அரசாங்கத்திடத்திலே அதையும் நாம் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்ட மக்களுக்கும் பயன்படுகிற கோவை விமான நிலையம், பீளமேடு விமான நிலையம் மூடப்பட்டு 3 ஆண்டுகளாகி விட்டன. அதனுடைய பணிகள் எப்பொழுது முடிவுறும்? அதை விரைவுபடுத்துவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதிலே கொஞ்சம் இடம் கேட்டார்கள். அதை ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறோம் என்று நான் நம்புகிறேன். மத்திய அரசாங்கம் இப்பொழுது அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே சொன்னதைப்போல், அவர்களுக்கு இருக்கிற நிதிநிலையின் காரணமாக, அதிலே காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவாக அதைச் செய்ய வேண்டுமென்று நாம் மத்திய அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர் இங்கே வந்தபொழுதுகூட நேரடியாகப் பேசி அதை விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவாக முடியும் என்று நம்பலாம்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே கயத்தாறிலே இந்த நடப்பாண்டிலே வருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்ய முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, உடனே வரவேண்டிய முயற்சியைத்தான் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். ஆனால், நிதிப் பிரச்சினைதான் எல்லா இடத்திலும் இருக்கிறது. மத்திய அரசாங்கம்தான் அதை முறைப்படி செய்யவேண்டும். அவர்களுடைய பொறுப்பிலேதான் அது இயங்கி வருகிறது. எனவே, நிலம் வாங்குவது எல்லாவற்றையும் அவர்கள்தான் செய்யவேண்டும். ஆனால், நிலத்தை நாம்



அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம் மாநில அரசு பொறுப்பிலே மத்திய அரசுக்கு நிலம் வாங்கிக் கொடுத்து விடுகிறோம். ஆனால், தளம் அமைக்கிற பணிச் செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இருந்தாலும்கூட, அதற்குக்கூட நிதிப் பிரச்சினையின் காரணமாக செய்ய முடியாது என்று மத்திய அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது. எனவே, அப்படி நிதிப் பிரச்சினை இருக்குமானால், இரண்டுபேரும் சேர்ந்துகூட அதைச் செய்யலாம் என்று கூட நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிற்கு அங்கேயிருந்து சரியான அளவிற்கு நிதி இல்லாத காரணத்தால்தான்—சாதகமான பதில் கொடுக்காத காரணத்தால்—அதை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலைமையிருக்கிறது.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நிலமும் வாங்க வேண்டாம், எல்லா நிலமும் தயாராக இருக்கிறது. கொஞ்சம் செலவிலேயே பணியை முடித்துவிடலாம். ஆகவே சீக்கிரமாக இது கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பார்த்து அது பொருத்தமாக இருக்கும் என்று சொன்னால் தான் நடவடிக்கை எடுக்கிறார்கள். நிலத்தைப் பொறுத்த வரையில் சில இடங்களில் வாங்கி இருக்கிறோம். சில இடங்களில் வாங்குவதற்கான பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இதிலே மத்திய அரசிலிருந்து செலவழிக்கின்ற நிலைமை இல்லாத காரணத்தால் அவர்கள் முன் வராமல் இருக்கிறார்கள். கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது.

**திரு. துரை ராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்திய தேசம் முழுவதிலும் உள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்து பெரியார் மாவட்டத்திற்கு வியாபாரிகள் வந்து போகிற காரணத்தால், இதற்குமுன் உரிமை கொடுத்து அதை விரைந்து செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி எவ்வளவு விரைவாக செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அதை முழுமையாக எடுக்க இந்த அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே வேகம் எல்லாப் பகுதிகளுக்கும் வேண்டும்.

### தமிழகத்தில் தொழில் முனைவோருக்கு தொழிற் பயிற்சி நிலையம்.

548—(*வினா எண். 13815) **திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் Centre for entrepreneurship Development) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் துவங்க முன் வருபவர்கள் எவ்வளவோ கடனைப் பெற்று துவக்குகிறார்கள். அப்படி துவக்குகிற தொழில் வியாபார ரீதியில் லாபம் ஈட்டுவனவாகவும், அந்தத் தொழில் முடங்காமல் இருக்கின்ற வகையிலும், பெற்ற கடனைத் திருப்பி அளிக்கின்ற வகையிலும் அந்தத் தொழிலை எப்படி நடத்துவது என்றுகூடத் தெரியாமல் தத்தளிக்கின்ற வகையில் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தொழிலை லாபகரமாக நடத்துவதற்கு பயிற்சி கொடுக்கின்ற வகையில் ஒரு முன்னோடித் திட்டத்தை கொண்டு வந்து, தமிழக முதல்வரோடு கலந்து பேசி மீண்டும் இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆலோசிக்கலாம். ஏற்கனவே மாவட்டத்தில் தொழில் மன்றம் இருக்கிறது. அதை முழுமையாக பயன்படுத்திக் கொண்டால்கூட தேவையான ஆலோசனை முழுமையாக கிடைக்கும் என்று நம்புகிறேன். பயிற்சி என்பதைவிட அவர்களுக்கு எப்படி ஊக்கமும் ஆக்கமும் தருவது என்பது பற்றி அவர்களையே அழைத்துப் பேசி, தொழிலைத் துவக்குங்கள் என்று தூண்டி விடுவதற்கான ஒரு அமைப்பை உருவாக்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அத்தோடு சேர்த்து இதனையும் பரிசீலிக்கலாம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** தலைவர் அவர்களே, தொழில் துவங்குவதற்கு தொழில் முனைவர்கள் வருகின்ற நேரத்தில் அந்த உரிமம் கொடுக்கும்போதே அல்லது அந்த விண்ணப்பங்களை பரிசீலிக்கும்போதே எல்லா வகையான தேவைகளையும் அதற்கான அனுமதியையும் ஒரே இடத்தில் கொடுக்க வேண்டும் என்ற வகையில் சிங்கிள் விண்டோ சிஸ்டம் முறையில் தேசிய வங்கிகளிலே உடனடியாக கடனைப் பெறுவதற்கும், மின்சார வாரியத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கும், மற்ற உரிமங்கள் வழங்குவதற்கு தேவையான அனுமதி முழுவதையும் ஒரே இடத்தில் பெரும்வகையில் லைசன்ஸை பெற்ற உடன் வேலை துவங்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? ஏனென்றால் லைசன்ஸைப் பெறுவதற்குள் அவர்களுக்கு தொழிலைத் துவங்கலாமா, வேண்டாமா என்று யோசிக்கிற வகையில் நிலைமை இருப்பதால், இந்த சிங்கிள் விண்டோ சிஸ்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா, அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டந் தோறும் இந்த சிங்கிள் விண்டோ சிஸ்டத்தில் உள்ளபடிதான் மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் அழைத்து, வந்திருக்கிற மனுக்களை ஆய்வு செய்து வருகிறார்கள். எனவே அவர்கள் உரிமம் பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமை வராது. அந்த அளவுக்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இருந்

[1987 ஏப்ரல் 29

தாலும் கூட மனு செய்பவர்கள் அதிலே இருக்கிற சட்டதிட்டங்களைக்கூட நிறைவேற்றாமல் மனுவைக் கொடுக்கிற காரணத்தால் பல இனங்களில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. எனவே மனு

(முற்பகல் 10-20)

கொடுக்கக்கூடியவர்கள் கூட அவர்கள் சொல்கிற அந்த விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஓரளவிற்கு அக்கறையோடு செயல்படுவார்களானால், நிச்சயமாக இந்தத் திட்டம் செயல்படுவதற்கு அல்லது உரிமம் பெறுவதற்கு தடையிருக்காது என்று கருதுகிறேன். இப்போது புதியதாக ஏற்கனவே மானியத்தில் அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி எந்தெந்த மாவட்டத்தில் குறிப்பாக எந்தெந்த ஒன்றியத்தில என்ன தொழிலை ஆரம்பித்தால் அது வெற்றிகரமாக இருக்கும், விற்பனை மார்க்கெட்டிங் எப்படி இருக்கும், ரா-மெட்டீரியல்ஸ் எப்படி கிடைக்கும் என்பதை ஆய்வு செய்து பொது மக்களுக்கு தெரிகிற வகையில் ஒரு புத்தகமாகப் போட்டு, இந்த இந்தப் பகுதியில் இந்த இந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று பொது மக்களுக்கு விளம்பரமாகக் கூட கொடுத்து விடலாம். அப்படி கொடுக்கிறபோது அவர்கள் சுலபமாக அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கும், அதிலே என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன, எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கும், நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே அந்தவகையில் முழுமையாக செயல்படுத்தப்படுகிறபோது இந்தத் தொழில்களை ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்றும் கருதுகிறேன்.

**தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், செருதலைக்குடியில் விவசாய கூலிகளுக்கு வீட்டுமனைப் பட்டா.**

534—(*வினா எண். 7927) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், செருதலைக்குடி கிராமத்தில் பல ஆண்டுக்காலமாக



1987 ஏப்ரல் 29]

வசித்துவரும் ஏழை விவசாய கூலிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் செருதலைக்குடி கிராமத்தில் சுமார் 150 ஆதிதிராவிட மக்கள் பல்லாண்டுக் காலமாக குடியிருந்து வருகிறார்கள். அந்த இடம் ரெவின்யூ புறம்போக்காக இருக்கிறது. பல்லாண்டுகளாக மனு செய்தும் இன்னும் அதிகாரிகள் சரியான முறையில் நடவடிக்கையெடுப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த ஆண்டில் உடனடியாக பட்டா கொடுக்க இந்த அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம், சுரைக்காயூர் செருதலைக்குடியில் புல எண். 2-ல் ஆதிதிராவிட மக்கள் 52 பேர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இந்த நிலம் நாட்டாறு, வாஞ்சியாறு ஆற்று ஓர அரசுப் புறம்போக்கு நிலமாகும். 3.46 ஏக்கர் பரப்புடையது. ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தை நத்தமாக மாற்றி அடமானம் செய்ய வேண்டுமென்று அவர்கள் கோருகிறார்கள். செருதலைக்குடி கிராமத்தில் அரிசன கிராம வாசிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிற இடம் நாட்டாறு, வாஞ்சியாறு ஆகிய இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும். மேற்படி நிலம் அவசர வெள்ளக்காலங்களில் மண் எடுப்பதற்கு தேவைப்படுகிற பகுதியாகும். இரு ஆறுகளுக்கும் பொது கரையாகவும் இருந்து வருகிறது. மேலும் அந்த இடத்தை நத்தமாக வகைமாற்றி பட்டா செய்து வழங்க இயலாது என்று வருவாய்த் துறை அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறது. மேற்படி இடத்தில் பட்டா வழங்கினால் ஆக்கிரமிப்பு அதிகமாகி வாஞ்சியாறு, நாட்டாறு ஆற்று ஓட்டம் குறுகி விவசாயத்திற்கு பாதகமான சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அதைத் தருவதற்கு இல்லையென்றும், அந்த 52 பேர்களுக்கு வேறு இடங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளலாம் என்றும். அதற்கான முயற்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவருக்கு அறிவுரை வழங்கப்

பட்டிருக்கிறது. அந்த இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட அந்தப் பகுதியில் வழங்குவது என்பது இயலாத ஒன்று.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்படி ஆதிதிராவிட மக்கள் வாழ்கிற பகுதிகள் இரண்டு ஆறுகளுக்கு இடையே இருக்கிற பகுதிகள்தான். ஆக்கிரமிப்பு என்பது 100 ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்ட ஒன்று. கிட்டத்தட்ட இரண்டு பர்லாங் அளவிற்கு இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்ட பகுதி இருக்கும். அதிகாரிகள் கொடுக்கக்கூடாது என்று திட்டமிட்டு இந்த அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அந்த இடத்தைக் கொடுக்கலாமா, வேண்டாமா என்பதை நேரடியாக ஆய்வு செய்வதற்கு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட அத்தகைய பகுதிகளில் வெள்ளம் போன்றவை வருமென்பதால் அப்படிப் பட்ட புறம்போக்கை தருவது என்பது கடினமான ஒன்றுதான். உறுப்பினர் அவர்களே சொல்கிறார்கள், 100 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்து பட்டா தரவில்லையென்று. இதிலிருந்து தரக்கூடாது என்பது தான் தெரிய வருகிறது. பல லட்சக்கணக்கான வீட்டு மனைப்பட்டாக்களை வழங்குகிறபோது எளிதாக வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குகிற சூழ்நிலை இருக்குமானால் அதிகாரிகளுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும்? வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட அதிகாரி வேறு பல காரணங்களால் தரமுடியாமல் இருக்கலாம். எல்லா அதிகாரிகளும் அப்படி இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவரை வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணுகலாம். அவர் என்ன சொல்கிறார் என்று அவரிடமிருந்து வருகிற குறிப்பை வைத்துத்தான் நான் சொல்கிறேன். நேரிடையாக அங்கேயிருக்கிற சிறிய அதிகாரிகளை வைத்து அல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, வருவாய்த்துறை சிறப்பு ஆணையாளரை அனுப்பி, அதன் மூலம் இந்தக் குறிப்பு அனுப்பப்பட்டு, பதில் சொல்கிறோம். மாவட்ட



ஆட்சித்தலைவர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தனியாக வேறு இடம் தரவேண்டுமென்றும், அந்தக் குறிப்பிட்ட இடத்தை தருவதற்கு இல்லை என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரிடையாக விண்ணப்பம் தந்து மறுபரிசீலனை செய்யும்படியாகக் கூறலாம்.

**திரு. இரா. சா. முனிரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழ்மையில் இருக்கிற ஆதி திராவிட மக்கள் எல்லாம் வீட்டு மனைப் பட்டாக்கள் கோரி, ஏற்கனவே கடந்த 6, 7 ஆண்டுக் காலமாக நிலுவையில் உள்ள அந்த மனுக்களை எல்லாம் பரிசீலனை செய்து அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கை மனுக்களை எல்லாம் மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம் ஆங்காங்கே பரிசீலித்து வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அவர்களுக்கு குடியிருப்பு மனை வாங்கித் தருவது என்பது கடுமையான ஒன்றாக இருக்கிறது. அப்படிப் பட்ட நிலங்களில் எங்கேனும் புஞ்சையாக இருந்தாலும், அந்தப் புஞ்சை நிலத்தை எடுக்க வேண்டுமென்ற முறையில் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், நஞ்சை நிலங்களை, பயிரிடப்படுகின்ற அளவிலே இருக்கிற நஞ்சை நிலங்களை வீட்டு மனைக்காக கைப்பற்றக்கூடாது என்பதையும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே புஞ்சை நிலங்கள் எங்கே இருக்கிறதோ, அவற்றைக் கையகப்படுத்தி அவற்றை வீட்டு மனைக்காக வழங்க வேண்டும் என்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே இந்த செருதலைக்குடி என்ற கிராமத்தில் இருப்பவர்களுக்கு வேறு மாற்று இடம் கொடுக்க பரிசீலிக்குமாறு கோரப்பட்டிருக்கிறது என்று

சொன்னார்கள். இந்த செருதலைக்குடி கிராமம் என்று இல்லாமல், தஞ்சை மாவட்டத்திலே இப்படி பல்வேறு கிராமங்களில், வேறு மாற்று இடங்களே கிடைக்காத காரணத்தால், இந்த விவாசாயத் தொழிலாளர்கள் அந்த இடங்களில் வீடுகளைக் கட்டி வாழ முடியாத ஒரு அவல நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட அவல நிலைமையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு வேறு மாற்று இடத்தைக் கொடுப்பதற்கு துரிதமாக அரசு நடவடிக்கை எடுக்குமா? மாற்று இடம் கொடுக்கிற வரையில் இருக்கிற இடத்தை காலி செய்யாமல் இருப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலேயிருந்து அவர்கள் காலி செய்யப்பட்டார்களா, இல்லையா என்ற விவரம் இல்லை. அவர்கள் பட்டா கோரியிருக்கிறார்கள். பட்டா வழங்குவதற்கு இல்லை என்றுதான் குறிப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. அவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குவதற்கான முயற்சிகளை தனியாக எடுக்க வேண்டும். தனி இடம் பார்க்க வேண்டும் என்று கோரப்பட்டு இருக்கிறது. அந்தத் தனி இடம் புஞ்சை நிலமாக இருக்க வேண்டும் என்ற முறையில், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில், அரிசன காலனிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலங்கள் உரிய நேரத்திலே கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில், உள்ள பாப்பாரப்பட்டியில் உள்ள காலனிக்கு நிலம் ஒதுக்கப்படும் என்று சொல்லி, பத்திரிகையிலே விளம்பரம் செய்து அரசாங்கத் திட்டத்தின்படி நிலம் ஒதுக்கிக்கூட அந்த நிலம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே அந்தந்த இடங்களிலே இருக்கிற அரிசன காலனிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்கள் சரியான முறையில் அவர்களுக்கு ஒதுக்கப்படுமா என்பதை அதற்கான விவரக் குறிப்புகளை அளிக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலிருந்து தர்மபுரி மாவட்டத்திற்கு போய்விட்டார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். ஆகவே இப்போது இருக்கிற விவரங்கள்



எல்லாம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்துத்தான். அவர்கள் குறிப்பிடுகின்ற அத்தகைய குறிப்பு பற்றி தனிக் கேள்வி போட்டால் அதனுடைய நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து, அதற்கான விவரக் குறிப்புகளை அளிக்கலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசாங்கம் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் வீடுகளைக் கட்டவேண்டும் என்ற இலக்கை வைத்திருக்கிறது. அந்த இலக்கை எட்ட வேண்டும் என்றால், இந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வேண்டும். ஏற்கனவே, அவர்கள் எந்தெந்த இடங்களில் குடியிருக்கிறார்களோ, அந்த எக்சிஸ்டிங் ஹட்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த இடங்களுக்காவது பட்டா வேண்டுமென்று கேட்டால் அதிலும் மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகையினாலே ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி, 6 மாதத்திற்குள்ளாக, அவர்கள் ஏற்கனவே குடியிருக்கின்ற இடம் 1 சென்ட், 2 சென்ட், என்று குடியிருந்து வருகிறார்களே அந்த இடங்களில் எல்லாம் குடிசை வீடுகளிலே வசிக்கக்கூடிய அரிசனங்களுக்கும் மற்றும் ஜாதி இந்துக்களுக்கும் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் குடியிருக்கிற இடம் தகராறுக்கு உள்ளாகாத இடமாக இருந்து, அந்த இடத்தைக் கையகப்படுத்தி பட்டா வழங்குவதற்கான வாய்ப்பு உள்ள இடமாக இருந்தால், அந்த நேர்வுகளிலே எல்லாம் பட்டா வழங்குகின்ற முயற்சியினை வருவாய்த்துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். நான் வருவாய்த்துறை மானியக் கோரிக்கை வந்தபோதுகூட குறிப்பிட்டேன். 1977-க்கும் 1987-க்கும் இடையில் கிட்டத்தட்ட 10½ லட்சம் பேர்களுக்கு மேல் பட்டா வழங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலங்களில், புறம்போக்காக இருந்து, வேறு எந்த வகைக்காகவும் பயன்படாது என்று அறிந்து, பட்டா வழங்கலாம் என்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிற காலத்தில், எளிதாக வருவாய்த்துறைக்கு வருகிறது. ஆனால் புதிதாகப் பட்டா வழங்குகின்ற இடங்களைப் பார்க்க வேண்டுமென்று சென்றநிலே காலத்தாழ்வு ஏற்படுகிறது. அதைத்தான் வருவாய்த் துறையினர் ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள்.

**மாணவர்கள் மற்றும் பணி தேடுபவர்களுக்கு நிரந்தர சான்றிதழ் வழங்குதல்.**

535—(* வினா எண். 9812) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்கள் மற்றும் பணி தேடுபவர்கள் ஆகியோருக்கு நிரந்தர சாதி சான்றிதழ் (Community Card) வருவாய்த்துறை மூலம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்; (ஆ) பள்ளி இறுதி வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் பள்ளிச் சான்றிதழ்களில் வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்படும் ஜாதிச் சான்றிதழ்களின் அடிப்படையில் அந்த மாணவர்களுடைய சாதியை பதிவு செய்து அளிக்கலாமா என்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இது பரிசீலனையில் இருந்து வருகிறது என்கின்ற விவரங்களைச் சொன்னார்கள். நன்றி. உண்மையிலேயே சர்வீஸ் கமிஷன், குரூப்-4 எக்ஸாமினேஷனை ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் பேர் எழுதுகிறார்கள். 5 லட்சம் பேர் ஒவ்வொரு முறையும் விண்ணப்பிக்கும்போது சாதிச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல கூட, சாதியைப் பற்றிய விவரம் எஸ்.எஸ்.எல்.சி. புக்கிலே இருந்தாலும்கூட, அதை அதிகாரிகளோ அல்லது பணிபுரிபவர்களுக்காக வேலை கொடுப்பவர்களோ அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லி, அவ்வப்போது அந்தந்தத் தேதிகளில் ஒரு சர்டிபிகேட்டை தாசில்தாரிடமிருந்து வாங்கி வர வேண்டுமென்று சொல்கிறார்கள். இதனால் வருவாய்த்துறை அதிகாரிகளின் நேரமும் வீணாகிறது. லட்சக்கணக்கான மக்கள் ஒவ்வொரு முறையும் இப்படி சான்றிதழ் வாங்குவதற்காக அலைய



வேண்டியிருக்கிறது. எனவே, எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திலே சேர்க்கப்படுகிறபோது அதையே சாதிக்கான ஆதாரமாகக் கொள்ளலாம். மீண்டும் வருவாய்த்துறை அதிகாரியிடம் வாங்க வேண்டியதில்லை என்கிற ஆணையை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது போன்று, இதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன என்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே, அவ்வப்போது ஒவ்வொரு தடவையும், சான்றிதழ்களை தனித்தனியாகப் போய் வாங்குகின்றபோது அதற்கு குறிப்பிட்ட காலத்திலே அவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். அதிகாரிகளும் வழங்கித் தீரவேண்டும். அதிகாரிகளும் அதற்கான அடிப்படைகளைப் பெறுதல் வேண்டும். அதிகாரிகளிடத்தில் பெறுகின்றபோதுகூட காலத்தாழ்வு ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல், சிலபல இடங்களிலே மோசடிகளும் ஏற்படுகின்றன. வேறு பல நிலைமைகளும் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல, சான்றிதழ் வழங்குகின்றபோதுகூட, முன்னுக்குப் புறம்பான வகைகளில் சாதிகள் குறிக்கப்பட்டு, வசதிகள், சலுகைகள் பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் சான்றிதழ்களை எப்படியோ பெற்றுக்கொண்டு வருகிறார்கள். பிறகு ஒருவர், இருவர் புகார்களை செய்ததற்குப் பிறகு வழக்குகள் தொடுக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை திரும்பப் பெறுவதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி சான்றிதழ் வழங்கியவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வேறு பல முயற்சிகளெல்லாம் வருகின்றன. இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளையெல்லாம் மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறுவது போன்று களைவதற்காகத்தான் முன்னாள் தலைமைச் செயலாளர், கல்வித்துறைச் செயலாளர், சமூகத்துறைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு உரிய பரிந்துரைகள் வழங்கும்படியாக கேட்டுக்கொள்ளப்

பட்டார்கள். அவர்கள் தற்போது மாணவர்களின் கல்வி நிறுவனச் சான்றிதழ்களில் பிறப்புச் சான்றிதழ்களின் அடிப்படையில், மாணவர்களின் பிறந்த தேதி குறிக்கப்படுவதுபோல், இனிமேல் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகளால் வரையறுக்கப் பட்ட படிவத்தில் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை இரட்டைப் படிகளில் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்கும்படி கல்வி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு, அவ்வாறு கொடுக்கப்பட்ட சான்றிதழ் களின் அடிப்படையில் மாணவர்களின் கல்விப் பதிவேட்டில் அந்த மாணவர் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்று குறித்த பதிவுகளைச் செய்து ஒன்றை கல்வி நிலையம் வைத்துக்கொண்டு, மற்றொன்றை அந்த மாணவனிடமே தந்துவிட வேண்டுமென்றும் ஒரு நிலையான ஏற்பாட்டை செய்து விடுவோமேயானால் ஒரு தடவை வாங்கினால் போதும், இதை எல்லா இடத்திற்கும் காண்பிக்கலாம். ஒன்று, அத்தாட்சி யாக அந்த கல்வி நிறுவனத்திலே இருக்கும் என்று பரிந்துரை செய்து இருக்கிறார்கள். மற்றொன்று, தற்போது தொழில் மற்றும் கலைக் கல்லூரிகளில் சேர்வதற்கான விண்ணப்பங்களில் சாதி பற்றிய விவரங்கள் விண்ணப்ப படிவங்களிலே ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதைமாற்றி சாதி சான்றிதழ் ஒப்பமிட்ட நகல்களையோ அல்லது 'ஜெராக்ஸ்' நகல்களையோ சேர்த்து இணைத்து மாணவர்கள் அனுப்பும் வகையில் அந்த விண்ணப்பப் படிவத்தை மாற்றி விடுவோமேயா னால் அந்தச் சான்றிதழ்களையே காட்டிவிட்டால் அடிக்கடி போய் அதிகாரிகளிடத்தில் வாழ்நாள் முழுவதும் அலைய வேண்டிய அவசியம் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்களுக்கு என்று 18 இடங்களும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று 50 இடங்களும் என்று ஒதுக்கிவிட்ட அத்தகைய நிலைமையில் ஒவ்வொரு கட்டத்திலேயும் அவர்கள் 10 ஆவது படிக்கும்போது, பிறகு மேல்நிலைக்குப் போகும்போது, தொழில் கல்லூரிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் போகும்போது சான்றிதழ்களைத் தர வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இந்த இடர்ப்பாடுகள் என்று இந்த யோசனைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிறது : இதுபற்றி விரைவிலே ஒரு முடிவு எடுத்து ஆணை



பிறப்பித்துவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் கருதுவது போன்றும், மற்றவர்கள் எண்ணுவது போன்றும், இந்தச் சான்றிதழ் ஒன்றாக அமைந்துவிடுமேயானால் சர்டிபிகேட் மாதிரி அமைந்துவிடும். அதையே எல்லா இடங்களுக்கும், எப்போதும் காட்டவேண்டிய அவசியம் வரும். அடிக்கடி அதிகாரிகளிடத்தில் வாங்கவேண்டிய அவசியம் இருக்காது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிப்பதைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலைச் சொல்லியிருக் கிறார்கள். இதே சாதி சான்றிதழ் வாங்குவதைப்போல ஒவ்வொரு முறையும் நேஷனாலட்டி சர்ட்டிபிகேட் வேறு வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படி எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் சாதிக்கு நிரந்தரமாக ஒரு சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு வாய்ப்பை உருவாக்குகிறபோது அதே பகுதியில் அதற்கான சான்றிதழையும் இணைத்து தனியாக யாரும் அந்த நேஷனா லிட்டி சர்ட்டிபிகேட் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்தப் பரிசீலனையோடு சேர்த்து பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் சேர்த்துவிடலாம். சாதியை சொன்னாலே இந்த நேஷனாலட்டியைத் தவிர வேறு எந்த நேஷனாலிட்டியும் இந்த உலகத்தில் இருப்பதற்கு நியாயம் இல்லை (சிரிப்பு). இருந்தாலும்கூட, அதையும் சேர்ப்பதற்கு என்ன வழிவகை என்று நாம் யோசிக்கலாம்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் பிறக்கும் போதே சாதியில்தான் பிறக் கிறான். ஆகவே பிறக்கின்றபோது பர்த் சர்ட்டிபிகேட் கொடுக் கும்போதே. இதை இணைத்துவிட்டால் இந்த சாதியில் பிறந்தவன் அல்லது கலப்புத் திருமணத்தில் பிறந்தவன் என்று சொன்னால் இவ்வளவு தொல்லைகள் வராதே வராது. ஆகவே, When the birth Certificate is issued, along with it

அதாவது ரிலிஜயன் போடுவதைவிட காஸ்ட்டு backward or forward or otherwise ஏதாவது போட்டுப் போடுவது இன்னும் சிறந்த முறையாக இருக்குமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நாளுக்கு நாள் இதை செக்குலர் ஸ்டேட் ஆகவும் கொண்டு போகவேண்டும். சாதி மனப்பான்மை மாற்றப்பட்டு எல்லாம் போகப்போக ஒழிந்து பொருளாதாரத் தன்மைகள் அடிப்படையில்தான் அறிவுத் திறன், ஆற்றல்திறன் மற்றும் உழைப்புத் திறனுக்கு மதிப்பு கொடுக்கிற ஒரு காலம் வரவேண்டும் என்று சொல்கிறபோது, அதைப்பற்றி யாருமே கவலைப்படவில்லை என்கிறபோது நாம் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் கவலைப்படுகிறவர்களுக்கு இதில் இடம் வகுக்க வேண்டும் என்பதற்குத்தான் இந்த ஏற்பாடுகளே தவிர இதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்கிறவர்களுக்கு இது வேண்டாம். அப்படி கவலைப்படாத இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் இருப்பதன் காரணமாக அவர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. இரா. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டத்தில் கொண்டாரெட்டி என்ற சமுதாயம் இருப்பதாக பள்ளி மாணவர் கள் பருவத்திலேயே அந்த சான்றிதழில் கொண்டாரெட்டி என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது செங்கற் பட்டு மாவட்டத்தில் கொண்டாரெட்டி என்ற சாதி இல்லை என்று கெஜட் பப்ளிகேஷன் வந்து இருப்பதாகவும் ஆனால் இளைஞர் பருவத்திலேயே மாணவர்களுக்கு கொண்டாரெட்டி என்று எழுதிவிட்டு அவர்கள் தேர்வுகளை முடித்து, வேலைக்குச் சென்று நேர்முக தேர்வின் மூலமாக தேர்ந்தெடுத்ததற்குப் பின்னால் சான்றிதழ் வேண்டும் என்று அறிவிப்பு வந்ததற்குப் பின்னால் தாசில்தார் இடத்திலே போய் கேட்கிறபோது கொண்டாரெட்டி என்ற சாதி இந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் இல்லை, நாங்கள் கொடுக்க முடியாது என்று சொல்லி, அந்தப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு உத்திரவு வந்தும்



இந்த சான்றிதழ் இல்லாத காரணத்தால், அவர்கள் போய் அந்தப் பணியில் சேரமுடியாத அவல நிலை இருக்கிறது. ஆகவே அதற்கு அந்த மாணவர்கள் எந்த சாதி என்றாவது சான்றிதழ் தாருங்கள் என்று வட்டாட்சியர் இடத்திலே கேட்டாலும் நாங்கள் எந்த சாதி சான்றிதழும் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்களே, இதற்கு வேறு வழி ஏதாவது இருக்கிறதா? அதற்கு மறு உத்திரவுக்கான வாய்ப்பை அரசு உருவாக்கி உத்திரவை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டாரெட்டி என்ற ஒரு குறிப்பிட்ட இனம் மட்டும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தது என்று ஆக்கிவிட்டதன் காரணமாக வந்த வம்பு. ரெட்டியார் வகுப்பில் ஏராளமான பிரிவுகளில் இருப்பவர்கள் அதற்குள் நுழைந்து கொண்டு தாங்களும் கொண்டாரெட்டி, கொண்டா ரெட்டி என்று வந்த உடனே அதிலே விளக்கம் பெறமுடியாத அளவுக்கு பல பேர் அந்த சான்றிதழைக் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள். அதற்குப் பிறகு இது விவகாரமாக ஆகி, பல்வேறு புகார்கள் எல்லாம் வந்த பிறகுதான் அவர்கள் தஸ்தாவேஜ்கள் எல்லாம் அவர்களுடைய முன்னோர்கள் தஸ்தாவேஜ்கள் எல்லாம் கொண்டு வந்து பிறகு அதை நிரூபிக்கவேண்டும் என்ற கட்டாயம் சில இடங்களில் வந்தது. ஆகவே கொண்டா ரெட்டி என்று சொல்லக்கூடியவர்கள் ஏற்கனவே ஒரு நூறு ஆண்டு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தவர்கள். சில குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கிறார்கள் என்று வந்ததே தவிர, எல்லா இடங்களிலும் பரவலாக இல்லை. அந்த அடிப்படையில் சில பல முடிவுகள் எடுக்க வேண்டிய அவசியம் வந்தது. ரெட்டியார் என்று வருகிறபோது அவர்கள் முற்போக்காக ஆகிவிடுகிறார்கள். சில பேர் பிற்பட்டவர்களாக ஆகிவிடுகிறார்கள். இந்த கொண்டாரெட்டி என்கிற ஒரு இனம் மட்டும் பழங்குடி இனத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் அவர்களுக்கு மட்டும் தனியாக இலக்கணங்கள் வகுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இப்படி வருவார்கள்

துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சான்றிதழை வழங்கி வருகிறார்கள். அவர்கள் அந்த சலுகையைப் பெற்று வருகிறார்கள்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இந்தச் சான்றிதழ்கள் வழங்கி வரக்கூடிய அந்த ரங்கராட்டினம் சிஸ்டத்தை மாற்றி அமைத்து ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சிக்கிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த சாதி சான்றிதழினாலே எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பதவி இறக்கம் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது இவர்கள்

(முற்பகல் 10-40)

சொல்லுகின்ற பல்வேறு இயக்குநர்கள், ஆணையர்கள், செயலாளர்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கும் இந்த சிஸ்டத்திற்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறது என்று எனக்கு தெரியவில்லை. அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் இருக்கின்ற உறவுகூட இவர்களுக்கு இருக்காதுபோல் இருக்கிறது. ஆகவே, அந்தந்த மாவட்டத்தில், அந்த சாதி நிலையைத் தெளிவாகத் தெரிந்த முன்னோர்கள், பழமையானவர்கள் ஆகியவர்களை இணைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், அந்தக் கணக்கெடுப்பவர்களை வைத்து, ஒரு ஐம்பெரும் குழு அமைக்கின்ற வகையில் இதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய பிரச்சினை இப்போது எழவில்லை. அதிலே ஏதாவது சங்கடங்கள், மற்ற நிலைமைகள் ஏற்படுமானால், அதிலே என்ன ஏற்பாடு செய்வது என்பது பற்றிப் பிறகு பரிசீலிக்கலாம்.



### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு கட்டிடங்கள் கட்ட இலவச நிலம் வழங்கல்.

536—(*வினா எண். 10326) **திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவக் கல்லூரிக் கட்டிடம், பொறியியல் கல்லூரிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு புறம்போக்கு நிலம் இலவசமாக வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிலம் வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### சென்னையிலுள்ள குதிரைப் பந்தய மைதானம்.

537—(*வினா எண். 10364) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள குதிரைப் பந்தய மைதானத்திற்குக் கொடுத்துள்ள நிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் கொடுக்கும் பணம் எவ்வளவு?

(ஆ) எத்தனை வருடங்களுக்கு அவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னையிலுள்ள குதிரைப் பந்தய மைதானத்திற்கு கொடுத்துள்ள நிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் ரூ. 614.97 குத்தகை வரியாக செலுத்துகிறார்கள்.

(ஆ) 26—10—1945-ம் நாளிலிருந்து 30—3—2044-ம் நாள் வரை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள குதிரைப் பந்தய மைதானத்தில், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், அறிவித்துள்ள

30 இலட்சம் வீடுகளைக் கட்டுகின்ற திட்டமாக, வீட்டுவசதி வாரியம் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டில் அரசு தமிழ் நாட்டில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஆணையிட்டது. டில்லி உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு குதிரைப் பந்தயம், பந்தயம் கட்டுவதை ஒழிக்கும் சட்டம் 1974 மற்றும் சென்னை குதிரைப் பந்தயம் குழுச் சட்டம் 1986 ஆகியவற்றின் செயல் திறனை எதிர்த்து, பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால், அவற்றின்மீது முடிவு தெரிந்தபின், குத்தகைக்கு அளித்த நிலங் களை இதர பொது நோக்கங்களுக்காக அளிக்க பரிசீலனைக்கு வரும். அதுவரை எந்தவிதமான முடிவையும் நாம் எடுப்பதற் கில்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயப் பிரியர்கள் வெளிமாநிலங் களுக்குச் சென்று ஆடுகிறார்கள். நமது மாநிலத்தினுடைய வருவாய் அங்கு சென்று விடுகிறது. எனவே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Turf Agent நியமனம் செய்யப்படுவார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதற்கு இங்கேயே குதிரையை ஓட்டிவிடலாம். இவ்வளவு கஷ்டம் வருவதற்குப் பதிலாக ரூ. 3½ கோடி, ரூ. 4 கோடி வருமானமாவது வரும். இதை ஒரு கொள்கை என்ற அடிப்படையில்தான் தடுத்து நிறுத்தியிருக் கிறோம். அப்படி ஏற்பாடு செய்யும்போது, அதற்கு ஆக்கம் தருகிறோம் என்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆகவேதான் இதிலே எந்தெந்த வகையில் வரலாம் என்பது கொள்கை யினுடைய அடிப்படையில் முடிவு கட்ட வேண்டிய ஒன்றாக இருப்பதன் காரணமாக, அதற்கு ஆக்கம் தருகின்ற எந்த முயற்சிக்கும் அரசு ஈடுபாடு கொள்வதற்கில்லை.

1987 ஏப்ரல் 29]

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தய சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற மொத்த இடத்தின் பரப்பளவு எவ்வளவு? அதே இடத்திற்கு அதிகமாகவே அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 160.86 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் குத்தகையாக 99 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதைவிடக் கூடுதலாக ஆக்கிரமித்திருக்கிறார்களா என்ற விவரம் என்னிடம் இல்லை. அப்படி ஆக்கிரமித்திருப்பார்களேயானால், அதுபற்றி தனி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகுப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றமும், தலைமைச் செயலகமும், தற்போது மைய அரசுக்குச் சொந்தமான சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, தமிழக அரசு இந்த குதிரைப் பந்தய சங்கத்திடமிருந்து அந்த நிலத்தைப் பெறுகின்ற நேரத்திலே, நம்முடைய சட்டமன்றத்தையும், சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிகளையும், ஏன் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களையும் ஒரே இடத்தில் கட்டுவோமேயானால், பல்வேறு வசதிகள் பெற வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினால், அரசாங்கம் அதை எடுக்கின்ற நேரத்திலே, இதை ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 160.86 ஏக்கர் நிலப்பரப்பு அங்கேயிருக்கிறது. அதை முழுவதையும் அரசாங்கத்திற்குக் கையகப்படுத்தி, அரசாங்கத்திற்குச் சொந்தமாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, நாமே பயன்படுத்துகின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமேயானால், எல்லோரும் விரும்புவார்களேயானால், அதையெல்லாம் செய்வதற்குக்கூட ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் கொண்டு போவதுகூட வசதியாக இருக்கும். அது

[1987 ஏப்ரல் 29

நல்ல யோசனை. ஆனால் அந்த யோசனையை எந்த அளவிற்கு நிறைவேற்றமுடியும் என்று உறுதிமொழி சொல்ல இயலாது. அந்த யோசனையை பல்வேறு யோசனைகளின் அடிப்படையிலே வைத்து நாம் பரிசீலிக்கலாம்.

**மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதம்.**

538—(*வினா எண். 12102) திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் தொடர்ச்சியாக நீண்டகாலமாகவே மத்திய அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும்படியான அதே சம்பள விகிதங்களையும் மற்றவிதமான பண ரூபத்தில் இருக்கும்படியான சலுகைகளையும் கொடுக்கும்படி கேட்டு வருகிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லையா? அமைச்சர் அவர்கள் இப்போது செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். அதை இனிமேலாவது கவனத்தில் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாக மாநிலத்திற்கு மாநிலம் அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் மாறுபட்டு உள்ளன. ஒவ்வொரு மாநில அரசும் மாநிலத்தின் நிதி நிலைமை, வேலைவாய்ப்பு அளிக்கும் தன்மை, ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றை கருத்திலே வைத்துக்கொண்டு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை மாநில அரசுகள் நிர்ணயித்து வருகின்றன. இந்தியாவில் 22 மாநிலங்களுடைய ஊதிய விகிதமும் ஒரே விதமாக அமையவில்லை. மத்திய அரசு ஊழியர்களின், மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் ஒன்றேபோல் இருக்க வேண்டும் என்கின்ற ஒரு விதி முறையும் இல்லை. அந்த அடிப்படையிலேதான் அவரவர்கள் அந்த அந்த மாநிலத்தினுடைய



1987 ஏப்ரல் 29]

சூழ்நிலைக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை அமைத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தத் தன்மைக்கு ஏற்ப தமிழகத்திலே நம்முடைய மாநிலத்தின் நிதி வருவாய், இங்கே இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வைத்து நாம் ஊதியக்குழு அமைப்பதும், ஊதியக் குழு பரிந்துரையின் அடிப்படையிலே ஊதியங்களை நிர்ணயிப்பதும் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு மாநிலம் சில அற்ப சொற்ப வித்தியாசங்கள் இருக்கும் என்பது உண்மை. இல்லை என்று நாம் சொல்லவில்லை. ஊழியர்களுடைய இந்தக் கோரிக்கை மாநிலங்களுக்கு மாநிலம் வித்தியாசம் இருக்கிறதா என்ற அடிப்படையிலிருந்து கிளம்பவில்லை. இங்கே நமக்கு இருக்கும்படியான பொருள் விலையையும், அதை அவர்கள் வாங்கி ஜீவனம் செய்வதற்கான, வாங்கும் சக்தியும் அவர்களுக்கு இருக்க வேண்டும். அதற்காகத்தான் ஊதியம் பெறுவது. அந்த நிலைமைக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை, நமது அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரா அல்லது கர்நாடகா போன்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் இருக்கும்படியான ஊழியர்களுக்கு கொடுக்கும்படியான ஊதியத்தை விட உயர்ந்த ஊதிய விகிதங்கள், அதே விதமான கிரேடுகளில் உள்ளவர்களுக்கு கொடுத்துக் கொண்டு வரும்போது இங்கே இருக்கின்ற ஊழியர்களுக்கு அதை உயர்த்திக் கொடுப்பது அவசியமாகவும், தேவையாகவும் இருக்கும். மத்திய அரசாங்கம் கொடுக்கும்படியான சம்பளத்தைப் பெற்றுள்ள ஊழியர்கள் இங்கேதான் வாழ்கிறார்கள். ஒரே மார்க்கெட்டில் பொருள்களை வாங்குகிறார்கள். ஒரே மாதிரியான வீட்டு வாடகைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது ஒரு நியாயமான அடிப்படை என்பதை அரசு அங்கீகரித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா? கொஞ்சம் பணச் செலவை கருதாமல் ஊழியர்களின் உள்ளத்தில் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு காலத்திலேயும் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஊதியம் ஒரே மாதிரியாக இருந்ததில்லை.

ஒரே விகிதத்தை கடைப்பிடிப்பதும் இல்லை. ஒரே விகிதத்தை கடைப்பிடிக்கின்ற விதி முறையும் இல்லை. மகாராஷ்டிரத்தில் அரசு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சம், 6½ இலட்சம்தான் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய அரசு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 10, 10½ இலட்சம். சில இடங்களில் 8½, 9 இலட்சம் இருக்கிறது. அந்தந்த மாநிலத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒருவருக்கொருவர் வருக்க முடியாது. அது அந்தந்த மாநிலத்தினுடைய சூழ்நிலைக்கு உட்பட்டது. அந்த ஊதியத்தினுடைய விகிதத்தை அப்பக்கத்திலே இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப விலைவாசி தன்மைகளுக்கு ஏற்ப உயர்த்திட வேண்டும் என்று கேட்பதிலே நியாயம் இருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. இருக்கின்ற சூழ்நிலையையொட்டி அவ்வப்போது ஆராய்கின்றோம். அதற்கான தன்மைகளையும் நாம் செய்கிறோம். அதற்கான காரண காரிய விளக்கங்களையும் நாம் செய்கிறோம். அதைக் கேட்பது தவறு என்று நான் சொல்லவரவில்லை. ஆனால் இருக்கின்ற சூழ்நிலையையொட்டி. ஒரே மாதிரியாக ஆக்க இயலாது என்றுதான் நான் சொல்கின்றேனே தவிர அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலையையும் மற்றவற்றையும் வைத்து நாம் முடிவு செய்கின்றவர்களாக இருக்கிறோம். தனியாகத்தான் இதைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அண்மையிலே காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்களுடைய குழுக் கூட்டத்தில் திரு. ஜோதிபாசு அவர்கள், மாநில அரசைக் கேட்காமல் மத்திய அரசு அடிக்கடி ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்து விடுவதால், அதைப் போல் பஞ்சப்படி போன்றவைகளை மாற்றியமைத்து விடுவதால், மாநில அரசாங்கம் நெருக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறாரே, அந்தக் கருத்திற்கு நமது மாநில அரசு உடன்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து, இந்த அரசிற்கும் உடன்பாடான கருத்துதான். இப்போதும் நாமும் அதை



வற்புறுத்தி வருகிறோம். எல்லா மாநிலங்களில்கூட—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகிற மாநிலங்களில்கூட அதைப் பற்றி வருந்துகின்றன. ஏனென்றால், மாநில அரசுகளைக் கலக்காமல், மத்திய அரசு தன்னுடைய வசதி வாய்ப்புக்களை எண்ணி ஒன்றைச் செய்துவிடுகிறபோது, அதனால், அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் மற்றவைகளும் மாநில அரசுகளுக்கு ஏற்பட்டு விடுகின்றபோது, அதற்கான நிதியுதவியாவது மத்திய அரசு தரவேண்டும். அதையும் செய்வதில்லை. ஆகவேதான்; Development Council கூட்டத்திலேயும் சரி; மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்கிற கூட்டங்களிலேயும் சரி; எல்லா மாநில முதலமைச்சர்களும் இந்தக் குறைபாட்டை எடுத்துச் சொல்லி, எங்களை எல்லாம் கலந்து கொண்டு, ஒரு Consensus of opinion என்ற அடிப்படையில் மத்திய அரசு செய்யுமானால் எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்திலே கட்சி வேறுபாடுகூட கிடையாது. நிர்வாகத்தினுடைய நன்மையைப் பொறுத்துத்தான் அமைந்து இருக்கிறது. அதையொட்டித்தான் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். நாமும் பல தடவை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

## சைதை-ஆலந்தூர் சாலை அடையார் ஆற்று மையப்பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பு.

539—(*வினா எண். 12157) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை-ஆலந்தூர் சாலை கஸ்டம்ஸ் காலனிக்கும், ஓல்டாம்ஸ் பாட்டரி கம்பெனிக்கும் நடுவிலுள்ள அடையாறு ஆற்றின் மைய பகுதிகளை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தனியார் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வைகை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்ற இடத்தை, தனியார் சொந்தமாக்கி வைத்திருக்கிறார்கள். அடையாறு ஆற்றின் இரண்டு பக்கத்திற்கு நடுவே, அதன் மையப் பகுதியிலே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆற்றின் நடுவே இருக்கின்ற ஒரு இடம் எப்படி தனியாருக்குச் சொந்தமாக இருக்கமுடியும்? ஆகவே, அப்படி ஒரு இடத்திற்கு பட்டா வழங்கியிருந்தால், அதை எப்படி வழங்கினார்கள் என்ற விவரத்தை அறிவதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, அந்த இடத்தில் இப்போதுகூட நீங்கள் பார்வையிடலாம். இன்றைக்கு பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை. நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களேகூட அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். அவர்கள் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, பட்டா வழங்கியிருந்தால், அதை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நில வரித் திட்ட அறிக்கையின்படி 1966 ஆம் ஆண்டு புல எண்கள் 12 மற்றும் 13 உருவாக்கப்பட்டு, புல எண் 12 ரயத்துவாரி புஞ்சையாகவும், புல எண் 13 சர்க்கார் புறம்போக்காகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1966 ஆம் ஆண்டு நில வரித் திட்ட அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் அடிப்படையில் மேற்படி புல எண்கள் உள் பிரிவும், வகைப்பாடு மாற்றங்களும் செய்யப்பட்டு பதிவேட்டில் ஏற்றப்பட்டுள்ளன. 1966 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட பட்டா ஆவணங்கள் எல்லாம் தற்போது கிடைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி புல எண் 12/1977-இல் 12-1 முதல் 12/14 வரையிலான உள்பிரிவு செய்யப்பட்டு, பல்வேறு நபர்கள் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ரயத்துவாரி புஞ்சை என்று வகைப்பாடு செய்யப்பட்ட புல எண் 12-இல் மட்டுமே இத்தகைய உள் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. புல எண் 1 மற்றும் 13 ஆகிய இரண்டும் சர்க்கார் புறம்போக்கு (அடையாறு) என்று வகைப்பாட்டுடன்



தொடர்ந்து பதிவேட்டில் இருந்து வருகின்றன. இவ்விரு புல எண்கள் எவருக்கும் உள் பிரிவு செய்து பட்டா வழங்கப்பட வில்லை. தனியார் நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ள புல எண் 12-ல் காய்கறி, கீரை முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன. அந்த 12 புல எண் தனியார் பெயரிலே இருந்து வருவது ஆக்கிரமிப்புதான் என்று இருக்குமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்க நாம் முயற்சி செய்யலாம். அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. அதைப்பற்றி ஆராய்ந்து வேண்டுமானால், அது ஆக்கிரமிப்பாக இருந்தால், அதை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. வைகை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாற்றின் இரண்டு கரைகளையும் அளந்து பார்த்தால் எவ்வளவு இடம் இருக்கிறது என்பதையும், அப்படி அந்த அடையாற்று அளவைத் தெரிந்து கொண்டால், இப்போது நான் சொல்கிற இடம் ஆக்கிரமிப்பா அல்லது தவறுதலாக பட்டா வழங்கப் பெற்றிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த இடத்திற்கு தவறுதலாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு புகாராக என்னிடத்தில் எழுதித் தருவாரானால், அதைப்பற்றிய குறிப்புகளைப் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை.**

540—(*வினா எண். 6199) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவத்துறை மருத்துவமனை மூலம் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சி தோளூரில் தாய்-சேய் நல விடுதி.

541—(*வினா எண். 10070) **திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சி தோளூரில் தாய்-சேய் நல விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சி தோளூரில் ஏற்கனவே ஒரு துணை சுகாதார நிலையம் (தாய்-சேய் நல நிலையம்) இயங்கி வருகிறது.

### மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தானில் சலவைத் துறை.

542—(*வினா எண். 12100) **திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தானில் சலவைத் துறை கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம் சோழவந்தானில் சலவைத்துறை கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.





**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி சோழவந்தானில் சலவைத்துறை அமைக்க வேண்டுமென்று அங்கே உள்ள சலவைத் தொழிலாளர்கள் பல காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொழில் செய்ய ஒரு சரியான இடம் இல்லாத காரணத்தால் அவர்கள் மிகவும் இன்னலுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். எனவே, அதை உத்தேசித்தாவது அரசு அங்கே சலவைத்துறை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றம் 20 சதவீதமும், பயன்படுத்துவோர் 5 சதவீதமும் கொடுப்பார்களானால், அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே பாலமேடு, முள்ளிப்பள்ளம் போன்ற என்னுடைய தொகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள சலவைத் தொழிலாளர்களிடமிருந்து, சலவைத்துறை அமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

### கம்பம் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிடெண்ட் வார்டு கட்டுதல்.

543—(* வினா எண் 13807) **திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிடெண்ட் வார்டு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

[1987 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) தேவைகள், திட்டங்களின் முன்னுரிமை மற்றும் அரசின் நிதிநிலை ஆகியவைகளின் அடிப்படையில் செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் ஏலக்காய் வாரியம், கம்பம் மருத்துவமனையில் ஒரு ஆக்சிடெண்ட் வார்டு கட்டுவதற்கு ரூ. 3 இலட்சம் தருவதற்குத் தயாராக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஆக்சிடெண்ட் வார்டு கட்டித்தருவது பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். அதற்காக தொகுதி மக்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆக்சிடெண்ட் வார்டு கட்டுவதற்கு எப்போது பணி துவங்கும்? எவ்வளவு நாளில் கட்டி முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து இதற்கான செயற்குறிப்பு பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் இதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படும். ரூ. 5 இலட்சம் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசாங்க மருத்துவமனையில் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. மேலும் கம்பத்தைச் சுற்றி ஏராளமான கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் உள்ளவர்கள் அவ்வளவுபேரும் இந்த மருத்துவ மனையில்தான் மருத்துவ வசதி பெறுகிறார்கள். எனவே, அந்த மருத்துவ மனையை விரிவாக்குவதற்கும், கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 29]

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி உடனடியாக கவனிக்கப்படும். விரிவாக்கத்தைப்பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**சென்னையில் புதிய பால் பண்ணை.**

549—(*வினா எண் 2567) **திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மேலும் புதிதாக பால் பண்ணைகள் தொடங்கப்படுமா?

(ஆ) தற்போது எத்தனை பால் பண்ணைகள் உள்ளன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். சென்னையில் மேலும் புதிதாக ஒரு பால் பண்ணை துவங்கப்படவிருக்கிறது.

(ஆ) சென்னையில் உள்ளது இரண்டு.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் புதிதாக துவங்கப்படவிருக்கும் பால் பண்ணை எவ்வளவு ரூபாய் செலவில், எப்போது துவக்கப்படும்? தமிழ்நாட்டில் பால் பண்ணைகள் அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலைமையில் நாட்டில் பால் உற்பத்தி பெருகி இருக்கிறதா? நலிந்த மக்களுக்கு வெளி மாநிலங்களிலிருந்து பால் இறக்குமதி செய்து, குறைந்த விலையில் அரசு பால் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையில் நாளொன்றுக்கு 4.50 லட்சம் லிட்டர் பால் பொதுமக்களுக்கு, விநியோகிக்கப்படுகிறது. வட சென்னையில் சைதை தாலுக்காவில் ஒரு புதிய பால் பண்ணை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் அளவு 2 லட்சம் லிட்டராகும். தற்போது அம்பத்தூர் மற்றும் மாதவரத்தில் உள்ள பால் பண்ணைகளில் மேலும் ஒரு லட்சம் லிட்டர் பால் பதப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

[1987 ஏப்ரல் 29

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக துவங்கப்படவிருக்கின்ற பால் பண்ணை எப்போது துவங்கப்படும்? சென்னை நகரில் தானியங்கி பால் நிலையங்கள் பெருமளவிற்கு மக்களுக்குப் பயன்படும் என்ற காரணத்தால் அந்த தானியங்கி பால் நிலையங்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானியங்கி பால் அகத்தால் பயனும் இருக்கிறது. அதனால் சமூக விரோதிகள் அதிகமான பாலை எடுத்து தனியாக வியாபாரமும் செய்கிறார்கள் என்ற இந்த இரண்டையும் உத்தேசித்து புதிதாக மேலும் விஸ்தரிக்கலாமா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**சென்ற ஆண்டு அரசு அச்சிட்ட சுவரொட்டிகள்.**

550—(* வினா எண் 3057) **திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு விழாக்களுக்கென்று அரசு அச்சிட்ட சுவரொட்டிகள் எவ்வளவு?

(ஆ) அதற்கான தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984-85-ஆம் ஆண்டு விழாக்களுக்கென அரசுத் துறைகள் அச்சிட்ட சுவரொட்டிகள் எண்ணிக்கை 35,800.

(ஆ) அதற்கான தொகை ரூ. 1,02,428.00 (ரூபாய் ஒரு லட்சத்து இரண்டாயிரத்து நானூற்று இருபத்தி எட்டு மட்டும்).

**திரு. குமரி அனந்தன்:** தலைவர் அவர்களே, அரசுப் பணிகளுக்கு என்று சுவரொட்டிகள் அச்சிடப்படுவதற்கு இப்போது அரசு அச்சகங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா? பிறரிடமும்



1987 ஏப்ரல் 29]

கொடுக்கப்படுகிறதா? அரசு அச்சக இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் இடையூறு ஏதாவது இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய போஸ்டர்ஸ் அச்சடிக்க அரசு அச்சகம் இல்லை.

**கிண்டி அருகே ஜவஹர்லால் நேரு உருவச் சிலை அமைத்தல்.**

551—(* வினா எண். 3229) **திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டி அருகே கட்டப்பட்டுவரும் ஜவஹர்லால் நேருவின் உருவச் சிலை எப்போது திறந்து வைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பிரதமர் அவர்களை பண்டித ஜவஹர்லால் நேருவின் சிலையைத் திறந்து வைக்க நேரிடையாக முதலமைச்சர் அவர்கள் அண்மையில் டில்லி சென்றபோது அழைத்திருக்கிறார்கள். பிரதமருடைய தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ஸ்ரீரங்கம் கோவிலின் சொத்துக்கள்.**

552—(* வினா எண். 3351) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் கோவிலுக்கான சொத்துகள் சில தனி நபரிடம் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 30-ன் கீழ் சிறு இனாம் நிலங்களை ரயத்துவாரி பட்டா நிலமாக மாற்ற நிலவரித் திட்ட அலுவலரின் தன்னிச்சை விசாரணை மேற்கொள்ளப்பட்டு திருக்கோயிலுக்கு

பட்டா கொடுக்கப்பட்ட நிலங்களை தற்போது அனுபவித்து வரும் நபர்களிடமிருந்து திருக்கோயிலின் சுவாதீனத்தில் கொண்டு வர வழக்குகள் மூலமாகவும், நேர்முக நடவடிக்கை மூலமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### அண்ணா மாவட்டம் நத்தம் தொகுதி திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக்கல்.

553—(*வினா எண் 13060) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் நத்தம் தொகுதியில் முருகன் ஸ்தலமான திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அண்ணா மாவட்டத்தில் உள்ள திருமலைக்கேணியை மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்ய 1986-87 ஆம் நிதியாண்டில் ரூபாய் இரண்டு லட்சம் ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக இரண்டு இலட்சம் ரூபாய் அனுமதிக் கப்பட்டிருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், ரோடு போடுவது, ஆண் களுக்கும், பெண்களுக்கும் குளிக்கும் அறை கட்ட, மற்ற அறை களைக் கட்ட இது போதுமானதாக இல்லை. இந்த இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் கூடுதலாக 10 இலட்சம் ரூபாய் முதற் கட்டமாக ஒதுக்கி வேலைகளைச் செய்துதர அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சுற்றுலா தலைவர் 14.90 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறார். ஓய்வு விடுதி கட்ட ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய், உணவு விடுதி கட்ட ஒரு இலட்சம் ரூபாய், உடை மற்றும் அறைகள் கழிப்பறைகள் கட்ட ஒரு இலட்சத்து எண்பது ஆயிரம் ரூபாய், ரோடுகள் பூங்காக்கள் அமைக்க, கூடுதல் மின்வசதி ஏற்படுத்த என்று எல்லாவற்றுக்கும் சேர்த்து 14.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டை அனுப்பியிருக்கிறார். இந்த இரண்டு இலட்சம் ரூபாயை செலவு செய்துவிட்டு, மற்ற செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணிக்கு வருகிற பேருந்துகள் எல்லாம் அங்கே வர முடியாத நிலையில் பாதைகள் இருக்கின்றன. காரணம் அங்கேயுள்ள பாதைகள் நொடிகள் உள்ள பாதைகளாக காட்சியளிக்கின்றன. அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள ரோடுகளைப் பார்க்கும்போது குண்டும் குழியுமாக இருக் கின்றன. சில ரோடுகள் ஊராட்சிக்குச் சொந்தமான இடம் என்று சொல்லுகிறார்கள். ஒரு சிலவற்றை பஞ்சாயத்து ரோடு என்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்தில் பணம் இல்லாததால், அந்த நொடிகளைப் போட பணம் இல்லாத காரணத்தால் அவற்றை ஹைவேஸ் ரோடுகளாக மாற்றி, அந்த ரோடை விரிவு படுத்த கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு, அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருத்தலம் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது. பழனிக்கு அடுத்தாற் போல் பக்தர்கள் அங்கே போய்க்கொண்டிருக்கிறார்கள். அது வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லில் இருக்கும் இன்னொரு அதிகாரி பகுதி நேர அதிகாரியாக இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே திருமலைக்கேணிக்கு என்று தனி நிர்வாக அதிகாரி போட்டால் கோவில் வளர்ச்சியைப் பெருக்க வசதியாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் திருமலைக்கேணியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தனி நிர்வாக அதிகாரியை நியமிப்பார்களா?

[1987 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நிர்வாக அதிகாரி போடுவதற்குத் தகுதியிருந்தால், தனி நிர்வாக அதிகாரி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானலுக்குச் செல்லக்கூடியவர்கள் கொடைரோடில் இறங்கிப் போகும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று அங்கே சுற்றுலா மையம் ஆரம்பிக்க சாங்ஷன் செய்யப்பட்டது. இந்த ஆண்டே அந்த வேலை ஆரம்பிக்கப்படுமா? பழனி பெரிய யாத்திரிகர்கள் ஸ்தலமாக இருக்கிறது. அங்கே வரக்கூடியவர்கள் தங்க இடமில்லாமல் இருக்கிறது. எனவே அங்கேயும் ஒரு சுற்றுலா மையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளார்கள். அதுவும் இந்த ஆண்டே நிறைவேற்றிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் [illegible] சம்பந்தமில்லை. நாளைக்கு இதுபற்றிய மானியக் [illegible] வர இருக்கிறது. அப்போது நிச்சயம் பதில் தருகிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருக்கோயில் போன்று தமிழகத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த திருக்கோவில்களை எல்லாம் திரைப் படங்களாக, விளம்பரப் படங்களாக எடுத்து, நாட்டு மக்களுக்கு திருக்கோவில்களின் சிறப்புகளைத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்ட வாரியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திருத்தலங்கள் மற்றும் பயணிகள் வருகின்ற முக்கிய இடங்கள் ஆகியவற்றை கேசட் மூலம் படமெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைக்கேணி திருத்தலத்திலே மிக அற்புதமான நீரோட்டம் எப்போதும் வற்றாத அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. மக்கள் அனைவரும் 'சின்ன பழனி' என்று அழைக்கும்



1987 ஏப்ரல் 29]

அளவுக்கு அங்கே யாத்திரிகர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே மக்கள் தங்குவதற்கு சிறிய இடம்கூட இல்லாமல் இருக்கிறது. மலைக்குச் செல்லும் சாலை வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, மக்கள் தங்குவதற்கு வசதி செய்யவும், சாலையை உடனடியாகப் போடவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ஒதுக்கிய ரூ. 2 இலட்சத்தோடு அந்த மாவட்டத்திலுள்ள போக்குவரத்துத்துறை ரூ. 3 இலட்சம் கொடுப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே சொல்லப்பட்ட ரூ. 14.90 இலட்சம் மதிப்பீட்டில் ஓய்வு விடுதி, உணவு விடுதி, உடை மாற்றும் அறைகள் கட்டப்படும். சாலை மேம்பாட்டுக்கு ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது பணிகள் துவக்கப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும் வசதிகள் எல்லாம் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்க உரிமை அளிக்கும் சட்டம்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைக்கு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது சட்டசபையில் விவாதம் நடைபெற்ற நேரத்தில், அந்த இலாக்கா சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உங்களது அனுமதியோடு அதைப் படிக்க விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் தவறு செய்தால், அவர்களை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகை இல்லாமல் சொல்லுங்கள்.

**திரு. கி. மனோகரன்:** அவர்கள் தவறு செய்தால், அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்துகொண்டால், அவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை ஒன்றியத்தைச் சார்ந்த மக்களுக்கு, நகராட்சியைச் சார்ந்த மக்களுக்கு உண்டு என்ற அளவுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, தவறு செய்கின்ற தொகுதிவாழ் மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கின்ற, அருவருக்கத்தக்க முறையில் செயல்படுகின்ற, ஜனநாயகத்திற்கு மாறாக நடந்து கொள்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களைத் திருப்பி அழைக்கின்ற உரிமையை அந்த மக்களுக்குத் தரத்தக்க வகையில் "Right to Recall" என்பதை இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் கொண்டுவர இந்த அரசு முற்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கைத் திட்டத்தை வகுத்தவர்களில் நான் முன்னணியில் நின்றவன் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். "Right to Recall" என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே ஒப்புக்கொள்ளப்பட்ட லட்சியம். நாடாளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை 'ரிகால்' செய்வது என்பது பற்றியது. அதைச் செய்வதற்கு இந்த ஆட்சி முன் வருமா? அப்படி முன்வராவிட்டால், இப்போது இங்கே கொண்டு வருவது காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலே என்றுதான் கருத வேண்டியிருக்கும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் பார்லிமெண்டிலே கேட்க வேண்டும். நாம் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால், திருப்பி அழைப்பது "Right to Recall" என்ற முறையில் செய்ய, அரசியல் சட்டம் பாராளுமன்றத்திலே திருத்தப்பட்ட பிறகுதான் அமுலுக்கு வரும். (குறுக்கீடு). அதை நாம் இங்கே திருத்திக்கொண்டு





ஒன்றும் செய்வதற்கில்லை. அதை அங்கே கொண்டுவரச் சொல்லுங்கள். உங்கள் கட்சி சார்பிலே பேசி கொண்டு வரச் சொல்லுங்கள். "Ratification-க்கு வரட்டும் பார்த்துக் கொள்வோம்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ற அளவில் நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. நான் இங்கே சொல்கின்ற காரணத்தினால், அங்கு ஆளுங்கட்சியாக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியே அதைச் செய்யச் சொல்ல இந்த அரசு முன்வருமா? நான் அவை முன்னவர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர் பதில் சொல்லத் தயாராக இருக்கும்போது . . .

### 3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 111-ன் கீழ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

***மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11—4—1987 அன்று காலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. தமிழரசன் அவர்கள் சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் நிர்வாகம் குறித்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் என்னிடம் கேட்டிருந்த ஒரு கேள்விக்கு ஓர் ஆண்டுக் காலமாக அத்துறைச் செயலரிடமிருந்து அமைச்சருக்குப் பதில் வராமல் இருக்கிறதென்றும், ஒரு முக்கியப் பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட வினாவிற்கு ஓர் ஆண்டுக்காலமாக சம்பந்தப்பட்ட சமூக நலத்துறையிலிருந்து பதில் வராமல் இருப்பது உறுப்பினர்கள் உரிமையை மிகவும் பாதிக்கிறது என்றும் குறிப்பிட்டபொழுது, நான் அந்தக் கேள்வி ஆதிதிராவிடர் நலத் துறையும் வருவாய்த் துறையும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். தற்போது சமூக நலத்துறைச் செயலரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தபொழுது உறுப்பினர் குறிப்பிட்ட கேள்வி சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் பொறுப்பில் உள்ளவர்களால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா என்பது பற்றியதாகும்; எனவே, இக் கேள்வி 1—7——1985 அன்று சமூக நலத்துறையால் பெறப்பட்டு அவ்வினாவில் குறிப்பிட்டுள்ள பொருள் சமூக நலத்துறையைச் சார்ந்ததாக இல்லாததாலும், வணிகவரி மற்றும் அறநிலையத்

[பேரவைத் தலைவர்] [1987 ஏப்ரல் 29

துறைக்குச் சம்பந்தப்பட்டதாக இருந்ததாலும் மறுநாளே வணிக வரி மற்றும் அறநிலையத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இவ்விவரம் சட்டப் பேரவைச் செயலகத்திற்கும் உடனே தெரிவிக்கப்பட்டுள்ளது. வணிகவரி மற்றும் அறநிலையத் துறையும் 25—10—1985 அன்று சம்பந்தப்பட்ட கேள்வி அத்துறையில் பரிசீலிக்கப்பட்டு வருவதாக சட்டப் பேரவை செயலகத்திற்குத் தெரிவித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அக்கேள்விக்கு மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் விடையளிக்கப் பட்டுள்ளது என்பதையும், சமூக நலத்துறையிடம் அல்ல என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1987-88 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

1. திரு. பொ. உத்திராபதி.
2. திரு. ஆ. நடராசன்.
3. திரு. பி.கே. எம். முத்துராமலிங்கம்.
4. திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
5. திரு. ஆர். எஸ். ஆறுமுகம்.
6. திரு. த. புஷ்பராசு.
7. திரு. ஜே. முகமது கனி
8. திருமதி இரா. சரோஜா.
9. திரு. மு. பாண்டுரங்கன்.
10. திரு. எச். ஜி. ஆறுமுகம்.
11. திரு. த. மாரிமுத்து.
12. திரு. மு. தங்கமணி.
13. திரு. வே. இரா. ஜெயராமன்.
14. திரு. எப். எம். இராசரத்தினம்.
15. திரு. கு. அ. செங்கோட்டையன்.
16. திரு. வி. சுப்பிரமணியன்.



1987 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

முறையான வேட்புத் தாள்கள் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1987-88 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் விதி 196-வது விதியின்கீழ் திரு. வே. இரா. ஜெயராமன் அவர்களை இக்குழுவின் தலைவராக, நான் நியமனம் செய்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1987-88 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆ. சந்திரசேகரன்.
2. திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்.
3. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.
4. திரு. மா. மணிமாறன்.
5. திரு. அ. ஆறுமுகம்.
6. திரு. பி. ஆர். திருஞானம்.
7. திரு. எஸ். என். இராமசாமி.
8. திரு. துரை கோவிந்தராசன்.
9. திரு. கே. குப்புசாமி.
10. திரு. சைதை சா. துரைசாமி.
11. திரு. செ. செம்மலை.
12. திரு. மா. சின்னராசு.
13. திரு. எம். இராசரத்தினம்.
14. திரு. எம். அண்ணாதாசன்.
15. திரு. மூ. மாரிமுத்து.
16. டாக்டர் அ. பொன்னுசாமி.

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1987-88 ஆம் ஆண்டிற்கான பொது நிறு

வனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213-ன் கீழ் திரு. கே. குப்புசாமி அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

### (அ) குத்தாலம் ஒன்றிய விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் வழங்குதல்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குத்தாலம் ஒன்றியத்தில் சிறு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய 'மினிகிட்' இலவச இடுபொருட்களை அவர்களுக்கு வழங்குவது குறித்தும் தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு இலவச மற்றும் மானிய இடுபொருட்களான உரங்கள், விதைநெல், பூச்சி மருந்து ஆகியவற்றை முறையாக வழங்காதது குறித்ததுமான" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

நெல், பயறு வகைகள், சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்ற விதைகள் கொண்ட மினிகிட்டுகள் எனப்படும் சிறுதளைகள் சிறு/குறு மற்றும் ஆதி திராவிட விவசாயிகள் ஆகியோருக்கு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை மற்றும் எண்ணெய் வித்துக்கள் துறைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேளாண்மைத் துறை மூலம் வேளாண்மை இடுபொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் ஒன்றியம் உட்பட எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரின் சிபாரிசின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து சிறு/குறு





மற்றும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு மேற்கண்ட சிறுதளைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய சலுகைகள் வழங்கும்போது அப்பகுதியின் முக்கிய பிரமுகர்கள் கொண்ட அதாவது பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டு நடத்தப்படும் நிகழ்ச்சியின்போது வழங்க வேண்டும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. தஞ்சை மாவட்டம் பொறுத்த மட்டில் வேளாண்மைத் துறையின் மூலம் சிறு/குறு விவசாயிகளுக்கு ரூ. 7.48 இலட்சத்தில் 24,916 எண்ணிக்கை கொண்ட பயறு வகைகள் மினிகிட்டுகளும், ரூ. 2.30 இலட்சத்தில் 21,020 எண்ணிக்கை கொண்ட நெல் வகை மினிகிட்டுகளும், ரூ. 0.01 இலட்சத்தில் 236 எண்ணிக்கை கொண்ட சிறுதானியங்கள் மினிகிட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட விவசாயிகளுக்கு ரூ. 3.63 இலட்சத்தில் 13,743 பேர்களுக்கு நெல் மற்றும் சிறு தானியங்கள் மினிகிட்டுகளும், ரூ. 3.44 இலட்சத்தில் 19,414 பேர்களுக்கு பயிர் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் எண்ணெய் வித்துக்கள் துறையின் மூலம் குத்தாலம் ஒன்றியத்தில் மட்டும் 1986-87 ஆம் ஆண்டில் 460 எண்ணிக்கை கொண்ட எண்ணெய் வித்துக்கள் மினிகிட்டுகள் சிறு/குறு மற்றும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 16,542 மதிப்பில் 60 நிலக்கடலை மினிகிட்டுகளும், ரூ. 5,375 மதிப்பில் 300 எள் விதை மினிகிட்டுகளும், ரூ. 1,625 மதிப்பில் 100 சூரிய காந்தி மினிகிட்டுகளும் அடங்கும்.

3. மைய அரசின் அறிவுரையின்படி மினிகிட்டுகள் சிறு/குறு மற்றும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வழங்கும்போது அதற்குரிய விலையாக ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலிக்க நிர்ணயம் செய்யப்பட்டு, பயறு வகை மினிகிட் ஒன்றுக்கு ரூ. 5 வீதமும் சிறு தானியங்கள் மினிகிட் ஒன்றுக்கு ரூ. 1 வீதமும், எண்ணெய் வித்துக்கள் மினிகிட்டுக்கு அதன் விலையில் 10 சதவிகிதமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மினிகிட்டுகள் விநியோகத்தில் எந்தவித முறைகேடோ அல்லது ஒழுங்கீனமோ நடந்ததாக எவ்வித புகார்களும் வரவில்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய அறிக்கையிலே அரசுக்கு எதிரான ஒரு சில அதிகாரிகள் தவறான தகவல் தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே இப்படிப்பட்ட இடுபொருள்களை வழங்கு[illegible]றபோது சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர்,

ஒன்றிய பெருந்தலைவர் போன்றவர்களை எல்லாம் வைத்துக் கொண்டு இதனை வழங்கியதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அந்தப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். அது போல பாராளுமன்ற உறுப்பினரும் அங்கே இருக்கிறார். எங்கள் யாருக்கும் இப்படிப்பட்ட தகவலை அவர்கள் கொடுக்கவில்லை. அதுமட்டுமல்ல, 60 நிலக்கடலை மினிகிட்டுகளும், 300 எள் விதை மினிகிட்டுகளும், 100 சூரிய காந்தி மினிகிட்டுகளும் கொடுத்திருப்பதாக தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சிறு விவசாயிகளுக்கு அதனை வழங்காமல், சட்ட எரிப்புப் போராட்டத்தில் யார் யார் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றார்களோ அவர்களை எல்லாம் அவர்களாகவே தேடிப் பிடித்து இதனை வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கவன ஈர்ப்பில் கேள்வி கேட்கும்போது குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டைச் சொல்லவில்லை, நடந்துவிட்ட தவறைச் சொல்கிறேன். அங்கே இருக்கின்ற ஒன்றியத் தலைவரின் தூண்டுதலின்பேரில் உண்மையான சிறு விவசாயிகளுக்கு அதனை வழங்காமல் தவறாக வழங்கியிருப்பதால், உண்மையிலேயே யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காக உயர் மட்டத்தில் கலெக்டர் அளவில் விசாரணை நடத்த ஏற்பாடு செய்து உண்மை காரணத்தைக் கண்டறிய ஏற்பாடு செய்யப்படுமா? அரசின் மீது வேண்டுமென்றே கெட்ட நோக்கத்தோடு, அரசுக்குக் களங்கம் கற்பிக்கின்ற முறையிலே செயல்பட்ட அதிகாரிகள் மீது இந்த அரசு முறையாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கனவே இந்த அரசு எல்லா அதிகாரிகளுக்கும் அறிவித்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் போன்றவர்களை எல்லாம் வைத்துக்கொண்டுதான் இப்படிப்பட்ட மினிகிட்டுகளை வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, பயறு வகை மினிகிட் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதமும், சிறு தானியங்கள் மினிகிட் ஒன்றுக்கு ரூபாய் 1 வீதமும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. எங்காவது தவறு நடந்திருந்தால், அதை குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.





**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து ஆலோசித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். நான்தான் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர். எந்த அதிகாரிகளும் என்னைக் கலந்து ஆலோசிக்கவில்லை என்பதே ஒரு ஆதாரமான குற்றச்சாட்டுதான். ஒருசில அதிகாரிகளால், அரசியல் தலையீட்டின் காரணமாக, அரசியல்வாதிகளின் தூண்டுதலின்பேரில் இப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது. ஆகவே இதுகுறித்து அரசு விசாரணை நடத்தினால நானே ஆதாரம் தரத் தயாராக இருக்கிறேன். அப்படி விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்போது அரசு என்னையும் பயன்படுத்த முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்க அதிகாரிகளை அனுப்பி விசாரித்து ஏதாவது தவறுகள் அங்கே நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை தரப்படும். அதிகாரிகள் அங்கே வரும்போது உறுப்பினர் அவர்களும் இதுபற்றிச் சொல்லலாம்.

(முற்பகல் 11-20)

### (ஆ) திருச்சி மாவட்டம் முதுவத்தூர் மினி சிமெண்ட் ஆலை மூடப்பட்டிருந்தல்.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், முதுவத்தூரிலுள்ள அரசு மினி சிமெண்ட் ஆலை மூடிக் கிடப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

1967 ஆம் ஆண்டு தொழில் மற்றும் வணிகத் துறையிடமிருந்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ரூ. 23.47 இலட்சம் செலுத்தி திருச்சி மாவட்டம் முதுவத்தூரிலுள்ள

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 29

சிறிய சிமெண்ட் தொழிற்சாலையை பெற்றுக் கொண்டது. இந் நிறுவனத்தை நடத்தியதில், நஷ்டம் ஏற்பட்ட டிட்கோ மேலும் ரூ. 21.53 இலட்சம் செலவழித்தது. 1968 ஆம் ஆண்டு வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியும் இந்நிறுவனத்தின் செயலாக்கம் திருப்திகரமாக இல்லாததாலும் அதனை தொழில் நுட்ப ரீதியில் நிலைநிறுத்தக்கூடியதாக இல்லாததாலும், 1971 பிப்ரவரி முதல் 1974 வரை, அதன் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டது.

2. இதன்பின். 1974 ஆம் ஆண்டு இந்த தொழிற்சாலையை மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (Cement Research Institute of India.) பரிசாகக் கொடுக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டு வரை அத்துறையால் நடத்தப்பட்டு வந்தது. எனினும் 1978 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் பிரச்சினையின் காரணமாகவும், மேலும் சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாகவும், மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஆலையைத் தொடர்ந்து தன்வசம் வைத்துக்கொள்ள விரும்பாமல் தமிழக அரசுக்கே மீண்டும் மாற்றக் கோரியது.

3. அதன்பேரில், டான்செம் நிறுவனம் இச்சிறு சிமெண்ட் ஆலையை மீண்டும் (பணியாளர்கள் தவிர) 2—12—1983 அன்று ஏற்றது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அதிக திறனளவு கொண்ட பெரிய அளவிலான சிமெண்ட் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவுவதில் தீவிர கவனம் செலுத்துவதால், இச்சிறு சிமெண்ட் ஆலையை ஏற்று இலாபகரமாக இயங்க வைக்கக்கூடிய முனைப்பு கொண்ட தனியார் தொழில் அதிபருக்கு விற்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கும் போது, மீண்டும் மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் தனது ஆராய்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்காக முதுவத்தூர் சிறிய சிமெண்ட் ஆலையை இரண்டாண்டு காலத்திற்கு தன்னிடம் ஒப்படைக்கும்படி கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் சற்றேறக்குறைய ரூபாய் 45.30 இலட்சங்களைச் செலவு செய்து டிட்கோ நிறுவனம் திருச்சி மாவட்டம் முதுவத்தூரிலுள்ள மினி சிமெண்ட் ஆலையை ஏற்று, தற்போது அது டான்செம் நிறுவனத்தின் பொறுப்பில் 2—12—1983 முதல் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வளவு மூலதனம் போட்டுச் செலவழித்தும், 1983-லேயிருந்து இதுவரை



1987 ஏப்ரல் 29] [திரு. கி. வெங்கடாசலம்]

இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கு எடுத்த முயற்சிகள் என்ன என்பதோடு, இந்த மினி சிமெண்ட் ஆலை என்ன காரணங்களுக்காக மூடப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆலை ஏற்கெனவே பைலட் ஆலையாகத்தான் உருவாக்கப்பட்டது. அதன்பிறகு டிட்கோவினிடத்திலே கொடுக்கப்பட்டு, டிட்கோ அதை நடத்தியது. ரூ. 23.47 இலட்சம் செலவு செய்துதான் அதை எடுத்தது. அதற்கு பிறகு மீண்டும் அது இலாபகரமாக நடைபெறவில்லை என்ற காரணத்தினாலே மூடப்பட்டது. பிறகு அதை டான்செம்-னிடத்திலே தந்தோம். டான்செம் எடுத்துக் கொண்டு நடத்தலாம் என்கிறபொழுது மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சிக்காக அந்த ஆலை தங்களுக்குத் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, இரண்டும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, 6—7—1986 இல் தினசரி பத்திரிகையின் வாயிலாக இந்த மினி சிமெண்ட் பிளாண்டை விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டது. அது என்னவாயிற்று என்பதையும், கடந்த 1985-ல் தொழில் மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கிற பொழுது மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. இராசாராம் அவர்கள், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பொறுப்பிலுள்ள முதுவத்தூர் மாதிரி சிமெண்ட் ஆலையை எடுத்து நடத்த முதலமைச்சர் முடிவெடுத்துள்ளார் என்று கூறியும் அது நடைபெறாமல், மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்படைக்க பரிசீலனையில் உள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எப்பொழுது ஒப்படைக்கப்பட்டு மீண்டும் அந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எடுத்து நடத்தலாம் என்றுதான் நாங்கள் கருதினோம். அந்த நேரத்திலே மைய அரசு ஆராய்ச்சி நிறுவனம் திரும்பவும் அதைக் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பதைப்பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. விரைவிலே முடிவெடுத்து, அதை நடத்துவதைப்பற்றி தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**(இ) வேளச்சேரி குடிநீர்த் திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப்படாதது.**

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சென்னை பெருநகர் குடிநீர் வழங்கும் வாரியத்தின் வேளச்சேரி குடிநீர் வழங்கும் திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப்படாததால் குடிநீர்ப் பற்றாக்குறையினால் இப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

மடுவன்கரை, சென்னை நகர பழைய பகுதியின் தெற்கு கோடியில், வட்டம் 147-ல் வேளச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி இப்பகுதியின் மக்கட்தொகை 22,771 ஆகும். தற்போது இப்பகுதிக்கு மண்டலம் 8 'சி' பிரதானக் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. நீர் வழங்கும் அமைப்பின் கடைகோடியில் இருப்பதால் இப்பகுதிக்கு குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து வருகிறது. ஆகவே, மாற்று ஏற்பாடாக 147 ஆம் வட்டத்தில் ஆங்காங்கே 39 நீர்த் தொட்டிகள் வைத்து லாரிகளின் மூலம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் குடிநீர் வழங்குகிறது. 1978-ல் சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களில் வேளச்சேரியும் ஒன்றாகும். இப் பஞ்சாயத்துக்களுக்கு ஒருங்கிணைந்த பொதுக் குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகிக்க ரூ. 206 இலட்சத்திற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் வேளச்சேரி பகுதியில் நிலத்தடி நீர் குடிநீர்க்கு உகந்ததாக இல்லாததால் கீழ்நிலைத் தொட்டி, மேல்நிலைத் தொட்டி மற்றும் குடிநீர் வழங்கும் குழாய்கள் பதித்தல் ஆகிய வேலைகள் மட்டும் எடுத்து முடிக்கப்பட்டன. தற்பொழுது சென்னை நகருக்கு வழங்கப் பெறும் குடிநீரை அதிகப்படுத்துவதற்காகத் தெற்கு கடற்கரையோர புதிய மகாபலிபுரம் சாலையின் 5 கிலோ மீட்டரிலிருந்து 9 கிலோ மீட்டருக்குள் 14 ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்காக ரூ. 250 இலட்சத்துக்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆழ்



குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான வேலையும் குழாய்கள் பதிப்பதற்கான வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது கனகம், தாமணி, வேளச்சேரி பகுதிகளுக்கு நீர் வழங்கப்படும் வாய்ப்புள்ளது. அத்தருணத்தில், பழைய சென்னை நகர விநியோகக் குழாய்களை இத் திட்டத்துடன் இணைத்து மடுவன்கரைப் பகுதிக்கும் வழங்கும் குடிநீரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இது தவிர, தற்சமயம் புது மகாபலிபுரம் சாலையின் 9 கிலோ மீட்டரிலிருந்து 13 கிலோ மீட்டருக்குள் உள்ள அக்கரை முட்டுக்காட்டின் நிலத்தடி நீர் ஐ.ஐ.டி., மத்திய பாலிடெக்னிக் முதலியவைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. தற்காலிக ஏற்பாடாக, அக்கரை முட்டுக்காட்டில் கூடுதலாக 3 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து அதிலிருந்து எடுக்கப்படும் நீரின் ஒரு பகுதியை வேளச்சேரிக்கு முதற்படி திட்டமாக வழங்கப்படும். இந்த வேலை முடிவடைந்து பரீட்சார்த்த நீரேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

* திரு. சைதை. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போல 39 தொட்டிகள் வைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே பல்லாண்டுக் காலமாக அந்தப் பகுதிக்குக் குடிநீர்க் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. முட்டுக்காடு பகுதியிலேயிருந்து ஆலந்தூர் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆலந்தூர் நகராட்சிக்கு இப்பொழுது பாலாற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தால் முட்டுக்காட்டுத் தண்ணீரை மடுவன்கரை பகுதிக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஆரம்பத்திலே வலியுறுத்தப்பட்டது. அப்பொழுது வேளச்சேரி திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆகவே, ஆரம்பத்திலேயிருந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டு வருகின்ற காரணத்தினாலும், 39 டேங்குகளின் மூலம் குடிநீர் வழங்குவதால் நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. ஒரு மாதத்திற்கு மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. வருடத்திற்கு 36 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகின்ற காரணத்தினால் ஒரு நிரந்தரத் தீர்வாகவும் இருக்கும். அதேநேரத்திலே இந்தக் குடிநீரை யாரும் விற்பனை செய்யாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும் இருக்கும். எனவே, 147-வது வட்டம்

மடுவன்கரை பகுதி முழுமைக்கும் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல புள்ளிவிவரங்களை எல்லாம் சொன்னார்கள். அங்கே வைக்கப்பட்டிருக்கிற 39 தண்ணீர் டாங்குகள் பற்றியும் அவற்றிற்கு ஆகின்ற செலவு பற்றியும் எடுத்துச்சொன்னார்கள். அந்த 39 டாங்குகளும் தற்காலிகமானவையே தவிர, நிரந்தரமானவை அல்ல. நிரந்தர ஏற்பாடுகளை இந்த அரசு செய்துவருகிறது. தற்காலிக ஏற்பாடு கோடைகாலத்தில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சியின் காரணமாகச் செய்யப்பட்டுள்ளது; அது தவிர்க்க முடியாதது ஆகும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** துணைத் தலைவரவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அந்தத் தொட்டிகள் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவை வைக்கப்பட்டது இன்று அல்ல, நேற்று அல்ல; 20 ஆண்டுகளாக வைக்கப்பட்டு குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவற்றை அகற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக முட்டுக்காட்டுத் தண்ணீரை வேளச்சேரி திட்டத்தோடு இணைத்து ஏற்கெனவே குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் தவிர குழாய்கள் பதிக்கப்படாத மேட்டுப்பாளையம், நரசிங்கபுரம் விரிவுப்பகுதி, மத்தகாலனி, ரேஸ்வியூ காலனி, பாரதிநகர், மாந்தோப்பு I, II, தெருக்கள் போன்ற பகுதிகளையும் இணைத்து, எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்து குடிநீர் வழங்க வேளச்சேரி திட்டத்தோடு இணைத்து, அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். 250 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது புதிதாக 14 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டும் பணி 13 கிலோமீட்டர் தூரத்திலிருக்கிற முட்டுக்காட்டில் தொடங்கப்பட்டிருக்கிற காரணத்தால் அதோடு இதை இணைத்துக்கொண்டால் இந்தப் பணி சுலபமாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த குழாய் பதிக்காத 147-வது வட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய்கள் பதித்து, நிரந்தரமாகக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே போடப்பட்டிருக்கிற திட்டத்தில் இந்தப் பகுதிகள் இணைக்கப்படவில்லை. குழாய்கள் பதிப்பது பெரிய காரியம் அல்ல. தண்ணீர் அங்கே வரவேண்டும். அதற்காகத்தான் தேவையான இடங்களைப் பார்த்து, எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து, அதற்கான திட்டங்களைத் தீட்டி, அதன் பிறகுதான் அறிவிக்க முடியும். வெகுவிரைவில் அதற்கான திட்டத்தைத் தீட்ட நான் முயற்சி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஈ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படும் நிலை.**

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூரில் உள்ள கார், டீசல் வேன் தயாரிக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மைய அரசின் புதிய கொள்கையால் மூடப்படும் அபாய நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மை துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

எரிபொருள் குறைவாக செலவாகக்கூடிய 1000 சி.சி.க்கு மேல் உள்ள எஞ்சின் மோட்டார் கார்களுக்கு வழங்கப்பட்டு வந்த சுங்கவரி மற்றும் ஆயத்தீர்வை சலுகையை மைய அரசு 2?—11—1986-லிருந்து விலக்கிக் கொண்டது. இதனால் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் தயாரிக்கும் "ஸ்டாண்டர்டு 2000" வண்டியின் விலை அதிகமாவதால் ஆர்டர்களை நீக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மறுபரிசீலனையில் மோட்டார் கார்கள் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான நியதிகளுக்குப் பொருந்தியதாகவும் உள்நாட்டு செயல்முறை திட்டத்திற்கு உகந்ததாகவும் இருந்தால் சுங்க வரி மற்றும் ஆயத் தீர்வை சலுகைகள் மீண்டும் வழங்கப்படும் என்று மைய அரசு 24—12—1986-ல் உத்தரவிட்டுள்ளது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 29

மைய அரசு தனது புதிய கொள்கையை மாற்றம் செய்து கொண்டுள்ளதால் செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் உள்ள கார், டீசல் வேன் தயாரிக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்படும் அபாயத்தில் இல்லை.

**திரு. எல். இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் மத்திய அரசு தனது புதிய தொழில் கொள்கையில் மாற்றம் செய்துள்ளது என்ற வார்த்தை குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத்தொழிற் சாலையில் 3,500 தொழிலாளர்கள் 20 ஆண்டுக் காலமாக நல்ல முறையில் பணியாற்றி, சிறப்பாக இந்தத் தொழிற்சாலை நடைபெற்று வருவதை நாம் அறிவோம். விந்தியத்திற்குத் தெற்கே உள்ள ஒரே ஒரு கார் தொழிற்சாலை இந்த ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைதான். இப்போது இங்கே தயாரிக்கப் படும் கார்களுக்கும் வேன்களுக்கும் இந்தியா எங்கும் சிறப்பான வரவேற்பு இருப்பதை அறிந்து, வடபுலத்தில் உள்ள இதற்கு போட்டியான நிறுவனம் தேவையில்லாமல் சில அதிகாரிகளின் துணையோடு இப்படிப்பட்ட ஒரு கம்பெனியை மூடுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். சுங்கத் தீர்வை இந்த நிறுவனத்திடம் வசூலிக்க வேண்டும் என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. அதே நேரத்தில் இந்த நிறுவனத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை கூட முடக்கி வைக்க மத்திய அரசின் சுங்க இலாகா உத்தரவு போட்டிருக்கிற காரணத்தால் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள குறைகளை இனியாவது நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது அத்தனையும் உண்மை. தென்னகத்தில் இருக்கின்ற ஒரே ஒரு மோட்டார் கார் தொழிற்சாலை அந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை தான். அதனை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்பதற்கான ஒரு பெரிய முயற்சியை மற்றவர்கள் எல்லாம் எடுத்ததாக நான் அறிகிறேன். அந்தக் கார் எந்த அளவுக்குப் பெட்ரோலைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தவரையில் அது பற்றி ஆராய்வதற்காக மெக்கானிக்கல் இன்ஜினியர்களை அனுப்புவதற்குப் பதிலாக சி.பி.ஐ. ஆட்களை அனுப்பி இருக்கிறார்கள்.



1987 ஏப்ரல் 29] [திரு. க. இராசாராம்]

அவர்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஆதாரம் கிடைக்கிறதா என்பதைத்தான் பார்ப்பார்களே தவிர, இன்ஜின்களைப் பார்ப்பதில்லை. அங்கே இன்ஜினியர்கள் வரவில்லை. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினார்கள். இங்கே இருக்கின்ற நிறுவனம் இங்கிலாந்து நாட்டினுடைய கூட்டுறவோடு நடக்கக்கூடிய நிறுவனமாக அது இருக்கிறது. ஆகவே, இங்கிலாந்து நாட்டுத் தூதரும் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு கொஞ்சம் கீழே இறங்கி வந்து, அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மாற்றிக் கொண்டு மெக்கானிக்கல் இன்ஜினியர்களை அனுப்பி பரிசோதிக்க ஏற்பாடு செய்தது; பரிசோதித்தும் ஆகிவிட்டது. அதற்குள்ளாக அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு அங்கே இருக்கின்ற எல்லா தொழிலாளர்களும் தங்களுடைய சம்பளத்தைக் கொடுத்து, நிறுவனத்தைக் காப்பாற்ற முன்வந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக இது நடந்திருக்கிறது. இதைப் பார்த்தவுடன் மையப் பேரரசும் இதற்கான சலுகைகளை அளிக்க ஆரம்பித்து இருக்கிறது. எனவே மீண்டும் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு வருகிறது.

**(உ) கன்னியாகுமரி மாவட்ட சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. வை. பாலசந்திரன் அவர்கள் அதனை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. வை. பாலசந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக அவர்கள் மனு செய்தும் உதவித் தொகை கிடைக்காமல் அவர்களுக்கும் அதிகாரிகளோ, குமரி மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

60 வயதுக்கு மேற்பட்ட பதிவு பெற்ற சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசாணை எண் 95, இந்திய மருத்துவத் துறை, நாள் 16—7—1986 மற்றும் அரசாணை எண் 121, இந்திய மருத்துவத் துறை, நாள் 14—9—1986-ல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி மாவட்டங்களில் வருவாய் கோட்ட அலுவலர்களுக்கும், சென்னையில் ஆட்சியாளரின் நேர்முக உதவியாளருக்கும் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. ஓய்வூதிய விண்ணப்பதாரர் வசிக்கும் கிராமத்தினை நிர்வகிக்கும் தாசில்தார், விண்ணப்பதாரரை விசாரித்து விசாரணை அறிக்கை மற்றும் விண்ணப்பதாரரின் சான்றிதழ் பதிவு சம்பந்தமான சரி நிலையை தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகப் பதிவாளரிடம் பெற்று வருவாய் கோட்ட அலுவலருக்கு (சென்னையில் ஆட்சியாளரின் நேர்முக உதவியாளருக்கு) அனுப்புதல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு வருவாய் கோட்ட அலுவலர் ஓய்வூதிய ஆணை வழங்குவார்.

3. அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோட்டாட்சியாளர்களிடமிருந்து கீழ்க்கண்ட தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

சித்த மருத்துவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை—64.

தள்ளுபடி செய்யப்பட்டவை—11.

ஓய்வூதியம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டவை—1.

விசாரணை நிலையில் உள்ளவை—52.

சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது கோட்டாட்சியாளரின் நேரடி நிர்வாக வரம்புக்குள் இருப்பினும், சித்த மருத்துவர்களுக்கு வழங்கும் ஓய்வூதியம் குறித்தான முன்னேற்றம், சீரான முறையில் மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மூலமாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.



**(ஊ) திருநெல்வேலி மாவட்டம் அம்பை வட்டத்தில் சாலைகள் மேம்பாட்டுப் பணி.**

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பை வட்டம் வெங்கட்டரெங்கபுரம் கிராமச் சாலையும், மேலச்சடையமான்குளம், கீழச்சடையமான்குளம் இணைப்புச் சாலையும் சரியில்லாத காரணத்தினால் பாதசாரிகளும், பஸ் போக்குவரத்தும் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எ. அருணாசலம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

**(1) வெங்கட்டரெங்கபுரம் சாலை :**

இச்சாலைக்கான மேம்பாட்டுப் பணி 1982-83 ஆம் ஆண்டின் பேருந்து வழித்தட ஏற்புத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன மொத்த வேலையும் விரைவில் முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(2) மேலச்சடையமான்குளம்—கீழச்சடையமான்குளம் சாலை :**

இச்சாலையில் தற்போது பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. இச்சாலையினை தார்சாலையாக மேம்பாடு செய்யும் பணி ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு தற்போது ரூ. 95,000 மதிப்பீட்டில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கருங்கல் கப்பி பரத்தும் பணி முடிக்கப்பட்டு தார் பரத்த தேவையான சிறுஞ்ஜல்லி கற்கள் சேகரம் நடைபெற்று வருகிறது. தார் பரத்தும் பணி 30—4—1987-க்குள் முடிக்கப்பட்டுவிடும் என எதிபார்க்கப்படுகிறது.

**(எ) கோவையில் சிலர் கள்ளச் சாராயம் அருந்தி மரணம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுக்குப் பதிலாக திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் அதனை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, "கோவை, பூ மார்க்கெட் அருகே தேவாங்கர்பேட்டையில் கள்ளச்சாராயம் குடித்து 6 பேர் மரணம் அடைந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன்:

அறிக்கை.

கோயம்புத்தூர் நகரில் தேவாங்கர் பேட்டையில், சிரியன்சர்ச் ரோட்டில் 16/56 இலக்கமிட்ட வீட்டில் வசித்த திரு. அருணகிரி, வயது 45 (த/பெ. ஜெகந்நாத செட்டியார்) என்பவர் 24—2—1987 ஆம் தேதி அன்று மெதில் ஆல்கஹால் உடன் கூடிய எதில் ஆல்கஹாலை அருந்தி மரணமடைந்துள்ளார். இது சம்பந்தமாக 24—2—1987 ஆம் தேதி பிற்பகல் கோயம்புத்தூர் ஆர். எஸ். புரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 218/87 குற்றவியல் நடைமுறைத் தொகுப்புப் பிரிவு 174-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

2. மேற்குறிப்பிட்டுள்ள வழக்கின் விசாரணையின்போது மேலும் கோயம்புத்தூரில் தேவாங்கர்பேட்டை, மேட்டுப்பாளையம் ரோட்டுப் பகுதி, ராம்நகர் ஆகிய பகுதிகளிலும் 23—2—1987 மற்றும் 24—2—1987 தேதிகளில் கீழ்க்கண்ட ஐந்து நபர்கள் இறந்ததாகத் தெரிய வந்தது.

(1) கணேஷ் குமார்.

(2) நாகேஷ் (என்கின்ற) சண்முகானந்தம்.

(3) மாணிக்கம்.

(4) ஜெயகாந்தன்.

(5) சின்னக்கண்ணன் (என்கின்ற) சட்டுச்சாமி.

இவர்களின் மரணம் பற்றி அவர்களது உறவினர்களை அணுகி விசாரித்தபோது மேற்படி ஐந்து நபர்களும் எவ்வித சாராயமும் சாப்பிட்டதால் இறக்கவில்லை என்றும், இயற்கையான மரணம் தான் அடைந்துள்ளனர் என்றும் தெரிய வந்தது. மேலும் மரண அறிவிப்புகங்களிலுள்ள சான்றாவணங்களில் மேலே குறிப்பிடப்





பட்டுள்ள ஐவரும் இயற்கையாகத்தான் மரணம் அடைந்துள்ளனர் என்று பதிவாகியுள்ளது. இவர்களின் மரணம் குறித்து எவ்விதப் புகார்களையும் காவல் நிலையத்தில் யாரும் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களினால் கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல கோயம்புத்தூர் பூ மார்க்கெட் அருகே தேவாங்கர் பேட்டையில் கள்ளச்சாராயம் குடித்து 6 பேர் மரணம் அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானதாகும்.

(ஏ) திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் ஆலயப் பணியாளர் போராட்டம்.

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி. கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்ட திருக்கோயில் பணியாளர்கள் சங்க உறுப்பினர்கள் கடந்த 9—3—1987 முதல் நடத்தி வரும் 'அறப் போராட்டம்' குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை நான் வைக்கிறேன்:

அறிக்கை.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் மற்றும் இதர ஆலயப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் கருணைத் தொகை வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

2. இச்சங்கம் அரசினால் அங்கீகாரம் பெறப்பட்டதன்று. மேலும், ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதிகள் ஆகியவை அரசுப் பணியாளர்களைப் போன்று வரையறுக்கப்பட்டவை அல்ல. மேலும் அவர்களது பணியின் தன்மையும், அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும் அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர்களிடமிருந்து மாறுபட்டுள்ளது. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக

திருவிழாக் காலங்களில் மரியாதை பெறுதல், ஓய்வு பெறும் வயது 60 போன்றவையாகும். இது தவிர, ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டு வருகிறது.

3. எனினும், இந்த அரசு முதன் முறையாக, இந்த நிலைமையை மாற்றி ஆலய ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் எனக் கருதி, வெவ்வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்களை சீராக்கி 125 ஊதிய விகிதங்களாக இருந்தவைகளை 20 ஆகக் குறைத்து, 1—4—1986 முதல் அமுல்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. இவ்வூதியம் நிர்ணயிக்கும்போது குறைந்தபட்ச பணப்பயன் ரூ. 20 ஆக (Minimum fixation benefit) நிர்ணயித்து அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாணைகளினால் 2,640 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 22.32 லட்சம் ஆகும்.

4. தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருந்திய சம்பள விகிதங்கள் முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால், இப்பணியாளர்களும் பயனடையும் வகையிலும், அவர்களது அவாவினை நிவர்த்தி செய்யும் வகையிலும், கருணைப் பணிக்கொடையாக தலா ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

5. மேற்படி திருந்திய ஊதிய உயர்வு வடபழனி அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயம், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம் மற்றும் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

6. இவை அல்லாமல், திருக்கோயில் பணியாளர்களுக்கு 1—3—1986 முதல் மற்றும் 1—5—1986 தேதிகளில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி தவணைகளை முறையே 1—9—1986 மற்றும் 1—11—1986 தேதிகளிலும், 1—7—1986 முதல் 4 விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை, 1—1—1987-ல் இருந்தும் முதநிலை ஆலயப் பணியாளர்களுக்கு வழங்கப் பெறலாம் என்று அரசு அறிவித்துள்ளது.



7. இதனைத் தொடர்ந்து தற்போது திருக்கோயில் பணியாளர்கள் அடியோடு போராட்டத்தை நிறுத்தி சுமூகமான முறையில் பணியாற்றுகின்றனரென்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை வைத்து இன்றைக்கு அந்தச் சங்க ஊழியர்கள் மத்தியிலே ஒரு நம்பிக்கையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தாலும் கூட இந்தப் பிரச்சினை தொடர்ந்து வரக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. அடிப்படையான அவர்கள் கோரிக்கை என்னவென்றால் அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்பதுதான். அவர்களுடைய ஊதியம் மாதாமாதம் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதையும் அவர்கள் சொல்லி வருகிறார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நன்மையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. தேவைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. கூடுமானவரையில் அவர்கள் திருப்தி அடைகிற அளவுக்குத்தான் இன்றைய தினம் சம்பள உயர்வுகள், சலுகைகள் இன்னும் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. குறைகளைப் பற்றி மனு கொடுக்கிறபோது அவ்வப்போது அதை ஆராய்ந்து பார்க்கிறோம்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்களுக்கு சிறப்பு சலுகைகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஓய்வு பெறுகிற வயதைக் கூட கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று சிறப்பு அடிப்படையிலே மொட்டு மொத்தமான பொதுவான நிதி ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து சம்பளம் கொடுக்கக்கூடிய ஒரு சிறப்பு திட்டத்தை அரசு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளில் சம்பளம் கொடுப்பதற்கென்று நிதி இருக்கிறபோது பொதுவாக ஒரு நிதி ஏற்படுத்த அவசியம் இல்லை.

[1987 ஏப்ரல் 29

## (ஐ) சொத்து மதிப்பு வழிகாட்டிப் பட்டியலை பொதுமக்கள் பார்வைக்கு வைக்காதது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், ஈ. வெ. கி. ச. இளங்கோவன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் நிலங்களின் மதிப்பீட்டை நிர்ணயம் செய்த குறிப்பை பொதுமக்களின் பார்வைக்கு வைக்காமல் சார்பதிவாளர்கள் விலை மதிப்பைக் கூட்டியும், தகுந்த பிரதி உபகாரம் பெற்றுக்கொண்டு விலை மதிப்பைக் குறைப்பது போல் பொது மக்களை ஏமாற்றுவதையும், மேற்படி சொத்து விலைப் பட்டியலைப் பொது மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பது பற்றியும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

1967 ஆம் ஆண்டில் இந்திய முத்திரைச் சட்டத்தில் "47-ஏ" என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. இப்புதிய பிரிவின்படி அசையாச் சொத்துக்கள் பரிவர்த்தனை செய்யப்படும்போது இச்சொத்துக்களின் பத்திரப் பதிவின்போது சந்தை மதிப்பிற்கேற்ப அரசுக்கு முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். அசையா சொத்துக்களின் சந்தை மதிப்பை பத்திரம் பதிவு செய்யும் அலுவலர்கள் தெரிந்து கொள்வதற்காக பதிவுத் துறையில் வழிகாட்டி மதிப்பு பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன.

இப்பதிவேடுகளில் உள்ள மதிப்புகள் 1981-ல் திருத்தி அமைக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை இப்பதிவேடுகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற அரசின் முடிவிற்கேற்ப மறுபடியும் 1986-ல் திருத்தி அமைக்கப்பட்டது. இப்பதிவேடுகளில்





சர்வே எண்கள் வாரியாக புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் மதிப்பு திருத்தி அமைக்கப்படும் போது, அச்சொத்துக்களை நேரில் பார்வையிட்டு அவற்றின் தன்மை, தரம், அமைவிடம், அவற்றிற்குள்ள முக்கியத்துவம், அச்சொத்து அமைந்த சர்வே எண்ணில் ஏற்கெனவே பதிவான பத்திரத்தில் கண்ட உயர்மதிப்பு ஆகியவைகளை நன்கு ஆய்வு செய்து தக்க விசாரணைகளும் மேற்கொண்டு, மதிப்புக்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட மதிப்புக்கள் 1—3—1987 ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அசையாச் சொத்துக்களின் மதிப்பை பத்திரம் பதிவு செய்யும் அதிகாரிகள் தெரிந்துகொள்ள உதவும் ஆதாரமாகவே இவ்வழிகாட்டி மதிப்பு பதிவேடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பத்திரங்களில் சொத்துக்களின் மதிப்பை குறைத்துக் காட்டுதலை தடுக்க இவைகள் உதவுகின்றன. இதனால் முத்திரைத் தீர்வை ஏய்ப்பு பெருமளவில் குறைக்கப்படுகின்றன.

வழிகாட்டிப் பதிவேட்டில் கண்ட மதிப்பே இறுதியானது என்றோ அதனையே பதிவுக்கு வரும் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமோ இல்லை.

சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை பத்திரத்தில் குறிப்பிடவில்லையென பத்திரப் பதிவு செய்யும் அலுவலர்கள் சந்தேகிக்க இடமிருந்தால், அப்பத்திரத்தை பதிவு செய்தபின், அச்சொத்துக்களின் சந்தை மதிப்பை நிர்ணயிப்பதற்காக அவற்றை முத்திரைச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட "கலெக்டர்"களுக்கு அனுப்ப பதிவு அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. அதுமாதிரி நிலைகளில் இறுதி முடிவெடுக்க வேண்டியவர் இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு "47-ஏ"-யின்படி, "கலெக்டரே" ஆவார். கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பால் பாதிப்பு ஏதும் இருப்பின் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ளவும், இந்திய முத்திரைச் சட்டத்தில் வழிவகை உண்டு.

எனவே, வழிகாட்டி மதிப்புகள் ஒரு பத்திரத்தில் கண்ட சொத்து உண்மையாக மதிப்பிடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய உதவும் ஆதாரமே அல்லாமல் இதனையே சந்தை மதிப்பாக எடுத்துக்கொள்ள முடியாதென விதிகள் (Tamil Nadu Stamp (Prevention of under Valuation of Instruments Rules). 1968)-ல் திருத்தப்பட்டுள்ளது. ஆகவே இதுதான் சந்தை மதிப்பு என்று

பூரணமாக அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் அமைந்துள்ள வழிகாட்டி மதிப்புக்களை பொதுமக்களுக்கு ஆதாரபூர்வமாக சான்றாகப் பதிவுத் துறையால் கொடுக்க முடியாது.

மேலும் இவ்வழிகாட்டிப் பதிவேட்டில் உள்ள விவரங்களை பொதுமக்களுக்குத் தடையின்றி வெளியிட்டால், வாங்கும் சொத்தின் மதிப்பு வழிகாட்டி மதிப்பைவிட அதிகமாக இருந்தால், வழிகாட்டிப் பதிவேட்டில் கண்ட குறைந்த மதிப்பிற்கு பத்திரங்கள் எழுத வாய்ப்பு ஏற்படும். இதனால் அரசுக்கு முத்திரைத் தீர்வை வாயிலாகக் கிடைக்கக்கூடிய நியாயமான வருவாயில் பாதிப்பு ஏற்படும். ஆகவே வழிகாட்டிப் பதிவேட்டில் கண்ட மதிப்புக்களை வெளியிட முடியாத சூழ்நிலையில் உள்ளது.

சொத்துக்களின் மதிப்பை வழிகாட்டி மதிப்பைவிட அதிகமாகக் கூறி உபகாரம் பெற்றுக்கொண்டு குறைத்துக் கூறுவதாக பதிவதிகாரிகள்மீது புகார் வந்தால் அப்பதிவதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரை கீழேயும் தள்ளி குழியையும் பறித்தது போல அந்த வேல்யுவேஷன் ரிஜிஸ்தரில் விலை அதிகமாக இருந்தாலும் அதை வெளியிட முடியாது என்பதுபோல் பதில் தரப்பட்டிருக்கிறது. ஆனால் மானியத்தின் மீது பதிலுரை அளிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வேல்யுவேஷன் ரிஜிஸ்டரை வெளியிடுவதாக என்னிடத்தில் கூறியிருந்தார்கள். அதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியானால் * என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு செய்யும் அலுவலர்களுக்கான மதிப்பீட்டுப் பட்டியல் தயாரிக்கப்பட்டது 1986 ஆம் ஆண்டு. அந்த வழி காட்டும் புத்தகம் பத்திரப் பதிவு அலுவலர்களுக்குத் தானே தவிர வேறு யாருக்கும் இல்லை. அந்த வழிக்காட்டுப் புத்தகமே இறுதியான முடிவும் அல்ல. தமிழ்நாடு பூராவும் இதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் சரி அல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் நாலரைக் கோடி மக்களில் பத்திரப்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





பதிவு செய்பவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 9 லட்சம் அல்லது 10 லட்சம் பேர்கள்தான் பதிவு செய்கிறார்கள். அவர்களில் குறைந்த மதிப்பீட்டில் பத்திரம் வாங்கிப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் தாம் சுமார் 8 ஆயிரம் மனுக்களை கலெக்டருக்கு அனுப்பியுள்ளது. தனியார் யாரும் அதுபற்றி அதிருப்தி அடையவில்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் என் கேள்விக்கு நேரிடையான பதிலைச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் அதை வெளியிட்டு வைக்கிறேன் என்று சொன்னார்களே அதிகாரிகள் ஏன் அதை மறுக்கிறார்கள். * என்பது என்னுடைய முதல் கேள்வி. அதையே திருப்பிக் கேட்பதனால் இரண்டாவது கேள்வி அதிலேயே அடங்கும் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். இரண்டாவது கேள்வியையும் சேர்த்துக் கேட்டு விடுகிறேன். சில நேரங்களில் லேண்டினுடைய மதிப்பீடு அந்தப் புத்தகத்தில் அதிகமாக இருந்தால் அதையே வைத்துக்கொண்டு லேண்ட் அக்கியுசேஷன் பண்ணும்போது காம்பன்சேஷன் கொடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதையும் சேர்த்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * பத்திரப் பதிவு செய்பவர்கள் சம்பந்தப்பட்ட நிலம் என்ன மதிப்பீட்டில் இருக்கிறது என்று கேட்டால் சொல்லலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பப்ளிக்காக அந்த புத்தகத்தை வைத்து சம்பந்தமில்லாதவர்களுக்கும் போய் கேட்டால் தெரிய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்வதனால் அதிகப் பணம் கேட்டு விலைக்கு வாங்க வருபவர்கள் இந்த மதிப்பீட்டுப் புத்தகத்தைப் பார்த்துக் குறைத்து கூட வாங்கலாம். அதற்காகத்தான் எல்லோருக்கும் காட்ட வேண்டாம், சம்பந்தப்பட்டவர்கள் கேட்டால் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இதில் * எதுவும் இல்லை.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப் பினர் குறிப்பிட்ட * என்ற பகுதிகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். கேள்விதான் கேட்க வேண்டும். கேள்வியிலே எவ்வளவு வேண்டுமானாலும் பதில் பெறுகிற அளவிற்குக் கேட்கலாம். நீங்கள் கற்பனையில் * என்றெல்லாம் கேட்கக் கூடாது. நான் குறிப்பிட்டது உட்பட நீக்க உத்தரவிடுகிறேன்.

**(ஓ) தஞ்சை மாவட்டம் வெங்காரமாவடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் வி. பி. சிந்தன், கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. எம். செல்லமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், வடகரை ஊராட்சி, வெங்காரமாவடி கிராமத்தில் துவங்கப்பட்ட ஆதி திரா விட நலப் பள்ளியில் சத்துணவுக் கூடம் ஏற்படுத்தாமல் இருப் பதால் 60-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்படுவது குறிந்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

தஞ்சாவூர் மாவட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், வெங் காரமாவடி கிராமத்தில் புதிய பள்ளி துவங்க வேண்டிய அவசி

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



யத்தை முன்னிட்டும், அவசரத்தை முன்னிட்டும், அரசின் அனு மதி பெறப்படாமல் பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியை மட்டும் ஏற்று, 30—6—1986 முதல் ஒரு புதிய ஆதி திராவிட நல ஆரம்பப் பள்ளி துவங்கப்பட்டு தனியார் அளித்துள்ள ஓட்டு வீட்டில் நடைபெற்று வருகிறது. அரசின் அனுமதியை எதிர் நோக்கி இப்பள்ளியில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் உடனே செயல்படுவதற்கான அனுமதியை ஆதி திராவிடர் மற் றும் பழங்குடியினர் நல இயக்குநர் தற்போது வழங்கியுள்ளார்..

**திரு. எம். செல்லமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் பள்ளி 30—6—1986-ல் அரசினுடைய அனுமதி எதிர்பார்த்து, பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியோடு துவங்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஒன்பது மாதம் கழித்து சத்துணவுக் கூடமும் துவங்கப் பட்டுவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி இருப்பதற்கு அரசிற்கு நன்றி தெரி வித்துக்கொள்கிறேன். இப்போது கொடுத்திருக்கிற அறிக்கையில் வாடகைக் கட்டடத்தில் இரண்டும் இயங்குவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தப் பள்ளியும் சத்துணவு மையமும் சொந்தக் கட்டடத்தில், அரசுக் கட்டடத்தில் இயங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அப்படி அமைக்கப் பட்ட அந்த சத்துணவுக் கூடத்தை, பள்ளிக் கட்டடத்தை அமைச்சர் அவர்களே திறந்து வைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க வேண்டும். நீண்டகாலமாக பள்ளி வேண்டுமென்று கேட்டு இப்போது தான் கிடைத்திருக்கிறது. அதிலே சத்துணவுக் கூடமும் கிடைத்திருக் கிறது. சொந்தக் கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் ஆசைப்படுகிறார்கள். படிப்படியாக அந்த வாய்ப்பை அந்தப் பள்ளிபெறும்.

[1987 ஏப்ரல் 29

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (இ) பொது விற்பனைவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1987-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (ஈ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1987-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



1987 ஏப்ரல் 29]

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 7. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

#### (அ) கோரிக்கை எண். 36—பாசனம்.

**மாண்புமிகு திரு. கே. கே எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 76, 33, 16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன்:** துணைத்தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு மிக முக்கியத் தேவையான காவேரி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,33,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 29

**திரு. எஸ். பி. மணவாளன்:** துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,33,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டிப் பகுதியில் உள்ள கருமாத்தூர் கரிசல்பட்டியில் அமைய உள்ள மினி டாம் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இடர்ப்பாடுகள் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,33,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய குளங்களில் கூட ஆக்கிரமிப்புகள் செய்துவிட்டதால், குமரி மாவட்டத்தை வறட்சியிலிருந்து காக்கும் வகையில் அனைத்து குளங்களையும் ஆழப்படுத்தவும், கரைகட்டவும் வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,33,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள், கட்டிடங்கள்.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,49,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".



1987 ஏப்ரல் 29]

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை நகரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலகத்திற்கு சொந்தக கட்டடம் கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள், கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,49,74,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**(இ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,81,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

**திரு. ஜே. முகம்மது கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியத்தின் பொதுப்பணித்துறை அலுவலகம் அருகில் உள்ள புதுக்கோட்டையில் இல்லாமல் 50 கிலோ மீட்டர் மேல் இருக்கிற அறந்தாங்கியில் இருப்பதால் அரசுப் பணிகள் மந்தமாக இருக்கிற நிலையை மாற்றி புதுக்கோட்டையில் உள்ள பொதுப்பணி கோட்டத்துடன் கந்தர்வகோட்டையை இணைப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 25,81,02,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**(ஈ) கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,43,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

**திரு. கே. எம். தங்கமணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், கிடங்கல் ஏரி இரண்டாகப் பிரித்து மண் அணை கட்டுவதற்காக ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் அனுமதிக்காக கடித எண். 230 கிகி—87—வ3—கோ. 23287/நாள் 2—3—1987-ல் அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கு அனுமதி வழங்கி வறட்சி திட்டத்தில் பணி செயது முடிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 65,43,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏரிகள் பல் வேறு துறைகளின்கீழ் இருப்பதை ஒரே துறையாக பொதுப் பணித்துறைக்கு கொண்டு வந்து ஏரிகளை ஆழப்படுத்தி, பராமரிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 65,43,69,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**(உ) கோரிக்கை எண். 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,24,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".





**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் வெண்ணாறு பிரிவில் வரும் கிளை ஆறுகளில் கரைகள் ஆண்டுக்காண்டு பழுதடைந்து போவதால் அவைகளை பலப்படுத்தி "ரிவிட்மெண்டுகள்" கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,24,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. மு. இராசாங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூரில் மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் 18—2—1966-ல் அடிக்கல் நாட்டிய காய்கறி மார்க்கெட் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,24,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின்கீழ் அவையின் முன் மொழியப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகள் பற்றி, நான் பேச வேண்டியவைகள் பற்றி எல்லாம், ஏற்கனவே குறிப்புகள் * அச்சடிக்கப் பெற்று, புத்தக வடிவத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நான் இங்கே உரையாற்றியதாக எடுத்துக்கொண்டு, அவைகளை குறிப்பிலே

* 753—852 ஆம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

ஏற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு, என்னுடைய பதில் உரையைத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைய விவாதத்தில் பங்கு கொள்வதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, பேரவையின் காலை நிகழ்ச்சிகள் 1 மணிக்கு முடிவுற்று, பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

*** திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள், கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள், பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும், கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு, மற்றும் கோரிக்கை எண் 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு—ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக கொள்கை விளக்கக் குறிப்பிலே பலவிதமான சமுதாய நலத் திட்டங்களும், நீர்ப்பாசன திட்டங்களும், கட்டிடங்கள் கட்டுவது குறித்த, சிறப்பு திட்டங்கள் குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

(முற்பகல் 11-50)

இருந்தாலும்கூட ஒருசில குறைபாடுகள் பற்றி கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முன்னிலையிலே வைக்க விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்திலே, காட்டுமன்னார்கோயில், சிதம்பரம் தாலுக்காவை உள்ளடக்கிய பகுதியில் வீராணம் ஏரி உள்ளது. இந்த வீராணம் ஏரியைப்பற்றி தமிழகத்திலே தெரியாதவர்களே கிடையாது என்று சொல்லலாம். அந்த வீராணம் ஏரி சுமார் 16 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இந்த வீராணம் ஏரியின் மூலமாக வருடாவருடம் சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாசனம் பெறுகின்றன. ஆனால் இந்த வீராணம் ஏரி



1987 ஏப்ரல் 29] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

கடந்த பல வருடங்களாக தூர் எடுக்கப்படாமல், ஆழப்படுத்தாமல், அகலப்படுத்தாமல் சுமார் 5 அடிக்குமேல் மண் தூர்ந்து போய் மேடாகி அங்கே வருகின்ற தண்ணீர் எல்லாம் தேக்கி வைக்கமுடியாமல் இருக்கக்கூடிய மிகவும் மோசமான நிலையை, ஒரு அவலநிலையை நாம் காண்கிறோம். இதுசம்பந்தமாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு செய்தி, சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.எஸ். அவர்களுடைய தொகுதி; அருமைச் சகோதரர் கே. ஆர். கணபதி அவர்களுடைய இந்தத் தொகுதி, என்னுடைய தொகுதி இந்த மூன்று தொகுதியும் உள்ளடக்கிய இந்த வீராணம் ஏரியை எப்படி ஆழப்படுத்துவது, எப்படி அகலப்படுத்துவது என்ற நோக்கத்தோடு தமிழகத்திலே பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு உயர் அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகளெல்லாம் இரண்டு முறை ஆய்வு நடத்தினார்கள். சிதம்பரத்திலே ஒரு ஆய்வு நடத்தினார்கள். சென்னையிலேகூட ஆய்வு நடத்தியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆய்வு நடத்தியதன் வாயிலாக வீராணம் ஏரியை தூர் எடுக்கவேண்டுமென்றால் சுமார் 100 கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்பட்டது. ஆனால் தமிழக அரசினுடைய நிதி நிலைமையில் அந்த 100 கோடி ரூபாய் செலவு செய்ய முடியாது என்ற நிலைமையையும் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் கண்டேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீராணம் ஏரியிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். இதற்குமுன்பாக நான் கேட்ட ஒரு கேள்விக்குக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு 50 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்கள். அந்த 50 லட்சம் ரூபாய் வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டால் அது 'யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவது' போல் தான் ஆகும். வீராணம் ஏரியினுடைய சிறு பகுதியைக்கூட நிச்சயமாக அந்த 50 லட்சம் ரூபாயில் செப்பனிட முடியாது. இதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் கொண்டு 100 கோடி ரூபாயை செலவு செய்வதற்கு என்ன வழி இருக்கிறது என்பதை ஆராயவேண்டும். தமிழக அரசிலே நிதிப்பற்றாக்குறை இருந்தால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டுங்கள்,

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டு வாருங்கள். மத்திய அரசின் உதவியோடு, உலக வங்கியிடம் பல கடன்களை வாங்கி, பாசன அபிவிருத்தித் திட்டங்களுக்காக செலவு செய்வதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கும், நீங்கள் ஏன் மத்திய அரசின் துணையோடு உலக வங்கியில் கடனைப் பெறக் கூடாது? அதற்காக நமது அரசு ஏன் இதுவரை முயற்சிகள் மேற்கொள்ளவில்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேற்கொண்டாவது, வீராணம் ஏரியை தூர் எடுப்பதற்கும், ஆழப்படுத்துவதற்கும் உலக வங்கிக் கடனைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வருடத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கூட காட்டுமன்னார்கோயில் தொகுதிக்கு வருகின்றபோது, அந்தப் பகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள பொதுமக்களெல்லாம் இந்த வீராணம் ஏரியை ஆழப்படுத்தவேண்டிய அவசியம் குறித்து பல கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்த போது, அந்த ஏரியை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பார்வையிட்டார்கள். அப்போதுகூட சில ஆலோசனைகளையும், சில திட்டங்களையும் அவர்கள் கொடுத்தார்கள். அந்த வீராணம் ஏரியை ஆழப்படுத்தவேண்டுமானால் குறைந்தது 40, 50 புல்டோசர்களைக் கொண்டு 20 நாட்களிலே, —அதாவது இப்போது மே, ஜூன் மாதங்களிலேயெல்லாம் வறண்டுதான் கிடக்கிறது—இந்த நேரத்திலே 20 நாட்களுக்குள், 40, 50 புல்டோசர்களைக்கொண்டு அதை ஆழப்படுத்தவேண்டும். அந்த மண்ணை எங்கே போடுவது என்ற ஒரு நிலைமை? அந்த மண்ணை, வீராணம் ஏரியின் மேற்குப் பகுதியில் 16 கிலோ மீட்டர் வரையிலும் கரை கட்டலாம். அதுமட்டுமல்லாமல் அந்த மண்ணை கீழ்பகுதியிலே—இப்போது பஸ்ஸெல்லாம் போனாலும்கூட அங்கே கரை சரியில்லாமல் மிகவும் ஆபத்தான நிலையிலே, ஒரு பஸ் சென்று விட்டால், மறு பஸ் மாற முடியாது. அப்படிப்பட்ட ஒரு குறுகலான பாதையாக இருக்கிறது. அந்த வீராணம் ஏரியின் கிழக்குப் பகுதி பொதுப்பணித் துறை அதிகாரிகளால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று நான்



1987 ஏப்ரல் 29] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

நினைக்கிறேன். அந்தப் பாதையை அகலமாக்க வேண்டும். அந்தச் சாலையை பலப்படுத்த வேண்டும் என்பதை அந்த நேரத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். அந்த வீராணம் ஏரியை நாம் ஆழப்படுத்தி விடுவோம். ஆனால் மழை பெய்கிற போது மேற்கே இருந்து வரும் தண்ணீர் எல்லாம் அரியலூர், ஜெயங்கொண்டம், திருச்சி மேல் பகுதியிலிருந்து அந்த மழை தண்ணீர் எல்லாம் வழிய வேண்டும் என்றால், அந்த ஏரி வழியாக வந்து வழிய வேண்டும். அப்படி வழிந்தால் தான் ஒரு வருடத்தில் 3 போகம் விளைவதற்கு எவ்வளவு தண்ணீர் நமக்கு தேவைப்படுமோ அந்த அளவுக்கு தண்ணீர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஏரியின் கொள்ளளவு சுமார் 850 மில்லியன் கன அடி என்று நினைக்கிறேன். தகவல் சரியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த 850 மில்லியன் கன அடி தண்ணீரில் ஒரு வருடத்தில் 3 போகத்திற்கு பாசனம் பெற்று விவசாயத்தை விளைய வைக்கலாம். அப்படி ஆழப்படுத்தாததன் காரணமாக மழை தண்ணீரையெல்லாம் நாம் வீணாக வெளியே வழிய வைத்து விடுகிறோம். அப்படி வெளியே வீணாக வழிய விடாமல் தேக்கி வைத்து விட்டால் அந்த ஏரியின் மூலம் அந்தப் பகுதி முழுவதும் உள்ள காட்டுமன்னார்கோவில் தாலுக்கா தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தண்ணீர் பஞ்சமும் தீரும்.

அது மட்டும் அல்லாமல் அந்தத் தண்ணீரை நாம் தேக்கி வைக்கின்ற காரணத்தால் அந்த கொள்ளளவுக்கும் அது வாய்ப்பாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஆழப்படுத்தி நாம் தேக்கி வைத்து விட்டால் அந்த ஏரி ஒரு மிகவும் சிறப்பு வாய்ந்த ஏரியாக அமையும். அந்த ஏரியை சுற்றிலும் மிக மிக அதிகமான கோவில்கள் இருக்கின்றன. பக்கத்திலே நெய்வேலி நிலக்கரி சுரங்கம் இருக்கிறது. பக்கத்திலே சிதம்பரம் நடராசர் கோவில் இருக்கிறது. அங்கே பறவைகள் அடிக்கடி வந்து தங்குகின்றன. அதை ஒரு பறவைகள் சரணாலயமாக அமைக்கலாம். அதை ஒரு சுற்றுலா மையமாக அமைக்கலாம். ஆகவே அதற்கு 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோமே என்ற கவலை வேண்டாம். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் அந்த ஏரியை நாம் ஆழப்படுத்திவிட்டால் எவ்வளவு தண்ணீர் வரி கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

[திரு. சா. ஜெயச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

அது மட்டும் அல்லாமல் அரசே முன்வந்து பொதுமக்களிடத்திலே ஆழுத் வாரியை ஆழப்படுத்த வேண்டும், 100 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டால் 20 கோடி ரூபாயை அங்கே வசூல் செய்து விடலாம். அதற்கு ஒரு தனியான சட்டம் போட்டு கூட அதை வசூல் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே, 40, 50 புல்டோசர்களை வைத்து செய்யலாம். புல்டோசர்களை எங்கிருந்து கொண்டு வருவது என்ற கவலை வேண்டாம். நெய்வேலி சுரங்கத்தில் புலடோசர்கள் அதிகமாக இருக்கின்றன. 10 நாளைக்கு, 20 நாளைக்கு வாடகைக்குக் கேட்டால் நிச்சயமாகக் கொடுப்பார்கள். இதை அதிகாரிகள் அங்கு வந்து ஆய்வு செய்கிறபோது இதுபோன்ற கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பொறுப்பு ஏற்று இருக்கும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த வீராணம் ஏரியை தூர் எடுத்து ஆழப்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வாழ்வை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதேபோல் வடக்கு ராஜன் வாய்க்கால் வழியாகத் தான் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. அணைக் கரையிலிருந்து வடக்கே வருகின்றது இந்த வடக்கு ராஜன் வாய்க் கால்—தெற்கே என்றால் தெற்கு ராஜன் வாய்க்கால், வடக்கே என்றால் வடக்கு ராஜன் வாய்க்கால்—தெற்கே தஞ்சாவூர் மாவட்டமாகவும் வடக்கே தென் ஆற்காடு மாவட்டமாகவும் அதை அனுபவித்து வருகிறார்கள். அந்த வடக்கு ராஜன் வாய்க்காலிலே ஒரு 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெற வேண்டுமானால் அரசுபுத்தூரான் வாய்க்கால் என்று ஒன்று இருக்கிறது. அந்த அரசுபுத்தூரான் வாய்க்காலுக்கு தண்ணீர் வரவேண்டும். அப்படி தண்ணீர் வருமேயானால், அந்த வடக்குராஜன் வாய்க்காலிலே ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். அதேபோல காட்டுமன்னார் கோவில் தொகுதியைச் சேர்ந்த வீரனந்தபுரம் ஒன்று உள்ளது; அதிலே சுமார் 27 ஏக்கர் நிலப்பரப்புள்ள சின்னப் பன்னேரி ஏரி உள்ளது. அந்த ஏரியை அகலப்படுத்துவதும் இல்லை. ஆழப்படுத்துவதும் இல்லை. அதை உடனடியாக



1987 ஏப்ரல் 29] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

ஆழப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே கருப்புரான்
வாய்க்கால் என்று ஒரு வாய்க்கால் உள்ளது. கடந்த பல வருடங்
களாகவே அந்த வாய்க்கால் சீர் செய்யப்படவில்லை. அந்தப்
பகுதியிலே தண்ணீர் வடிய வடிகால் வடியும்போதெல்லாம் சுமார்
50 கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. அந்த கருப்புரான்
வாய்க்கால் சரி செய்யாத காரணத்தினால் தண்ணீர் வடிய
வடிகால் வசதி இல்லாமல் குடிசைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு அரசும், அரசு
அதிகாரிகளும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். திருச்சியில் வடவார் உள்கரை என்பது ஒவ்வொரு
வருடமும் மழை பெய்கின்றபோதெல்லாம், வெள்ளம் வருகின்ற
போதெல்லாம் பொதுப்பணித் துறை அதிகாரிகள் எல்லாம்
வடவாற்றங்கரையிலே தான் இருப்பார்கள் பல சாக்கு
மூட்டைகளை வைத்துக்கொண்டு அந்த வெள்ளத்தைத்
தடுப்பதற்கு—எங்கே அணை உடைந்து விடுமோ என்ற
பயத்தோடு—எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும்
எடுப்பார்கள். அதன் கரையை நாம் பலப்படுத்தி விடுவோ
மேயானால் வெள்ள அபாயம் அந்தப் பகுதியில் இருக்காது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் . . . (மணியடிக்கப்
பெற்றது).

ஷண்டன்குமிலி மதகு இதுவரையில் தூர் எடுக்கப்படவில்லை.
செப்பனிடப்படவில்லை. அது செப்பனிடப்பட வேண்டும்.
வெள்ளியங்கார் ஓடையை சீர் செய்யவேண்டும். அந்த வெள்ளியங்
கார் ஓடை வழியாகத்தான் வீராணம் ஏரியிலிருந்து கழித்து
விடப்படுகின்ற வடிகால் தண்ணீர் வருகின்றது. அதுவும்
மழைக் காலங்களில் பஸ் போக்குவரத்து எல்லாம் நின்று விடு
கின்றது. எனவே வெள்ளியங்கார் ஓடையை சீர் செய்ய வேண்
வேண்டும். வீரனந்தபுரத்திற்கு நேராக நாட்டார்மங்கலம்
வரை ஒரு வடிகால் இருக்கிறது. அந்த வடிகால் செப்பனிடப்பட
வில்லை. அதை உடனடியாக செப்பனிட ஆவன செய்ய வேண்
வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலி
பழுப்பு நிலக்கரி நிறுவனம் பரவனாற்று ஓடையில் கழிவு நீர்
களை வடிய வைக்கின்றது. அதனால் பரவனாற்று ஓடை

நீரோட்டத்திற்கு தகுந்த ஆழமும், அகலமும் இல்லாதிருப்பதினால், அந்த அதிகப்படியான தண்ணீர் முறையாக வடியாமல் விளையமாதேவி, கீழ்ப்பாதி, கத்தாழை, குறிஞ்சிகொல்லை முதலிய கிராமங்களில் பல நூறு ஏக்கர் நிலங்களில் தேங்கி நின்று விவசாயத்தை பாழாக்குகின்றது. இந்த ஓடையை ஆழப்படுத்துவதற்கும், அகலப்படுத்துவதற்கும் நெய்வேலி நிலக்கரி சுரங்க நிறுவனம் முன்வருகிறது. இதற்கு பொதுப்பணித் துறையும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . (மணியடிக்கப் பெற்றது).

* **திரு. மு. ஜான் வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள், கட்டடங்கள் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை எண்கள் 36, 37, 38, 52, 53 ஆகியவற்றின் மீது சில கருத்துக்களை கூற கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய பாரதத் துணைக் கண்டத்தில் குறிப்பாக தமிழகத்தில் நீர்ப்பாசனத்தை மிக முக்கியமாக நாம் ஏற்று நடத்தி வருகின்றோம். பல திட்டங்களுக்கு மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். நமது பகுதியிலே இன்று விவசாயிகள் பாதிக்கப்படாத அளவிலே செயல்பட வேண்டும் என்று எண்ணினாலும் கூட, இயற்கை மழை பொய்த்து விட்ட காரணத்தினால் சில திட்டங்கள், பணிகள் நடந்தும் பயனற்ற நிலையிலே இருக்கிறது. தமிழகத்திலே குறிப்பாக தென் மாவட்டங்களில், தென் பகுதியான நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி பகுதியில், மிகவும் வறட்சியான பகுதியில் கொடுமுடியாறு அணை திட்டத்திற்கு 1977 முதல் 1986 ஆம் ஆண்டு வரை கோரிக்கைகளை கொடுத்தும் சட்ட மன்றத்திலே பேசியும் நீர்ப்பாசன கருத்தரங்குகளிலே அந்த கோரிக்கைகளை எடுத்து வைத்தும் 1986 ஆம் ஆண்டு மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நெல்லை வந்த நேரத்தில் கொடுமுடியாறு திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். ஆனால் பொதுப் பணித்துறையும் வன இலாக்காவும் ஒன்றாக இணைந்தால்தான் அந்தத் திட்டத்தை செய்து முடிக்க முடியும் என்ற அடிப்படையில், திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி அங்கே பொறியாளர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

அங்கே தளவாடச் சாமான்கள் கொண்டு வரப்பட்டன. கட்டிடங்களும், அலுவலகங்களும் கட்டப்பட்டன. ஆனால் மூன்று மாத காலத்திற்குள்ளாக அந்தத் திட்டப் பணியானது—தளவாட





சாமான்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. அதிகாரிகளும் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்கள். மாண்புமிகு மரியாதைக்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது, இரண்டு மாதங்களுக்குள் இத்திட்டத்தை நாங்கள் ஆரம்பிப்போம் என்று சொன்னார்கள். நான் அவருக்கு அதற்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதனால் பயன் அடையக்கூடிய 5,800-க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள், விவசாயத்திற்கு மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே உள்ள 70, 80 ஊர்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு திட்டம். ஆகவே, மரியாதைக்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை, கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே செய்து கொண்டு வருகிறார்கள். நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியினர் பலவாறான தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்து வைக்கின்ற காரணத்தால், பொதுமக்கள் அதைக் குறித்து அச்சப்படுகின்ற காரணத்தால், இரண்டு மாத காலத்திற்குள்ளாக நிச்சயமாக அந்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் கொண்டுவரப்பட்ட மணிமுத்தாறு பாசனத் திட்டத்தில், இன்று வரை மணிமுத்தாறு கால்வாய் செப்பனிடப்படவில்லை. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னால், கடந்த ஆண்டிலும்கூட, அங்கே லைனிங் போடப்பட வேண்டும் என்று சொன்ன நேரத்தில் ஒவ்வொரு 'ரீச்'-ஆகப் போடுவதாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். வருகின்ற ஆண்டிலாவது மணிமுத்தாறு வாய்க்கால் பிரதானக் கால்வாயில் சிமெண்ட் லைனிங் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், திறந்து விடப்படுகின்ற தண்ணீர், அம்பை, நாங்குநேரி, பாளையங்கோட்டை, சாத்தான்குளம், திருச்செந்தூர் தாலுக்காக்கள் வரை செல்கின்ற தண்ணீர், கசிவு ஏற்பட்டு, அங்கு குறைவாகச் செல்கின்ற காரணத்தால் லைனிங் போடப்படுமானால், தண்ணீர் மிச்சப்பட்டு, கடைசி வரை செல்வதற்கு வசதியாக இருக்கும். விவசாயிகளும் பயன் அடைவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1987 ஏப்ரல் 29

அதுபோலவே மணிமுத்தாறு பாசனத்தைப் பொறுத்தவரையில், தனிக்கால் திட்டத்தை பல ஆண்டுகளாக நான் சட்டமன்றத்திலே கேட்டு இருக்கிறேன். பார்ப்போம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 367 குளங்கள், அதிலே 30-க்கும் மேற்பட்ட ரிசர்வ் டாங்குகள், கிட்டத்தட்ட 9-க்கு மேற்பட்ட ஸ்பெஷல் டாங்குகள், தவிர மொத்தமுள்ள பாசனக் குளங்களுக்குத் தண்ணீர் செல்கின்ற நேரத்தில் ஒவ்வொரு குளங்களும் நிரம்பி, நிரம்பி, அடுத்த குளங்களுக்குச் செல்ல வேண்டியதிருக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் மத்தியில் பிரச்சினையும், அதனால் கால தாமதமும், பண விரயமும் செய்யப்படுகிறது. அதனால் சில அதிகாரிகளுக்குக் கூட, சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மரியாதைக்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, தனிக்கால் திட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டும் என்பதே ஆகும். தனிக்கால் திட்டத்தினை முதலிலே அத்தனை குளங்களுக்கும் எடுத்துக் கொடுக்காவிட்டாலும், குறிப்பாக நான் சொல்கின்ற அந்தப் பகுதியில், மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் 23-வது மடைப் பாசனத்தில் 12 குளங்களுக்காவது முதலில் கேட்டுள்ளபடி—குறிப்பாக, ஆம்பூரணி என்ற பகுதி, சாத்தான்குளம் என்ற பகுதி, அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் குளத்தின்மேல் குளமாக தண்ணீருக்குச் செல்கின்ற காரணத்தால் பாதிக்கப்படுவது மட்டுமல்ல. ஆண்டுக்காண்டு கிரிமினல் வழக்குகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இக்கட்டான நிலையைக் களைந்து எறிவதற்காக தனிக்கால் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும், செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, குளங்கள்--மணிமுத்தாறு பாசனக் குளங்கள், பச்சையாறு பாசனக் குளங்கள், தாமிரபரணி பாசனக் குளங்கள், நம்பியாற்று பாசனக் குளங்கள், மானாவாரி குளங்கள் சில நேரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மணலால் தூர்க்கப்பட்டு மண்மேடாகக் காட்சி அளிக்கின்றன. 1947 ஆம் ஆண்டு அளக்கப்பட்ட ஒரு குளத்தின் அளவு 6 அடி என்றால், இன்று அந்தக் குளத்தை நாம் அளந்தால், 4 அடி தான் இருக்கும். ஆனால் 'எப்.டி.எல்.' என்று சொல்லக்கூடிய அளவில், 'புல் டாங்க் லெவல்'-இல், மணிமுத்தாறு பாசனமோ, தாமிரபரணி பாசனமோ, நம்பியாறு பாசனமோ, பச்சையாறு பாசனத்



1987 ஏப்ரல் 29] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

திலோ, மானாவாரி குளத்திலே உள்ள, அளவை செய்யும் அதிகாரிகள், பழைய 7 அடிக் கணக்கில் அளக்கிறார்கள். இதை நாங்கள் ஆழப்படுத்த வேண்டும் என்று சொன்னபோது, மராமத்து என்ற பெயரில், தாட்டு எடுத்து, குளத்தின் கரையில் மண் போடுவதை விட, புல்டோசர் வைத்து அதனை அடிப்போமேயானால், நிச்சயமாக அந்தக் குளத்தை ஆழப்படுத்த முடியும். அது மட்டுமல்ல, ஏராளமான குறிப்பிட்ட அந்த 'எப்.டி.எல்.'—புல் டாங்க் லெவல்—கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(பிற்பகல் 12-10)

அதுபோலவே, பச்சையாறு திட்டம், 1976 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஒரு கல்யாண விருந்திற்கு வந்தார்கள். அங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் வேண்டுகோளுக்கிணங்க அந்தத் திருமண வைபவத்தை முடித்துவிட்டு, அங்கே ஒரு அடிக்கல்லை நாட்டினார்கள். எந்தவிதமான கோப்பும் இல்லை. நீர்ப்பாசன கருத்தரங்கில் எந்தவிதமான பேச்சும் இல்லை. இதைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கோரிக்கை எதுவும் வைக்கப்படவில்லை. சட்டமன்றத்திலே கூட 1976 ஆம் ஆண்டுக்கு முன்னாலே தி.மு.க. ஆட்சியில்கூட எந்தவிதமான கோரிக்கையும் வைக்கப்படவில்லை. இருந்தாலும் அங்கே அடிக்கல்லைப் போட்டார்கள். ஆனால் இப்போது அந்த அடிக்கல்லும் காணவில்லை.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே சட்டமன்றத்தில் நான் பேசுகிற நேரத்தில்கூட இந்தப் பச்சையாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இதனால் பாசன வசதி கிடைக்கக்கூடிய குளங்களின் மொத்த எண்ணிக்கை 225. அதாவது சாத்தான்குளம், நாங்குநேரி, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் தாலுக்கா ஆகிய பகுதிகளில் உள்ள 225 குளங்கள் இதன் காரணமாகப் பாசன வசதியைப் பெறுவது மட்டுமல்ல, அங்கே இருக்கிற மக்களின் குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படும் என்று சொன்னேன். ஆகவே இந்தப் பச்சையாறு திட்டம் பற்றி குறிப்பிட்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். இதைக் குறித்து மத்திய திட்டக் கமிஷன் 1981 ஆம் ஆண்டில் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதாவது அங்கே சிங்கவால் குரங்கு

கள் இருக்கிற காரணத்தினால் அவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தினால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அறிக்கை அளித்தார்கள். இதைக் குறித்து தமிழகச் சட்டமன்றத்தில் கேள்விகள் கேட்டபோது அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் "இந்தத் திட்டம் கைவிடப் படவில்லை" என்று சொன்னார்கள். ஆனால் அங்கே இருக்கிற வன இலாக்கா அதிகாரிகள் அதற்கு சரியான பதில் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்திலேயும் மற்றும் நீர்ப்பாசன கருத்தரங்கிலேயும் இந்தக் கோரிக்கையை எடுத்து வைத்தபோது அதிகாரிகள் என்ன சொன்னார்கள் என்றால், "அங்கே உள்ள வனத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறையைச் சார்ந்த அதிகாரிகளை அங்கே சர்வே செய்ய அனுமதிக்கவில்லை" என்றார்கள். இப்படி ஒவ்வொருவரும் ஒருவிதமாக ஸ்டேட்மென்டை கொடுத்தார்கள். திட்டக் கமிஷன் ஒரு அறிக்கையை வெளியிட்டது. பொதுப்பணித் துறை ஒரு அறிக்கையை வெளியிட்டது. மாவட்டத்தில் உள்ளவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். இப்படி ஒவ்வொருவரும் மாற்றி மாற்றி ஸ்டேட்மென்ட் விடுகிற காரணத்தால் மக்கள் அங்கே மிகவும் அச்சப்பட்டுள்ளார்கள். ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில்—அவர்கள் கரங்களாலே எவ்வளவோ திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிற காரணத்தாலே—நெல்லை மாவட்டத்தின் தென் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருக்கிற காரணத்தாலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் பாசன வசதியைப் பெறுகிற குளங்களின் எண்ணிக்கை 225 இருக்கிற காரணத்தால் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே சிங்க வால் குரங்குகள் 10 இருக்கும். அந்த 10 குரங்குகளைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பகுதியில் உள்ள 10 லட்சம் மக்கள்—விவசாயிகள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படியே இருந்தாலுங்கூட அந்த 10 சிங்க வால் குரங்குகளும் மேல் பகுதியிலேதான் இருக்கின்றன என்கிற காரணத்தால் இடைப்பட்ட இடங்களில் அந்த அணையைக் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல மரங்கள் வெட்டப்பட்டுவிடும் என்று அதிகாரிகள் கூறினார்கள்.





இடைப்பட்ட இடத்தில் கட்டுகிற காரணத்தால் அப்படிப்பட்ட பிரச்சினைகூட எழுவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பச்சையாறு திட்டத்தை உடனடியாகச்செயல்படுத்த வேண்டும். அதை நிறைவேற்ற வேண்டுமென்றால் அந்தச் சிங்கவால் குரங்குகள் இருக்கிற இடம் எத்தனை அடிக்குமேல் இருக்கிறதோ அதைக் கணக்கிட்டு அவைகளுக்குப் பாதுகாப்பைக் கொடுத்தும், இடைப்பட்ட இடத்தில் மரங்கள் வெட்டப்படாத நிலையிலும் மேற்படி திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்பியாறு திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஏராளமான மழை பெய்யுமானால் அதன் காரணமாகக் குளங்கள் எல்லாம் பெருக்கெடுத்து உடைப்பெடுத்து அவ்வளவு தண்ணீரும் வீணாகக் கடலில் போய் கலக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இப்படி வரும் உபரித் தண்ணீர் முழுவதும் கடலில் போய்க் கலக்காமல் கோட்டையாறு என்கிற இடத்தில் நம்பி ஆற்றில் ஒரு அணை கட்டிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், அவருக்குப் பின்னாலோ 1980 ஆம் ஆண்டில் அன்றைக்கிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சரும் இந்தத் திட்டத்தைக் கைவிடவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவேயில்லை. இந்தத் திட்டத்தினால் விவசாயிகள் மட்டுமல்ல அந்தப் பகுதியில் உள்ள 125 கிராம மக்களும் குடி-நீர் பிரச்சினை எதுமில்லாமல் வாழ முடியும். இன்றைக்கு குடிநீருக்காக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வெளியிடங்களுக்குத் தண்ணீரைத் தேடி ஓடுகிறார்கள். அவர்களுடைய குறைகளையும் இதன் மூலம் களைய முடியும். எனவே அவர்களின் இன்னல்களைப் போக்குவதற்கும் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும், விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்தத் திட்டத்தை உடனடியாக செய்து முடிக்க வேண்டும். இது செய்து முடிக்கப்படும் என்று சட்டமன்றத்திலே வாக்குறுதி அளிக்கப்பட்டு, பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்ன காரணத்தால் இதற்காக இத்தனை லட்சம் நாங்கள்

செலவு செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொன்ன காரணத்தால் மக்களின் இதய தெய்வம், புரட்சித்தலைவரின் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தை மிக விரைவாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்று குளங்களை எடுத்துக்கொண்டால் தொன்றுதொட்டு உள்ள குளங்கள், முன்னால் கட்டப்பட்ட குளங்கள், முன்னால் கட்டப்பட்ட மடைகள் அத்தனையும் பழு தடைந்த நிலையிலே இருக்கின்றன. அப்படிப்பட்டக் குளங் களை சீர் செய்து சிறுநீர்ப் பாசன திட்டத்தின் மூலமும், பஞ்சா யத்துக்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகையின் மூலமும் சரியாக திட்டங்களை நிறைவேற்றவில்லை. ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் செய்ய வேண்டிய திட்டங்கள் ஒன்றும் சரியாக நிறைவேற்றப்படவில்லை. ஆகவே இந்த அரசு நேரிடையாக பொதுப் பணித் துறையின் மூலம் கவனம் செலுத்தி, சிறு நீர்ப்பாசனமாக இருந்தாலும் சரி, மத்திய திட்டமாக இருந்தாலும் சரி, எல்லா திட்டங்களையும் அரசே ஏற்று செய்து கொடுக்க வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்கள் நமது மக்களுக்கு நன்மை செய்கின்ற காரணத்தால் செய்கின்ற திட்டங்களை மிக விரைவிலே காலதாமதம் இல்லாமல் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குளத்தின் நீர்பிடிப்புப் பகுதியில் விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். இதனை பொதுப் பணித் துறை யிடம் சொன்னாலும் சரி, ரெவின்யூ டிப்பார்ட்மென்டிடம் சொன்னாலும் சரி உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை அகற்ற முன்வருவதில்லை. ஆகவே குளங்கள் உள்ள இடத்தில் ஆக்கிரமிப்புச் செய்து அந்த இடத்தை சொந்த இடமாக எடுத் துக் கொள்கிறவர்கள் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆற்றங்கரை படுகையில் வீடு கட்டுகிற வர்கள் அங்கே வீடு கட்டுவது மட்டுமல்லாமல் இடையிலே பிரச்சினைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆற்றங் கரையின் படுகையில் வசிப்பவர்களை அப்புறப்படுத்தி, அவர்கள் வேறு புறம்போக்கு நிலங்களில் வீடு கட்ட உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்படிப்பட்ட திட்டங்களைச் செய்வதோடு மட்டுமல்லாமல் பாசனக் கால்வாய்களை ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு பகுதியாக எடுத்துக் கொண்டு ஆழப்படுத்தி கரையை அதிகமாக உயர்த்தி னால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் இல்லை. இடையிலே பல குளங்களில் உடைப்பு ஏற்படுகின்றன. பல குளங்களில் உடைப்பு ஏற்படுவதால் அதன் நீர்ப்பகுதிகளில் உள்ள ஏராளமான கிராம மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே குளங்களை ஆழப் படுத்த வேண்டும். புல்டோசர்கள் மூலமாக குளங்களை ஆழப் படுத்த வேண்டும்.

மணிமுத்தாறு பிரதான கால்வாயில் உள்ள வாய்க்காலை ஆழப்படுத்த வேண்டும், ஒவ்வொரு குளத்திற்கும் தனிக்கால் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அதையும் இந்த ஆண்டிலேயே செய்ய வேண்டும், பச்சையாறு திட்டத்தைக் கைவிடாமல் நிறைவேற்ற வேண்டும், 225 குளங்களின் பகுதியில் உள்ள விவசாயிகளைப் பாதுகாக்கும் திட்டத்தைச் செய்ய வேண்டும் என்றும், ஏற்கெனவே அடிக்கல் நாட்டப்பெற்ற கொடுமுடியாறு திட்டத்தை இரண்டு மாதத்திற்குள்ளாகச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் மெத்தப் பணிவன்போடு கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. பிரணவநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பொதுப் பணித் துறை மானிய கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுப்பணித் துறை இன்றைய மனித சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் எனைய ஜீவராசிகளுக்கும் இன்றியமையாத, அவசியமான துறையாக இருந்து வருகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மராமத்து துறையாக இருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பொதுப்பணித் துறை என்ற பெயரை ஏற்றுக்கொண்டு தமிழகத்திற்கு சிறப்பான பல திட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உயிர் காக்கும் திட்டங்களாக, நீர்ப்பாசன திட்டங்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன என்றாலும் [illegible] பாசன திட்டமாக காவிரி அமைய வருகிறது என்பதை நாம் அறிவோம். தமிழகத்தில் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்

படுகிற தஞ்சை மாவட்டம் காவிரியின் நீர்ப்பாசனத்தின் மூலமாகத்தான் வேளாண்மைத் துறையில் பெரிதும் வளர்ந்து வெளி மாநிலங்களுக்குக் கூட உணவை வழங்கும் அளவிற்கு மிகமிஞ்சி உற்பத்தியைப் பெருக்கி வந்தது என்பதை நாம் அறிவோம். ஆகவே 'சோழ நாடு சோறு உடைத்து' என்ற வரலாற்றுச்

(பிற்பகல் 12-20)

சிறப்புமிக்க பெயரை அந்த மாவட்டம் பெற்றிருந்தது. ஆனால் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக உணவு உற்பத்தி குறைந்து தஞ்சையிலும் சில இடங்களில் பஞ்சம் என்ற அளவிற்கு உணவு உற்பத்தி குறைந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்த்தால் எதிர்காலத் தமிழகத்திலே வறட்சி தொடர் கதையாக வரும் என்ற அச்சமும், வெளி மாநிலங்களில் கையேந்தும் நிலை தமிழகத்திலே வந்துவிடுமோ என்ற அச்சமும் இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சோழ நாடு சோறுடைத்து என்ற வரலாறு போய் சோழ நாடு கூழுடைத்து என்கின்ற ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதற்கு நிரந்தரத் தீர்வு காண பொதுப் பணித் துறை தொலைநோக்கோடு திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

குறிப்பாக தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவேரி ஒப்பந்தம் குறித்து கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் பல நேரங்களில் பேச்சு வார்த்தை நடத்தி, 1924 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டோடு ஒப்பந்தங்கள் முடிவுற்றன என கர்நாடக அரசு வாதிட்ட காலத்தில் நேரிடையாகப் பேசியும், மைய அரசுக்கு நமது கோரிக்கைகளைச் சொல்லியும் அவர்கள் பிடிவாதம் காட்டிய நேரங்களில் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த சாதிக் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த ப.உ.ச. அவர்கள் போன்றவர்கள் வாதாட, அப்போதைய நீர்ப்பாசனத் துறை மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் தலையிட்டு பல நேரங்களில் நமக்கு உரிய பங்கினை வாதிட்டுப் பெற்றிருக்கிறார்கள். கேரளத்திலிருந்து மேற்குப் பகுதியில் வீணாகக் கடலுக்குச் செல்லும் தண்ணீரை அன்றைய முதல்வர் திரு. ஈ.எம்.எஸ்., அவருக்குப் பிறகு வந்த திரு. அச்சுதமேனன் போன்றவர்களிடத்தில் அன்றைய முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர்கள் கலந்து கொண்டு, இரு மாநில உயர் மட்ட அதிகாரிகளையும் பேசவைத்து

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் நிறைவேற்றப்பட்ட காரணத்தினாலேதான் இன்றையதினம் கோவை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆனால் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது, நாங்கள் மேல் தருகிறோம் என்று பலர் மாறுமாறு இன்றையதினம் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. ஆனால் இப்போதும் கேரள மாநில மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்து வீணாகக் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதை கிழக்குப்புறம் திருப்பி விடுவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்கள் கேரள அரசோடு பேசி, அந்த ஒப்பந்தத்தை அவர்கள் ஒத்துக்கொள்வார்களானால், இன்றைய தினம் வறண்டு கிடக்கும் இராமநாதபுரம் மாவட்டம், காமராஜ மாவட்டம், மதுரை மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற மாவட்டங்கள் எல்லாம் நீர்ப் பாசனத்தில் வளர்ச்சி பெற்ற மாவட்டங்களாக மாற வழி இருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே எதிர்கால சமுதாயம் நிரந்தரமாக வாழ வேண்டும், வளர வேண்டும் என்று இந்த அரசு அக்கறை எடுத்துக் கொள்ளுமானால் கேரள அரசோடு உடன்பாடு கொண்டு, அரபிக் கடலில் விழும் தண்ணீரை தமிழ் மண்ணுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு நீர்ப்பாசனம் பொறுத்தவரையில் அதனுடைய கொள்ளளவு 152 அடி உயரமாக இருந்தது. ஆனால் தண்ணீர் கசிவு ஏற்படுகிற காரணத்தால் அணைக்கு சேதம் வந்துவிடக் கூடாது என்பதால் 136 அடியாக கொள்ளளவு உயரம் தாழ்த்தப் பட்டது. ஆனால் டெண்டர் விடப்பட்டு, பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுவிட்ட பிறகும்கூட இன்னும் 136 அடியிலேயே கொள்ளளவு உயரம் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் 152 அடியாக உயர்த்தி, அதிலிருந்து வைகை அணைக்கட்டுக்கு தண்ணீர் வந்து, வைகை அணைக்கட்டு மூலமாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு தண்ணீர் விட்டால், இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாய்ப்பு ஏற்படும். இதில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் உடனடியாக விரைவாகத் தீர்வு காணவில்லை என்றால் இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிப்பதற்குக்கூட தூய தண்ணீர் இல்லாத சூழ்நிலை ஏற்படும்.

அடுத்து வைகை அணை கட்டும்போது, அதில் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு வைகை அணைக் கட்டியிருந்து தண்ணீர் விடவேண்டுமென்று ஒப்பந்தம் இருக்கிறது. அப்படி ஆண்டுக்கு ஒரு முறை வைகை அணைக்கட்டிலிருந்து இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு தண்ணீர் வந்தால் தொடர்ந்து ஓராண்டுக்கு குடிப்பதற்கு தண்ணீர் ஊற்றுக்கள் கிடைக்கும். இப்படி தண்ணீர் விடுவதை பல ஆண்டுகாலமாக நிறுத்திவிட்டதால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் நகரத்திற்கும் குடிநீருக்கு மிகப் பெரிய பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து 2 ஆண்டுகளுக்கு முன்னாலே காவிரிப் படுகையில மராமத்து செய்ய 2½ கோடி ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அங்கே பல பேர், டெண்டர் எடுத்தவர்கள், நல்லமுறையிலே வேலை செய்யாமல், முறைகேடாக நடந்ததால், அங்கேயுள்ள பொது மக்களுடைய பரிந்துரை அல்லது ரிப்போர்ட் மூலமாக உயர் மட்ட அதிகாரிகளிடம் சொல்லி, அந்தக் காவிரிப்படுகை முழுக்க முழுக்க வேலை செய்யப்படாமல் மிக மிகப் பெரிய மோசடியாக அங்கேயுள்ள டெண்டர்தாரர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று `கம்ப்ளெயின்ட் வந்திருக்கிறது. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரி அந்த பகுதியிலே சென்று இன்ஸ்பெக்ஷன் நடத்தி உண்மையிலேயே முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசுக்கு அறிக்கை மூலம் சமர்ப்பித்தக் காரணத்தினாலே ஒரு கண்காணிப்புப் பொறியாளரும் இரண்டு நிர்வாகப் பொறியாளர்களும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையிலும் அங்கே நடக்கின்ற குற்றச்சாட்டுகளை, அங்கே நடந்திருக்கின்ற முறைகேடுகளை நிர்வாகப் பணியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர் செய்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் மட்டும் என்று சொல்ல முடியாது. அங்கே இருந்துகொண்டு இருக்கின்ற எஸ்.டி.ஓ., ஜே. ஈ. அவர்கள்தான் அங்கே முறைகேட்டுக்கு காரணமாக இருந்திருப்பார்கள். எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, இந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது நியாயம் தானா என்று கேட்டுக் கொள்கிறேன்.





மக்கள் உயிரனைய பிரச்சினையாக நீர்ப்பாசனத் துறை இருக்கின்ற காரணத்தினால எல்லாத் திட்டங்களையும்விட மிகப் பெரிய பொருளாதாரத்தை ஒதுக்கி தமிழகம் உணவுத்துறையில் உபரி மாநிலமாக வளர்கின்ற வகையில் அடிப்படை திட்டங்கள் தாமதமின்றி நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்ட் என்ற பெயர் வந்துவிடாமல் பப்ளிக் ஒர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட் என்பதை நிலைநாட்டிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றியும் என்னுடைய மாவட்டத்தைப் பற்றியும் சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன். 1971 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை என்னுடைய கடலாடியிலிருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கேட்டுக்கொண்டிருக்கும் ஒரே ஒரு திட்டம் மலட்டாறு திட்டம். அதைத்தான் கேட்டு வந்திருக்கின்றார்கள். அந்த மலட்டாறு திட்டத்தினுடைய அத்தியாவசியத்தை பற்றி என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள், வணிகவரித்துறை அமைச்சர் அவர்களிடமும் இன்றைக்கு பிரிக்கப்படாதிருக்கின்ற முகவை மாவட்டத்தின் அமைச்சராக இருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களிடமும் நாங்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். நிச்சயமாக வருகின்ற ஆண்டிலேயாவது எடுத்துக்கொள்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தமட்டில் இந்த இரண்டு அமைச்சர்களை விட்டால் வேறு யார் வந்து இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 1971-லேயிருந்து நாங்கள் கேட்டோம். இராமலிங்கம் அவர்கள் கேட்ட நேரத்திலேகூட திரு. சாதிக் பாட்சா அவர்கள் இன்வெஸ்டிகேஷனில் இருக்கின்றது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கின்றபோது ஆய்வு முடிந்துவிட்டது. நிச்சயமாக அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று பதில் அளித்திருக்கின்றார்கள். ஆனால் அதிலேயிருந்து பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் வந்து மூன்று ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன் இந்த மாமன்றத்திலே. ஆகவே எப்படியாவது இந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒரு நீர்ப்பாசனத் திட்டம் வரவேண்டும். இதுவரை எந்த பெரிய

[திரு. அ. பிரணவநாதன்] [1987 ஏப்ரல் 29

திட்டமும் கிடையாது. ஆகவே இந்த ஆண்டிலேயாவது மலட்டாறு திட்டம் செயல்படுத்தப்படவேண்டும். இந்த ஆண்டில் செயல்படவில்லை. அதனுடைய பெயரே மலட்டாறு என்பது எங்களுக்கு வருத்தமாக இருக்கின்றது. வருகின்ற நிதி ஆண்டிலாவது உலக வங்கியிடமிருந்து, அல்லது மூலமாக ரூ. 4.09 கோடிக்கு திட்டம் ... அரசு, நிச்சயமாக இந்த மலட்டாறு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனுடைய காலக்கோள் வழிவருகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை கட்டாயம் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமால் நதி திட்டம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இதுவரை 11 ஆண்டுகாலம் ஆகியும் நிறைவு பெறாமல் இருக்கின்றது. அதனால் எங்களுடைய நீர்ப் பாசனங்கள் பாதிக்கப்பட்டு, நீர் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது.

குண்டாறு, திருமங்கலம் பகுதியிலே ஓடுகின்ற மழை நீர் கூட குண்டாற்றின் வழியாக முகவை மாவட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் தாலுக்கா கமுதி தாலுக்கா பகுதிகளுக்கு தொடர்ந்து தண்ணீர் வரும். அதிலே குறுக்கே அணைகள் கட்டப் பட்டுவிட்டன. இப்போதுகூட குறுக்கே அணை கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கின்றது என்று நினைக்கிறேன். ஆக தொடர்ந்து பாரம்பரியமாக முதுகுளத்தூர், கமுதி பகுதிக்கு வருகின்ற வரத்துத் தண்ணீரை இடையிலே தயவுசெய்து மறித்து, எங்களுக்கு பாசனத்திற்கு வருகின்ற தண்ணீரை நிறுத்திவிட வேண்டாம் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரெகுநாத காவேரி. அதன் மூலமாகத்தான் கிழக்குப் பகுதியிலே உள்ள, மிகப் பெரிய களரிக் கண்மாய்க்கு, ரெகுநாத காவேரி முதுகுளத்தூர் வழியாக செல்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். கூத்தங்கால்வாய்த் திட்டம் 12 லட்சம் ரூபாய் செலவில் வெட்டப்பட்டு நிற்கிறது. எனவே அந்த கால்வாய்த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். பலஞ்சிராய் ஓடை என்று இருக்கின்றது. அதில் பாலம் உடனடியாகக் கட்டித் தந்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. அ. பிரணவநாதன்]

(பிற்பகல் 12-30)

அடுத்து, ஏரிகள் தூர் வாரப்பட வேண்டும். கடலாடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளிலுள்ள கண்மாய்களின் எப்.டி.எல். உயர்த்தப்பட வேண்டும். மன்னர்கள் காலத்தில் வெட்டப்பட்ட கண்மாய்கள் அப்போதிருந்த பாசன நிலைமைகளுக்கு ஏற்ப வெட்டப்பட்டன. இன்றையதினம் புஞ்சைகள் எல்லாம் நஞ்சைகளாக மாற்றப்படக் கூடிய நிலையில் கண்மாய்களின் கரைகள் 2 அடி, 3 அடி மேலும் உயர்த்தப்பட்டால்தான் விவசாயம் அதிக அளவில் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா கண்மாய்களின் எப்.டி.எல்.-ன் (F.T.L.) உயரத்தையும் 2 அல்லது 3 அடி உயர்த்தி பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 5 அல்லது 10 கண்மாய்களுக்கு ஒரு பணியாளரை கண்காணிக்க நியமிக்க வேண்டும். அப்படி செய்தால்தான் கரைகளுக்கு சேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். அதுபோல பொதுமக்களில் யாராவது தகாத செயல் செய்தால் இன்னார் என்று அறிய வாய்ப்பு ஏற்படும். மேலும் ஆக்கிரமிப்புகளை செய்கின்றவர்களைக் கண்டுபிடித்து, ஆக்கிரமிப்புகளை அப்போதைக்கப்போது தவிர்க்கலாம். ஆகவே, 5 அல்லது 10 கண்மாய்களுக்கு ஒரு பணியாளர் வீதம் அவசியம் நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, பல கண்மாய்களுக்கு மடைகள் கட்டப்படவில்லை. அப்படிப்பட்ட கண்மாய்கள் எவை எவை என்று கணக்கெடுத்து, அவைகளுக்கு எல்லாம் மடைகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல வைகை சீரமைப்பு வேலைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது)

அடுத்து, எங்கள் பகுதியில் 4 மாணவர்கள் விடுதி இருந்தாலும் கடலாடியில் மாத்திரம் தான் விடுதிக்கான கட்டடம் இருக்கிறது. ஆகவே மாரியூர், சிக்கல், சாயல்குடி போன்ற இடங்களிலும் முறையாக விடுதி கட்டடம் மாணவர்களுக்காக கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கீழக்கரையில் ஒரு பெண்கள் உணவு விடுதிக் கட்டடம் கட்டப்பட வேண்டும். திருப்புல்லாணி பகுதியில் நோரைக்கட்டம் என்ற

136598

ஊரில் இருக்கும் ஓடு பாலத்தை நடைபாதையாக போட்டுத் தர புயல் பாதுகாப்பு கட்டடம் இல்லை. சென்ற ஆண்டு புயல் அடித்தபோது அந்த ஊர் ரொம்பவும் பாதிக்கப்பட்டு ஆடுமாடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. ஆகவே அங்கே புயல் பாதுகாப்பு இல்லம் ஒன்றை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உச்சி நத்தம் கிராமத்தில் மிகப் பெரிய மருத்துவமனை ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அங்கே நிரந்தரமாக கட்டடம் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வாலிநோக்கத்தில் ஒரு மருத்துவமனை இருந்தாலும் கூட, அது தனியார் கட்டடத்தில் செயல்படுவதால் அரசு பணம் ஒதுக்கி, அங்கே ஒரு மருத்துவமனை கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே நான் என்னுடைய தொகுதியைப் பற்றி பல்வேறு நேரங்களில், பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது தவறான குற்றச்சாட்டு. உண்மைக்குப் புறம்பான தகவல். அப்படி உறுப்பினர் சொன்னால் அது தவறு. முழுக்க முழுக்க உங்களுடைய மனசாட்சிக்கே விரோதமாக தகவல் சொல்கிறீர்கள். ஆகவே, அந்தப் பகுதி அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு. துரை கோவிந்தராசன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற மானியங்களை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 218 கோடி ரூபாய்களை கட்டடங்களுக்காகவும், நீர்ப்பாசனத்துக்காகவும் செலவு செய்கின்ற வகையிலே இந்த மானியங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் வரவேற்கின்ற வகையிலே தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கிற முறையில் ஒன்றை சொல்கிறேன். நீண்ட நெடுங் காலமாக நமக்கு கிடைக்க

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வேண்டிய கர்நாடக அரசினுடைய பங்கீடு கிடைக்காத காரணத்தாலே பலரும் காவிரி தாய் என்று அழைக்கின்ற அந்த தாயினுடைய குழந்தைகள் இன்றையதினம் திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு மற்றும் பாண்டிச்சேரியின் ஒரு பகுதியிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம, அந்த காவிரி தாயின் குழந்தைகள் எல்லாம், அந்தத் தாயிடத்திலிருந்து பிறந்த குழந்தைகள் எல்லாம் அந்தத் தாயை எப்பாடுபட்டும் காண்போம் என்ற அப்படிப்பட்ட ஒரு அவாவை கொண்டிருப்பதை நாம் கடந்த சில ஆண்டுகளாக கண்டுகொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில்தான் இன்றையதினம் காவிரி நீர் பங்கினுடைய நிலை போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் அறிந்திருக்கிறோம். இன்றைக்கு அதிலே எல்லோரும் கவனம் கொள்ளத்தக்க அளவிற்கு கர்நாடக அரசு ஒரு நாளுக்கு ஒரு அறிக்கையை விட்டு நமக்குத் தண்ணீரே கிடைக்காத அளவிற்குப் பல்வேறு நடவடிக்கைகளை அந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத்திலே 1974-க்கு முன்னால் பாசனம் பெற்ற நிலங்கள் சுமார் ஏழு இலட்சம் ஏக்கர்களாகும். ஆனால் இன்று அவர்கள் அப்படிப் பாசனம் செய்வதற்காகச் சரி செய்து கொண்டிருக்கிற நிலத்தினுடைய அளவு சுமார் பதின்மூன்று இலட்சம் ஏக்கர்களாகும். பதின்மூன்று இலட்சம் ஏக்கர்களோடு மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு அணைகளைக் கட்டி, அதை இருபத்தைந்து இலட்சம் ஏக்கர்கள் வரைக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்கிற அவர்களுடைய உள் நோக்கத்தை மையமாக வைத்துக் கொண்டு, நமக்குத் தர வேண்டிய அந்தத் தண்ணீரைத் தராமல், நாம் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டாலும், அந்தக் காவிரி நதி நீரினுடைய பிரச்சினையை நாம் நடுவருடைய தீர்ப்புக்கு விட வேண்டுமென்று ஒன்பது மாத காலத்திற்கு முன்னால் நாம் தபாலை எழுதி, நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவர் முதல்வரவர்கள் மத்திய அரசினிடத்திலே தெரிவித்திருந்தாலும், இதுவரையிலே அதற்குச் செவி சாய்க்காமல் இன்றைக்கு அவர்களுடைய நடவடிக்கையைத் துரிதமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேட்டூரின் நிலைமையை எண்ணுகின்றபொழுது, 1975-க்கு முன்னால் சராசரி நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த தண்ணீரினுடைய அளவு 380 டி.எம்.சி. என்றாலும், இன்றைக்கு மேட்டூர்

னுடைய குறைந்தபட்ச நமக்குத் தேவையாகக் கருதப்படுகிற தண்ணீரினுடைய அளவு 260 டி.எம்.சி.-யை வைத்து நாம் சமாளிக்க முடியும் என்கிற அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு நாம் இருந்துகொண்டிருக்கின்றபொழுது, ஆனால் நமக்குத் தருகின்ற தண்ணீரினுடைய அளவு மிகக் குறைவாக இருக்கிறது. அப்படிப் பட்ட நிலையை மனதிலேகொண்டு, 1924-ல் அன்றைக்கிருந்த மைசூர் மகாராஜாவினிடத்தில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் 1974 வரையிலே இருந்தது என்றாலும், அதற்குப் பின்னாலே அந்த ஒப்பந்தத்தைத் திருத்திக் கொள்ளாத காரணத்தால் அல்லது மாற்றிக் கொள்ளாத காரணத்தால் அல்லது புதுப்பித்துக் கொள்ளாத காரணத்தால் இன்றைக்கும் நாம் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம்.

இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் பலமுறை இந்த மாளியத்திலே பேசுகிறபொழுது இந்தக் காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த மட்டும் ஒரு கட்சியின் மேல் மட்டும் ஏதோ குற்றச்சாட்டுக்களை போட்டு நாங்கள் ஆட்சி செய்த காலத்திலே அந்தக் கட்சி நல்ல முறையாக இந்தக் காவிரி நதி நீர்த் திட்டத்தில் நாங்கள் எங்களுடைய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். இதற்கு முன்னாலேயிருந்த முதலமைச்சர் அந்தக் காவிரி நதி நீர்த் திட்டத்தில் 74-வது ஆண்டில் இந்த மக்களுக்கு—தமிழகத்து மக்களுக்கு நல்ல பங்கீட்டினைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் 1924-னுடைய ஒப்பந்தம் முடிவடைகிற காலம் 1974 என்பதையும், 1972-லேயும், 1974-லேயும், 1975-லேயும் இந்த மாநிலத்தில் ஆட்சி செய்தவர்கள் அந்த நேரத்திலே புதுப்பிக்க வேண்டிய காலக் கெடு இருந்தது. அதைப் புதுப்பிக்க அந்தக் காலத்திலே முடியவில்லை. அதோடு மட்டுமல்லாமல, அந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையிலே உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, குறிப்பாக அனைத்துக் கட்சியினுடைய விவசாயிகளினுடைய சார்பாக உச்ச நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்து அந்த வழக்கு எதற்கு நாம் திரும்பப் பெறுகிறோம் என்பதை மற்றவர்களுக்குத் தெரிவிக்காத வகையில் அந்த வழக்கை நாம் அந்தக் காலத்திலே விட்டு வைக்கவில்லை; அந்த நேரத்திலேயிருந்த அரசு அதைத் திரும்பப் பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்றைக்கிருக்கின்ற அரசு மாண்புமிகு நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே தனியார் தொடர்ந்திருக்கின்ற அப்படிப்பட்ட வழக்கோடு அரசையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, அந்த வழக்கிலே, தன்னுடைய ஈடுபாடுகளைக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தினை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ 17 ஆண்டு காலமாக, 20 முறை பல்வேறு முதலமைச் சர்கள் ஒன்றுகூடி இந்தப் பிரச்சினையைப் பேசிப்பேசி இது வரையிலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத நிலையிருப் பது நமக்கெல்லாம் வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒன்றாகும். அதைப்போலவே, மத்திய அரசிடத்தில் உடனடியாக நாம் வற்புறுத்தி இதை நடுவருடைய தீர்ப்புக்கு விட்டு, தமிழகத்திற் குக் கிடைக்க வேண்டிய அந்த உரிமை உடனடியாகக் கிடைக் கின்ற வகையில் இந்த அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுவேன்.

(பிற்பகல் 12-40)

இன்றைக்கு கர்நாடக அரசின் நிலையை எண்ணிப் பார்க்கும் போது காவிரி நதிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற அந்த அரசு அதனுடைய பட்ஜெட்டில் 10 கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் என்றுதான் ஒதுக்கி வந்தது. கடந்த ஆண்டிலே 60 கோடி ரூபாயாக அதை உயர்த்தியது. ஆனால் இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் காவிரி நதிநீர்த் திட்டத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறார் கள். இப்படி 60 கோடி, 100 கோடியாக வந்திருப்பதைப் பார்க் கிறபோது அடுத்தாண்டு இது 500 கோடியாக உயர்ந்தால், அந்த அளவுக்கு திட்ட மதிப்பீடு செய்தால் தமிழ்நாட்டிற்கு காவிரி தண்ணீர் வரும் என்று எண்ணிப் பார்க்க முடியாத நிலைமை வந்துவிடும். இப்படி அவர்கள் பல்வேறு திட்டங்களைப் போட் டுக்கொண்டதற்குப் பின்னால், அணைகளைக் கட்டிக்கொண்ட தற்குப் பின்னால், நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரைக் கொடுக்காமல், 1970-லேயிருந்து ஆரம்பித்து இன்று வரையில் 17 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொல் லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, 20 சுற்றுப் பேச்சு களை நடத்தி, முதலமைச்சர்கள் எல்லோரும் பேச்சிலே கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வராத நிலையில், இப்படிப்பட்ட சூழ் நிலையில் இருக்கிறோம் என்றால் நம்முடைய நிலைமைகளை மத்திய அரசுக்கு நாம் நிச்சயமாக தெரிவித்தாக வேண்டும். பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று காலங் கடத்திக்

[திரு. துரை கோவிந்தராசன்] [1987 ஏப்ரல் 29

கொண்டே சென்றால் நமக்கு வருகிற தண்ணீரும் வராத அளவுக்கு திட்டங்களை நிறைவேற்றி விடுவார்கள். ஆகவே நடுவர் தீர்ப்பு கிடைக்கிறவரையில் எந்தவிதமான திட்டமும் போடக் கூடாது என்று உத்தரவு போடுகின்ற உத்தரவாதத்தை மத்திய அரசை வற்புறுத்தி நாம் பெற்றாக வேண்டும்.

மத்திய அரசின் நிலை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் புதிதாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிலையை அங்கே அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து பத்திரிகை வாயிலாக ஒரு செய்தி வந்திருக்கிறது. 23—4—1987 அன்று இந்த மன்றத்திலேகூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். காவிரி நதிநீர் சம்பந்தமான திட்டங்களுக்கு உலக வங்கியிடம் நிதி பெறுகிறபோது தமிழ் நாட்டில் இருக்கிற நாம் நிதி கேட்டால் பக்கத்தில் இருக்கிற கர்நாடக மாநிலத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்கிறார்கள். கர்நாடகத்தில் இருக்கிறவர்கள் கேட்டால் தமிழ்நாட்டின் அனுமதி வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி மாற்றி, மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு என்ன செய்கிறார்கள் என்று பார்த்தால் கர்நாடகத்தில் இருக்கிறவர்களுக்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறது நம்முடைய அனுமதி இல்லாமல். 23—4—1987 அன்று பாராளுமன்றத்தில் மத்திய திட்ட இராஜாங்க அமைச்சர் இந்தத் தகவலை டெல்லி பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

அதைப்போன்று, நேற்றைய தினம், 28—4—1987 அன்று, இந்துப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. 127 கோடி ரூபாய் திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டபோது கர்நாடக அரசின் அனுமதி உங்களுக்கு கிடைக்க வேண்டும்; கர்நாடக அரசு அனுமதி தந்தால்தான் அந்த ராங்கர் திட்டத்திற்கு நிதி ஒதுக்க முடியும் என்று உலக வங்கி கணக்கு சொல்கிறது. ஆக, அந்த மாநிலத்திற்கு ஒரு சட்டம், தமிழ்நாட்டிற்கு ஒரு சட்டமும் என்ற நிலை காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு இருக்கிற பிரச்சினை உலக வங்கித் திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் திட்டமாக இருந்தாலும், 300 கோடி அல்லது 500 கோடி ரூபாய் திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையான காவேரி நதிநீர்



1987 ஏப்ரல் 29] [திரு. துரை கோவிந்தராசன்]

வாய்க்கால்களை சீரமைக்க நாம் கேட்கிற தொகையை அவர்கள் கொடுப்பதற்கு நமக்கு மாத்திரம் அண்டை மாநிலத்தின் அனுமதி தேவை, அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று சொல்லி விட்டு, அவர்களுக்கு நம்முடைய அனுமதியில்லாமல் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அதைப்போல அவர்களுடைய அனுமதி இல்லாவிட்டாலும் நமக்கும் நிதியினை ஒதுக்கித் தரவேண்டும் என்பதை நாம் வற்புறுத்த வேண்டும்.

நமக்குக் கிடைக்கிற குறைவான தண்ணீரை வைத்துக்கொண்டு நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் பசுமைப் புரட்சி பெற வேண்டும் என்று எண்ணி, சீரிய முறையிலே விவசாயிகள் மேற்கொண்டிருக்கிற விவசாயத்திற்கு விவசாயத் துறையும் பொதுப் பணித் துறையும் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 8 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்ய முடிந்தது. ஆனால் கர்நாடக அரசு நமக்கு தண்ணீர் தரவில்லை என்கிறபோது முறையான மாற்றுப் பாசனத்தின் மூலம் தண்ணீர் கொடுத்த காரணத்தால் கடந்த ஆண்டு கிடைத்த அளவுக்கு இந்த ஆண்டும் நெல்லை உற்பத்தி செய்திருக்கிறோம். இந்த ஒரு பிரச்சினையை, காவேரி நதிநீர்ப் பிரச்சினையை மனதிலே வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக இதற்கு முன்னாலே இருந்த அரசு அல்லது அதற்கு முன்னால் இருந்த அரசு அல்லது இப்போது ஆண்டுகொண்டிருக்கிற அரசு என்று சொல்வதை விட்டு, ஒட்டுமொத்தமாக சுமூகமான முறைகளைக் காணவேண்டும்.

ஒரு காலத்திலே சோழ நாடு சோறுடைத்து என்று சொன்னாலும் கூட இன்றைக்கு அந்த நாட்டிலே சோறு இல்லாத சூழ்நிலை உருவாகும் என்கிற அளவுக்குக் கூட என்னுடைய அருமை நண்பர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். எனக்கு இருக்கிற அச்சம் எல்லாம்—இதைப்போல பலவற்றையும் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் யார் எந்த நோக்கிலே முயற்சி எடுத்தாலும்—என்னைப் பொறுத்தவரையில் எல்லோரும் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் மேற்கொள்கிற முயற்சியை அண்டையிலே இருக்கின்ற கர்நாடக அரசு அலட்சியப்படுத்திக்கொண்டிருக்கிறது. அதோடு அவசரம், அவசரமாக இதனைத் தீர்க்க வேண்டிய பிரச்சினையில் மத்திய அரசு கொஞ்சம் கவனக் குறைவாக இல்லாமல் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

[திரு. துரை கோவிந்தராசன்] [1987 ஏப்ரல் 29

உலக வங்கி வேலைகளுக்கு எப்படி பணத்தைத் தருகிறதோ அதைப்போல தமிழகத்தில் உள்ள நிலைமைகளைச் சீர்திருத்து வதற்கு பணத்தைத் தருவதோடு மத்திய அரசு இதிலேயும் தலையிட்டு தமிழகத்திற்கு கிடைக்கவேண்டிய முறையான, உரிய பங்கீட்டைப் பெற்றுத்தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல நேரங்களிலே மாவட்டங்களில் உறுப்பினர்கள் சொல்கிறபோது, தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகச் சோம்பேறிகள்; அந்தக் காலத்தில், கரிகால் பெருவளத் தான் காலத்தில் மாதம் மும்மாரி மழை பொழிந்த காலத்தில் தண்ணீர் வருகின்ற காலங்களில் 9 மாதமும் தஞ்சையிலே தண்ணீராகவே இருக்கும்; அப்போது காலால் மடையைத் தட்டி விட்டு தண்ணீர் பாய்ச்சுவார்கள் தஞ்சையிலே இருப்பவர்கள்; அப்படிப்பட்ட தண்ணீரைப் பார்த்தால் எப்படியோ நாங்கள் கொழிக்கச் செய்துவிடுவோம் என்று பலபேர் சொல்லிக்கொண்டி ருந்திருக்கிறார்கள். அவ்வாறு சொல்வதை நானும் கூட கேட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை மிகவும் வேறுபாடான நிலைமையாக இருக்கிறது. அந்த வேறு பாடுகளைப் பார்க்கிறபோது—நானும் விவசாயத்திலே ஈடுபட்டி ருக்கின்ற காரணத்தால்—மாவட்டத்திற்கு மாவட்டம் மண்வள வேறுபாடுகள் இருக்கின்றன. பூமியின் தர வேறுபாடுகள் இருக்கின்றன. தண்ணீர் கிடைக்கிற நிலைமையிலே எல்லாம் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் தஞ்சையைப் பொறுத்த வரையில் வறட்சி வந்தாலும் சீக்கிரம் வறட்சியாகிவிடும். வெள்ளம் வந்தாலும் சூழ்ந்துகொண்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்திலே ஒரு காலத்திலே தண்ணீரைச் சிக்கனப்படுத்த முடியாமல் அந்தத் தண்ணீர் வீணாகப் போனது என்று அதையே சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். இன்றைக்கு இரண்டாண்டுக் காலத்தில் தஞ்சை மாவட்டத்திலே மிகக் குறைவான தண்ணீரை வைத்துக்கொண்டு, அதனை முறைப்படுத்தி, முன்னாலே கிட்டிய அளவுக்கு இன்றைக்கும் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வந்திருக் கிறோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.



1987 ஏப்ரல் 29] [திரு. துரை கோவிந்தராசன்]

சில இடங்களில் 10 ஏக்கருக்குப் பாய்கிற தண்ணீரை 5 ஏக்கருக்குத்தான் பாய்ச்சுகிற நிலைமையைப் பெற்றிருக் கிறார்கள் தஞ்சை மாவட்டத்து மக்கள். காவிரி ஆற்றுக்கும், அதன் பக்கத்திலே பிரிகிற வெண்ணாற்றுக்கும், அதிலே இருந்து பிரிந்து வருகிற கல்லணைக் கால்வாய் ஆற்றுக்கும் வேறுபாடுகள் உண்டு. காவிரியிலே தண்ணீர் பாய்கிறது என்று சொன்னால், எந்த அளவுக்கு மிகக் குறைவான தண்ணீரைப் பெற்று அதன் மூலம் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் காவிரியில் மிகக் குறைவாக இருக்கும். அதைவிடக் குறைவாக வெண்ணாற்றிலே இருக்கும். மிகக் குறைந்த அளவிலான தண்ணீரைப் பெற்று அதிக உற்பத்தியைப் பெருக்கித் தருகிற நிலைமை அந்தக் கல்லணைக் கால்வாய் பகுதியிலே இருக்கும். இப்படி ஒரே இடத்தில் பிரிகிற ஆற்றிலே கூட இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவிரி டெவலப்மென்ட் என்று சொல்லிக்கொண்டு திட்டங் களைத் தீட்டுகிறோம். நமக்கு வருகிற குறைவான தண்ணீரை வைத்துக்கொண்டு, சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளக் கூடிய வகையில் வாய்க்கால்களைப் புதுப்பித்து, உரிய முயற்சிகளை அதிகாரப் பெருமக்கள் மேற்கொள்ள வேண்டும். அதிலே நாம் கவனம் செலுத்தவேண்டும் என்று தான் கேட்டுக்கொள்கிறேன். இன்ஜினியரிங் டிப்பார்ட்மென்டிலே அதாவது தொழில் நுட்பத் துறையிலே இருப்பதுபோல் பொதுப் பணித்துறையிலும், விவசாயத் துறையிலேயும் இருக்கின்ற அதிகார பெருமக்கள் அந்த நுட்பத்தினுடைய அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

சில நேரங்களில் நாம் பார்க்கிறோம். காவிரி டெவலப்மென்ட் செய்வதற்கு பணம் வேண்டுமென்று உலக வங்கியினிடத்தில் கேட்கிறபோது பக்கத்திலே இருக்கின்ற மாநில அரசினுடைய அனுமதி வேண்டுமென்று கேட்கிறார்கள். எதற்காக? 20 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூரிலே இருக்கின்றது என்று சொன்னால் அந்தத் தண்ணீரை ஒழுங்காக முறைப்படுத்தி, சிக்கனப்படுத்தி, வேஸ்ட் இல்லாத அளவுக்கு வாய்க்காலிலே பாய்ச்சுவதற்குரிய வகையில் நாம் திட்டங்களை மேற்கொள்ள அந்தத் திட்டங்களுக்

[திரு. துரை கோவிந்தராசன்] [1987 ஏப்ரல் 29

காக அந்த வங்கியினிடத்திலே இருந்து கடனைப் பெற்றால்தான் நாம் எடுக்கிற நடவடிக்கைகளைச் செய்ய முடியும். எதற்கெடுத்தாலும் பக்கத்திலே இருப்பவர்கள் முட்டுக்கட்டையாக இருக்கிற நிலைமை இருக்கிறது. மேற்கே ஓடுகிற நதியைத் திருப்ப வேண்டுமென்றாலும் அவர்களிடத்திலே அனுமதி பெறவேண்டும். கர்நாடகத்தைப் பொறுத்தவரையிலே மூன்றாவது கட்டமாக அணையைக் கட்டுவதற்கு இன்றைக்கு மத்திய அரசு அவர்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறது. ஆனால் நமக்கு அவ்வாறு அனுமதி வழங்கப்படவில்லை. இன்றையதினம் இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருப்பதைப்போல 123 கோடி ரூபாய் தருவதற்குக் கூட அந்த உலக வங்கி சம்மதிக்கவில்லை என்று சொன்னால் எப்படி? நமக்கு இருக்கிற குறைவான தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும் என்கிற அளவில் நாம் திட்டங்களைத் தீட்டினால்தான் காவிரியின் முன்னேற்றத்தைப் பெற முடியும் என்பதை எல்லோரும் மனதில் கொண்டு அந்தத் திட்டங்களை உருவாக்கித்தரவேண்டும்.

(பிற்பகல் 12-50)

அடுத்து என்னுடைய பகுதியினைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டைச் சொல்லிவிட்டு முடித்துவிட விரும்புகிறேன். எனக்கு அதிகாரிகளிடத்தில் இருக்கிற மிக மகிழ்ச்சியெல்லாம் சில நேரங்களில் அந்தந்த ஏரியாக்கள் என்று கூட பார்க்காமல் கோயம்புத்தூரில் இருந்து ஆரம்பித்து சென்னை வரை ஒரே மாதிரியாக சீராக செய்கிறார்கள். இதனால் பாதகங்களும் ஏற்படுகின்றன. எந்த நிலமாக இருந்தாலும் ஒரு எக்டேருக்கு இவ்வளவு உரம் போடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்களே தவிர, அந்த மண்ணினுடைய வளம் என்ன நிலைமை என்ன என்பதையெல்லாம் பார்ப்பதில்லை. அதற்குப் போய் கேட்டால் மண்ணை சோதித்தீர்களா என்று கேட்கிறார்கள். இதனால் அரசு என்ன செலவு செய்தாலும் செலவாகிறதே தவிர திரும்ப அந்த அளவுக்கு வருமானம் வருகிறதா என்று பார்ப்பதே இல்லை.

நாங்கள் தஞ்சையை சேர்ந்தவர்கள் ஒரு திட்டத்தை பல காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு அதிகாரிகளிடத்திலே இருந்து வருகின்ற பதில் கணக்கு பார்த்தால் பேபுட் வேல்யூ வராது என்று சொல்லுகிறார்கள். மிகவும் குறைவாக 45, 35 ஏக்கர்தான் வரும் என்று சொல்லுகிறார்கள்.



1987 ஏப்ரல் 29] [திரு. துரை கோவிந்தராசன்]

மழை நாளிலே வருகிற தண்ணீரை திருச்சியிலிருந்து, புதுக் கோட்டையிலிருந்து வருகிற தண்ணீரை தேக்கி வைப்பது நல்லது என்று சொல்லுகிறோம். அப்படி செய்யாமல் இருப்பதினால்தான் காவிரியில் வெண்ணாற்றில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளப் பெருக்கெடுத்து கிழக்கு நோக்கி சென்று பயிர்கள நிலங்களை எல்லாம் அழித்து விடுகிறது. இதற்கு வெள்ளத் தடுப்பு என்ற வகையிலே அதைத் தடுத்து நிறுத்த ஒரு அணை கட்ட வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படி ஒரு அணை கட்டப்பட்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் தருகிற வகையில் இருக்கும் அந்த திட்டத்தை பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னால் கேட்பது இல்லை. வெள்ளம் வந்த பிறகு நிறைய செலவு செய்கிறோம். குடிசைகளுக்கு பணம் தருகிறோம். பி.டபிள்யூ.டி.-யிலிருந்து பணத்தைக் கொடுத்து தூர் வாருகிறோம். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்திற்கு ஈடு தருகிறோம். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் இந்தத் திட்டத்தை நிச்சயமாக செய்ய வேண்டும் என்பது தெரியும். இதை மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் 5, 6 மைலுக்கு இடையில் 100 ஏக்கர் 50 ஏக்கர் என்று நிலங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றவைகளுக்கெல்லாம் தேவைப்பட்டால் நிலத்தை எடுத்துக் கொள்ள வில்லையா அது போல எடுத்துக் கொள்ள வேண்டும். அவைகளை சின்னஞ்சிறு ஏரிகளைப்போல குளங்களைப் போல ஆக்கி, வெள்ளப் பெருக்கு வருகின்ற காலங்களில் ஒரு செயின் போல வெள்ளம் வந்து அவைகளில் தேங்கி விடுகிற வகையில் அந்த அளவுக்கு திட்டத்தை தீட்டி மழைக் காலத்தில் வருகிற தண்ணீரை தேக்கி வைத்தால், இன்றைக்கு நிலத்தடி நீர் மிகவும் மோசமாக கீழே போய்க் கொண்டிருப்பதை தடுப்பதற்கும், வறட்சி காலத்தில் தண்ணீர் இல்லாத நிலையைத் தவிர்ப்பதற்கும் மிகவும் உகந்ததாக இருக்கும். அப்படி ஒரு திட்டத்தை மூன்றாண்டு திட்டமாக தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி செய்தால்தான் தஞ்சை விவசாயிகளை நாம் காப்பாற்ற முடியும்.

என்னைப் பொறுத்தவரையில் கர்நாடகத்திலிருந்து வர வேண்டிய தண்ணீர் வரவேண்டும் என்று விரும்பினாலும் விவசாயம் முன்னேறிக் கொண்டிருக்கும் காலத்தில் தண்ணீர்

இல்லை என்றால் அதற்குப் பலன் கிடைக்காதோ என்ற சந்தேகம் வருகிறது. அதை மாற்றுகிற வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இன்னொரு பிரச்சினையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். பொதுப்பணித் துறைக்கும் வருவாய்த் துறைக்கும் சொந்தமான இடங்கள் என்று நிச்சயமாக வரையறுக்கப்பட வேண்டும். ஒரு ஏரியை எடுத்துக்கொண்டால் வெள்ளப் பெருக்கு காலங்களில் கருங்கல் உடைப்பு எடுத்தால் அது பி.டபிள்யூ.டி.-க்கு சொந்தம் என்று சொல்லுகிறார்கள். ஏரியின் உள்ளே ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அது வருவாய்த் துறைக்குச் சொந்தமாக இருக்கிறது. ஆகவே பொதுப்பணித் துறையே இருக்கும் நிலங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்தவர்களை அப்புறப்படுத்த புதியதாக ஒரு சட்டத்தையாவது உருவாக்கிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கரைக் காவலர்கள் எல்லாம் சில இடங்களில் இல்லை. ஏதோ ஒரு காலத்தில் கரைக் காவலர்கள் போட்டிருந்து அவர்கள் ஒன்றின்பின் ஒன்றாய் ரிடையர் ஆகிவிட்ட பிறகு இப்போது அது மாதிரி போடுவதே இல்லை. கரையே காணாமல் போய் விடலாம் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே அதையும் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. பொதுப்பணித் துறையினுடைய கட்டிடங்கள் இருந்தால் அங்கே போய் ஆக்கிரமித்து விடுகிறார்கள். பக்கத்திலே இருக்கிற கால்வாய்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து விடுகிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் அந்தப் பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் நீர் நமக்குக் கிடைக்கும். நீரின்றி அமையாது உலகம் என்று சொல்வது போல கொஞ்சம் கொஞ்சமாக இருக்கும் நீரும் போய் விட்டால் என்ன செய்வது? யாருக்காவது ஒருவருக்கு வேண்டும் என்பதற்காக ½ ஏக்கர் நிலத்திற்காக ஏரியையே பாதி எடுத்துக்கொண்டால் எப்படி? அப்படியே வெட்டி விட்டுப் போய் விடுகிறார்கள். அவர்கள் மேல் ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா என்றால் நடவடிக்கையெடுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. அதைக் கேட்டால் அந்தத் துறை இந்தத் துறையைக் காட்டி



ஒன்றுமில்லாத நிலைக்கு போய்விடுகிறது. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினையை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சுறு சுறுப்போடு விறுவிறுப்பாக செயல்படக் கூடியவர்கள். புதிய திட்டங்களைக் கொண்டு வந்து சின்னஞ்சிறு அணைக்கட்டுகளையெல்லாம் கட்டி மழைக்காலத்தில் கிடைக்கும் தண்ணீரை தேக்கி ஆங்காங்கு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தர வேண்டுமென்று பணியாற்றுகிறவர்கள். அவர்கள் நான் சொல்லிய திட்டத்தையும் மறுபரிசீலனை செய்து மேற்கொள்ள வேண்டும். உலக வங்கித் திட்டமென்று இந்தப் புத்தகத்தில் ஐந்தாண்டு காலமாக இருக்கிறது. 20 சுற்று பேச்சுவார்த்தை நடந்து 17 ஆண்டுகாலமாக பேசிப்பேசி வந்து கொண்டிருக்கிறது. இந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த அரசிலே ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இறுதியாக உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்திருக்கிற வழக்கில் நம்முடைய அரசும் அதிலே இணைந்து அந்த வழக்கை நடத்த வேண்டும். ஏன் சொல்கிறேன் என்றால் கடந்த ஆண்டு ஒரு வழக்கு இருந்து ஒருவருக்கும் தெரியாமல் போய்விட்ட காரணத்தால் இந்த வழக்கை நாம் விட்டு விடக்கூடாது. தனியார் தொடர்ந்திருந்தாலும் கூட அதிலே பங்குபெற்றுக் கொண்டு உள்ளே புகுந்து, அதிலே வெற்றி பெறுகிற வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும்.

அடுத்து திருச்சியிலிருந்து வருகிறபோது செங்கிப்பட்டியிலிருந்து தஞ்சை வரையில் வறண்ட பகுதியாகும். அதிலே புதியதாக கட்டளைக் கால்வாய் வருகிறது. அந்தக் கட்டளைக் கால்வாய்க்கு தண்ணீர் வருகிறபோது திருச்சியிலிருந்து கடைமடைப் பகுதியான அந்தப் பகுதிக்கு வர வேண்டும். அப்படி வருகிறபோது அதற்கொரு கால்கெடு உண்டு. அப்படி வந்தடைவதில் திருச்சியில் இருக்கிற இடங்கள் எல்லாம் மணல் மேடிட்டு அந்த இடத்திற்கு தண்ணீர் வராத நிலையில் இரண்டு ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியில் விவசாயிகள் குளம், குட்டைகளை, ஏரிகளை நிரப்பி தண்ணீர் பெற்று விவசாயம் செய்ய வேண்டும். அந்த இடத்திற்கு தண்ணீர் வராத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு அதிலே கவனமாக இருந்து காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சின்னஞ்சிறு வாய்க்கால்களுக்கு ஆண்டிற்கு ஒதுக்குகிறதொகை ஐந்தாண்டுகளுக்கு முன்னால் காவிரியின் டெவலப்மெண்ட் என்று ஒதுக்கியது 3 கோடி ரூபாய் என்றால், இப்போதும் அந்த காவிரிக்கு ஒதுக்கப்படுகிற தொகை அதுதான். மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் பேசுகிறபோது காவிரியில் ஏதோ பொதுப் பணித் துறையில் வேலை செய்கிறவர்கள், கான்ட்ராக்ட்காரர்கள் எல்லாம் ஏதோ செய்துவிட்டார்கள் என்று சொன்னார். காவிரி என்பது பரந்து விரிந்து ஒரு காலத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இப்போது அதுவும் குறுகி காட்சியளிக்கிறது. சில இடங்களில் சின்னஞ்சிறு தவறுகள் நடக்கத்தான் செய்யும். பொதுப்பணித் துறையாக இருந்தாலும், வேறு எந்தத் துறையானாலும் சிறிய தவறுகள் இருக்கத்தான் செய்யும். பெரிய தவறாக இருந்தால் அது பெரியதாகப் போய்விட்டது என்று சொல்லலாம். ஒப்பந்தத்தில் இருப்பதாக இருந்தாலும், வேறு விதத்தில் வருபவைகளாகயிருந்தாலும் இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து நடத்துகிற திட்டத்தில் சத்துணவுக் கூடத்தில் நியமிக்கப்பட்டிருப்பவர் கொஞ்சம் சாப்பாட்டை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போவது கூட தவறுதான். 218 கோடி ரூபாய்க்கு திட்டங்களைத் தீட்டி பொதுப்பணித்துறை விறுவிறுப்பாக பணிகளைத் தொடர்கிற போது அதிலே சில குறைபாடுகள் சிலருக்குத் தென்படக்கூடும். ஆகவே தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் மிகப்பெரிய மோசடியை செய்து பொதுப்பணித்துறையிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டதைப் போல உறுப்பினர் சொன்னார்கள். அங்கேயிருக்கிற வாய்க்கால்களை சீரமைக்கும் பணி ஆண்டுதோறும் நடக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் காட்டாமணக்கு என்னும் செடி இருக்கிறது. இது ஆண்டுதோறும் வாய்க்கால்களை மூடிவிடும். அதனை முதல் மாதத்தில் வெட்டி விட்டால் மூன்றாம் மாதத்தில் மீண்டும் முளைத்து வாய்க்காலை மூடிக்கொள்ளும். தண்ணீரே அதிலே வராது. அதை வெட்டி விட்டால் 10 நாளைக்குள் அதிகாரிகள் போய் பார்க்கலாம். அவர்கள் பார்த்ததற்குப் பின்னால் மறுபடியும் முளைத்துவிடும். அங்கே போய் கொஞ்சம் மணலை வெட்டி, மணல் திட்டை எடுத்து கரையில் போட்டுவிட்டால் 3 மாதத்திற்குத் தண்ணீர் போகும். அதற்குப் பின்னால் மழைக்காலத்தில் மேலே இருக்கிற





மண்ணெல்லாம் கொஞ்சம் போயிருக்கும். இப்படித்தான் நிலை இருக்குமே தவிர. . .

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, காட்டாமணக்குச் செடியை வெட்டுவது என்பது வேரோடு வெட்டியெடுப்பதுதான். மேலாக வெட்டுவதல்ல. வேரோடு எடுக்கச் சொல்லி மதிப்பீடு தயார் செய்து வேலை செய்யச் சொன்னார்கள். ஆனால் செய்தவர்கள் என்ன செய்தார்கள் என்றால் மேலே ஏதோ பெயருக்கு வெட்டி விட்டு மற்றதையெல்லாம் வேரோடு விட்டு எப்போதும் முளைப்பதை விட கூடுதலாக முளைக்க விட்டு விட்டார்கள். சிலபேர் தான் வேரோடு வெட்டியெடுத்து மறுபடியும் முளைக்காமல் செய்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் தான் இப்படி செய்திருக்கிறார்கள். பல இடங்களில் அந்தச் செடியை இன்னொரு முறை முளைக்க வைத்தது தான் அந்த கான்ட்ராக்ட்காரர்களின் வேலையாக இருந்ததே தவிர வேறல்ல. அதனைத் திரும்ப முளைக்க வைப்பதற்கு ஏன் கான்ட்ராக்ட் விட வேண்டும்? நாம் ஏன் பணம் செலவு செய்ய வேண்டும்? இதுதான் அங்கே நடந்திருக்கிற முறைகேடு. செடியை வேரோடு எடுக்காமல் விட்டுவிட்டு இன்னொரு இடத்தில் முளைக்க வைத்திருக்கிறார்கள். இதைத்தான் நான் சொன்னேன்.

(பிற்பகல் 1-00)

**திரு. துரை கோவிந்தராசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் முறையாக நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும்கூட சில இடங்களில் அடியோடு வெட்ட வேண்டும் என்று தான் வெட்டுகிறோம். அங்கே இருக்கிற சூழ்நிலை காரணமாக, அந்த நேரத்திலே தண்ணீர் வருகிறபோது, வெட்டி எடுப்பதில், வேரைப் பறிக்கிற நேரத்திலே சில வேர்கள் நின்றுவிடுகின்றன. இன்றைக்கு இங்கு ஆர். எஸ். பதியிலேகூட சொல்லுவார்கள், 20, 30 அடி அளவிற்குப் போய் மற்ற பயிர்களைப் பாதிக்கிற அளவிற்கு இருப்பதாலே, அந்த ஆர். எஸ். பதியைக் கூட பயிரிடக்கூடாது என்று சொல்கிறார்கள்.

இந்த காட்டாமணி செடியைப் பொறுத்தவரையில் எங்கேயிருந்தாலும் கூட 10 அடி நீட்டத்திற்கு அதனுடைய வேர் போகும். இந்தப் பக்கம் வெட்டியவுடன், அந்தப் பக்கம் துளிர்க்

கிறதைப் போல தஞ்சையிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கும் ஒன்றும் இல்லை. நமக்கும் அந்த வாய்க்கால் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான். அதுதான் என்னுடைய ஆசை. அந்த அடிப்படையிலே சின்னஞ்சிறிய குறைபாடுகள் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாயனூரிலிருந்து வரும் உய்யகொண்டான் வாய்க்காலை திருச்சி நகரத்திற்கு மேலேயிருந்து தூர் எடுத்து, வாழவந்தான் கோட்டை, பெரிய ஏரி வரை முடித்து, அதனுடைய மேம்பாட்டைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியிலே ஜி.ஏ. கெனால் இருக்கிறது. ரொம்ப காலத்திற்கு முன்னாலே பல இடங்களிலே வேலைகள் செய்யப்பட்டு, ஆங்காங்கே இருக்கிற பகுதிகள் எல்லாம் நவீனப்படுத்தப்பட்ட வாய்க்காலாக ஒருகாலத்திலே அமைக்கப்பட்ட அந்த வாய்க்கால் இப்போது கொஞ்ச இடங்களிலே பழுதடைந்து போய் இருப்பதை கவனத்திலே கொண்டு, அதையும் நல்ல முறையில் அரசு செய்யவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. வேடத்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 7. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெறக்கூடிய பாசனம், கட்டடம் என்ற ஏறத்தாழ 5 மானியக் கோரிக்கைகள் தலைப்பின்கீழ் சுமார் 223 கோடி ரூபாய்க்கான மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



குறிப்பாக பாசனம் என்பது மிக மிக முக்கியமான ஒன்று. அதிலும் காவிரிப் பாசனம் என்பது மிகவும் முக்கியமானது. இன்றைக்கு நம்முடைய கொள்கைக் குறிப்புகளைப் பார்த்தால் கூடுதல் பாசன வளத்தைத் தெரிந்தெடுப்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்தப் போகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு யதார்த்தமாக நமக்கு முன்னாலே உள்ள நிலைமையைப் பார்க்கிறபோது இருக்கிற பாசனத்திற்கே மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிற நிலையில் புதிய பாசன வளத்தை அதிகப்படுத்துவது என்பதுபற்றி பேசிக்கொண்டிருப்பது யதார்த்த நிலைமைக்கு மாறாக இருக்கிறது.

குறிப்பாக இன்றைக்கு காவிரிப் பாசனத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, அதைப் பாதுக்காக்கமுடியுமா என்ற அச்சம் நம்மிடையே தோன்றியிருக்கிறது. குறிப்பாக இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது இருந்தாலும் அதிலே 4 மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், புதுவையின் ஒருபகுதி ஆகியவை அதிலே வருகின்றன. இந்த காவிரிப் பிரச்சினை என்பது 1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாட்டின்படி 50 ஆண்டுகளுக்குத்தான் என்றும் அதற்குப் பிறகு அது முடிந்துவிட்டதாக ஒரு தரப்புவாதமாக கர்நாடகத்தால் தெரிவிக்கப்படுகிறது. அதனால் அதை அந்த அரசு இன்றைய தினம் அமலாக்காமல் இருக்கிறது. அந்த உடன்படிக்கை 1974 ஆம் ஆண்டோடு முடிந்துவிடவில்லை. இது கர்நாடகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இருக்கிற தண்ணீர் தாவா பிரச்சினையாக இருந்தாலும் ஏதோ ஒரு பகுதியில் இருக்கிற பாசனம் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல, காவிரிப் பாசனத்திலே பயிர் செய்துகொண்டிருக்கிறவர்களுடைய பிரச்சினை மட்டுமல்ல, அப்படிப்பட்ட பிரச்சினையாக மட்டும் அதைப் பார்ப்பது பொருத்தமாக இருக்காது. தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நலன் சம்பந்தப்பட்ட உணவு உற்பத்திப் பிரச்சினையாக தமிழகத்தினுடைய பொருளாதாரப் பிரச்சினையாக அது இன்றையதினம் நம் முன்னால் இருந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினையிலே முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள் என்றோ அல்லது இன்றைக்கு இருக்கின்ற ஆட்சியாளர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்றோ

சாதித்துக் கொண்டிருப்பது இந்தப் பிரச்சினையை அரசியலாக மாற்றுவதாகும். நிச்சயமாக அந்த அணுகுமுறை தமிழகத்திற்கு உதவிச்செய்யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசியல் பிரச்சினையாக ஆக்காமல் அதிலே இருக்கிற தொழில் நுணுக்கங்களை அரசு அலசி ஆராய்ந்து அதைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய ஆளுங்கட்சி கொறடா பேசும்போது குறிப்பிட்டதைப் போன்று 17 ஆண்டுக்காலமாக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே இருக்கிறோம். இறுதியிலே ஒரு கட்டத்திற்கு அதாவது நடுவர் தீர்ப்பிற்கு விடவேண்டுமென்று ஓராண்டுக் காலமாகக் சொல்லிக் கொண்டே வருகிறோம்.

நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று நாம் கோரியிருந்தாலும் நடுவர் தீர்ப்பைப் பொறுத்தவரையில் நடுவர் நீதிமன்றத்தை அமைப்பதற்கான ஆணையை வெளியிடவேண்டியது மத்தியப் பேரரசு தான். பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்ப்பதா நடுவர் மன்றத்தின் மூலமாகத் தீர்ப்பதா என்ற சர்ச்சை ஒரு பக்கம் இருந்தாலும் 1974 ஆம் ஆண்டுடன் அந்த உடன்படிக்கை முடிந்து விட்ட உடன்பாடு அல்ல. அந்த உடன்பாட்டின் சில பகுதிகள் மறு பரிசீலனைக்குரியது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த உடன்படிக்கை 50 ஆண்டுகளோடு முடிந்துவிட்டது என்று கூறுவதற்கில்லை. கண்ணம்பாடி மூடப்பட்டிருக்கிறது. ஒருதலையாக கர்நாடக மாநிலம் அந்த ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று கூறுகிறது. இப்படி இரண்டு மாநிலங்களுக்குள் சர்ச்சை ஏற்படும்போது அல்லது வேறு சில மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும்போது, அதனால் ஒரு குறிப்பிட்ட மாநிலம் நீண்ட நெடுங்காலமாக, இன்று அல்ல, நேற்று அல்ல, ஆயிரம் ஆண்டுகளாக பாசன உரிமைகளைப் பெற்றிருந்த தமிழகத்திற்கு அந்த உரிமை மறுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே மத்தியப் பேரரசு இரண்டு மூன்று மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே, சிக்கல் ஏற்படும்போது, கருத்து வேறுபாடு ஏற்படும்போது, அதைத் தீர்த்து வைப்பதற்கு உரிய முயற்சிகளை எடுப்பதற்குப் பதிலாக, மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தையிலே தீர்க்கப் போகிறார்களா? அல்லது 'நடுவர் குழு தீர்ப்பிலே தீர்க்கப் போகிறார்களா என்பது தெரியவில்லை.



இது ஒரு பக்கம் இருக்க, 1924 ஆம் ஆண்டு உடன்பாடு தீர்த்து வைக்கப்படும் வரையிலே, தீர்த்து வைப்பதிலே சற்று கால அவகாசம் ஏற்பட்டாலும், நான் சார்ந்திருக்கிற இயக்கத்தைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில் சொல்வது, காவேரி, முழுவதும் தமிழகத்திற்குச் சொந்தம் என்று சொல்ல வில்லை ; காவேரி கர்நாடகத்திற்குச் சொந்தம் இல்லையென்று சொல்லவில்லை. இரண்டு மாநிலங்களுடைய நலன்களும் பாதிக்கப்படாமல் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சு வார்த் தையின் மூலமாகத் தீர்க்கப்பட்டாலும் அல்லது நடுவர் நீதி மன்றம் மூலமாகத் தீர்க்கப்பட்டாலும், 19[illegible] ஆண்டு உடன் பாடு அமலாக்கப்பட இந்தத் தமிழக அரசு உ[illegible] நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். வழக்கைத் தொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதே போலத்தான் மத்தியப் பேரரசு கவனிக்காத தன்மை யினாலோ அல்லது அலட்சியப் போக்கினாலோ அல்லது எப்படி வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று விட்டு விட்டதன் விளை வாக, தமிழகம் பாதகமான நிலையில் இருக்கிறது.

சோழ நாடு பற்றியெல்லாம் இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்காலத்தில் பாலை நாடு என்று எழுதக் கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவாகின்றன மத்திய அரசின் கொள்கையின் விளைவாக. எனவே, தீர்வு காண முயற்சி எடுக்கும்போது, பழைய ஒப்பந்தம் கறாராக அமுலில் இருக்க வேண்டும். அதை மாற்றும் சாத்தியக் கூறு ஏற்படும் வரையில் என்று உச்ச நீதி மன்றத்திலே தமிழக அரசு வழக்கு தொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, 1976-வது ஆண்டு ஜனவரி மாதம் இரண்டு அரசுகளுக்கும் ஒரு உடன்பாடு எட்டியதாகக் கூறப்பட்டது. அப்படிப்பட்ட தகவல் நான் அறிந்தவரை தெரிகிறது. அப்படி 1976-வது ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட உடன்பாட்டை இன்றைக்கு அமல்படுத்த தமிழக அரசு என் வற்புறுத்தக் கூடாது? அரசியல் வேறுபாடுகளோ. அரசியல் காழ்ப்புணர்ச்சியோ. வேறு அரசு செய்து கொண்டதோ என்ற எண்ணம் இல்லாமல், தமிழகத்திற்கு உதவி செய்ய 1976 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கிடக்கட்டு தொடங்கி. இன்னும் சொல்லப்போனால். சிவியல் உடன்பாடு செய்யப்பட்டதாக்

சொல்லப்படுகிறது; அப்படிப்பட்ட நிலையை வற்புறுத்தி ஏற்கச் செய்ய ஏன் மாநில அரசு முயற்சிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோலத்தான் தஞ்சை மாவட்டத்திலே காவேரி பாசனப் பகுதியிலுள்ள ஆறுகள் முழுவதும் சீர்கெட்டு, பராமரிப்புகள் இல்லாமல் பழுதுபட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், 1983-வது ஆண்டு நாகை தாலுகாவில் வெள்ளத்திலே உடைத்துச் செல்லப்பட்ட வெள்ளையாற்று கரைகள் சீர்செய்யப்பட இன்னும் மதிப்பீடுகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். 4 ஆண்டுகளுக்கு முன்னாலே வெள்ளத்திலே பாதிக்கப்பட்டது அப்படியே இருக்கிறது. அந்த ஆறுகளின், வாய்க்கால்களின் கரைகள் சீர் செய்யப்பட்டு, வலுவேற்றப்பெற்று, ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். தொடர்ச்சியாக பராமரிப்புச் செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, சீமைக் காட்டாமணி மிகப் பெரிய அளவுக்கு ஆறுகளை, வடிகால்களை மூட்டக்கி நாசப்படுத்தி இருக்கிறது. குறிப்பாக, காவிரி வடிகால் ஆறான திருமல்ராஜன் ஆறு இன்றைய தினம் இருக்கிறதா என்று கேள்வி கேட்கக்கூடிய அளவு தண்ணீர் வற்றி இது ஆறுதானா, வாய்க்காலா என்று கேட்கக்கூடிய அளவு ஆறு தூர்ந்தும் நாசப்பட்டும் போயிருக்கிறது. இதற்குக் காரணம் சீமைக் காட்டாமணிதான். எனவே, அந்த ஆறுகளைச் சீர்படுத்துவதற்கு, மராமத்துக்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக காட்டாமணியை வேரோடு வெட்ட வேண்டுமென்று சொல்லியிருந்தார். வேரோடு வெட்டாமல் தரையோடு வெட்டி விட்டார்கள். வேர் [illegible] ஆற்றிலேயே இருக்கிறது. அதனால் [illegible] காட்டாமணி [illegible] [illegible]

(மணி 4-10)

ஆண்டு [illegible] சொல்லிவிட்டீர்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் [illegible] [illegible] சென்ற ஆண்டு ஏறத்தாழ 2½ கோடி ரூபாய் காட்டா



மணியை வெட்டுவதற்கு இந்த ஆண்டு வைக்கப்போகிற எஸ்டிமேட்டை, [illegible] சென்ற ஆண்டே [illegible] செய்து விட்டார்கள். காண்டிராக்டர்களுக்கு இன்னும் பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்கள் வேலை செய்துவிட்டு பணத்துக்காக அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த காண்டிராக்டர்களை நான் சென்னையிலே பார்த்தேன். இந்த ஆண்டு ஒதுக்கீடு கிடைத்ததற்குப் பிறகு, அந்த பழைய பாக்கியை ஆவது பணம் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியானால் இந்த ஆண்டு ஒதுக்கப்போகிற தொகை முழுவதும் சென்ற ஆண்டு வேலைக்கு கொடுப்பதற்கு பட்டுவாடா செய்யக்கூடிய முயற்சிகள்தான் நடக்கப்போகிறது என்பதை நான் இந்த நேரத்திலே உறுதியாக, உத்தரவாதமாக இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன். அப்படி செலவு செய்யப்பட்டுவிட்டால் வரப்போகிற ஆண்டிற்கு மராமத்து செய்வதற்கு பணம் இல்லாத நிலை ஏற்படும். எனவேதான் இந்தத் தவறுகளை, இந்தக் குறைகளைப் போக்குவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலத்தான், ஏரிகளிலே உள்ள கரைகளை பலப்படுத்துவதற்கு அந்தக் கால்வாய்களை நவீனப்படுத்தும்போது சிமெண்ட் மணல் கட்டுகளை 4 அங்குலம் கனத்திற்கு பொருத்தினால் அங்கே இருக்கக்கூடிய மண் வளம், களிமண்ணாகவும், ஈரமாகவும் இருப்பதால் இந்த 4 அங்குலக் கட்டுகள், அதுவும் ஏறத்தாழ தண்ணீர் வரக்கூடிய நேரத்திலேதான் அது பொருத்தப்படக்கூடிய வேலைகள் நடப்பதால், தண்ணீர் வந்தவுடன் கரைத்துக்கொண்டு அது ஆற்றோடு போய்விடுகிறது. எனவேதான், முன்னாலே இருந்ததைப்போல அந்தக் கால்வாய்களை கான்கிரீட்டாலோ அல்லது கிட்டத்தட்ட 9 அங்குல கனமுள்ள செங்கற்களைப் பயன்படுத்தியோ, இந்தச் சரிவைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று, நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, குறிப்பாக, முக்கியமாக நான் கூறிக்கொள்ள விரும்புவது, தஞ்சை மாவட்டத்தினுடைய நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்கு அந்த விவசாயிகள் இப்போது தனியார்கள், அவரவர்கள் விருப்பத்திற்குச் செய்கிறார்கள். அரசாங்கம் முழு முயற்சி எடுத்து, முதலீடு செய்து குழாய்க் கிணறுகளை,

சமுதாயக் கிணறுகளை அமைத்து சாதாரண ஒரு ஏக்கர் அல்லது ½ ஏக்கர் வைத்து. இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், லோன் வாங்கி சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் அந்தத் தண்ணீர் கிடைத்து, அவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே நிலத்தடி நீரை எடுக்கக்கூடிய சமுதாயக் கிணறுகளை அரசே அமைத்துக் கொடுத்து அதற்கு ஆகக்கூடிய செலவுகளை, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நாம் கடுமையான வறட்சிக்கு ஆளாகி இருக்கிறோம். இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைப் பார்க்கும்போது, ஒரு பக்கத்திலே மலைப் பகுதிகள் முழுவதையும் பிளான்டேஷனாக மாற்றிவிட்டு, மறு பக்கத்திலே ஏரிகளையெல்லாம் சோஷியல் ஃபாரஸ்ட் ஆக மாற்றிவிட்டால் மழை எங்கே பெய்யும். பெய்கின்ற மழையினுடைய தண்ணீர் எங்கே தேங்கும். எனவேதான் இன்றைக்கு தமிழகத்திலேயுள்ள ஏரிகள் முழுவதும் கிட்டத்தட்ட இப்படி தமிழகம் முழுவதும் பாலைவனமாக மாறுவதற்கு, மழை பெய்வதற்குத் தேவையான காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டு, பிளான்டேஷனாக மாற்றப்பட்டு இருப்பதற்கும், மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கைக்கும் சம்பந்தம் உண்டா, இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அப்படி மாற்றப்படுவதன் விளைவாக மழை குறைகிறது. வறட்சி ஏற்படுகிறது. தமிழகத்தின் தெற்குப் பகுதி பூராவும் வறண்ட மாநிலமாக மாறிக்கொண்டிருக்கக் கூடிய நிலைமைக்கும், அரசாங்கத்தினுடைய கொள்கைக்கும் சம்பந்தம் இல்லையா? மழை பெய்யவில்லை என்றால், அரசு என்ன செய்வது என்று சொல்வது எப்படி பொருத்தமாக இருக்கும்? காடுகள் பிளான்டேஷனாக மாற்றப்பட்டிருப்பதினுடைய விளைவே இத்தகைய பாதிப்புக்குக் காரணமா இல்லையா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த ஏரிகள் முழுவதையும், ஏறத்தாழ 35 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளிலே சமூகக் காடுகள் வளர்ப்பு என்ற பெயராலே மரங்களை வளர்ப்பதும், நீங்கள் இந்த





சமூகக் காடுகளை வளர்ப்பதற்கு, ஏரிகளை விட்டுவிட்டு வேறு எங்குவேண்டுமானாலும் மரம் வளர்த்துக்கொள்ளுங்கள். ஏரிகளை காடு வளர்க்கக்கூடிய இடமாக மாற்றுவதை தடுத்து, அதை சட்ட விரோதமாக்கி, ஏரிகளில் காடு வளர்க்கக்கூடாது என்ற ஒரு சட்டத்தையும் அரசு கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அந்த ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும். அதனுடைய பாசன வாய்க்கால் முழுவதும் இருக்கிற இடமே தெரியாது. தாமிரவருணி ஆற்றிலே கிட்டத்தட்ட 16 கிலோ மீட்டருக்கு ஒரு வாய்க்காலே கிடையாது. அங்கே பூராவும் இன்றைக்கு தென்னை மரங்கள் இருக்கின்றன. ரெவின்யூ கணக்கிலே வாய்க்கால் இருக்கிறது. ஆனால் நடைமுறையிலே அங்கே பார்த்தால் வாய்க்காலே கிடையாது. அதைப்போலத்தான் தமிழகத்தினுடைய மிகப்பெரிய ஏரியான வீராணம் ஏரிக்கு தண்ணீர் வர முடியாத அளவிற்கு அதனுடைய பாசன வாய்க்கால்கள் தூர்ந்து, கரைகள் இல்லாமல் சீரழிந்து கிடக்கிறது. எனவே அந்த முறையிலே அந்த ஏரிகளை ஆழப்படுத்தவும், அந்த ஏரிகளுக்கு வரக்கூடிய பாசன வாய்க்கால்களை சீர்செய்யவும், ஒரு தனித் திட்டத்தை, ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இராமநாதபுரம் மக்களுக்கு வைகை அணை கட்டும்போது கொடுத்த வாக்குறுதியை பாதுகாக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கப்பட்ட வாக்குறுதி, வைகை அணை கட்டி நீர்தேக்கப்பட்டாலும், அதை பாசனமாக நம்பியிருந்த இராமநாதபுரம், இன்றைய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏரிகளுக்கு வரக்கூடிய தண்ணீரை விட்டுவிட்டுத்தான் பாக்கியை அணைக்கட்டிலே தேக்கிக்கொள்வோம் என்று குறிப்பிட்டுக் கொடுத்த அந்த வாக்குறுதி இன்றையதினம் மறுக்கப்படுகிறது. அது மீறப்படுகிறது. வைகை அணையிலே நீங்கள் நீரைத் தேக்கி வைத்துக்கொள்வதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இராமநாதபுரம் மக்களுக்கு வைகை அணை கட்டக்கூடிய காலத்தில் கொடுத்த வாக்குறுதி பாதுகாக்கப்பட வேண்டும். அது பராமரிக்கப்பட வேண்டும். அங்கு இருக்கக்கூடிய ஏரிகளுக்கு தண்ணீர் செல்வதற்கு உத்திரவாதம் செய்யவேண்டும்.

[திரு. கோ. வீரய்யன்] [1987 ஏப்ரல் 29

அதேபோல் ஜூன் பவானி பாசனத்திற்கு அரசு உத்திரவு இருந்தும் ஒவ்வொரு ஆண்டும் 4 மாத காலம் அவர்களுக்கு விவசாயத் திற்கு தண்ணீர் கொடுத்து விட்டு அப்புறம் தான் மின்சாரத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருந்தும் இன்று அதை அமல் செய்யாமல் அது புறக்கணிக்கப்பட்டிருக் கிறது, மீறப்பட்டிருக்கிறது. எனவே இந்த நேரத்தில் உங்கள் மூலமாக அரசை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இந்த பவானி பாசனத்தை ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை 4 மாத காலம் பாசனத்திற்கு தண்ணீர் கொடுப்பதற்கு முன்னுரிமையை நீங்கள் கொடுக்கவேண்டும். அப்படி கொடுத்தது போக உபரியை மின்சாரத்திற்கு நீங்கள் பயன் படுத்திக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் 10 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும். அதன் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஆகவே இன்னும் 1 நிமிடத்தில் முடித்து விடவேண்டும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப்பணித் துறையில் வேலை செய்யக்கூடிய ஏறத்தாழ 450 பேர் தற்காலிக ஊழியர்களாக 13 ஆண்டு காலமாக இருக்கிறார்கள். அங்கே 400 காலி இடங்கள் இருந்தும் அந்த காலி இடத்தை நிரப்பாமல் இருக்கிறார்கள். எனவே அதை முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகை நகரத்தில் ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்தித் தருவதாக சொன்னார்கள். அந்தக் கட்டிடத்தை இந்த ஆண்டு கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப் பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, வரவேற்று ஒரு சில உணர்வுகளை இந்த மன்றத்தில் வைத்து அமரலாம் என்று கருதுகிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. எம். எம். இராசரத்தினம்]

தாய் உள்ளம் கொண்ட தலைவன், தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வரலாற்று சிறப்பு வாய்ந்த Statue of Liberty என்று சொல்வார்களே. அமெரிக்க புகழ் வாய்ந்த சிலை அதுபோல 4½ கோடி ரூபாய் செலவில் தமிழ் ஆய்ந்த, சங்கம் அமைத்த; தமிழ் வளர்த்த கன்னியா குமரியில் இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள உலகத்தார் உள்ளங்களில் நிலைக்கின்ற புகழை பெரும் வகையிலும் திருவள்ளுவருக்கு 4½ கோடி ரூபாய் செலவில் சிலை எழுப்பு கின்ற ஆணையை, உத்திரவை இட்டமைக்காக கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியை இந்த நேரத் தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பு ஏற்ற பின்பு இந்த 10 ஆண்டுக் காலத்தில் அண்டை மாநிலங்களோடு இருக்கக் கூடிய தண்ணீர் பற்றிய பல்வேறுபட்ட பிரச்சினைகளை, கொடுமையான வறட்சி, கடுமையான நிதி பற்றாக்குறை இவைகள் அனைத்தையும் சமாளித்து ஏறத்தாழ 40 ஆயிரம் எக்டேர் நிலத் திற்கு கூடுதலாக நீர் பாசனத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்து காட்டியிருக்கிறது என்று சொன்னால் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆற்றல் மிக்க நிர்வாகம், அதோடு கடமை உணர்வு மிக்க பொதுப் பணித் துறை அமைச் சருடைய முக்கிய பணி இவைகளைத் தான் இந்த பாசனத் துறையில் அதிகமாக கவனத்தை செலுத்தி இருக்கக்கூடிய சூழ்நிலை மூலமாக நாம் பார்க்க முடிகிறது.

மேலும் 7-வது ஐந்தாண்டு திட்டத்தினுடைய அடிப்படையில் 1985-லிருந்து 1990 வரை 5 ஆண்டு காலத்தில் 40 ஆயிரம் எக்டேர் நிலங்களுக்கு கூடுதலாக நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இன்றைக்கு இந்தப் பணிகள் நடை பெற்று வருகிற சூழ்நிலையைப் பார்க்கிறபோது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகள் மீதும், விவசாயத்தின் மீதும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நாம் பார்க்க முடிகிறது.

மேலும் காவேரி நதி நீர் பிரச்சினைகள் பற்றி நாம் பார்க்கும் போது பல்வேறுபட்ட கருத்துகள் எங்கே பரிமாறப்பட்டாலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1980 ஆம்

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1987 ஏப்ரல் 29

ஆண்டு தேசீய வளர்ச்சிக் கூட்டத்தில் நதிகளை தேசீய மயமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினார்கள். அதை தொடர்ந்து பல தடவை மத்திய அரசில் இருக்கக்கூடிய அதிகாரிகளை சந்திக்கும் போதும், மத்திய அரசின் விவசாயத் துறை அமைச்சர் அவர்களை சந்திக்கும் போதும், மத்திய அரசின் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை சந்திக்கும் போதும், மத்திய அரசின் பிரதம அமைச்சர் வருகிற நேரத்தில் பல்வேறு நேரங்களில் தேசீய வளர்ச்சி கூட்டங்கள் மூலமாக பல்வேறு கூட்டங்கள் மூலமாக நதிகளை தேசீயமயமாக்க வேண்டும் என்று கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆக இந்தியத்

(மாலை 4-20)

துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய நதிகளை தேசியமயமாக்குவதன் மூலமாகத்தான், பல்வேறு காரியங்களை நாம் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினை போல் எங்களுடைய மாவட்டத்திலும் ஒரு பிரச்சினை இருக்கிறது. நாங்கள் எல்லாம் கேரளாவிலிருந்து பிரிந்து தாய்த் தமிழ்நாட்டோடு இணைந்தோம். அந்தக் காலத்திலே ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அது தான் நெய்யாறு இடது கரைக் கால்வாய்த் திட்ட ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில், கேரள அரசாங்கம் 150 கன அடி தண்ணீரை குமரி மாவட்டத்திற்குத் தரவேண்டுமென்ற வகையில் ஒப்பந்தமாகியிருக்கிறது. ஆனால் 150 கன அடி தண்ணீரை அவர்கள் இதுவரை தந்ததேயில்லை. நம்முடைய உரிமைகளைப் பெறுகின்ற வகையிலும், நம்முடைய விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலும், அந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் 150 கன அடித் தண்ணீரை பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோதையாறு மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டம் உலக வங்கியினுடைய நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தத் திட்டத்தின் மூலமாக குமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய பல்வேறு திட்டங்கள் அதிலே அடக்கமாகியிருக்கின்றன. இரணியல்-வள்ளியாறு நீரேற்றுத் திட்டம்,



1987 ஏப்ரல் 29] [திரு. எப். எம். இராசரத்தினம்]

பாசக்கமங்கலம் பன்றிவாய்க்கால் திட்டம், கால்வாய்களைப் பழுது பார்த்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் அந்தக் கோதையாறு மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. குமரி மாவட்டத்திலுள்ள விவசாயப் பெருமக்களின் விழி நீரைத் துடைக்கின்ற பணியை நாம் நிச்சயமாக செய்ய வேண்டுமென்றால், இந்தக் கோதையாறு மேம்பாட்டுத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாம்பழத்துறையாறு அணைக்கட்டுத் திட்டம். முன்னாள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அந்தப் பகுதியிலே வந்து பார்த்தார்கள். ஏறத்தாழ 200 மில்லியன் கன அடி தண்ணீர் இன்றைக்கு வீணாகச் சென்று, மாம்பழத்துறையாறு மூலமாகக் கடலிலே கலக்கின்றது. எனவே அங்கே ஒரு அணையைக் கட்டுவதன் மூலமாக கல்குளம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நாம் ஒரு நல்ல பணியைச் செய்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கும். மேலும் மாம்பழத் துறையாறு அணைக்கட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் ஆய்வு செய்து, அந்தத் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு சிறந்த பலனைத் தராது என்று சொல்லி, அங்கே நஷ்டக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், லாப-நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், விவசாயிகளுக்கு வழி வகை செய்கின்ற ஒரு கருத்தை மனதிலே கொண்டு, லாப-நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், மாம்பழத்துறையாறு அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரும், நாங்களும் விளாத்துறையில் ஒரு நீர் ஏற்றுத் திட்டத்தைப் பார்த்தோம். அங்கே பல்வேறு ஏக்கருக்கு விவசாயிகள் விவசாயம் செய்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது, அமைச்சரவர்கள் நேரிலே சென்று பார்த்தார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

1906 ஆம் ஆண்டு பேச்சிப்பாறை அணைக் கட்டப்பட்டது. 81 ஆண்டுகள் இடைவெளி இருக்கிறது. அந்த 81 ஆண்டு இடைவெளியிலே அந்தப் பேச்சிப்பாறை அணை

யினுடைய கொள் அளவு, 1906 ஆம் ஆண்டு நாம் கட்டிய நேரத்தில், எந்த அளவிற்கு அந்தக் கொள்ளளவு இருந்ததோ, அந்தக் கொள்ளளவு இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. பேச்சிப் பாறை அணையிலே நாம் தூர் எடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உருவாக்கினால் தான், குமரி மாவட்டத்திலுள்ள மக்கள் பயன்பெறமுடியும். ஏனென்றால் குமரி மாவட்டத்திலுள்ளவர்கள் அந்தப் பேச்சிப் பாறை அணையை நம்பித்தான் இருக்கிறார்கள். எனவே, ஆரம்பக் காலத்திலிருந்து அந்தக் கொள் அளவு எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து, எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்து, ஆரம்பக் காலக் கொள் அளவை பேச்சிப் பாறை அணையிலே உருவாக்குகிற அந்தப் பணியைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு குளங்களை நம்பித்தான் இருக்கிறோம். அந்தக் குளங்களை பல்வேறுப்பட்டவர்கள், தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். குளங்களையே காணோம். அந்தக் குளங்களையெல்லாம் இன்றைக்கு ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற சூழ்நிலையிலே பல்வேறுபட்ட சூழ்நிலையிலே இன்றைக்கு விவசாயம் பெருவாரியாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக அதற்கென்று தனி காவலர் படையை பொதுப்பணித் துறையின் மூலமாக அமைத்தால்கூட, அது சரியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்காகக்கூட, தனியாக ஒரு சட்டத்தை இயற்றவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் விவசாயிகள் இன்றைக்கு வறட்சியால் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு, நில வரி, நீர் வரி போன்ற வரிகளை ரத்து செய்கின்ற வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு, இன்றைக்கு செயல்படாமல் இருக்கும் மாம்பழத் துறையாறுத் திட்டம், கோதையாறு மேம்பாட்டுத் திட்டம், நெய்யூர் வள்ளி





யாறு நீரேற்றுத் திட்டம், ராசக்கமங்கலம் பன்றிவாய்க்கால் நீரேற்றுத் திட்டம், உழக்கருளியாறு திட்டம், பொய்கை அணைத் திட்டம் ஆகிய திட்டங்களை தொடங்குவதற்கான நடவடிக்கையை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில், மாவட்டத்தினுடைய தலைநகர், தாலுக்கா தலைநகர் பகுதிகளில் அரசு காலியிடங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் தேர்வு செய்து பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் அமைத்தால் அரசுக்கும் நிதி வருவாய் கிடைக்கும், பொது மக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அணையிலிருந்து இப்போது தண்ணீர் திறந்துவிடும்போது ஒவ்வொரு மதகுகளும் தேவைக்கேற்ப திறந்து அடைக்கப்படுகிறது. இதனால் அதிகமான நீர் வீணாகின்றது. எனவே முன்னோடி நாடுகளில் உள்ளபடி ஒரே நேரத்தில் அவற்றிற்கெல்லாம் நீர் வழங்கும் முறையை, வாட்டர் மேனேஜ்மென்ட் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குமரி மாவட்டத்தில், பொதுப் பணித் துறையை பொறுத்தவரையில் நீர் விநியோகமும், கட்டிடப் பணியையும் இரண்டையும் சேர்ந்து ஒரே அதிகாரி கவனித்து வருகிறார். நீர்ப்பாசனத்திற்கு தனியாகவும், கட்டிடப் பணிக்கு தனியாகவும் இரண்டு கோட்ட அதிகாரிகளை அங்கே நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கொடுப்பங்குழி, குளச்சல், அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அரசு உயர்நிலைப் பள்ளிகளுடைய கட்டிடங்கள் இன்னமும் கட்டப்படாமல், கட்டுவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன.

மேலும், தண்ணீர் விநியோகத்தை பொறுத்தவரையில் கடலிலே சேராத வகையில் குளங்களை ஆழப்படுத்த வேண்டும். மதகுகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும். கால்வாய்களை மேம்பாடு செய்கின்ற பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனந்தநாறு சாலையில், அனந்தங்காலில் ஆரம்பித்து பார்வளை வரை இடதுபுறம் மட்டும்தான் விவசாயத்திற்கு ஆயக்கட்டு நிலங்கள் இருக்கின்றன. இடது பக்கத்திலே அவர்கள் ஆயக்கட்டிற்கு நீர்வரி, நில்வரி தந்து கொண்டிருக்கிறார்கள். வலது பக்கத்திலே திருட்டுத்தனமாக குழாய்மடைகளை

அந்த கால்வாய் கட்டின இடத்தில் அந்த ஒப்பந்தக்காரர்களே செயல்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதன்மூலம் அந்தப் பகுதியில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே வலது பக்கத்தில் திருட்டுத்தனமாக மதகுகள் மூலம் எடுக்கக்கூடிய தண்ணீரை அடைத்து, இடது பக்கம் உள்ள விவசாயிகளுக்கு அந்தத் தண்ணீரை கொடுக்கின்ற அளவிற்கு பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு செருப்பாறிலே ஒரு இயந்திரக்கூடம் இருக்கிறது. அந்த இயந்திரக்கூடம் இன்றைக்கு மதகுகளை செய்தல், பழுது பார்த்தல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை இன்றைக்கு இயந்திரக்கூடம் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் மதகுகளைச் செய்ய வேண்டும். மதகுகளைப் பழுதுபார்க்க வேண்டும். இயந்திர வேலைகளைச் செய்யவேண்டும். பொதுப் பணித் துறை சம்பந்தமான லாரி, ஜீப்புகளை பழுதுபார்க்க வேண்டும். அந்த வேலைகளை அவர்கள் செய்யமுடியாமல், அந்த இயந்திர ஊழியர்கள் இன்றைக்கு கால்வாயிலே பணிபுரிய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அந்த இயந்திரக்கூடத்தை மீண்டும் திறந்து இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கும், இயந்திரக் கூடத்திலேயே அவர்கள் மீண்டும் பணி செய்வதற்கு ஏற்ற உத்திரவையிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டு இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. ஆ. சந்திரசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பாசனம், கட்டிடங்கள் ஆகிய 1987-88-ம் வருட மானிய கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல முற்படுகிறேன். முதலிலே இன்றையதினம் மேற்கு நோக்கி பாயும் நதிகளை தமிழகத்தின் பக்கம் திருப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த மாமன்றத்திலே பல ஆண்டுகளாக நாம் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் இதுவரையில் செயல்படுத்த முடியவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களும், இன்றையதினம் மேற்கு நோக்கி பாயும் நதிகளை தமிழகத்தின் பக்கம் திருப்ப, மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டும் என்று சொன்னார்கள். நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே



மேற்கு நோக்கி பாய்கின்ற நதியிலே ஒரு குறிப்பிட்ட அளவை தமிழகத்தின் பக்கம் திருப்பிவிட்டால் போதும். அந்த அளவிற்கு தமிழக அரசு கேரள அரசோடு பேசி எந்த அளவிற்கு அந்த தண்ணீர் இருக்கின்றதோ அதற்கு நஷ்ட ஈடாக கேரள அரசுக்கு நாம எவ்வளவு தரமுடியுமோ அதைத் தந்து இந்த திட்டத்தை விரைவிலே நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதைப் போல இன்றையதினம் பெரியாறு 152 அடி கொள்ளளவாக இருந்தது. ஆனால் தற்போது அது 136 அடியாக குறைக்கப்பட்டுவிட்டது. அதனால் அங்கே என்ன நடைபெறுகிறது என்றால், என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் பெரியாறை நம்பியிருப்பதால் கடந்த 6 வருடங்களாக விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இன்றையதினம் நம்முடைய சென்ட்ரல் வாட்டர் கமிட்டி பரிந்துரையின்படி 1981 ஆம் ஆண்டிற்குள்ளேயே மூன்று கட்ட வேலைகள் முடிக்கப்படும் என்று சொன்னார்கள்.

(மாலை 4-30)

அந்த மூன்று கட்ட வேலைகளும் இப்போது முடிக்கப்பட்டு விட்டன. ஆனால் நம்முடைய அரசுதான் இன்னும் மெத்தனமாக இருக்கிறது. டெண்டரை உடனே செட்டில் பண்ணி 152 அடி கொள்ளளவை வைப்பதற்கு நீங்கள் உடனே முயற்சி செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது பருவ நிலை தொடங்கி விட்ட காரணத்தாலே இந்த வருடமாவது அந்த 152 அடி கொள் அளவைக் கொண்டு வந்தால், இனி வரும் காலத்தில் விவசாயத்தை நாம் காப்பாற்றமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்

அதைப் போல இன்றையதினம் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் நடுவர் மன்றத் தீர்ப்பிற்குவிட வேண்டும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே அதனை நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடுவதற்கு மத்திய அரசினை விரைவாக வற்புறுத்தவேண்டும். அதற்கு நாங்களும் உங்களோடு ஒத்துழைப்புத் தருகிறோம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அதைப் போல வருசநாடு மடையைப் பொறுத்தவரையில், இன்றையதினம் வைகை அணைக்கு அதிகமான மழையைத் தரக் கூடிய இடம் ஆகும். ஆனால் அந்த வருச நாட்டு மடையில்

[திரு. ஆ. சந்திரசேகரன்] [1987 ஏப்ரல் 29

உள்ள மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த மழைநாளுண்டிய அளவு, வைகை அணையில் அதன் காரணமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி மரங்களை வெட்டி இருப்பதால், அணைக்கு மழை அளவு குறைந்த காரணத்தால், மீண்டும் அந்த இடங்களில் மரங்களை வைப்பதற்கும், ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கும் நீங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மதுரை வந்த போது வைகை அணைக்கு மேற்புறத்திலே ஒரு அணை கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அது நல்ல திட்டம். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்தத் திட்டம் நிறைவேறு கின்றபோது, நீங்கள் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங் களிலுள்ள—அந்த இரண்டு மாவட்டங்களிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும் விவசாயத் தலைவர்களையும் அழைத்து, இரு மாவட்டங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத அளவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சாத்தையாறு அணையில் எப்போதும் அங்கே நீர் நிரப்பப்படுவதில்லை. ஆகவே, ஆண்டிப்பட்டி அருகே பெரியாறு வாய்க்காலிலே நீரைத் திருப்பி, சாத்தையாறு அணைக்கும் தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தண்ணீர் நிரம்பாத காரணத்தால் என்ன நடக்கிறது என்றால்—10, 15 கண் மாய்கள் அங்கே இருக்கின்றன. குறைந்த அளவுத் தண்ணீரை வைத்துக்கொண்டு எல்லோருக்கும் தரவேண்டும் என்கிறபோது விவசாயம் பாதிக்கப்படுகிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால், இந்த ஆண்டு தண்ணீர் குறைகிறபோது, குறிப்பிட்ட கண்மாய்களுக்கு மட்டும் தண்ணீர் தரப்படும் என்று தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, பெரியாறு—வைகை தவிலப்படுத்துகின்ற திட்டத்தை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் என்னுடைய தொகுதியில், பிரதானக் கால்வாயில் அமைந்திருக் கின்ற தென்கரை, வடகரை கால்வாய் எல்லாம் இன்னும் அந்தத் திட்டத்தில் ஏன் சேர்க்கப்படவில்லை? இதற்கு முன்னால் சேர்க் கப்பட்டிருந்தது. இன்றையதினம் அவைகள் எல்லாம் விடப் பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. ஆ. சந்திரசேகரன்]

அதோடு, வெள்ளத் தடுப்பைப் பொறுத்தவரையில், வைகை ஆற்றின் இரு புறங்களிலும் தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பல்வேறு இடங்களில் வைகை ஆறு செல்கின்ற காரணத்தால் அதன் இரு புறங்களிலும் தடுப்புச் சுவரை கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, கண்மாய்களை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கட்டக்குளம் கண்மாயி லுள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டும். தென்கரைக் கண்மாயிலுள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றி, அந்தக் கண்மாயை ஆழப்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். வட கரைக் கண்மாய், கிராவிப்பட்டி கண்மாய், சித்தாலங்குடி, நெடுங் குளம் கண்மாய்களை தூர் எடுத்து ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, சாத்தையாறு அணைக்குப் பக்கத்திலே ஒரு சாலை இருக்கிறது. ஆனால் அந்தச் சாலை பி.டபிள்யூ.டி.-க்குச் சொந்தமான சாலை என்பதால், இதுகாறும் அந்தச் சாலை செப்பனிடப்படவில்லை. ஆகவே, அதற்கு உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல, சோழவந்தான் காமராஜர் பாலத்திற்குப் பக்கத்திலே ஒரு பாலம் கட்டப்பட்டது. ஆனால் கட்டப்பட்ட அந்தத் தடுப்புச் சுவர் உடனே இடிந்து விட்டது. ஆகவே, அதனை உடனடியாக நடவடிக்கை எடுத்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் இருக்கும்போது, நீர்ப்பாசன உயர்மட்டக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

ஆனால் அந்தக் கமிட்டி இன்றுவரை கூடவேயில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, இனிமேலாவது நாங்கள் பிரச்சினைகளைச் சொல்வதற்கு வாய்ப்பாக கமிட்டிக் கூட்டத்தை உடனடியாக நடத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நஞ்சைப் பகுதியில் நீர்த்தேக்கம் ஒன்று கட்டப் பட வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே மதிப்பீடு செய்யப்பட்டு அது இன்றையதினம் வரையில் நிறைவேற்றப்படவில்லை. எனவே அதையும் விரைவில் நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கட்டைக்குளம் என்கிற கிராமத்தின் அருகில் ஒரு படுக்கை அணை கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிராமத்தில் உள்ளவர்கள் இதற்குப் பணம் போட்டு கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக பொது நிதியிலிருந்து கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள் கிறேன். இறுதியாக இந்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு உற்பத்திக்கும், தன்னிறைவுக்கும், வேளாண்மைப் பெருக்கத்துக்கும், கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், நீர்ப்பாசனத்துறை பெரும் பங்கு வகிக்கிறது என்பது முற்றிலும் உண்மை.

தமிழகத்தின் தேசிய நதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நதிகள் ஏதுவுமில்லை. இங்கே வற்றாத ஜீவ நதிகளும் இல்லை. வானம் பார்த்த பூமிகளே மிக மிக அதிகம். பருவமழையும் ஆண்டுக்காண்டு பொய்த்தே வருகிறது. வறட்சி, தமிழகத்தை வாட்டி வதைக்கிறது. இந்நிலையிலும் தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சமே ஏற்படாத நிலையில் உணவு உற்பத்தி தமிழகத்தில் பெருகியிருக்கிறது என்றால் என்ன பொருள்? தமிழகத்திலுள்ள 22,000 நியாயவிலைக் கடைகளிலும் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன என்றால் என்ன காரணம்? நீர்ப்பாசன ஆதாரங்களைச் சீரமைத்து, நவீனப்படுத்தி, நீர் வீணாவதைத்தடுத்து, அவ்வப்போது பெய்கிற மழைநீரைத் தேக்கி வைத்து, நிலத்தடி நீரைப் பெருக்கும் முறையில் கிராமங்களில் உள்ள கிணறுகளுக்கு நீர் கிடைக்கும் முறையில், ஆங்காங்கு குளங்கள் அமைத்து, கட்டைகள் அமைத்து, அணைகள் கட்டி, வாய்க்கால்களை திருத்தி அமைத்து, நீரைத் தேக்கி வைத்ததுதான் காரணம் என்பதை உங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





இந்த வகையில் பொதுப்பணித்துறையும், அரசும் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளை நாம் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில் மட்டும்தான் நிலமேற்பரப்பு நீர், நிலநீர், நிலத்தடி நீர் (Surface Water, Subsoil Water, Underground water) முழுவதும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் பல ஆறுகளில், ஓடைகளில் வரும் நீர், பெரும் நதிகளிலே கலந்து, இறுதியில் கடலில் கலந்து வீணாகிவிடுகிறது. இதைத் தடுத்து, ஆங்காங்கு அணைகள் கட்டி, அந்தப்பகுதி நீர் முழுவதையும் பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அணைகள் கட்டும் ஆய்வு பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு, அரசால் பரிசீலிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது.

அவ்வாறு ஆய்வு முடிந்து தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கும் ஒரு திட்டம்தான் அண்ணா மாவட்டம் இடைய கோட்டைக்கு அருகில் அமைய உள்ள நங்காஞ்சியாறு அணைத் திட்டம். இது ஒரு நடுத்தரப் பாசனத் திட்டம். 1986-87 ஆம் ஆண்டு Annual Plan நிதியாண்டு (புக் எண் 29) திட்டத்திலும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், நடுத்தரப் பாசனத் திட்டமாக இந்த நங்காஞ்சி ஆறு அணைக்கட்டு திட்டம் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது என்பதையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அண்ணா மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள பழனி மலைத்தொடரில் உற்பத்தியாகி, ஒட்டன்சத்திரம் பகுதி, மற்றும் அரவக்குறிச்சி பகுதிகளில் ஓடி, அமராவதியில் கலக்கிற இந்த நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே, இடைய கோட்டைக்கு அருகே அணைக்கட்டும் திட்டம்தான் நங்காஞ்சியாறு திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம், வறண்ட, வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒட்டன் சத்திரம் பகுதியில் 3,500 ஏக்கரும் திருச்சி மாவட்டம் அரவக் குறிச்சி பகுதியில், 3,500 ஏக்கரும் பாசனம் பெறும் நிலைமை ஏற்படும் என்று பொதுப்பணித்துறை கருதி, இத்திட்டத்தை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. தற்போது அமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு கோப்பு அனுப்பப் பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன்.

[திரு. கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 29

நங்காஞ்சியாறு என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவில் இருக்கும் என்று கருதுகிறேன். காரணம் நான் அந்த அளவுக்குத் தொடர்ந்து அதைப்பற்றி தொல்லைக் கொடுத்து வந்திருக்கிறேன். இந்த அணை கட்டப்படுகிற இடம் பின்தங்கிய பகுதி. பயன்படுகிற பகுதிகளும் பின்தங்கிய பகுதிகள். பி.சி. ரேஷியோவும் நன்கு உள்ளது. அதாவது 1 : 28 :-1 என்று உள்ளது. பொதுப்பணித்துறையும் இதைப் பரிந்துரை செய்துள்ளது.

அணைக் கட்டுவதில் நிதிப் பிரச்சினை பெரிதாக உள்ளது. அரசின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து, ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு, இதையும் வேறு பல திட்டங்களையும் சேர்த்து 700 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஒருவேளை இது போதாது என்றால், காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்த ரூ. 80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவிரி பிரச்சினை தீரும்வரை இந்தத் தொகை செலவிட முடியாத நிலை உள்ளது. இதில் வாட்டர் மேனேஜ்மெண்ட்டுக்காக ரூ. 25 கோடி கொடுக்கப்பட்டது போக, எஞ்சிய 55 கோடி ரூபாய் இருப்பதாக அறிகிறேன். காவிரி டெல்டா நவீனப்படுத்துகிற திட்டத்தில் இந்த அளவு தொகை மீதி இருப்பதாக நான் அறிகிறேன்.

(மாலை 4-40)

இந்தத் தொகை பயன்படுத்தப்படாவிட்டால், மைய அரசுக்கு இதை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது என்று தெரிய வருகிறது. எனவே, எஞ்சியுள்ள 55 கோடி ரூபாயில், ஓரளவு ரூபாயை நங்காஞ்சியாறு அணை கட்ட இந்த ஆண்டு அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அணை அந்தப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டால், வறட்சி வரும்போதெல்லாம் புதிய குளங்களை, குட்டைகளை, ஏரிகளை அமைப்பதற்காகவும், வாய்க்கால்களை தூர் எடுப்பதற்காக பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படுவதை மிச்சப்படுத்தலாம், அதை மற்றப் பகுதிகளுக்குப் பயன்படுத்தலாம் என்ற நீண்டகால கண்ணோட்டத்தோடும், இந்தப் பகுதி பின்தங்கிய பகுதி என்பதையும் வறட்சிக்கு உள்ளாகும் பகுதி என்பதையும் கருத்திற்கொண்டு, இந்த அரசாங்கம் நங்காஞ்சியாறு அணையைக்



1987 ஏப்ரல் 29] [திரு. கே. குப்புசாமி]

கட்ட அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று பழனிமலைத் தொடரில் உற்பத்தியாகி, தொட்டம்பட்டி ஒன்றியம் வழியாக, நல்லதங்காள் ஓடை செல்கிறது. இந்த ஓடையில் உள்ள சிறுசிறு அணைக்கட்டுகளின் சீரமைப்பு வேலை நடந்து வருகிறது. இந்த ஓடையின் குறுக்கே ஆங்காங்கு பல இடங்களில் செக்-டாம் கட்டினால் கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அத்துடன் வறண்ட தொப்பம்பட்டி பகுதியில் வாய்ப்புள்ள இடங்களில் குளங்களையும் குட்டைகளையும் மேலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்ற வகையில் இந்த திட்டம் அமையும் என்பதால், அவற்றை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விருப்பாச்சிக்கு அருகில் உள்ள பெருமாள்குளத்தின் மிகுதி நீரை வீரமல்லாங்குளம், முத்துபாலசமுத்திரம், பாய்பா குளம், பெரியகுளம் ஆகியவற்றுக்குப் பயன்படும் வகையில் வாய்க்கால் வெட்டும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்திற்கு அருகில் உள்ள பெருமாள்கோயில் ஓடையின்மேல் பகுதியில் காட்டுப் பகுதி இருக்கிறது. அங்கே ஒரு சின்ன நீர்த்தேக்கம் கட்டினால், மலை அடிவாரத்தில் உள்ள நிலங்கள், புஞ்சை நிலங்கள் பாசன வசதி அடைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

அதே போன்று புளியமரத்துக்கோட்டைக்கு மேற்கே உள்ள கருமலையிலிருந்து வரும் புல்லிருண்டு ஓடை, கட்டில் ஊற்று ஓடை, தனிமுடி ஓடை. கன்னிமார்கோவில் ஓடை என்ற நான்கு ஓடைகளும் கோவில்பாறை என்னும் இடத்தில் ஒன்று சேருகின்றன. அந்த இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்டினால் சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதால் இதை ஆய்வு செய்யும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 29

அதேபோன்று முத்துநாயக்கன்பட்டிக்கு மேற்கு பகுதியில் தேவர்மலையில் இருந்து வரும் காட்டு ஓடை என்ற ஓடையில் ஒரு சிறு நீர்த்தேக்கம் அமைத்தால் அந்தப் பகுதியில் உள்ள ஐந்நூறு கிணறுகளுக்கு நிலத்தடி நீர் கிடைக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொட்டம்பட்டியில் உள்ள அக்கரைப்பட்டியில் எக்ஸ்டென்ஷன் டிஸ்ட்ரிபியூட்டிங் சேனல் வெட்டுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே அரசுக்கு அனுப்பியும் அந்த டிஸ்ட்ரிபியூட்டிங் சேனல் இன்னும் வெட்டப்படவில்லை. எனவே இந்த வேலையை உடனடியாகத் துவக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இருக்கின்ற நிலத்தடி நீர் அவ்வளவையும் பயன்படுத்திய நிலையில் மேலும் பயன்படுத்த வேண்டிய அளவிற்கு அதிகமாக நீரில்லை, அதற்கான வாய்ப்புகள் இல்லை என்று சொல்லும் நிலை இருக்கிறது. எனவே நம்முடைய அரசு கேரளாவிலிருந்து மேற்கு நோக்கி பாயும் நதிகளை தமிழகத்திற்குத் திருப்பிவிடுகிற முயற்சியில் இறங்கியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட முன்பு ஒரு முறை குறிப்பிட்டார்கள். கேரளாவில் உள்ள 43 ஆறுகளில் இருந்து 218 டி.எம்.சி. நீர் கடலில் கலக்கிறது. நான்கு பெரிய ஆறுகளில் இருந்து 47 டி.எம்.சி. தண்ணீர் கடலில் கலக்கிறது என்று சொன்னார்கள். பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுகிற வகையில் கேரள அரசோடு பேசி மேற்கு நோக்கி பாயும் நீரை தமிழகத்திற்கு திருப்பிவிடுகிற முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். இதற்காக நதிகளை தேசியமயமாக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றால் மைய அரசோடு போராடி நதிகளை தேசியமயமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்தைப் போல மிகவும் வறண்டு, வறுமையில் பாதிக்கப்பட்ட தொகுதி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய வேடசந்தூர் தொகுதி என்பது சொல்லாமலே மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அங்கே ஒரு குடகனாறு அணை கட்டப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டு வெள்ளச் சேதத்தால் உடைந்துவிட்டது. இந்த அணையை இலட்சுமணப்பட்டியில் கட்டியிருக்க வேண்டும். அப்படி கட்டியிருந்தால் வேடசந்தூர் பகுதி



1987 ஏப்ரல் 29] [திரு. கே. குப்புசாமி]

முழுவதற்கும் அது பயன்பட்டிருக்கும், வறட்சி போயிருக்கும். ஆனால் அன்றுள்ள அரசியல் காரணத்திற்காக அந்த அணை வேறு இடத்திலே கட்டப்பட்டது. குடகனாறில் கட்டப்பட்டது. அதனுடைய பெரும்பகுதி நீர் குளித்தலைக்குச் செல்லும் வகையிலே அந்தத் திட்டம் தீட்டப்பட்டது. மேலும் அந்தத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு, இப்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதிலே வருகிற சர்ப்ளஸ் நீர், உபரி நீரைத் தடுக்க ஃப்ளட் மாடரேட்டர் என்று சொல்லுவார்களே, அந்த தடுப்பு அணையை லட்சுமணம்பட்டிக்கு அருகாமையில் கட்டினால் உபரி நீர் அந்த வறண்டப் பகுதிகளுக்குப் பயன்பட்டு, ஓரளவுக்கு வறட்சி குறைந்து, அந்தப் பகுதியும் தமிழகத்திலுள்ள செழிப்பான பகுதிகளோடு சேர வாய்ப்பு இருக்கும் என்பதால், ஃப்ளட் மாடரேட்டரை அங்கே கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேனி பகுதி பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். வைகை ஆற்றின் குறுக்கே துப்புரவு என்ற இடத்திற்கு மேல், இடது வலது பக்கக் கால்வாய் அமைத்துக் கொடுக்கவும், இதனால் ஆண்டிப்பட்டி, தேனி தொகுதி ஆகியவற்றில் வறண்ட பகுதிகளாகிய ஜி. உசிலம்பட்டி, ஜெங்கால்பட்டி, நாரணாபுரம், லட்சுமிபுரம், குப்பிநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்கள் பயனடையும், இத்திட்டத்தை நிறைவேற்றுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருந்தாலும் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை. எனவே பொதுப் பணித் துறையின் ஆய்வுப் பிரிவு இத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் வாயிலாக அல்லிநகரம் கிராமத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவிலான வீரப்ப ஐயனார் கோவில் அணை திட்டத்தை செயல்படுத்த துரித நடவடிக்கை தேவை என்று தேனி சட்டமன்ற உறுப்பினர் சார்பிலே இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரிப் பிரச்சினையைப் பற்றி ஏற்கெனவே நம்முடைய கொறடா அவர்கள் விளக்கமாக, தெளிவாக இங்கே பேசியிருக்கிறார்கள். இருந்தாலும் மறுபடியும் காவிரிப் பிரச்சினையை விட வேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. 1924 காவிரி ஒப்பந்தப்படி

[திரு. கே. குப்புசாமி] [1987 ஏப்ரல் 29

உபரி நீர் ஏதாவது இருந்தால் 50 ஆண்டுகளுக்குப் பின்னாலே பேசலாம் என்றுதான் இருக்கிறதே தவிர, காலாவதி ஆகிவிட்டதாக அக்ரிமென்டில் இல்லை. உபரி நீரே இல்லை என்று மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஃபேக்ட் பைன்டிங் கமிட்டி சொல்லும்போது, கர்நாடக அரசோடு பேசுவதற்கு எந்தவிதமான விவரங்களும் கிடையாது. உபரி நீர் இருந்தால் பேசலாம். உபரி நீர் இல்லாத நிலையில் பேச்சு வார்த்தையிலே பயனில்லை. அத்தோடு கர்நாடக முதல்வர், நெல் விளைகிற தஞ்சையில் நெல்லை விட்டு எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுங்கள் என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அதே மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு. சங்கரானந் அவர்கள் டிரிப்யூனலுக்கு விட்டால் 10 வருடங்களாகும். நர்மதா டிரிப்யூனலுக்கு ஆகவில்லையா, கோதாவரி டிரிப்யூனலுக்கு ஆகவில்லையா, சிந்துக்கு ஆகவில்லையா, கிருஷ்ணாவுக்கு ஆகவில்லையா என்று உதாரணம் காட்டி, டிரிப்யூனலுக்கு விடுவதைக் தடுக்கும் முயற்சி கர்நாடகத்திலே உள்ள மக்களுடைய உணர்வோடு ஒன்றி இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். டிரிப்யூனல் அமைந்தோமானால், 2 ஆண்டுகளில் அதை முடிக்கத் தேவையான விவரங்கள் எல்லாம் தயாராக இருக்கிற காரணத்தால் டிரிப்யூனல் அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு காலத்தில், 1924-க்கு முன்னால் கண்ணம்பாடி அணை கட்டுவதற்கு முன்னால் 100 டி.எம்.சி. தண்ணீரைத்தான் கர்நாடக அரசு பயன்படுத்தி வந்தது. 510 டி.எம்.சி. நமக்கு வந்து கொண்டிருந்தது. அணை கட்டிய பிறகு 380 டி.எம்.சி. அவர்கள் நமக்குக் கொடுத்தாக வேண்டும். ஆனால் கொடுக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. 3 அணைகளை ஒப்பந்தத்திற்கு விரோதமாகக் கட்டியதோடு, இப்போது 4 அணைகளைக் கட்டி வருகிறார்கள். 240 கிலோ மீட்டர் நீளத்திற்கு வாய்க்கால்கள் வெட்டி வருகிறார்கள். ஆக 100 டி.எம்.சி. தண்ணீர் உபயோகப்படுத்திய கர்நாடக அரசு 300 டி.எம்.சிக்கு மேற்பட்ட தண்ணீரை ஒப்பந்தத்திற்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக உபயோகப்படுத்துகிற நிலையை நாம் பார்க்க முடிகிறது. இதைத் தொடர்ந்து அனுமதித்தால் தஞ்சையிலே 13 இலட்சம் நஞ்சை நிலங்கள் நிச்சயம் பாலையாகும் வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தின் மூன்றில் ஒரு பகுதி நெல் தஞ்சையில் விளைகிறது. 25 விழுக்காடு உணவு உற்பத்தி



1987 ஏப்ரல் 29] [திரு. கே. குப்புசாமி]

தஞ்சையிலிருந்து கிடைக்கிறது. ஆகவே தஞ்சை மீண்டும் நெல் கொழிக்கும் நஞ்சையாக மாறி தமிழக மக்களுக்கு மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மக்களுக்கு உணவு கொடுக்கும் நிலை ஏற்பட வேண்டுமானால், நிச்சயமாக டிரிப்யூனல் அமைத்தாக வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை, நல்ல முயற்சிகளை சுறுசுறுப்புக்கு, நிதர்சனமாக உண்மை களுக்கு, நேர்மைக்கு பெயர்போன அமைச்சரவர்கள், புரட்சித் தலைவர் துணையோடு எடுத்து வருகிறார்கள். அவர்களுடைய முயற்சியை பாராட்டுகிறேன். தொடர்ந்து அவர்கள் வாதாட வேண்டும், இல்லாவிட்டால் போராட வேண்டும். எப்படியும் காவிரிப் பிரச்சினையை டிரிப்யூனலுக்கு விட்டு நமக்கு சாதகமான முடிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை வரவேற்று, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

(மாலை 4-50)

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ்க காந்தீயம், வளர்க சமதர்ம சமுதாயம். நீரில்லா உலகம் பாழ், திருநீரில்லா நெற்றிப் பாழ் என்ற பழமொழிக்கு இணங்க இன்றைக்கு நம்முடைய தமிழகம் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக, ரூ. 223 கோடி பாசனம், பொதுப்பணித் துறை, கட்டடங்கள் மானியம் மீது பேச வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி. 1967-க்குப் பின் திராவிட பாரம்பரியம் ஆட்சிக்கு வந்தபின் திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது குடகனாறு அணை கட்டினார். அதுவும் போன 2, 3 வருடங்களுக்கு முன்னால் உடைந்து பல ஊர்களையும் விவசாய நிலங்களையும் அடித்துக்கொண்டு போய் பல குடும்பங்கள் அவதிக்குள்ளாகி சிரமப்பட்டுக் கொண்டிருக் கின்றன என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பழனித் தொகுதியில் பாலாறு, பொருந்தலாறு அணைக் கட்டு கட்டி 10, 15 ஆண்டுகளாகியும் எந்த நோக்கத் துடன் வறட்சிப் பகுதிக்கு 10 ஆயிரம் ஏக்கர் பாசனம் பாயும்படி

திட்டம் தீட்டிக் கட்டினார்களோ அந்த அளவுக்கு அந்தப் பகுதிக்கு இனனும் தண்ணர் வந்து பாய்வதாகவே இல்லை. அந்த நிலங்கள எல்லாம் பாலைவனமாக காட்சி அளிக்கின்றன. அது மட்டுமல்லாமல், அங்குள்ள விவசாயிகள் எல்லாம் மாடு கன்று களை விற்றுவிட்டு வேறு ஊர்களுக்கும் நகரங்களுக்கும் பிழைப்பைத் தேடி போகவேண்டிய அவல நிலை உருவாகிவிட்டது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

நமது புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அங்குள்ள விவசாயிகளுக்கு ஒரு வருடம் கூட தண்ணீர் அங்கு கிடைக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டிலாவது என்ஜினியர் களை அனுப்பி வைத்து பரிசீலனை செய்து அங்குள்ள விவசாய குடும்பங்களையும் ஏழை மக்களையும் வாழ வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1966 ஆம் ஆண்டு காங்கிரஸ் இந்த தமிழகத்தை ஆண்டபோது பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருந்தவர் திரு. இராமய்யா அவர்கள். அவர் இருந்தபோது, அமராவதி புது வாய்க்காலுக்கு கான்கிரீட் போட்டு உடுமலை தாராபுரத்தில் விட்டுப் போன நிலங்களை ஆயக்கட்டில் சேர்த்தும் இன்னும் 3 ஆயிரம் ஏக்கருக் குத் தண்ணீர் கொடுப்பதாக முடிவு செய்து வேலையை ஆரம்பித் தார்கள். அதனுடைய நீளம் 30 மைல். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபொழுது 5 மைல் கான்கிரீட் போட் டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் 20 மைல் கான்கிரீட் போட்டார்கள். இன்னும் 5 மைல் கான்கிரீட் வேலை நின்றுவிட்டது. இந்த வருடமாவது அந்த வேலைக்கு உண்டான தொகையை ஒதுக்கி 5 மைலுக்கு கிளை வாய்க்காலுக்கு கான்கிரீட் போட்டு விட்டுப்போன நிலங்களுக்குப் பாசன வசதி செய்து தரும்படி இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று வருடங்களுக்கு முன்னால் குதிரை ஆறுத் திட்டத் திற்கு நமது ராஜா முகமது அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்த வேலை ஆமை வேகத்தில் நடந்து கொண்டு வருகிறது. அதை கிழக்குப் பகுதி பாப்பம்பட்டிக்கும் பழனித் தொகுதிக்கும் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு முன் எனது





உடுமலைத் தொகுதியிலுள்ள குழந்துப்புதூர் குளத்திற்கு விட்டு குழந்துப்பாளையம் நல்லண்ண கவுண்டன்புதூர் மயிலாபுரம் வரை வந்து பாய்ந்து அமராவதி ஆற்றிற்குப் போய்க்கொண்டி ருந்தது. அதில் 5 ஆயிரம் ஏக்கர் வரை பலனடைந்து வந்தது. அதிக மழை பெய்த காலத்தில் அமராவதிக்கு வந்து ஆற்றில் கலந்து போயிற்று. குதிரை ஆறு டேம் கட்டி வடக்கே வாய்க் கால் வெட்டி குழந்துப்பாளையம் நல்லண்ணக் கவுண்டன் புதூர் மயிலாபுரம் மடத்தூர் கண்டிய கவுண்டன் புதூர், பசுவதிபுத்தூர் வரை தண்ணீர் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். கிழக்கும் வடக்குமாக தண்ணீர் கொடுத்தால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் வடக்கு ஒரு வருடம் 5 ஆயிரம் ஏக்கர் பயனடையும். கிழக்கே ஒரு வருடமாவது கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படி வடக்கே கொடுக்கும்பொழுது கழிவு நீர் அமராவதி ஆற்றுக்குப் போய்விடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் காங்கிரஸ் ஆண்டபோது ராஜாஜி முதலமைச்ச ராக இருந்தபோது அமராவதி அணைக் கட்டவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 20 வருடத் தவணையில் ஏக்கருக்கு ரூ. 200 பெட்டர்மெண்ட் பீஸ் கட்டும்படி கூறினார்கள். அதற்கும் நாங்களும் கட்டுப்பட்டோம் முதலில் நூறு ரூபாய் கட்டவேண்டுமென்று எங்களுக்கு கூறினார்கள். அதன்படி 6½ லட்சம் வசூல் செய்து கட்டியபிறகு அடிக்கல் நாட்டினார்கள். வேலை 3 கோடி ரூ. செலவில் 3 வருடத்திற்குள் கட்டி முடித்து வாய்க்காலும் வெட்டித் தண்ணீர் கொடுத்தார்கள். அதன் கன்டிஷன் ஆகஸ்ட்டு 1 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட்டு ஜனவரி 31 ஆம் தேதி வரை தொடர்ந்து தண்ணீர் விடுவதாகச் சொல்லி விட்டு வந்தார்கள். தற்போது ஏழு நாட்கள் விட்டு தண்ணீர் நிறுத்தி விடுகின்றார்கள். அதுபோல பெட்டர்மென்ட் பீஸ் 25 வருடங்களாகக் கட்டி வருகிறோம். ஆகவே அதையும் இந்த வருடம் வசூல் செய்யாமல் இருக்கும்படி உத்தரவிடுமாறு விவசாயி களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமராவதி பழைய ஆயக்கட்டில் இந்த வருடம் 2 போகத்திற்கு கொடுத்த தண்ணீரில் ஒரு போகம் நல்லமுறையில் விளைந்தது. இரண்டாம் போகம் நடவு செய்து ஏக்கருக்கு ரூபாய் 1,500 செலவு செய்தும் எல்லாம் காய்ந்து விவசாயிகளுக்கு

பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதிலும் பாதித் தீர்வை வசூல் செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பரம் [illegible] குளம்-ஆழியாறுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் முதலில் இத்திட்டத்திற்கான வாய்க்காலை வெட்டினார்கள். இதனால் 2 லட்சம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெற்றன. ஆனால் திருமூர்த்தி அணையில் போன வருடம் தண்ணீர் விட்டு கடைசியில் தண்ணீர் இல்லாமல் வைத்த வெள்ளாமைகள் எல்லாம் காய்ந்து விட்டன. விவசாயிகள் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்ததையே எடுக்க முடியாமல் நஷ்டம் அடைந்துள்ளார்கள். அவர்களைப் பொறுத்தவரை யிலும் தண்ணீர் தீர்வை, நிலவரி, தண்டத் தீர்வை போன்றவை களை வசூல் செய்யாமல் இருக்கும்படி கலெக்டருக்கு உத்திரவிட்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளைக் காப்பாற்றும்படி இந்த மாமன்றத்தின் சார்பாக ரெவின்யூ மினிஸ்டர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய உடுமலைத் தொகுதியில் மாறுப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் உடுமலை நகருக்கு அடிஷனல் பைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட 5 வருடங்களாக. பைப்பு வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன. 56 ஊர்களில் தொட்டி கட்டி விட்டதுடன் பைப்புகளும் போட்டு விட்டார்கள். ஆனால் தண்ணீர் எந்த இடத்திலே எடுப்பது என்பதே தெரியவில்லை. ஆகவே இந்த வேலையைச் சீக்கிரம் முடித்து மக்களுக்கு குடிநீர் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். போன வருடம் திரு. காளிமுத்து அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் உடுமலைத் தொகுதிக்கு அடிஷனல் பைப் போடுகின்ற திட்டத்தைப் பற்றி கேட்டபோது அவர்கள் 4 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி குடிநீர் வடிகால் வாரியத்திடம் கொடுத் திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த வேலையை உடன டியாக துவங்குவதாகவும் சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்த வேலை துவங்கப்படவில்லை. அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1985 ஆம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு சட்டசபைக்கு வந்ததுமே கேரளாவில் மேற்கு நோக்கி வீணாக கடலில் கலக்கின்ற மூணாறுத் திட்டம், சிராறுத் திட்டம்,



ஆனைமலை ஆறு திட்டம், நல்லாறுத் திட்டம், பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் போன்ற நதிநீர் திட்டங்களை எல்லாம் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழகத்திற்கு திருப்பி விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற கோரிக் கையை நான் விடுத்தேன். (மணி அடிக்கப்பெற்றது) அது குறித்து முதலமைச்சரிடமும் நீர்ப்பாசன அமைச்சரிடமும் ஒரு மெமோ ரண்டமும் கொடுத்துள்ளேன். அதற்கு, நீர்ப்பாசன அமைச்சர் தேதி கேட்டுள்ளோம்; தேதி கிடைத்தால் பேச்சு வார்த்தை நடத்துவதாக அன்றைக்குக் கூறினார். இப்போதுள்ள நீர்ப்பாசன அமைச்சர், நமது முதலமைச்சர் தீவிரமாக முயற்சி செய்து வருவதாக கூறினார். ஆகவே, மேற்படி திட்டங்களை மத்திய அரசோடும் கேரள அரசோடும் பேசி முடிவெடுக்க வேண்டும். இத்திட்டங்களை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கும்படி செய்ய ஆவன செய்ய வேண்டுமென மிகவும் பணி வுடன் நமது முதலமைச்சரையும், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களையும் தமிழக மக்களின் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புது அமராவதி வாய்க்காலை வைத்துத்தான் நாங்கள் கட்டிய 6½ லட்சம் ரூபாயை திருப்பிக் கொடுத்து கூட்டுறவு முறையில் சர்க்கரை மில் கட்டினார்கள். அதிலிருந்து சர்க்கரை மில்லுக்கு நாங்கள் கரும்பு கொடுத்து வருகிறோம். ஆனால் இப்போது இடுபொருள் விலை, கூலி, வண்டி வாடகை, வெட்டுக் கூலி, எல்லாம் கொடுத்துவிட்டு கணக்குப் பார்த்தால் உழுபவன் கணக்குப் பார்த்தால் உழவு கோல்தான் மிஞ்சும் என்று சொல்லுவார்களே அந்த பழமொழிக் கிணங்க இன்றைக்கு அந்த விவசாயிகளின் நிலைமை உள்ளது. ஆகவே நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் ராஜாராம் அவர்களிடமும் பல முறை இதுசம்பந்தமாக கெஞ்சிக் கேட்டோம். ஆனால் அவர்கள் இதற்குமேல் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். ஆனால் இன்றையதினம் உள்ள நிலையிலே அதனுடைய கணக்கைப் பார்த்தால் பெரும் பெரும் மில் முதலாளிகள் கோடிக் கணக்கில் இலாபம் அடைகிறார்கள். ஆனால் கோடிக்கணக் கான கரும்பு விவசாயிகள் இன்றைக்கு நஷ்டம் அடைந்து

கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் மத்தியிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதையும் இந்த ஆண்டிலேயாவது டன்னுக்கு 250 ரூபாய் கொடுக்கும்படியாகத் தமிழக முதல்வர் அவர்களையும், தொழில் துறை அமைச்சர் திரு. இராசாராம் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்த நமது துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

(மாலை 5-00)

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இன்றைக்குத் தமிழகத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் 36, 37, 38, 52 மற்றும் 53 ஆகிய மானியக்கோரிக்கை எண்களின்கீழ் ஏறக்குறைய 195 கோடி ரூபாய்க்குண்டான மானியத்தை தமிழக அரசினுடைய சார்பாக அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் தமிழகத்திலே பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களைக் கடந்த ஒன்பதாண்டுகளாக நிறைவேற்றி இன்றைக்குத் தமிழகத்திலே தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு, உணவுப்பிரச்சினையிலே தன்னிகரற்ற ஒரு நாடாகத் தமிழகத்தை உருவாக்கி நடைமுறைப் படுத்துவதற்கு இந்தத் துறை மிகச் சிறப்பான துறையாக இன்றைக்குச் செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் எடுத்துச்சொல்லியாக வேண்டும். இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அருமை அண்ணன் கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் பல்வேறு துறைகளின்கீழ் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிய பெருமையைப் பெற்றவர்கள். அவர்களாலே இந்தத் துறை பெருமைபெற்றிருக்கிறது; இந்தத் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதைத்தான் நாங்கள் இங்கே சொல்லியாக வேண்டும். அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் இந்தத் துறை மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுவதை இந்த நாடு அறிய வேண்டுமென்பதற்காக இந்தத் துறையிலே பல்வேறு பணிகள் ஆங்காங்கே விடுபட்டுப் போயிருக்கக்கூடிய பணிகள், தொடங்கப்பட வேண்டிய பணிகள், தொடங்கி நடந்து கொண்டிருக்கின்ற பணிகள், இடைப்பட்டிருக்கின்ற பல்வேறு பணிகளை





அவர்கள் வேகமாக முடுக்கிவிட்டு விவசாயிகளினுடைய வாழ்விலே ஒளி விளக்கை ஏற்றிவைக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் இந்தத் துறையை அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏறக்குறைய 505 கோடி ரூபாய்க்கு உண்டான திட்டத்தை இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறக்குறைய 42,000 ஹெக்டேர்களுக்கு உண்டான நிலப் பரப்பில் புதிய சாகுபடித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக திட்டங்கள் இலக்கீட்டை நிர்ணயம் செய்து அறிவித்திருக்கிறார்கள். அதற்காகத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையும், பொதுப்பணித்துறை அமைச்சரவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி இலக்குகளை நிர்ணயித்திருக்கின்ற அந்தத் துறையை மேலும் வலுவுள்ளதாக, பொலிவுள்ளதாக ஆக்குவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் படிப்படியாக எடுப்பதற்குண்டான வாய்ப்பினை அந்தத் துறை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, தேசீய வேளாண்மைத் திட்டத்தின் கீழ் அங்கே இருக்கிற தண்ணீரை மேலும் பல ஆயிரக்கணக்கான எக்கர்களுக்கு விஸ்தரிக்க முடியும் என்கின்ற முறையிலே அந்த ஆய்வின் கீழ் இந்த மாவட்டத்தின் சார்பாக—எங்கள் மாவட்டத்தின் சார்பாக சாத்தனூர் அணையினுடைய விரிவாக்கத் திட்டம் இந்த ஆண்டு உலக வங்கியினுடைய ஆய்வுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உலக வங்கியினுடைய ஒப்புதல் பெறப் பட்டிருக்கிறது என்கிற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவைக்குக் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்தின் வாயிலாக அறிய முடிகிறது. இந்தப் பணியை மிக வேகமாக முடித்துத் தந்தால் மேலும் பல்லாயிரக்கணக்கான எக்கர்கள் பாசன வசதி பெறக்கூடிய வாய்ப்பு எங்கள் மாவட்டத்திலிருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு ஏரிகளை ஐரோப்பிய நவீனப்படுத்துகின்ற திட்டத்தின்கீழ் புனரமைக்கின்ற திட்டத்தின்கீழ் பல ஏரிகளை

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 29

இன்றைக்குத் தமிழக அரசு—44 ஏரிகளை கடந்த ஆண்டு 1986-87
ஆம் ஆண்டு ஏறக்குறைய 931 இலட்சங்களை செலவு செய்து
நவீனப்படுத்துவதற்கு உண்டான திட்டத்தை நடைமுறைப்படுத்
தியிருக்கிறது. அதேபோன்று 1987-88-வது ஆண்டுக்கு ஏறக்
குறைய 800 இலட்சம் ரூபாய்க்கு உண்டான திட்டத்திற்கு இங்கே
அனுமதி அளித்திருக்கிறார்கள். அப்படி அளிக்கின்றபொழுது
ஏறக்குறைய 300 ஏக்கர்களுக்குக் குறைவில்லாத ஆயக்கட்டு
களைப் பெற்றிருக்கின்ற ஏரிகளை மட்டும்தான் அங்கே ஐரோப்
பிய நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள முடியும்
என்கிற சூழ்நிலைகளை மாற்றி 200 ஏக்கர்களுக்கு மேலாக இருந்
தாலே அதை நவீனப்படுத்திடவேண்டும், புனர் அமைத்திட
வேண்டும். அதை புனரமைக்க வேண்டும்; கால்வாய்களை
சீரமைக்க வேண்டும்; லைனிங் செய்ய வேண்டும். அப்படிச்
செய்தால் இந்தத் துறையில் இந்த நாட்டு ஏழை எளிய மக்கள்
வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றி வைத்தவர்களாவோம். அது
மட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் இருக்கிற ஏரி, குளங்களை
எல்லாம் புனரமைப்பு செய்து, தண்ணீர் தேங்கி நிற்க ஏற்பாடு
செய்தால் 'கிரவுண்ட் வாட்டர்' கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்
கிறது. தேசிய நதிகள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ்
நாட்டில் நதிகள் ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு
இல்லாமல் இருக்கிற சூழ்நிலையிலும் இந்திய பெருநாட்டில்
இருக்கிற அனைத்து மாநிலங்களுக்கும் சவால் விடுகிற அளவுக்கு
பஞ்சம் இல்லாமல், பஞ்சத்தை வெற்றி காணும் அளவுக்கு உணவு
உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிற மாநிலமாக தமிழ்நாடு
இருக்கிறது என்பதை உணர்ந்தாக வேண்டும். அந்த அளவுக்கு
ஓய்வு ஒளிவு இல்லாமல் உழைத்த விவசாயப் பெருங்குடி மக்க
ளுக்கு நல்ல பல வசதிகளை எல்லாம் உருவாக்கித்தந்திருக்
கிறார்கள், நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை
அமைச்சர் அவர்கள். பஞ்சமும் பசியுமாக இருக்கிற இராமநாத
புரம் மாவட்டத்திலிருந்து பிரிந்துள்ள காமராஜர் மாவட்டத்தைச்
சேர்ந்த அமைச்சர் என்பதால் ஏழை எளிய மக்களின் உணர்வு
களைத் தெரிவித்து. அவர்களுக்கு என்னென்ன முறையில் உதவி
களை, வசதிகளைச் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச்
செய்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்
களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. த. பழனி]

பக்கத்திலே இருக்கிற வடாற்காடு மாவட்டத்திலும் இன்றைக்கு
தண்ணீர் இல்லை. பாலாறு ஓடுகிறது என்று சொல்வார்கள்.
பாலாறு ஓடுகிறது; ஆனால் அதிலே தண்ணீர் ஓடவில்லை.
அதிலிருந்து ஓரளவுக்குக் கிடைக்கிற தண்ணீரை வைத்துத்தான்
வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற நகரங்களுக்கும் கிராமங்
களுக்கும் குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். பாலாற்றை
நம்பியிருக்கிற நாங்கள் நிலத்தடி நீரை நம்பித்தான் இன்றைக்கு
விவசாயம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அங்கே
நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும் அல்லது
வேறு பயிராக இருந்தாலும் பாசன வசதி இல்லாத நிலையில்
இருக்கிற எங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் நல்ல
பாதுகாப்பை உருவாக்கித் தந்திட வேண்டும்.

அதற்காக பாலாற்றின் குறுக்கே அணை கட்டுங்கள் என்று
நான் சொல்ல மாட்டேன். ஆற்றிலே தண்ணீர் வராவிட்டாலும்
அணை கட்டுங்கள் என்று மற்றவர்கள் கோரிக்கை வைப்பதைப்
போல நான் கோரிக்கை வைக்கமாட்டேன். ஆனால் ஆங்காங்கே
'செக் டாம்' கட்டினால் வழியிலே இருக்கிற பல்வேறு கிராமங்
களுக்கு நிலத்தடி நீர் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். மக்களுக்கு
கிணற்று நீர் தாராளமாகக் கிடைக்கும், என்ற செய்தியை இங்கே
சொல்லியாக வேண்டும். 'செக் டாம்' கட்டுவதன் மூலம் ஏழை
எளிய மக்களின், விவசாயப் பெருங்குடி மக்களின் கிணறுகளில்
நீர் ஊறும். அதனால் அவர்கள் வாழ்க்கையில் வளம் பெருகும்
என்பதைச் சொல்லியாக வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு எங்கள் பகுதியில் இருக்கிற
மக்கள் ஒரு குறையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
பாலாறு பேசின் ரூல் என்று ஒரு விதியை வைத்திருக்கிறார்கள்.
இந்த பாலாறு பேசின் விதியை எதற்காக வைத்திருக்கிறார்கள்;
தண்ணீர் இல்லாத ஆற்றுக்கு விதி வேறு தேவையா; தண்ணீர்
வராத பாலாற்றுக்கு பாலாறு பேசின் திட்டம் ஏன் என்று குறை
சொல்கிறார்கள். பொதுமக்கள் இப்படி எல்லாம் கேட்கிறார்கள்.
அதையே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க
ஆசைப்படுகிறேன். ஆகவே இதற்கு ஒரு மாற்றுவழி
உருவாக்கியாக வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 29

அதைப்போன்று ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு சிறப்பான பணிகளை இந்தத் துறை ஆற்றிக்கொண்டிருக்கிறது. அதற்காக நான் மத்திய, மாநில அரசுகளைப் பாராட்டுகிறேன்; மாண்புமிகு அமைச்சர் அவர் களையும் பாராட்டுகிறேன். அதைப்போன்று எஸ்.ஐ.சி.எஸ். திட்டங்களாக கடந்த பத்தாண்டுக்காக அல்ல; சுதந்திரத்திற்கு முன்னாலும், சுதந்திரத்திற்குப் பின்னாலும் பல்வேறு கிராமங் களில் இருக்கிற ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்க்கை முன்னேற்றமடைய நிறைவேற்ற முடியாத பல்வேறு திட்டங்களை இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் மிகச் சிறப்பாக, சமுதாய நலத் திட்டங்களாக, இந்த நாட்டிற்கு முதுகெலும்பாக இருக்கிற விவசாயிகளுக்குத் தேவையான திட்டங்களாக இருக்கின்றன என்பதால் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதற்காக இந்த அரசையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதைப்போன்று மத்திய அரசினுடைய நிதி ஆதாரங்களோடு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை நல்ல முறையில் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நிலத்தடி நீரை நம்பி ஏறக்குறைய 10,88,000 மின்சார பம்பு செட்டுகளை வைத்து நீரை இறைத்து விவசாயம் செய்து ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்ந்துகொண்டி ருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்ற வேண்டும். அதற்கு தேசிய நீரோட்டம் என்று சொல்லக் கூடிய வகையில் இருக்கிற கங்கையையும் காவேரியையும் ஒன்றாக இணைக்க வேண்டும். கங்கையிலிருந்து வரக்கூடிய தண்ணீர் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா நதி போன்ற நதிகளைக் கடந்து தமிழ்நாட்டிலே இருக்கிற காவேரிக்கு கிடைக்கின்ற வாய்ப்பு இல்லை என்றாலும், தமிழ்நாட்டிலே கங்கைநீர் பாயாவிட்டாலும் கிராமங்களில் 'கிரவுண்ட் வாட்டர்' கிடைக்கின்ற வாய்ப்பு தமிழ் நாட்டு மக்களுக்கு இருக்கிறது என்று சொல்லி, அதனால் கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. த. பழனி]

(மாலை 5-10)

கடைசியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். ராஜா தோப்புத் திட்டத்தை விரிவு படுத்த வேண்டும். அதிலே காலம் கடத்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. யு. பி. மாதையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டுக் கான பொதுப்பணி மற்றும், நீர்ப்பாசனத் துறையில் நிதிநிலை மானியக் கோரிக்கையின் மீது என் கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் பொதுப்பணித்துறை மிகவும் முக்கியமான துறையாகும். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. கட்டிடங்கள் கட்டுவதிலும் நீர்ப்பாசனத் துறையிலும் பல்வேறு சாதனங்கள் செய்யப்பட்டுள்ளன. நீர்ப் பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நடுத்தர பாசனத்திற் காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. 20,000 ஹெக் டேர் நிலம் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. சிறு பாசனத்திற் காக 32 கோடி ரூபாய் செலவிட திட்டம் வகுத்திருந்தும்—மேற் கண்ட திட்டங்களுக்கு அதாவது பெரிய பாசனத்திற்காக 232 கோடியும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 61 கோடி ரூபாயும் ஒதுக்கி மொத்தம் 40,000 ஹெக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்ற 10 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றபின், அண்டை மாநிலங்களுடன் தண்ணீர் பற்றிய பல பிரச்சினைகள் தோன்றி யும் கூட கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்தும் கூட சுமார் 48,000 ஹெக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்

டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 18.63 கோடி ரூபாய் செலவில் 56.60 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் அளவில் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய நீர்வள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சாத்தனூர் திட்டம், கோதையார் திட்டம், தாமிரபரணித் திட்டம், கம்பன் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி பழைய கால்வாய்களை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட உள்ளன. இதில் சாத்தனூர் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

சென்னை பெருநகருக்கு கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆந்திரத்திடமிருந்து. 15 டி.எம்.சி. தண்ணீரை பெற முயற்சித்திருப்பதை இங்கே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் பெறுவது என்பது சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் மிக முக்கியமானதாகும்.

காவிரி நீர்ப்பிரச்சினை பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்தது. நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் பெரும் முயற்சியினால் அதாவது நடுவர் மன்றம் அமைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும். 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்து உரையாடியுள்ளார்கள் என்று கூறிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

தேசிய நெடு நோக்குத் திட்டத்தின்கீழ் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கூடிய தேசிய நீர் வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரைக் கிழக்கு நோக்கித் திருப்புவது பற்றிய ஆய்வுப் பணிகளை 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் இதற்குத் தேவையான நிதிவசதி அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பொதுப்பணித்துறை புதிய குளங்கள் அமைத்தல், குட்டைகள் அமைத்தல், நீர்த்தேக்கங்கள் கட்டுதல், வாய்க்கால்களைத்



திருத்தியமைத்தல் போன்ற வேலைகளை எடுத்துச் செயல்படுத்தி வருவது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ரூ. 27.60 கோடி ரூபாய் உதவியாகக் கிடைக்கப் பெற்று அதன்மூலம் வடார்க்காடு, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராசர் மாவட்டங்கள் பயன்பெற்று வருகின்றன. 40 ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய நீர் நிலையங்களைப் பராமரிக்கும் பொறுப்பை பொதுப்பணித்துறை மேற்கொண்டுள்ளதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

நிலநீர் ஆய்வுத்திட்டத்தின் கீழ் இந்தியாவில் மின்விசை அளிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கையில் தமிழகம்தான் முதலிடம் வகிக்கின்றது என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். கிராமங்களுக்கு சிறு பாசனத் திட்டங்களுக்காகப் பங்கிட்டு ஒதுக்கீடு செய்வதில் பொதுப்பணித்துறை சிறப்பாகச் செய்து வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

தமிழகத்தில் உள்ள 378 ஒன்றியங்களில் 80 ஒன்றியங்கள் கருமைநிற ஒன்றியங்களாகவும், 113 ஒன்றியங்கள் சாம்பல் நிற ஒன்றியங்களாகவும், மீதம் உள்ளவை வெள்ளை நிற ஒன்றியங்களாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து தற்போது 18 ஒன்றியங்களே கருமை நிறப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றை தவிர இத்துறை தூய்மைக்கேடு ஆய்வுசெய்து நீரின் தூய்மைக் கேடு, அதற்கே உரிய காரணம் ஆகியவற்றை அறிந்து அதைப்போக்கி மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களைச் செயல்படுத்துவது யாராலும் மறுக்க முடியாது.

பொதுப்பணித்துறையின் நில நீர்ப் பிரிவின் நில நீர் ஆலோசனைப் பணியின்கீழ், கிணறுகள் வெட்டவும், துளைக் கிணறுகள் மற்றும் கிணறுகளை ஆழப்படுத்தவும், நில பௌதிக ஆய்வின் மூலம் சாதகமான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த நில நீர் ஆலோசனைப் பணி குறைந்த செலவில் நடத்தப்பட்டு விவசாயிகளுக்கு உதவுவது பாராட்டத் தக்கதாகும்.

[திரு. யு. பி. மாதையன்] [1987 ஏப்ரல் 29

பொதுபணித் துறையில் பாசனத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளை கவனிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தலைமைப் பொறியாளரின் கீழ் பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் சிறப்பு நீர்பாசனத் திட்டங்களை ஆய்வு செய்வதுடன் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு நீர்ப் படுகைகளில் உபரியாக உள்ள நீரின் அளவைக் கணக்கிட ஓடைகள் மற்றும் ஆறுகளில் நீரா அளவைகள் எடுக்கும் பணிகளை செய்வதில் ஈடுபட்டுள்ளதை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

என் தொகுதியான அந்தியூர் தொகுதி, பெரியார் மாவட்டத் திலேயே அதிகமாக மலைகளும் காடுகளும் நிறைந்த மேட்டு நிலங்களைக் கொண்ட பகுதியாகும். அதேபோல் மலை வாழ் மக்களும் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களும் விவசாய கூலி வேலை செய்து வாழ்கின்ற மக்களும் அதிகமாக வாழ்கின்ற தொகுதி தான் அந்தியூர் தொகுதி. என் தொகுதியில் பல ஏரிகள் உள்ளன. ஆனால் தண்ணீர் இல்லை. ஒரு சில ஏரிகளில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின் கீழ் தான் தற்போது சிரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சிரமைப்பு நடைபெறாமல் விட்டுப்போன ஏரிகளையும் தயவுசெய்து இந்த நிதி ஆண்டிலேயே சீரமைத்துத் தர வேண்டு மாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டம் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தாள வாடி பர்கூர் மலைத் தொடர்கள் சுமார் 2000 ச.கி.மீ. (2 லட்சம் ஹெக்டேர்) பரப்பளவைக் கொண்டுள்ளது. வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ காலங்களில் ஆண்டுக்கு சராசரி 65 செ.மீ. மழை பெய்கிறது. இவற்றில் வடக்குச் சரிவுப் பகுதியான சுமார் 100 ச.கி.மீ. (1 லட்சம் ஹெக்டேர்) பரப்பில் பெய்யும் சுமார் 20,000 மில்லியன் கன அடி மழை நீரை தமிழகம் இன்னும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மேலே சொன்ன மழை நீரை பயன்படுத்திக் கொள்ள வேண்டு மானால் என் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வழக்குப்பாறை மணியார் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டத்தை அரசு கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்றி னால் சுமார் 2,000 மில்லியன் கன அடி தண்ணீரை தேக்கி சுமார் 15,000 ஏக்கர் பரப்பை பாசனத்தின்கீழ் கொண்டு வர முடியும்.



1987 ஏப்ரல் 29] [திரு. யு. பி. மாதையன்]

மணியார் பள்ளம் நீர்த்தேக்கத்தை வரட்டுப் பள்ளம் நீர் தேக்கத்தோடு இணைக்கப்படும் பொழுது தண்ணீர் சுமார் 500 அடி உயரத்திலிருந்து கீழே கொண்டு வரப்படும். அப்பொழுது மின் உற்பத்தியையும் மேற்கொள்ள முடியும்.

15,000 சிறிய விவசாய குடும்பங்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்புக் கிட்டும். அத்தோடு இத்திட்டம் நிறைவேற்றப்பெற்றால் இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதன் மூலம் மேலும் 20,000 ஏக்கர் நிலபரப்பு நிலையான கூடுதல் பாசன வசதி பெறும்.

வறுமை கோட்டின் கீழ் வாழும் சுமார் 75,000 மலை வாழ் மக்களும் ஆதிதிராவிட மக்களும் விவசாயம் கால்நடை பராமரித் தல், பட்டு பூச்சி வளர்த்தல், சமூக நல காடுகள் வளர்த்தல் போன்ற உபதொழில் மூலம் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு பெறுவார்கள். தமிழகத்தின் விளைபொருள் மதிப்பு உயரும்.

மழை காலத்தில் ஏற்படும் வெள்ள சேதங்கள் தவிர்க்கப்படும். பருவ மழை தவறும்பொழுது ஏற்படும் குடிதண்ணீர் தட்டுப் பாடும் நீங்கும். மக்களும் கால்நடைகளும் தண்ணீர் இல்லாமல் குடி பெயரும் இக்கட்டான சூழ்நிலை தவிர்க்கப்படும். எனவே இத்திட்டத்தை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலாவது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இரும்பாறை நீர்த் தேக்க திட்டமும் பலமலை அடி வாரத்தில் உள்ள தண்ணி குதிச்சான் பள்ளம் நீர்த்தேக்க திட்டமும், ஆய்வு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதையும் 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலையோடு சேர்த்து நிறை வேற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் அணையிலிருந்து செல்லும் வலது கரை இடது கரை வாய்க்கால் தண்ணீர் பாசனத்திற்கு குறிப்பிட்ட தேதியில் திறந்து விடப்படுவதில்லை. காவேரியில் தஞ்சைக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் போது இந்த இரண்டு வாய்க்கால்களிலும் திறந்து விட வேண்டும் என்ற நிலைமையை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர

வேண்டுமாய் கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை
வரவேற்று பாராட்டி முடித்துக் கொள்கிறேன். நன்றி,
வணக்கம்.

(மாலை 5-20)

திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கிய இதய தெய்வம் தமிழக
முதல்வர் அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, மாண்புமிகு
பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்
டிருக்கும் பாசனம் மற்றும் கட்டடங்கள் மீதான மானியக்
கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச்
சொல்ல விழைகிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் பொதுப்பணித் துறை மூலமாக பல நல்ல திட்டங்களை
இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க தமிழக முதல்வர் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை
அமைச்சர் அவர்களை நியமித்து அவர் மூலமாக நல்ல பல
திட்டங்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டி
ருக்கிறேன்.

பெரிய பாசனத் திட்டங்கள், தேசிய நீர்வள மேலாண்மைத்
திட்டம், நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள், வெள்ளக்
கட்டுப்பாட்டுத் திட்டங்கள், சென்னைப் பெருநகருக்கு கிருஷ்ணா
நதி குடிநீர் வழங்கும் திட்டம், கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்
துதல், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசைத் திருப்பும்
திட்டம், தேசிய நெடு நோக்குத் திட்டம், சிறு பாசனம்,
ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ஏரிப்பாசன
புத்தாக்கத் திட்டம், தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம்,
ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தமிழகத்தில்
நிலநீர் ஆய்வுத் திட்டம், தூய்மைக்கேடு ஆய்வுத் திட்டம், நிலநீர்



மற்றும் மேற்பரப்பு நீர் இணைந்து செயல்படும் திட்டம், ஆலோ
சனைப் பணித் திட்டம், கடல்நீர் உட்புகுதல் கண்காணிப்புத்
திட்டம், நீர் ஆய்வு நிறுவனம், கட்டடப்பணிகள் திட்டம் போன்ற
இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை தமிழகத்தின் மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக்
குறிப்பிலே சீரோடும் சிறப்போடும், தெளிவாகச் சொல்லியிருக்
கிறார்கள்.

எங்கள் பகுதியில் பல்லாண்டு காலமாக மராமத்து செய்யப்
படாமல் உள்ள ஜமீன் கண்மாய்களை மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை
அமைச்சர் அவர்களும் பொதுப் பணித் துறை மூலமாக எடுத்து
வேலை செய்து சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கண்மாய்களுக்கு தண்ணீர் வருகிற வரத்து
வாய்க்கால்களை குடிமராமத்து செய்ய வேண்டுமென்று அதிகாரி
கள் சொல்கிறார்கள். வறட்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிற
மக்கள் குடிமராமத்து செய்ய வழியில்லாமல் தவித்துக் கொண்டி
ருக்கிறார்கள். அங்கேயிருக்கிற கால்வாய்கள் அத்தனையையும்
பொதுப்பணித் துறை மூலமாக குடிமராமத்து செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேற்கு நோக்கி பாய்ந்து வீணாக கடலில் கலக்கும்
ஆறுகளில் முக்கியமான ஆறு அச்சன்கோவில் ஆறு ஒன்றாகும்.
அந்த ஆற்றில் கிட்டத்தட்ட 24 டி.எம்.சி. தண்ணீர் வீணாக
கடலில் கலப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த அச்சன்
கோவில் ஆற்றை கிழக்கே திருப்பி அதிலிருந்து 10 டி.எம்.சி.
தண்ணீரை எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் காலத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்
எங்கள் பகுதிக்குக் கொடுத்தால் வறட்சியைச் சந்தித்துக் கொண்டி
ருக்கிற காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம். பசும்
பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற
மாவட்டங்கள் பயன்பெறும். அந்த மாவட்டங்களின் விவசாயப்
பொன்னங்கடி மக்களை வாழவைக்கிற அளவிற்கு இந்த நல்ல
கோரிக்கை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக் கொள்கிறேன்.

பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்ட மக்கள் வடகிழக்கு பருவ மழையை நம்பி, அதில் கிடைக்கிற சிறிது தண்ணீரை வைத்து விவசாயம் செய்கிறார்கள். நட்டு, களையெடுத்து கையில் மடியில் இருந்த காசுகளையெல்லாம் அதில் செலவழித்து வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கஷ்டப்படு கிற நிலைமையை நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக் கிறோம். அப்படிப்பட்ட மக்களை வாழ வைப்பதற்காக, அங்கே பொதுப்பணித்துறை கண்மாயாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியத்தினுடைய கண்மாயாக இருந்தாலும் சரி, அந்தக் கண்மாய்களுக்கு ஒரு ஆழ் குழாய்க் கிணறையும், மற்றும் சமுதாயக் கிணற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர் களுடைய ஆட்சிக் காலத்திலே செய்து கொடுக்கவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

நீண்ட நாட்களாக நாங்கள் விரும்பியிருக்கிற திட்டம், 40 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிற திட்டம், சென்னம்பட்டி கால்வாய்த் திட்டம், 31—11—1984 ஆம் தேதியன்று காமராஜ் மாவட்டத்திற்கு வருகை தந்த எங்களுடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் காமராஜ் மாவட்டத்தை தத்து எடுப்பதாக அறிவித்து இருந் தார்கள். எங்கள் மாவட்டத்து மக்களின் சார்பில், அந்த மாவட்டத்தை அவர்கள் சொந்த மாவட்டமாக அறிவித்தார்கள். ஆகவே அந்த மாவட்டத்து மக்களின் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இலட்சோபலட்சம் மக்கள் கூட்டத்தில் சென்னம்பட்டிக் கால்வாய்ப் பணியை அறிவிப்பதாக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை, இந்த நேரத்திலே அறிவிக்கவேண்டுமென மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிலையூர் தம்பிக்குடி கால்வாய்த் திட்டம். இந்தத் திட்டம் காமராஜ் மாவட்டத்திலே வறட்சியைச் சந்திக்கின்ற மக்களை வாழவைக்கின்ற திட்டம். ஏழை எளிய மக்களை





வாழவைக்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தால் 36 கண்மாய்கள் பாசனம் பெறும் என்று நம்முடைய ஆய்விலே சொல்லப்பட்டிருக் கிறது. இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டு மென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிருதமால் நதித் திட்டம். வைகை ஆற்றில் வெள்ளக் காலங்களில் செல்லுகின்ற தண்ணீரை கிருதாமல் நதியிலிருந்து திருப்பி விடுவதற்காக, வேம்பனூர் அணையிலிருந்து ஒரு கால்வாய் வெட்டும் திட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக் கிறது. அப்படி நடைபெற்றுக்கொண்டு இருக்கிற இந்தத் திட்டத்தில், நம்முடைய பொதுப்பணித்துறையினர், மத்திய நெடுஞ்சாலைத் துறைக்கு 10 லட்சத்திற்கு மேற்பட்ட பணத்தை சிபாரிசு செய்து இருந்தும், அவர்கள் அந்தப் பாலத்தை இன்னும் கட்டி முடிக்கவில்லை. மேலும் இந்த கிருதமால் நதித் திட்டத்தை சீரமைப்பதற்காக இந்தக் குண்டாற்றும் மற்ற திட்டங் களுக்கும் என்று தற்சமயம் 8.33 லட்சம் ரூபாயை நம்முடைய தமிழக அரசு வழங்கியிருக்கிறது. இதனால் 55 கண்மாய்கள் பாசனம் பெறும் வாய்ப்பு பெறுகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த 55 கண்மாய் களும் பயன் பெறுகின்ற வகையில் இருக்கின்ற இந்த கிருதமால் நதித் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்காக இன்னும் பல இலட் சக்கணக்கான ரூபாய்களை, தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கவேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சீமைக்கால்வாய்த் திட்டம். இந்த சீமைக்கால் வாய்த் திட்டம், வறட்சியைச் சந்தித்து, வாடி வதங்கிக் கொண்டு இருக்கிற ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களை வாழ வைக்கின்ற திட்டம். வானத்தை அண்ணாந்து பார்த்து, விழிகள் எல்லாம் மேலே போய்க்கொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வெ. சோ. பஞ்சவர்ணம்] [1987 ஏப்ரல் 29

மேலும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான கண்மாய்களில் இருக்கிற கருவேல மரங்களை எல்லாம் ஏலம் போடுகின்ற நேரத்தில், அந்தப் பணம் எல்லாம் ரெவின்யூ துறையினருக்கும் உள்ளாட்சித் துறையினருக்கும் போய்ச் சேருகிறது. அதிகமான நிதியைத் தருகிற, வருமானம் உள்ள இடங்களில் இருக்கிற இந்த மரங்களை எல்லாம் ஏலம் போடுகின்ற நேரத்தில், வருகின்ற அந்தப் பணத்தில், பாதிப் பணத்தை பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கி, பாதிப் பணத்தை உள்ளாட்சித் துறைக்கும் ஒதுக்க வேண்டும். இப்படி பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கப்படுகிற பாதிப் பணத்தில் இருந்து, மராமத்து செய்யாத கண்மாய்களை எல்லாம் மராமத்து செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. எம். வி. இரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியை உரித்தாக்கிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுப் பணித் துறையானது, தமிழக அரசினுடைய முக்கிய துறைகளில் ஒன்று. இந்தத் துறையானது ஆற்றி வருகின்ற பணிகள் மகத்தானவை என்பதை நாடு நன்கு அறியும். குறிப்பாக விவசாயிகளுக்குத் தேவையான நீர்ப்பாசனத்தையும், பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவமனைக் கட்டிடங்களையும், அரசு அலுவலகங்களையும் ஆய்வு செய்து, திட்டம் தீட்டி, உடனடியாக செயல்படுத்தி வருகின்ற இந்த பொதுப் பணித்துறையின் மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாலை 5-30)

குறிப்பாக, கோவை மாவட்டத்தில், கோவை வட்டத்தில் இருக்கக்கூடிய சின்னவேடம்பட்டி கிராமத்தில் புதிதாக ஏரியை அமைக்க புரட்சித் தலைவர் அரசு 370 இலட்சம் ரூபாய்க்கான திட்டத்திற்கு ஒப்புதல் நல்கியதற்கு, அதை வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். பொள்ளாச்சிப் பகுதியில் வாகரை ஆற்றிலும், பூங்கடவு ஆற்றிலும் இதுபோன்ற ஏரியைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சியை அடுத்து இருக்கின்ற பாலியாளையம் கிராமத்தில் சூலக்கல்லில் அணை கட்டி



1987 ஏப்ரல் 29] [திரு. எம். வி. இரத்தினம்]

திட்டமானது, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, முடியும்
தருவாயில் உள்ளது. அந்தத் திட்டத்தை செயல்படுத்த
வேண்டுமென்ற கருத்தை மாணபுமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன. இந்த
வாகரை ஆறு, பூங்கடவு ஆறு திட்டங்கள் மூலம் நிலத்தடி நீரைப்
பெருக்கவேண்டிய கால கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்
கிறோம். அந்த வகையில் இந்த இரண்டு திட்டங்களையும்
செம்மைப்படுத்துகின்றபோது, பொள்ளாச்சிப் பகுதியிலே இருக
கின்ற விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கக்கூடிய
இந்தத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செய்ய
வேண்டுமென்பதை நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்
கிறேன். அதேபோல், தமிழகத்தில் நீர் ஆதாரங்களை விவசாய
பாசனத்திற்கு அநேகமாக முழு அளவில் பயன்படுத்தி இருப்ப
தாக கொள்கை குறிப்பு கூறுகின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம்,
பொள்ளாச்சி என்றாலே பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம்
என்பது நாடறிந்த ஒரு பெரிய திட்டமாக இருக்கக்கூடிய இந்தத்
திட்டத்தில், 1970 ஆம் ஆண்டு கேரள அரசும் நமது தமிழக
அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழகத்திற்கு குறிப்
பாக விவசாய பெருமக்களுக்கு 30.2 டி.எம்.சி. தண்ணீர் . கிடைக்
கின்ற வகையில் இந்தத் திட்டமானது அன்றையதினம் ஒப்பந்தம்
செய்யப்பட்டது. ஆனால், இன்றுவரை கடந்த 10, 15 ஆண்டுகள்
கழித்தும்கூட நாம் பெறுகின்ற தண்ணீரின் அளவு 28 டி.எம்.சி.
தண்ணீர்தான் என்பதை நான் வேதனையோடு சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், 1970 ஆம்
ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நீராறு, நல்லாறு திட்டங்
களைச் சேர்க்காமல் இருந்தது மிகவும் வேதனைக்குரியதாகும்.
அந்தத் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தால், அந்தத் திட்டத்தை
செயல்படுத்தி இருப்போமானால், நிச்சயமாக கேரளாவிற்குச்
சென்று வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீர் நமக்குக் கிடைத்
திருக்கும். ஆனால், குறிப்பாக இன்றைய தினத்தில் அங்கே
இருந்து வரக்கூடிய நீரில் மூன்றில் இரண்டு பங்கைத்தான் நாம்
விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு

பங்கு தண்ணீரானது மழைக் காலங்களில் பெய்யக்கூடிய அந்தத் தண்ணீரை நாம் திருப்பிவிடக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தால், கேரளாவில் சாலியாறு வழியாக அரபிக் கடலில் விழுந்து வீணாகிறது என்பதை நான் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையில் இந்த நீர் ஆறு, நல்லாறு திட்டத்தைச் செயல்படுத்தினால், நாம் பெருக்கத்தினபோது, அந்தத் தண்ணீர் டன்னல் வழியாக, நல்லாறு வழியாக வந்து, திருமூர்த்தி அணைக்கட்டிற்கு வருகின்ற சூழ்நிலை ஏற்படும். அதற்கு உறுதுணையாக ஆனை மலை ஆறு திட்டத்தைச் செயல் படுத்தினால், அதன் மூலம் தண்ணீர் வருகின்றபோது, நாம் இன்றையதினம் எவ்வளவு தண்ணீரை பெற்றுக் கொண்டிருக் கிறோமோ, அதில் மூன்றில் ஒரு பங்கு தண்ணீர் மேலும் பெறு கின்ற வாய்ப்பு இருக்கும். ஆனால், அதற்கு மாறாக நாம் என்ன செய்கிறோம் என்றால், முதலில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 1½ இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யவேண்டும் என்று திட்டமிட்டு விட்டு, பின்னால் இன்றைய தினம் எக்ஸ்டென்ஷன் என்ற வகையில், விரிவுபடுத்துகின்ற வகையில் 4 இலட்சம் ஏக்கர் அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். அதை வரவேற்கிறேன். பல்லடம், தாராபுரம் போன்ற பகுதி களுக்கு பாசன வசதி அளிப்பது நம் கடமை. இருந்தாலும், வேண்டிய நீர் ஆதாரங்களை செயல்படுத்த நாம் தவறி விட்டோம் என்பதை எடுத்துக்காட்டி, இந்த ஆனை மலை ஆறு திட்டத்தை, நல்லாறு திட்டத்தை உடனடியாக கேரளா அரசுடன் பேசி, விரைவில், கூடுமான அளவிற்கு, இந்த ஆண்டே இதனைச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இப்போது வடக்கே வெட்டப்பட்டிருக்கின்ற வாய்க் கால்களில் நான்கு ஆண்டுகள் ஆகியும் தண்ணீர் இல்லாத சூழ் நிலை இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல பி.ஏ.பி. திட்டமானது ஏறக்குறைய 10 அணைகளை உள்ளடக்கிய ஒரு திட்டமாகும். அதிலே சுரங்க வழிகள் ஏராளமாக இருக்கின்றன. மின் சுரங்க வழிகள் ஏராளமாக இருக்கின்றன. பாசனப் பரப்பு 4 இலட்சம் ஏக்கரை தாண்டிக் கொண்டிருக்கிறது. இந்த அணைகளைக் கட்டுகின்ற காலங்களில் குறிப்பாக, 100 கோடி ரூபாய் அன்றைய காலக் கட்டங்களில் செலவு செய்து கட்டப்பட்ட அணைத்



திட்டங்கள். இன்றைய தினத்தில் கட்டுவது என்றால் அது ஆயிரம் கோடியா, இரண்டாயிரம் கோடியா என்று மதிப்பிட முடியாத அளவிற்கு ஒரு செல்வ சிறப்புமிக்க அணைகளாக அவைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே ஒரு அணையி லிருந்து, பரம்பிக்குளத்திலிருந்து திருமூர்த்தி வரை செல்ல வேண்டுமேயானால ஏறக்குறைய 80, 90 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதேபோல் திருமூர்த்தி அணையிலிருந்து நீராறு அணைக்குச் செல்லவேண்டுமேயானால் அதற்கு 80, 90 கிலோ மீட்டர் செல்லவேண்டும். அந்த அளவிற்கு அதிகமான தொலை தூரங்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலையில் மணல்வழிப் பாதை இல்லாத காரணத்தால் எல்லா இடங்களுக்கும் பொள்ளாச்சியை மையமான இடமாக வைத்து செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்குமேலாக, கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த நீரினுடைய அளவை கண்காணிக்கவேண்டிய பொறுப்பும் அந்த பி.ஏ.பி. அலுவலகத் திற்கு இருக்கிறது. அந்த பி.ஏ.பி. அலுவலகம் ஏறக்குறைய 4 கோட்டங்களையும் ஒரு வட்டத்தையும் அடங்கிய ஒரு கண்காணிப் புப் பொறியாளரை மையமாக வைத்து அங்கே இயங்கிக் கொண்டி ருக்கிறது. கேரள அரசினுடைய பிரச்சினையானாலும் உடன டியாக அந்த அலுவலகத்தின் மூலம் பணிகளை மேற்கொண்டு ஆகவேண்டும். அணைகளை, ஏறக்குறைய 500 ஆயிரம் கோடி மதிப்பிற்குமேல் இருக்கக்கூடிய அந்த விலை மதிக்கமுடியாத அணைகளை பராமரிக்கக்கூடிய பொறுப்பையும் இந்த அலுவலகம் வைத்திருந்தும்கூட, கடந்த பல ஆண்டுக்காலமாக அதை நிரந் தரமாக்காமல், ஆண்டுதோறும் தற்காலிக அனுமதியை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர் களிடத்திலே நான் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே தயவு கூர்ந்து இந்த ஆண்டு அதை நிரந்தரமாக்க வேண்டும். காரணம், அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அதிகாரிகள், இந்த மாதம் சம்பளம் வருமா, அடுத்த மாதம் சம்பளம் வருமா என்கின்ற சூழ்நிலையிலும், இந்த ஆண்டோடு நிறுத்தி விடுவார்களோ, இதை காலி செய்துவிடுவார்களோ என்கின்ற சூழ்நிலையிலும் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நிரந்தரமாக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். வி. இரத்தினம்] [1987 ஏப்ரல் 29

எங்களுடைய பிரச்சினையெல்லாம் குறிப்பாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் வாயிலாக தென்னை மரங்களுக்கு தண்ணீர் விடவேண்டுமென்பதுதான். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் 15 நாட்களுக்குத் தண்ணீர் விடுங்கள். 15 நாட்களுக்குத் தண்ணீரை நிறுத்திக் கொள்ளுங்கள். கடுமையான வறட்சியாக இருக்கக்கூடிய ஜனவரி, பிப்ரவரி, மார்ச் போன்ற மாதங்களில் அவசியம் தென்னைக்கு தண்ணீர் வேண்டும். கேரள மாநிலத்தில் நம்மிடமிருந்து பெறப்படுகின்ற நீரை 'லிப்ட் இர்ரிகேஷன்' மூலமாக சித்தூர் தாலுக்காவின் பல பகுதிகளுக்குப் பாசனம் செய்கிறார்கள். சுகர்-கேன் என்கின்ற வகையில், கரும்பு உற்பத்திக்கென்று அவர்கள் தண்ணீர் விடுகிறார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, எண்ணெய் வித்து உற்பத்தி என்கின்ற வகையில், எண்ணெய் வித்துக்காக செலவுகள் அதிகம் செய்கிறார்கள். இன்றையதினத்தில் தஞ்சையை எடுத்துக்கொண்டால் அங்கே தென்னையை பயிரிட முடியாது. நெல்லைத்தான் பயிரிட முடியும். பொள்ளாச்சியைப் பொறுத்தவரையில், தென்னையைத்தான் பயிரிட முடியுமேயொழிய நெல்லை அதிகமாக பயிரிட முடியாது. ஆனால் இன்றைய காலகட்டங்களில் ஏறக்குறைய 30 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேலாக தென்னை சாகுபடி செய்யப்படுகின்ற அந்தப் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேலாக இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. ஆளியாறு பேசின், பரம்பிக்குளத்துக்கு நான் வரவில்லை. ஆளியாறு பேசினில் இருக்கக்கூடிய தண்ணீரானது பொள்ளாச்சி கால்வாய், வேட்டைக்காரன் புதூர் கால்வாய், சேதுமடைக் கால்வாய் ஆகிய கால்வாய்கள் மூலமாக பாயக்கூடிய அந்தப் பகுதிக்கு மட்டும் தென்னைக்குத் தண்ணீர் வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உண்மையிலேயே நான் சொல்கிறேன்: நான்காவது வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு படிக்கின்ற வரை மழை பெய்வதற்கு காரணம் என்ன என்பதை நமக்கு வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுத்து இருக்கிறார். பட்டப்படிப்பு நாம் படித்து இருக்கிறோம். மழை மேகங்களை ஈர்க்கின்ற சக்தி மரங்களுக்கு உண்டு அந்த மலையிலே இருக்கக்கூடிய மரங்கள், அந்தப் பகுதியில் குளுமையை



1987 ஏப்ரல் 29] [திரு. எம். வி. இரத்தினம்]

(மாலை 5-40)

ஏற்படுத்தி, மழை மேகங்களை ஈர்த்து மழையை பெய்யக்கூடும் என்பதையெல்லாம் நாம் படித்து இருக்கிறோமேயொழிய, செயல் முறைப் படுத்துவதில்லை. அந்த பொள்ளாச்சிப் பகுதிக்கு தண்ணீர் இல்லை. வடக்கே இருக்கக்கூடிய பகுதிக்கு தண்ணீரை இன்றைய தினம் நாம் விரிவு செய்து இருக்கிறோம். அதற்கு மேல் நான் போக விரும்பவில்லை. தயவுசெய்து பொள்ளாச்சிப் பகுதிக்கு தண்ணீர் பாய்கின்றபோது அந்த விவசாய நிலங்கள் குளிர்ச்சி அடைகின்றபோது நிச்சயமாக மழை பெய்கின்ற வாய்ப்பு அதிகமாக ஏற்படும். அதன் காரணமாக மழை பெய்து அணைகளில் தண்ணீர் தேங்கும்போது நிச்சயமாக வடக்கே எடுத்துச் செல்லுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை.

அதேபோல் பொதுப்பணித் துறையில் கட்டிடங்களைக் கட்டுகின்ற பணியை பொறுத்தவரையில் ஆனைமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டுவதற்கு ஏறக்குறைய 20 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து பல மாதங்கள் ஆகியும் கூட அந்தப் பணி துவங்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அதேபோல் கால்நடை துறையைச் சேர்ந்த 'ரீஜினல் அலுவலகம்' கட்டுவதற்கு என்று பண ஒதுக்கீடு செய்து பொதுப் பணித் துறை எடுத்தும் இன்னும் அந்தப் பணி செயலாக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே தயவு செய்து இந்த நாட்டினுடைய நலன் கருதி பணிகள் செய்து கொண்டிருக்கக்கூடிய பொதுப் பணித் துறை விரைவில் அவைகளை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகளின் பிரச்சினை என்ற ரீதியில் விரிவு படுத்துகின்ற எக்ஸ்டன்ஷன் என்ற அந்தப் பிரச்சினையை ஓரளவுக்கு நிறுத்தி விட்டு ஏற்கனவே நாம் பாசனத்திற்கு எடுத்துக் கொண்டு இருக்கக்கூடிய அந்த 4 லட்சம் ஏக்கர்களுக்கு எந்த வகையிலேனும் பயன் பெறுகின்ற வகையில் நீர் ஆதாரங்களை சேர்க்கவேண்டும் என்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தனை செய்து இதை செழிப்புற செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[1987 ஏப்ரல் 29

*திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கோரிய தொகையை கொடுப்பதற்காக நாம் எல்லாம் ஒன்று கூடி நிற்கிறோம். அப்படி நாம் கொடுக்காவிட்டாலும் கட்டாயமாக இன்றைக்கு எடுத்துச் செல்லுவது நிச்சயம்தான், என்றாலும் எங்களுடைய குறையை உங்களிடம் சொல்லுவது எங்களுடைய கடமை என்று கருதி நான் சிலவற்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பாசனப் பகுதி பற்றி பேசும்போது, குறிப்பாக தமிழகத்தில் இருக்கின்ற உணவு உற்பத்தியில் 50 சதவீதம் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி ஆகிறது என்பதை நாடு நன்கு அறியும். எனவே அந்த தஞ்சை பாசன திட்டங்களை தஞ்சையினுடைய விவசாயிகளின் உயிர் நாடியாக கருதி வருகிறார்கள். அங்கே பாசனம் இல்லை என்று சொன்னால் பயிர் வாடி விடும். பயிர்கள் வாடி விட்டால் தஞ்சையில் இருக்கிற விவசாயிகளும் வாடி விடுவார்கள் என்பதை நன்கு அறிவீர்கள். இந்த பாசனம் இல்லாவிட்டாலும் விவசாயிகள் வாடி விடுவார்கள். வெள்ளக் காலங்களில் மேலே இருந்து வருகின்ற தண்ணீர் அதிகரிப்பின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் வருகிறது என்று சொன்னால் அப்போதும் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டு அங்கு இருக்கின்ற விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். எனவே அதிகமாக பாய்வதன் காரணமாகவும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், வறட்சியின் காரணமாகவும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசுகின்றபோது எந்த வகையிலான காரணங்களினால் நாம் பாதித்துக் கொண்டு இருக்கிறோம் என்று ஆராய்கின்ற நோக்கில் நம் நாட்டை பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் தொடர்ந்து பெரும் சேதத்திற்கு ஆளாகிக் கொண்டு இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

1983-ல் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பலயிடங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. அது 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளத்தை விட நிச்சயமாக கூடுதலான வெள்ளமாக இருந்தது. அந்த வெள்ளச் சேதாரங்களை சீர் செய்வதற்கு அந்த



1987 ஏப்ரல் 29] [திரு. மா. மணிமாறன்]

மாவட்டத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளை எல்லாம் யாரும் மறந்துவிட முடியாது. மிக சிக்கனமாக சிறப்பாகச் செய்தார்கள் அன்றைக்கிருந்த எஸ்.இ. ஆனால் இந்த வெள்ளங்கள் தொடர்ந்து வருவதைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகை உண்டா என்று சொன்னால் கட்டாயமாக வழிவகைகள் இருந்தன. ஆராயப்பட்டது, அரசுக்கு அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே செயலாக்கம் பெற முடியாத நிலைமையை நாம் பெற்று இருக்கிறோம்.

நாம் ஆராய்வதற்கு முன்னால் 1896-ல் ஆங்கிலேயர்கள் ஆராய்த்தார்கள், அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பின்னால் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் 1942-ல் ஆராய்ந்து அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பின்னால் 1961-ல் ஏற்பட்ட வெள்ளத்தில் தான் உணர்வு பெற்று சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டது. அறிக்கைதான் தயாரிக்கப்பட்டது. ஆனால் 1967-ல்தான் வேலைகள் தொடங்க வேண்டும் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். 1969-ல் உலக வங்கியின் மூலமாக கடன் பெற்று நிறைவேற்ற வேண்டும் என்று திட்டங்கள் அனுப்பப்பட்டன. அன்றைக்கு இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருந்தது. மைசூரில் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தது. டெல்லியில் காங்கிரஸ் ஆண்டு கொண்டிருந்தது. சாதாரணமாக தஞ்சையினுடைய அனைத்து வடிகால்களையும் சீர் செய்வதற்கு வெறும் 49 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த 49 கோடி ரூபாயை உலக வங்கியிடம் கேட்கின்ற நேரத்தில் மைசூரின் தூண்டுதலின் காரணமாக மத்திய அரசு உலக வங்கியின் கடன் பெற முடியாத அளவுக்கு தடை செய்தார்கள் அன்றைக்கு. அன்றைக்கு வெறும் ரூ. 49 கோடி கடன் பெற்று, பலன் தர முடியாத நிலை. இன்றைக்கு ஏறத்தாழ ரூ. 700 கோடியை எட்டிப் பிடிக்கின்ற அளவிற்கு மதிப்பீடுகளை தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ரூ. 700 கோடிக்கு மதிப்பீடு தயாரித்து, முதல் கட்டமாக ரூ. 100 கோடி செலவத்திற்கு நிறைவேற்றுகின்ற முயற்சி எடுக்கின்ற நோக்கிலே கூட, இன்றைக்கு இந்த அரசாங்கம் அந்தக் கடனை உலக வங்கி மூலமாகப் பெற்றுத் தருவதிலே, காலதாமதம் செய்கிறது. அதனைக் காரணம் காட்டி அரசாங்கம் மறுக்கிறது. இன்றைக்கு

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 29

மைசூர் அரசாங்கத்தில், காங்கிரசுக்கு எதிர்முகாமில் இருக்கக் கூடியவர்கள் ஆண்டுக் கொண்டிருக்கிறார்கள். டில்லியில் இன்றைக்கும் கூட காங்கிரஸ்தான் ஆண்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்டவசமாக தமிழகத்தில் ஆளுகின்ற கட்சியும், டில்லியில் ஆளுகின்ற கட்சியும் இரண்டும் ஒன்று என்று கருதுகிற நிலையில் தான் இன்றைக்கு அரசியல் விற்பன்னர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த வகையில் திறமையைப் பயன்படுத்தியாவது இந்தத் திட்டத்திற்கு உடனடியாக, இப்போதே ஒப்புதல் பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால்தான், தஞ்சை மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கின்ற நிலையை நம்மால் தடுக்க முடியும். அதன் காரணமாகப் பல சிரமங்களை நாம் தாங்கி வருகிறோம். எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். தஞ்சைப் பகுதியில் ரூ. 2½ கோடியை பொதுப்பணித் துறை விரயமாக்கிவிட்ட செய்தியை எல்லாம் சொன்னார்கள். அதற்குக் கூட மாண்புமிகு கொறடா அவர்கள் சிறப்பாகச் சொன்னார்கள். சத்துணவில்கூட ஆயாக்கள் சோறு எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். வெகு சிறப்பான திட்டம். ஆயாக்கள் சோறு எடுத்துச் செல்வது எல்லாம் இருக்கத்தான் செய்யும் என்று எல்லாம் சொன்னார்கள். ஆகையால் சத்துணவிலே சோறு எடுத்துச் செல்வதும், ஆற்றிலே ரூ. 2½ கோடி விரயமாக்குவதும், சமமாக இருக்குமென்று என்னைப் பொறுத்தவரையில் அவர் கருதுவார் என்று நம்பவில்லை. ஆயா சோறு எடுத்துச் செல்வதும், ஆற்றிலே ரூ. 2½ கோடி விரயம் ஆவதும் ஒன்றாக அவரும் கருத மாட்டார். நானும் கருதமாட்டேன். மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ரூ. 2½ கோடியைத் தவறாக செலவு செய்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே சொன்னீர்கள். ஒரு சில இடங்களில் என்றுதான் காலையிலே பேசினீர்கள். இப்படி ரூ. 2½ கோடி விரயமாக்குவது என்பது 'ஸ்லீப்பிங்' காக இருக்கிறது.

**திரு. மா. மணிமாறன்:** துணைத் தலைவர் அவர்களே, ரூ. 2½ கோடி செலவு செய்கின்ற நேரத்திலே நீங்கள் அதிகாரிகளை 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறீர்கள் இதில் [illegible]



1987 ஏப்ரல் 29] [திரு. மா. மணிமாறன்]

மெத்த பணமெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் மட்டும் இந்தத் தவறுகளுக்குக் காரணமல்ல. பல பேர் காரண மாக இருந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கண்டுபிடியுங்கள். யாரென்று. வேலை செய்யாமல் பணம் எடுத்ததற்காக பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். யார் என்றெல்லாம் கண்டுபிடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு வந்த தகவல்படிதான் அதிகாரிகளை நாங்கள் 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் தவறு செய்தவர்கள் இன்னாரென்று தெரியும்படி சொன்னால், தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுத்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது; எஸ்டிமேட்டில் மெஷர்மெண்ட் எல்லாம் 'என்ட்ரி' ஆகியிருக்கிறது. ஆனால் வேலை செய்யப்படவில்லை. அதற்கு ஆதாரம் வேண்டுமென்று சொன்னால், ஒரு ஆற்றை எடுத்துக்கொண்டால், இரண்டு பக்கமும் 'ரிவிட்மெண்ட்' இரண்டு இடங்களிலேயும் வெட்டிய மண்ணை அங்கே போடமுடியாத இடத்திலே அங்கே மண் வெட்டியதாக, கரை வெட்டியதாக மெஷர்மெண்டிலே அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒப்பந்தத்திலே முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இப்படிச் செய்வதற்கு அதிகாரிகள் மட்டும் காரணமல்ல; ஒப்பந்தக்காரர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களைத்தான் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதையும் நீங்கள் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால், கண்டுபிடிக்க உங்களுக்கு ஏதுவாக இருப்பதற்கு, இந்தக் காட்டாமணிச் செடி இருக்கிறது. காட்டாமணிச் செடியில் வேரை வெட்டி எடுத்தால்தான், வெட்டியதாகப் பொருள். ஆனால் அப்படி வெட்டியதாகச் சொல்லிவிட்டு, பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பணத்தை வாங்கியதற்குப் பிறகு, இப்போது அழகாக நல்ல பச்சைப் பசேல் என்று அந்தக் கால்வாய்களில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தச்

செடியினுடைய தன்மை என்னவென்று சொன்னால், வயலிலே களை தண்ணீர் உறிஞ்சுகிறது. வயலிலே இருக்கின்ற களையைவிட இந்தச் செடி 10 மடங்கு அதிகமாக உறிஞ்சுகிறது என்று வேளாண்மைத் துறையிலே அறிவுறுத்துகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், அதைவிடக் கூடுதலாக இந்தச் செடி நீரை உறிஞ்சி ஆவியாக்குகிறது என்பதை எல்லாம் வேளாண்மைத் துறை கண்டுபிடித்திருக்கிறது. எனவே, அந்தச் செடியை அகற்றுவது என்பது மிகத் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கிறது. அப்படித் தவறுகளைச் செய்தவர்களை கட்டாயமாக நீங்கள் கண்டுபிடியுங்கள். ஆதாரம் வேண்டுமென்றால், நான் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்தச் செடி எங்கெங்கு இருக்கிறதோ, அங்கேதான் ஆதாரம் இருக்கிறது. தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் இதிலே அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவிரிப் பிரச்சினையிலே நமக்கு தண்ணீர் வருவதற்கு சங்கடம் அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் சொல்வதைவிட அருமைச் சகோதரர் குப்புசாமி அவர்கள் மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுவதை அழகாக, திரும்ப எடுத்துச் சொல்லி, டில்லியுடன் போராட தலைமை தாங்குகிற பொறுப்பை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு கொடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளபதியாக இந்தப் போராட்டத்தில் நின்றால், கட்டாயமாக நாங்கள் சிப்பாய்களாக குதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எனவே இதுவரையில் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்றெல்லாம் சொல்லிவந்திருக்கிறோமே தவிர, பேச்சுவார்த்தையைவிட, இன்றைக்கு ஆளும் தரப்பிலே, இந்தச் சட்டமன்றத்தில், போராட்டம் நடத்தவேண்டுமென்ற ஒரு உணர்வுப் பூர்வமான பேச்சை கேட்க முடிந்தது. எனவே கடிதம் எழுதுவது தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாக இன்றைக்குக் கருத வேண்டிய ஒரு காலக்கட்டத்திற்கு ஆளுங் கட்சி வந்ததற்குப் பின்னால், நாங்கள் எல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எனவே இனிமேல் பேச்சுவார்த்தை, கடிதம் எழுதுவது என்பதெல்லாம் நடக்காத ஒன்றாக இருக்கிறது. சென்ற ஜூன், ஜூலையில் நாம் 'டிரிப்யூனல்' கேட்டோம். இன்றைக்கு வரை கடிதம்தான் நாம் எழுதியிருக்கிறோம்.



டிதம் எழுதினால்கூட பரவாயில்லை. அதற்கு நமக்கு கொடுத் இருக்கிற பதில் சாதகமாக இருக்கிறதா என்றால், இன்னமும் தாயவில்லை. ஆனால் காரணம் என்னவாக இருக்கிறது? மைசூர் மாநிலத்தை ஆண்டு கொண்டிருப்பவர்களாக ஜனதா கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால் டில்லியில் இருக்கிற ப்பாசனத்துறை அமைச்சர் காங்கிரஸ்காரராக இருக்கி றார். மைசூர் மாநிலத்தைச் சார்ந்தவர்கள். இரண்டு பேரும் ஒன்றாக இணைந்து நின்று, மாநிலத்தினுடைய நலனில் அக்கறை எடுத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் மத்திய அரசாங்கத்திலிருக்கிற அமைச்சர் இன்றைக்கு முட்டுக்கட்டை போட்டு, நம்முடைய பேச்சு வார்த்தையை தடுப்பது மட்டுமல்ல, இன்றைக்கு கேட்டிருக்கின்ற டிரிப்யூனலைக் கூட தடுப்பதற்கு அவர் காரணமாக இருக்கிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எனவே அவர்கள் இருப்பதைப்போல், இன்றைக்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில், கட்சிக்கு அப்பாற்பட்டு, வித்தியாசம் பார்க்காமல், எல்லோரும் காவிரி பிரச்சினையில் பொதுவாக நின்று, பொது நிலையை உருவாக்கி. பொதுக் கருத்தை உருவாக்கி, அது போராட்டமாக இருந்தாலும் சரி, வேறு எந்த இயக்கமாக இருந்தாலும் சரி, கடுமையாக இந்த அணியிலே நாம் ஒன்றாக நிற்கவேண்டும். அப்படி இல்லையென்றால் தஞ்சை மாவட்டம் . . .

(மாலை 5-50)

திரு. கூடலூர் இ. வி. வேலு: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள், நடத்தினால் தலைமையிலே பொறுப்பு ஏற்று போராட்டம் காவேரிப் பிரச்சினைக்காக நாங்கள் எல்லாம் சிப்பாயாக இருப் போம் என்று சொன்னார்கள். வரவேற்க வேண்டிய விஷயம் 1982 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய உறுப்பினர் திரு. மாயத்தேவர் அவர்கள் காவேரிப் பிரச்சினைக்காக மாநில அரசு போராடக்கூடாது என்று பாராளுமன்றத்திலே பேசியிருக்கிறார். அவரும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர். அவர் அப்படி பாராளுமன்றத் தில் பேசியிருக்கும்போது, மணிமாறன் அவர்கள் போராடுங்கள் என்று இங்கே பேசுவது ஒரு முரண்பட்ட கருத்தாக இருக்கிறது

[1987 ஏப்ரல் 29

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, அவர் போராட வேண்டாம் என்று சொன்னாலும் நீங்கள் போராடத் துடியாய்த் துடித்தால் நாங்கள் ஏன் தயங்கிக் கொண்டிருக்க வேண்டும்? நீங்கள் கிளம்பிவிட்டதற்கு பின்னாலே நாங்களும் தயார் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அன்றைக்கு திரு. மாயத்தேவர் சொல்லியிருக்கலாம். நீங்களே கிளம்பிவிடுகின்ற நேரத்திலே நாங்கள் ஏன் தயங்க வேண்டும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, திரு. மாயத்தேவர் மதுரை மாவட்டத்துக்காரராக இருக்கிறார். திரு. மணிமாறன் அவர்கள் தஞ்சை மாவட்டத்துக்காரர் என்ற காரணத்தினால் அவர் நம்மோடு சேரலாம்.

திரு. மா. மணிமாறன்: மேற்கு நோக்கி பாய்கின்ற ஆறுகளுடைய தண்ணீரை தமிழகத்திற்கு திருப்பி விடுவதிலே வித்தியாசமான கருத்துக்கள். மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் எங்களுக்கு சர்ப்ளஸ் வாட்டர் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மத்திய அரசிடமிருந்து தரப்படுகின்ற அறிக்கைகள் எல்லாம் நமக்கு மேற்கு நோக்கி சர்ப்ளஸ் வாட்டர் வடிந்து கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதுவும் இந்த நாட்டிலே ஒரு மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் சர்ப்ளஸ் வாட்டர் மத்திய அரசு சொல்வதற்கு மீறி இல்லை என்று சொல்கிறார்கள். அதே போல அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற தண்ணீர் எல்லாம், மகாநதி தண்ணீரை கோதாவரியில் விட்டு, கோதாவரியை கிருஷ்ணாவில் விட்டு, காவேரிக்குக் கொண்டுவரலாம் என்ற திட்டங்கள் ஆராயப்பட்டது. குலாத்தி கமிஷன் அறிக்கையிலேயும் அதைச் சொன்னார்கள். கோதாவரியிலே வருகின்ற தண்ணீரை தென் மாநிலங்களுக்கு குறிப்பாக தமிழகத்திற்கு கடைசிவரை கொண்டு சென்றால், கோதாவரியிலே வருகின்ற தண்ணீரை 100 ஆண்டுக் காலத்திற்கு திட்டங்களைத் தீட்டினால் கூட போதுமான அளவிற்கு அதிகமான தண்ணீர் கோதாவரியிலே வருவதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அறிக்கை வந்ததற்குப் பின்னாலேகூட இந்திய துணைக் கண்டத்தில் இருக்கக்கூடியவர்கள் ஆராயவில்லை. இந்த மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரே மாநிலமாக இருப்பது



[1987 ஏப்ரல் 29] [திரு. மா. மணிமாறன்]

உண்மை என்று சொன்னால் இன்றுவரை அந்தக் கருத்து ஆராயப்படவில்லை. இன்றைக்கு ஆந்திராவிலே தண்ணீர் குடிநீருக்கே பயன்படுவதற்குக்கூட சிரமமாக இருந்துகொண்டிருக்கிறது. மைசூரிலே இருப்பவர்கள் நமக்கு தருவதற்கு தயாராக இல்லை. எனவே இப்படி தமிழ்நாட்டைச் சுற்றியிருக்கின்ற மாநிலங்கள் அத்தனையும் நமக்கு தண்ணீர் தருவதற்குத் தயாராக இல்லை. ஆனாலும் இந்த பஞ்சமான நேரங்களில், வறட்சியான நேரங்களில் இந்திய துணைக் கண்டத்திலே நாமும் ஓர் அங்கம் என்று சொல்லிக்கொள்வதிலே அசிங்கமாக இல்லையா என்றுதான் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் பங்களாதேஷிலே 1982-லே ஒப்பந்தம் முடிந்தது. 1982-லே ஒப்பந்தம் முடிந்தாலும்கூட, 1984-லே அழைத்துப் பேசி அவர்களிடத்திலே ஒப்பந்தம் செய்து கொள்கிறீர்களே. ஏன்? அது ஒரு தனி நாடு என்ற காரணத்தினால்தான். பங்களாதேஷை நீங்கள்தானே சண்டை போட்டு அந்த நாட்டை தனியாக கையிலே எடுத்துக் கொடுத்தீர்கள்? அந்த நாட்டோடு ஒப்பந்தம் போட்டுக்கொள்வதற்கு அச்சத்தின் காரணமாக செய்துகொள்கிறீர்கள். ஆனால் ஆண்டாண்டுக் காலமாக இந்திய துணைக் கண்டத்திலே ஒட்டிக்கொண்டிருப்பதன் காரணமாக இந்திய துணைக் கண்டத்திலே எல்லோரும் சமம் எல்லோரும் ஒன்று என்று சொல்லிக்கொண்ட ஒரே காரணமாக மொழியின் காரணமாக புறக்கணிக்கப்படுகிறோம். கிடைக்கின்ற தண்ணீர் கிடைக்காமல் இருப்பதற்கும் இந்திய துணைக் கண்டத்திலே ஒட்டிக் கொண்டிருப்பதன் ஒரே காரணமாக இன்றைக்கு தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது என்பதை மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து நீடிக்கும் என்று சொன்னால், நாடு தனி நாடாக ஆனால்தான் தருவார்கள் என்று சொன்னால், தனி நாடானால்தான் காவேரி பிரச்சினை தீரும் என்று சொன்னால் இந்த தனி நாடு பற்றி மக்கள் சிந்திப்பதிலே என்ன தவறு இருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேள்வியாக வைக்க விரும்புகிறேன். எனவே இந்திய துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் இந்த நாட்டை துண்டாடுகின்ற வேலையை இந்திய துணைக் கண்டம் செய்ய வேண்டாம் என்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எனவே [illegible]

ஆண்டு காலத்திற்கு இந்த மாவட்டம், இந்த மாநிலம் பொட்டல் காடாக இருக்கும் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. பாலாறு ஒப்பந்தத்தில் நாம் தவறியதன் காரணமாகதான் பாலாறு இன்றைக்கு பொட்டல் காடாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எனவே பாலாறை போல் காவேரியையும் வறண்ட மணலாக பார்க்கின்ற நிலைக்கு நாம் விட்டுவிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக ஆளும் கட்சிக்காரர்கள், அமைச்சர்கள் தலைமை தாங்கச் சொன்னார்களே, அந்தப் பணியைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பேச்சுவார்த்தையை அடிக்கடி நடத்துவதில் நாம் கரைக்கண்டிருக்கிறோம். ஓர் ஆண்டு காலத்திற்கு பின்னாலே டிரிபியூனல் கேட்டு முடிந்துவிட்டது. அதிலே திரு. சங்கர் ஆனந்த் அழகாக சொல்லுகிறார். டிரிபியூனல் கொடுத்தால் முடிவு தெரிய நாள் ஆகும். எனவே முன்னேற்றப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள முடியாது என்று சொல்கிறார். தஞ்சை மாவட்டத்திலே வளர்ச்சிப் பணியிலே நாம் சாதாரணமாக ரிவெட்மெண்ட் கட்டிக் கொண்டிருக்கிறோம். அணைகளை கட்டிக் கொண்டிருப்பது மைசூர் மாநிலம். திரு. சங்கர் ஆனந்த் மைசூர் காரர். அவர் வளர்ச்சிப்பணி பாதிக்கும் என்று சொல்கிறார். நமக்கு டிரிபியூனல் கொடுத்ததற்கு பின்னாலே ஸ்டேட்டஸ் கோ மெயின்டெயின் பண்ண வேண்டும் என்று கேட்பது நம்முடைய தலையாய கடமை. எனவே டிரிபியூனல் கொடுத்து விட்டால் 1924-லே நமக்கு என்ன ஒப்பந்தம் இருந்ததோ அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நமக்குத் தண்ணீர் கட்டாயமாக கொடுக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் இன்று டிரிபியூனல் கொடுப்பதிலே கூட, அச்சம் காட்டி வருகிறார்கள். எனவே, அதை ஆராய்ந்து, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, நாம் டிரிபியூனல் கேட்டதற்குப் பின்னால் அவர்கள் கொடுக்கவில்லையெனில் கட்டாயமாக அதை நாம் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கக்கூடாது. தொடர்ந்து வற்புறுத்தி ஏதாவது பெறுவதற்குரிய வழியை நாம் கட்டாயமாக ஆராயவேண்டும்.

இந்த நிலையில் காவிரிப் பகுதியில் இருக்கிற ரிவெட்மெண்டை நீங்கள் மாடர்னைஸ் பண்ணுகிற நேரத்தில், பல உறுப்பினர்கள் உங்களிடத்தில் கருத்துக்களைச் சொன்னார்கள். அங்கே





போடுகிற சிமெண்ட் பிளாக் 4 அங்குலம் தான் கனம் இருக்கிறது. 4 அங்குலம் போட்டால் களிமண்ணாக இருக்கிறது. அது சரிந்து போய், கட்டிடங்கள் எல்லாம் சரிந்து விழுகின்றன. அதை ஆராய்ந்து, பெரியாறு புராஜெக்டிலே எப்படி கான்க்ரீட் போட்டிருக்கிறீர்களோ, அப்படி கான்க்ரீட் ரிவெட்மென்ட் போட்டு, நீங்கள் லைனிங் பண்ணமுடியுமா என்று பாருங்கள். முடியவில்லை என்று சொன்னால் இதற்கு முன்னாலே 9 அங்குலம் கனம் வைத்து, அகலம் வைத்து செங்கல்லாக அடுக்கினீர்களே, அதேபோல் முடியுமா என்று ஆராய்ந்து, இந்தத் திட்டத்தை மேற்கொண்டால் தான் வாய்க்கால்கள் எல்லாம் பயன் பெற முடியும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையெனில், கட்டையாக அடுக்கியதற்குப் பின்னால்கூட, கிராமத்திலே இருக்கக்கூடியவர்கள் அதையெல்லாம் பெயர்த்துக் கொண்டு போய் தங்கள் சொந்தப் பயனுக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலித்து எங்கெங்கே அப்படி பொதுப்பணிச் சொத்துக்களை பொதுமக்கள் விரயமாக்கி இருக்கிறார்களோ, அதை ஆராய்ந்து பார்த்து உடனடியாக தனி நபர்களைக் கண்டுபிடிக்க வில்லையெனினும்கூட, ஒட்டுமொத்தமாக அந்த ஊர்மீது சார்ஜ் ஷீட் ஃபைல் செய்து, ரெவின்யூ கலெக்ஷனோடு சேர்ந்து வசூலிக்கிற சார்ஜ் செய்து, இந்த நிலைமையை இந்த அரசாங்கம் செய்தால் கட்டாயமாக இந்தப் பொதுப்பணிச் சொத்துக்களை விரயமாக்குவதிலிருந்து பொது மக்கள் தவிர்க்கப்படுவார்கள் என்று கேட்டுக்கொண்டு, அதை அரசாங்கம் ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) தொடர்ந்து . . .

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முதற்கண் பட்டுக்கோட்டைத் தொகுதியில் மங்கனங்காடு என்ற கிராமத்தின் அருகில் நசுவினியாறு என்ற காட்டாற்றின் குறுக்கே ஒரு சிறிய அணை கட்டுவதற்கு இந்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் ஒரு 35 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்து, அந்தத் திட்டத்தைத் [illegible] வைத்திருக்கிறார்கள். அதற்காக, பட்டுக்கோட்டைத் தொகுதி மக்களின் சார்பில், தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர்

[திரு. பி. என். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரை, கல்விக்கூடங்கள் கட்டுதல், மருத்துவமனைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பல்வேறுபட்ட துறைகளுக்குக் கட்டிடங்களைக் கட்டித் தருதல் முதலிய பணிகளில் தங்களை சிறப்பாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள், பாராட்டுகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், பெரிய பாசனத் திட்டத்தின்கீழ், 1987-88 ஆம் ஆண்டு பணியில் பெரியாறு-வைகையை நவீனப்படுத்துகின்ற திட்டத்திற்காக 14.44 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல், பரம்பிக்குளம்-ஆளியாறு பாசன விரிவாக்கப் பணிக்கு 18 கோடியே 63 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.

விவசாயம் பெருக வேண்டும் என்கின்ற அடிப்படையில் இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குகின்ற புரட்சித் தலைவர் அரசை நன்றிகூர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றையதினம் பொதுப் பணித்துறை எடுத்திருக்கிற சிக்கன நடவடிக்கைகளினால், விவசாயம், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டுமல்லாது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பெருகியிருக்கின்றது என்பதை கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1974-75 ஆம் ஆண்டில் இருந்த ஆழ்குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை 24,000 ஆக இருந்ததை, தமிழகத்தில் நீர்ப்பாசனத் தினுடைய சிக்கனத்தைக் கருத்தில் கொண்டு, நிலத்தடி நீரைப் பயன்படுத்துகின்ற நோக்கத்தோடு, இன்றையதினம் புரட்சித் தலைவர் அரசு 1983-84 ஆம் ஆண்டு, 63,107 ஆழ்குழாய் கிணறுகளாக, உயர்த்தி இருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கையைச் செய்ததன் மூலமாக, அரசு மக்களுக்குச் செய்கின்ற நன்மையில் ஒரு படி மேலே சென்று உதவியிருக்கின்றது என்பதை நன்றியோடு பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இங்கே எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் ஒரு கருத்தை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தார்கள்.



1987 ஏப்ரல் 29] [திரு. பி. என். இராமச்சந்திரன்]

நானும்கூட கொஞ்சம் எண்ணிப்பார்த்தேன். மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் சொல்கிற நேரத்தில், அரசியல் விற்பன்னர்கள் கூறுவதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்தியில் இருக்கின்ற காங்கிரஸ் ஆளுகின்ற அந்த மத்திய ஆட்சியும், மாநிலத்திலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், ஏதோ ஒரு உடன்படிக்கை வைத்துக்கொண்டு, தட்டுவது போல் தட்டுகிறேன, அழுவது போல் அழு என்கின்ற பாணியில் அவர்கள் இருப்பது போல, கொஞ்சம் குத்தலாக தன்னுடைய கருத்தை, உலக வங்கிக் கடன் பெறுகின்ற திட்டத்தைக் குறித்து பேசுகின்ற நேரத்தில் அவர்கள் சொன்னார்கள்.

(இரவு 6-00)

நான் அவருக்கு ஒரே ஒரு விளக்கத்தைச் சொன்னால் மறுக்க மாட்டார்கள் அல்லது அது உண்மைக்குப் புறம்பாக இருக்காது என்ற நம்பிக்கையில் இந்தக் கருத்தைக் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

எனது ஊரான பட்டுக்கோட்டையைச் சார்ந்த மரியாதைக் குரிய திரு. சுப்பிரமணியம் அவர்களின் தந்தையார் திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்பவர் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்திருக்கிறார். அந்த வழக்கில் அவர் தமிழகத்திற்குக் காவிரி நீர் ஏன் விடப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அந்த வழக்கில் கருநாடக அரசை எதிர்மனுதாரராக சேர்த்து தமிழக அரசையும் அதில் ஒரு பார்ட்டியாகச் சேர்த்து மற்றுமுள்ள நிறுவனங்களையும் அதில் சம்பந்தப் பட்டவர்களையும் சேர்த்து ஒரு 5 ரெஸ்பான்டென்ட்களைக் கொண்ட வழக்கைத் தொடர்ந்திருக்கிறார். அந்த வழக்கில் கருநாடக மாநிலத்தின் சார்பில் பதில் மனு தாக்கல் செய்திருக்கிற விவரத்தை மட்டும் இங்கே சொன்னால் மதிப்பிற்குரிய திரு. மணிமாறன் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பதில் மனு தாக்கல் செய்கிற நேரத்தில் கருநாடக மாநிலத்தின் மரியாதைக்குரிய பொதுப் பணித் துறையின் தலைமைச் செயலாளர் திரு. பி. எச். ராஜன் என்பவர் தனது

அஃபிடவிட்டில் கீழ்க்கண்ட கருத்தை மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் :

"Besides, the State of Tamil Nadu have filed a suit seeking similar relief in this Hon'ble Court in 1971 and have withdrawn the same in August 1972 as per the order quoted below............"

அதோடு அவர் விடவில்லை. இன்னொன்றையும் அவர் சொல்லியிருக்கிறார். அதோடு விட்டிருந்தால் நான்கூட மௌனமாக இருந்திருப்பேன். ஆனால் அவர் இன்னொரு கருத்தையும் அதில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். அதாவது கருநாடக மாநிலத்தின் பொதுப்பணித்துறையின் இரண்டாவது செயலாளர் அவர்கள், 1972 ஆம் ஆண்டிலிருந்த நமது ஆட்சியைப் பற்றி எப்படிச் சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"......It is surprising to us why this individual is taking such risk while the State Government has with drawn the same..."

ஆக அலட்சியப் போக்கால், மெத்தனப் போக்கால், தஞ்சை மாவட்ட மக்களின் நலனில் அக்கறை இல்லாத தன்மையால்—என்று நான் சொல்ல மாட்டேன், கருநாடக மாநிலத்தில் இருக்கிற பொதுப் பணித் துறையின் செயலாளரே சொல்லியிருக்கிறார்.

அப்படிப்பட்ட ஒரு அரசு இந்த மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், பட்டுக்கோட்டையில் பிறந்திருக்கிற இந்த கிருஷ்ணமூர்த்தி ஐயருக்கு மட்டும் என்ன அக்கறை வந்திருக்கிறது என்று குத்தலான கேள்வியைக் கருநாடக மாநிலத்தின் பொதுப்பணித் துறையின் இரண்டாவது செயலாளர் தனது கவுண்டர் அஃபிடவிட்டில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களிடம் தான் இன்றைக்குக் கேட்க விரும்புவதெல்லாம், ஏதோ அரசியல் விற்பன்னர்கள் சொல்வதாக ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் மத்தியிலே இருக்கிற காங்கிரஸ் அரசும் சேர்ந்து கூட்டாகச் சதி செய்வதைப் போல நீங்கள் குற்றச்சாட்டு வைக்கிறபோது அன்றைக்கு மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியிருந்தபோது—அம்மையார் திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஆட்சி இருந்தபோது—மாநிலத்தில் கொடி கட்டிப் பறந்த ஆட்சி யாருடைய ஆட்சி என்பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். உரிமைக்குக்





குரல் கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று மேடையிலே வசனம் பேசிய ஆட்சி யாருடைய ஆட்சி என்பதை மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருநாடக மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மாநிலத்துக்குத் துரோகம் செய்வதாக அல்லது இங்கு விளைவிப்பதாகக் கருதிக்கொண்டுதான் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டுக்கு விரோதமான முறையில் மனுவில் அவர்கள் தருகிற சாட்சியத்தை ஆதாரமாகக் காட்டிப் பேசுவது சரியில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் அவர்கள் தமிழ்நாட்டுக்குச் சாதகமாகக் கொடுப்பார்களா என்பதையும் நாம் எண்ணிப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். வழக்கை அன்றைக்கு வாபஸ் வாங்கினோம் என்றால் வாபஸ் வாங்கினால்தான் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்த்து வைக்க முடியும் என்று திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னதாலேதான் வாபஸ் வாங்கினோமே தவிர ஏதோ தஞ்சை மாவட்டத்திற்குத் தீங்கு விளைவிக்க அல்லது தமிழ்நாட்டுக்கு பாதகம் ஏற்படுத்த வேண்டுமென்று அன்றைக்கு வாபஸ் வாங்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே வழக்கை ஏன் வாபஸ் வாங்கினீர்கள் என்பதுதான் கேள்வியே தவிர எந்தச் சூழ்நிலையில் வாங்கினீர்கள் என்பது பிரச்சினையே அல்ல. விளைவை வைத்துதான் நாங்கள் நோக்கங்களை ஆராய்கிறோம். இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற விளைவுகளை தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த தஞ்சை மண்ணின் மைந்தனான திரு. மணிமாறன் ஏற்றுக்கொள்வார் என்று நான் நம்புகிறேன். எனவே அந்த அடிப்படையில் பார்ப்பீர்களானால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எடுத்த கடுமையான நடவடிக்கையின் காரணமாகத்தான் இன்றையதினம் காவிரியின் குறுக்கே ஹேமாவதி, கபினி போன்ற இடங்களில் அணைகள் கட்டப்பட்டதால் தஞ்சைக்குத் தண்ணீர் வராத நிலை உருவாகியிருக்கிறது என்று மனம் திறந்து ஒத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, காவிரியில் அணை கட்டுவது என்பது 1960-க்கு முன்பு தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு 1972-ல் இருந்து 1975 வரை தொடர்ந்து பேச்சு வார்த்தை, காவிரிப் பகுதிக்காக குழு அமைத்தல், ஆய்வுக் கமிட்டி அமைத்தல் போன்ற பணிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தன. இதை ஏதோ சாதாரண மாக, தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டுவிட்டது என்பதற்காக, விவரம் தெரியாமல், இப்படி உள்நோக்கோடு ஆங்கு எதிர்த்தார்கள் என்று பேசுவது வேண்டுமானால் அரசியலுக்கு ஆதாயமாக இருக்கும், ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கு ஆதாயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு வகையில் வாதத்திற்காக நான் இதை ஏற்றுக் கொள்கிறேன். 1972-இல் வாபஸ் வாங்கும்போது பேச்சு வார்த்தை என்று சொல்லி வித்ட்ரா செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. முரசொலி மாறன், ரிட் பெட்டிஷன் 301, 303/72 என்ற வழக்கைத் தொடர்ந்து இருந்தார். உங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், தமிழகத்து பிரஜை 1975 ஆம் ஆண்டு ஏழாவது மாதம் 24 ஆம் தேதி வழக்கைத் திரும்ப பெற்றிருக்கிறார். இதன் மர்மம் என்ன? பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெறவில்லை. பேச்சுவார்த்தை வெற்றி கரமாக நடைபெறாதபோது 1975 ஆம் ஆண்டு அவர் ஏன் வாபஸ் பெற வேண்டும்? 1972-ல் திரும்ப பெற்றிருக்கிறார்கள். 1975 இல் திரும்ப பெற்றிருக்கிறார்கள். தஞ்சை மாவட்ட மக்கள் நலனில் அக்கறை இல்லாதவர்கள் என்பது இதிலிருந்து வெட்ட வெளிச்சமாகிறது என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லு கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. 1972 ஆம் ஆண்டு வழக்கைப் பற்றி மெம்பர் உட்பட சொல்லியிருக்கிறார். இந்த வழக்கை வித்ட்ரா பண்ணத் தேவையில்லை என்று சொல்லுகிறார். அவருடைய ஆர்க்யுமெண்ட் அது. வார்த்தைக்கு வார்த்தைப் பதில் சொல் லுவது என்றால் சரியாக இருக்காது. வித்ட்ரா பண்ணியவர் கள் என்று தெளிவாகச் சொல்லுகிறார். (குறுக்கீடு). அதற் குக் காரணம் இருந்தால் நீங்கள் பேசும்போது தெரிவியுங்கள்.





வித்ட்ரா செய்தது உண்மை. அதை நீங்கள் மறுக்கவில்லை. தவறான தகவலைச் சொன்னால்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர், பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டும். (குறுக்கீடு) என்ன காரணத்திற்காக என்ற விளக்கத்தை நீங்கள் பேசும்போது சொல்ல வேண்டும். இதற்காக அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. பி. என். இராமச்சந்திரன்: அப்படித் தங்களுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருந்த அந்த ஆட்சி, அதைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய தினம் பேச்சுவார்த்தை பலன் அளிக்காது என்ற கொள்கையை ஒத் துக்கொண்டு நடுவர் மன்றத்திற்கு விட வேண்டும் என்ற காலக் கட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கோடிட்டுக் காட்டிக் கூறுவதைக் கடமையாகக் கருது கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்திய திருநாட்டைப் பொறுத்தவரையில் ஒரு மதம் முதல் 100 மதங்களைக் கொண்ட நாடு, ஏறத்தாழ ஒரு கடவுள் முதல் ஆயிரம் கடவுள்களை வணங்கும் மக்கள் இருக்கிறார்கள். மன பிரசர்த்தனை முதல் உயிர்பலி வரை கொடுக்கிற வித்தியாசமான நாடு. இந்த நாட்டில் பேச்சுவார்த்தை என்பது நிச்சயமாக எடுபடாத ஒன்று. ஆகவே இன்றைக்குச் சட்டபூர்வமாக பரிகாரம் காண வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பல்வேறுபட்ட உறுப்பினர்கள் வலியுறுத்தியதை நானும் இந்த அவையிலே இருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள் கூறும்போது நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விட வேண்டும் என்ற வாதத்தை வைத்தார்கள். எனக்கு இதிலே ஒரு சந்தேகம். பன் மாநில நீர்ப்பங்கீட்டுச் சட்டத்தின் ஆறாவது பிரிவில் நடுவர் மன்ற தீர்ப்பே இறுதியாகும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். காவிரி நதி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விட்டாலும் நிச்சயமாகத் தீராது என்பது என்னுடைய வாதம். இந்தச் சட்டத்தின் ஆறாவது பிரிவின் 7 ஆம் பிரிவுகளை, 6-ஏ என்ற பிரிவை ஒரு அமெண்ட் மென்ட் மூலம் சேர்த்திருக்கிறார்கள். 1956 ஆம் ஆண்டுச் சட்டத்திற்கு 1980 ஆம் ஆண்டு ஒரு திருத்தத்தைக் கொண்டு

[திரு. பி. என். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

வந்த நேரத்தில் 6-ஏ என்ற ஒரு பிரிவை உருவாக்கியிருக்கி றார்கள். அதிலே 7 உட்பிரிவுகள் இருக்கின்றன. அதிலே ஒன்றை அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த உட்பிரிவில் அவர்கள் சொல்லும் விளக்கங்களைப் பார்க்கும் போது நிச்சயமாக இந்த நதி நீர் பங்கீட்டுக்கு முடிவு வருவதாக தெளிவாகத் தெரியவில்லை. காரணம் ட்ரிபியூனல் எடுக்கின்ற முடிவுகளை, நடுவர் மன்றம் எடுக்கின்ற முடிவுகளை அரசாங்கம் கெசட்டில் நோட்டிபிகேஷன் கொடுக்க வேண்டும். அப்படி நோட்டிப்பிகேஷன் கொடுத்த பிறகு, ட்ரிபியூனல் உறுப்பினர்கள் எப்படி அந்த முடிவுகளை இம்ப்ளிமெண்ட் செய்வது, ஸ்டாட்டூட்டரி அத்தாரிட்டி (Statutory Authority) யார் என்பதை அவர்களே தீர்மானம் செய்ய வேண்டும். அதன் பிறகு அந்தக் குழு கூடி பரிசீலித்து இந்த முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள் என்பது 'போகாத ஊருக்கு வழி காட்டுவது போல' இருக்கிறது. இப்படிப்பட்ட ஏழு துணை பிரிவுகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்திய நதிநீர் சட்டத்தின் உட்பிரிவு 6 ஏ-யில் உள்ள ஏழு வாசகங்கள் நிச்சயமாக இதற்குத் தீர்வு காணுவதாக இல்லை. ஆகவே என்னுடைய கோரிக்கை, நதி நீர் பங்கீடு குறித்து வாட்டர் டிஸ்பியூட் ஆக்டைப் பொறுத்தவரையில் அதை [illegible] திருத்தி 6 ஆம் பிரிவில் கோடிட்டுக் காட்ட வேண்டியது என்னவென்றால் உச்ச நீதி மன்றம் டைரக்டாக அரசுக்குப் பரிந்துரை அளிக்கும் வகையில் அனுமதி அளிக்கும் சட்டத் [illegible] உருவாக்கினால்தான், இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட்டால் தீர்வு காண முடியும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(இரவு 6-10)

அதைப்போல, இந்திய அரசியல் சட்டத்தில் நதிநீர்ப் பிரச்சினையைப் பற்றி 262 ஆம் பிரிவு, சப்கிளாஸ் 2-ல் விளக்கியிருக்கிறார்கள். அதில் கோடிட்டுக் காட்டியிருப்பது இந்தியப் பாராளுமன்றம் ஒரு தனிப்பட்ட [illegible] சட்டத்தை உருவாக்கிச் செயல்படுமானால் உச்ச நீதிமன்றம் [illegible] [illegible] பிரச்சினை [illegible] [illegible] [illegible] [illegible] பாராளுமன்றம் [illegible] [illegible] சட்டம் நதி நீர் [illegible] [illegible] செய்யவில்லை [illegible] [illegible]



1987 ஏப்ரல் 29] [திரு. பி. என். இராமச்சந்திரன்]

கோரிக்கை. ஆகவே இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 262 சப்கிளாஸ் (2) உடனடியாகத் திருத்தப்பட வேண்டும். இன்னும சொல்லப் போனால் இந்தியாவில் இருக்கின்ற அரசியல் சட்டங்களானாலும் மத்தியச் சட்டங்களானாலும் பயன் தருகிற பனை மரத்தில் பன்னாடைகள் தொங்கிக் கொண்டிருப்பது போல தேவையற்ற சட்டங்கள் இருக்கின்றன. மொழிப் பிரச் சினை, நதி நீர்ப் பிரச்சினை, மனிதனுடைய ஜீவாதாரப் பிரச் சினை என்றாலும் இந்திய அரசியல் சட்டத்தில் தேவையற்ற பிரிவுகள் இருக்கின்றன. அரசியல் சட்டத்தை யாத்தவர்கள் * அவர்கள்தான் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் தான் அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு தகுந்த முறையில் பரிந் துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னும் ஒன்றைக் கோடிட்டுக் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுகோளாக ஒன்றை வைக்க விரும்புகிறேன். 1967-ஆம் ஆண்டு மக்கள் மன்றம் தீர்ப்பு வழங்கி காங்கிரஸ் கட்சியை ஆட்சியிலிருந்து நீக்கியது. ஏனென்று நீங்கள் அறிவீர்கள். இன்றைய தினம் நதி நீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு சரியான முடிவுகளை எடுக்கத் தவறினால் மக்கள் மன்றம் மீண்டும் காங்கிரஸ் கட்சி பற்றி மறுபரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அது என்னுடைய தோழமைக் கட்சி.

அடுத்து மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரு கிறேன். இது முக்கியமான பிரச்சினை. நமது பொதுப் பணித் துறையில் எஸ்.இ.-ஆக இருந்த இருவரில் ஒருவர் ஸ்ரீபாதராவ், எஸ்.இ., மற்றொருவர் ஆனந்தபாபு, எஸ்.இ.—இவர்கள் இருவரும் ரிடையர் ஆகிவிட்டார்கள். ஆனால் இவர்கள் இருவரும் கர்நாடக மாநிலத்திலே, காவிரி டிஸ்பியூட் சம்பந்தமாக

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பி. என். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

டெக்னிகல் கன்சல்டன்டுகளாகச் செயல்படுகிறார்கள். அவர்கள்
கொடுத்திருக்கிற தகவல், கமிட்டியினுடைய ரிப்போர்ட்டில்
இருக்கிறது. எங்களுடைய வழக்கறிஞர், சுப்பிரமணியத்
தினுடைய தந்தை தொடுத்த வழக்கில், கிருஷ்ணமூர்த்தி ஐயா
வழக்கில் அந்த 2 இன்ஜினியர்களும் கொடுத்த சரியான தகவலின்
அடிப்படையில்தான் இந்தக் கவுண்டர் அபிடவிட்டை
கர்நாடக மாநில இரண்டாம் செயலாளரும், பொதுப்பணித்
துறைச் செயலாளரும் தயாரித்திருக்கிறார்கள். அது குறித்து
நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
தமிழகத்திலுள்ள நில ஆதாரங்கள், நிலத்தடி நீர் ஆதாரங்கள்,
எங்கெங்கெல்லாம் நாம் பம்ப் செய்து நீர் எடுக்கிறோம் என்ற
விவரங்கள், கோவைக்காரர்கள், சேலத்துக்காரர்கள்,
ஈரோட்டுக்காரர்கள் எப்படி எடுக்கிறார்கள் என்ற விவரங்கள்,
மற்ற மற்ற விவரங்களை எல்லாம் சம்பந்தப்பட்ட இரண்டு
அதிகாரிகளும் கர்நாடக மாநிலத்திற்குக் கொடுத்து உதவு
கிறார்கள். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்பு
கிறேன். அருள்கூர்ந்து புரட்சித் தலைவர் அவர்கள் அரசும்
பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் இதில் தீவிர கவனம்
செலுத்தி, தகுந்த மேல் நடவடிக்கை எடுத்து, நமது கஞ்சை
மாவட்ட மக்களின் குறையைப் போக்கும் வகையில் காவிரிப்
பிரச்சினையில் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் இனிய தலைவர் . மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களுடைய வேண்டுகோளான, ஆறுகளை எல்லாம்
தேசிய ஆறுகளாக அறிவிக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்
கையை வலியுறுத்தி, வாய்ப்புத் தந்த தலைவரவர்களுக்கு மீண்டும்
நன்றி கூறி, முடிக்கிறேன்.

* திரு. வி. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் . துறை
அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக்
கோரிக்கையை வரவேற்று, ஒருசில கருத்துக்களை மட்டும் நான்
எடுத்துக் கூற விழைகிறேன்.

சோழநாடு சோறுடைத்து என்ற பழமொழிக்கு ஏற்ப
வளம் சேர்க்கவும், சிறப்பான பணிகள் நடைபெறவும் 1987-88
ஆம் ஆண்டிற்கு 228 கோடியே 85 லட்சத்து 51 ஆயிரம் ரூபாயை
பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கிய இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அரசை நான் பாராட்டுகிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. வி. சுப்பிரமணியன்]

புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான்
கூடுதலாக 48 ஆயிரம் ஹெக்டேர் நிலத்திற்குக் கூடுதல் நீர்ப்பாசன
வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதற்காக புரட்சித்
தலைவரின் அரசை நான் பாராட்டுகிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர
பாசனத் திட்டங்களுக்குக் கூடுதலாக 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள்
பாசனவசதி பெறும் இலக்கை எய்த நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இதற்காக ரூ. 244 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வள மேலாண்மைத் திட்டத்தின்கீழ், மத்திய அரசு,
உலக வங்கியின் உதவியோடு அதிக பரப்பளவில் பாசனம் பெற
திட்டப்பட்டுள்ள சாத்தனூர் திட்டம், கோதையார் திட்டம்,
தாமிரபரணி திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் மற்றும்
அமராவதி பழைய கால்வாய்களை மேம்படுத்துதல் ஆகிய
திட்டங்களில் சாத்தனூர் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதலை
அளித்துள்ளது.

சாத்தனூர் அணைக்கட்டின் மூலம் வட ஆற்காடு
மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறு
கின்றன. எங்கள் மாவட்டமான தென் ஆற்காடு மாவட்டத்தில்
2 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறுகின்றன.
ஆனால் விழுப்புரம் வட்டத்திலுள்ள 12 ஏரிகள் பாசன வசதி
யில்லாமல் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். இதைக்
கருத்தில் கொண்டுதான் நந்தன் கால்வாய்த் திட்டம் என்ற
திட்டத்தை அமுல்படுத்த மறைந்த முன்னாள் அமைச்சர்
மரியாதைக்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வலியுறுத்
தினார். ஆனால் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல்
விட்டுவிட்டனர். நான் சென்ற ஆண்டும் நந்தன் கால்வாய்த்
திட்டத்தை அமுல்படுத்த வற்புறுத்தினேன். நடவடிக்கை
எடுக்கவில்லை. அந்தத் திட்டத்தை அமுல்படுத்த தாயுள்ளம்
கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும்
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும்
மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இத்திட்டத்தை அமுல்படுத்தினால் எனது தொகுதியிலுள்ள
விக்ரவாண்டி ஒன்றியத்தில் முட்டத்தூர் நகர், பிரமதேசம் மற்றும்
எசாலம் ஆகிய ஏரிகளின் மூலம் விவசாய நிலங்கள் பாசனவசதி
பெறும் என தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. சுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 29

ஒருவேளை நந்தன் கால்வாய்த் திட்டத்தை அமுல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுமேயானால், உலக வங்கியின் உதவியோடு தீட்டப்பட்டுள்ள சாத்தனூர் திட்டத்தின் ஒரு பகுதியாக, விழுப்புரம் வட்டத்திலுள்ள 68 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில், சாத்தனூரிலிருந்து தனியாக ஒரு கால்வாயை வெட்டி, விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற பயன் பெறுகின்ற வகையில் திட்டம் ஒன்றைத் தீட்டி, அன்புள்ளம் கொண்ட பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அமுல் படுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சுறுசுறுப்பாகவும் பாராட்டுக்கும் உரிய வகையில் பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு இருக்கும் மரியாதைக்குரிய அண்ணன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இதையும் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதுபோலவே ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் உதவியோடு, ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் எனது தொகுதியிலுள்ள பூவரசங்குப்பம், சிறுவந்தாடு, பாக்கம் மற்றும் இராம்பாக்கம் ஏரிகளைச் சீர்படுத்த அன்புடன் வேண்டிக்கொள் கிறேன்.

மேலும் கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள 365 ஏக்கர் பரப்பளவுள்ள திருமங்கலம் ஏரியைப் பயன்படுத்தி, அணைக்கட்டு ஒன்று கட்டித்தர, தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன். இந்த அணைக்கட்டு கட்டினால், எனது தொகுதியிலுள்ள சித்தலம் பட்டு, கொடுக்கூர், புதுக்குப்பம், பிடாரிப்பட்டு, முட்ராம்பட்டு, நெற்குணம், களித்திரம்பட்டு, விநாயகம்பட்டு, குறாம்பாளையம் ஆகிய கிராம பாசன நிலங்கள் பயன்பெறும். ஆகவே இத்திட்டத்தை அமுல்படுத்த, நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். விக்ரவாண்டியில் பொதுப் பணித் துறையின் மூலம் பயணியர் விடுதி ஒன்று கட்டித்தர மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரை வேண்டிக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகருக்கு கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கும் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. வி. சுப்பிரமணியன்]

(இரவு 6-20)

இறுதியாக, கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் சில ஆறுகளின் உபரி நீரை தமிழ்நாட்டின் வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காகத் திருப்பி விடும் திட்டத்தின் ஆய்வுப் பணிகளை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும், இதற்குத் தேவையான நிதி வசதி அளிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பாராட்டி, அத்திட்டத்தையும் விரைவுபடுத்த வேண்டுமென்று பணிவுடன் வேண்டிக் கேட்டு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் இங்கே அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற பாசனம் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் கடுமையான வறட்சி ஏற்பட்டிருந்தாலும் கீழ்பவானி அணையிலே நான்கில் ஒரு பங்கு தண்ணீர் வரத்தே இருந்தாலும் பவானி கால்வாயில் முதல் பாசனத்திற்காக, ஒரு போகத்திற்காக, தண்ணீர் திறந்து விட்டு விவசாயிகளின் முக்கியமான கோரிக்கையை நிறைவேற்றியதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய பெரியார் மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்றையதினம் கீழ் பவானி ஆற்றிலேயிருந்து தஞ்சைக்குத் தண்ணீர் திறந்து விடுகின்ற நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அவ்வாறு திறந்துவிடுகின்ற தண்ணீர் நிறுத்தப்பட்ட காரணத்தால்தான் எங்கள் பகுதியில் ஓரளவு தண்ணீர் கிடைத்து ஒரு போகமாவது பயிரிடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே, கீழ்பவானியி லிருந்து தஞ்சைக்குத் தண்ணீரைத் திறந்து விட்டால் நிச்சயமாக

[திரு. வே. கு. சின்னசாமி] [1987 ஏப்ரல் 29

அந்தக் குறைந்த தண்ணீரை வைத்துக் கொண்டு தஞ்சையில்
முழுமையாக விவசாயம் செய்ய வாய்ப்பு இல்லை என்பதோடு
மாத்திரமல்லாமல் பவானி விவசாயிகள் இந்தத் தண்ணீரையே
நம்பியிருப்பதால் இவ்வாறு கீழ்பவானி அணையிலிருந்து
பவானி ஆற்றில் திறந்து விட்டு காவிரியில் அந்த நீர் வருமாறு
விடுவது தயவுசெய்து நிறுத்தப்பட வேண்டுமென்று பெரியார்
மாவட்ட விவசாயிகள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தஞ்சையில்—
ஒரு ஏக்கருக்கு எவ்வளவு தண்ணீரை பவானி ஆயக்கட்டிலுள்ள
நீரைப் பயன்படுத்தி மகசூல் செய்கிறார்களோ—அதைவிடக்
கூடுதலாக அதே தண்ணீரைப் பயன்படுத்தி 5 ஏக்கர் நிலங்களுக்கு
மேல் பயன்படுத்தி அதேசமயத்தில் அதிகப்படியான மகசூலையும்
உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் எங்கள் பகுதியில் இருக்
கிறார்கள். ஆகவே, கீழ்பவானி தண்ணீரைப் பொறுத்த
வரையில் இந்த ஆண்டு கீழ்பவானி பாசனப் பகுதியிலே
ஏறக்குறைய 20 ஆயிரம் ஏக்கராக்களை மீண்டும் ஆயக்கட்டில்
இணைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக,
அனுமதி அளித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இன்றைக்கு அங்கே கிட்டத்தட்ட 2 லட்சம் ஏக்கருக்கு
மேல் ஆயக்கட்டுக்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட
நிலை இருந்தாலும் கூட அதிலே சில இடங்களிலே நில ஆர்ஜிதம்
செய்த வகையிலும் மற்றும் சில வகையிலும் கிட்டத்தட்ட
20 ஆயிரம் ஏக்கர்கள் ஒட்டுமொத்தத்தில் விடுபட்டுப் போயிருந்த
படியால் இப்போது அதற்கான வாய்ப்பினை நல்க முன் வந்தி
ருக்கிறார்கள்.

அடுத்து, கோபி தாலுக்காவிலுள்ள கரட்டுப்பாளைய கிராம
விவசாயிகள், காராப்பாடி விவசாயிகள், கடத்தூர் கிராம
விவசாயிகள் இவர்கள் எல்லாம் பல ஆண்டுகளாக ஓர் கோரிக்
கையை வைத்திருக்கிறார்கள். அதாவது இந்த ஆயக்கட்டு
களைச் சேர்த்து முன்னுரிமை வழங்கி இந்த ஆண்டு முடிக்க
வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தப்
பகுதி வழியாகத்தான் கால்வாய், கிளைக் கால்வாய் எல்லாம்
செல்லும். இப்படிச் செய்வதன் மூலம் இப்பகுதியிலுள்ளவர்கள்



1987 ஏப்ரல் 29] [திரு. வே. கு. சின்னசாமி]

பயன் பெறுவார்கள். யாரோ பெரியவர்கள் செய்த தவறினால்
அவர்களுடைய ஆயக்கட்டுகளுக்குப் பாசன வசதி கிடைக்காத
நிலை இருக்கிறது. ஆகவே அங்கு பாசன வசதிக்கு
ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். அதற்கான செலவை அவர்களே பொறுப்பேற்று
செலவு செய்யத் தயாராக இருக்கிறார்கள். கால்வாய் வெட்டுதல்,
மதகு அமைத்தல் போன்றவற்றுக்கு அவர்கள் தங்களால் ஆன
அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும்
மேற்கு நோக்கி வீணாகப் பாய்கின்ற பாண்டியாறு-புன்னம்புழா
போன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்
கள். என்னைப் பொறுத்தவரையில் இது குறித்து ஒன்றைச்
சொல்கிறேன். நீலகிரியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை
களில் குந்தா பகுதிகளில் உள்ள சிறு சிறு ஆறுகள் கேரள
மாநிலத்திற்கு பவானி ஆறாகப் பாய்ந்து சிறுவாணி ஆறு,
போட்டுக்கடவு ஆறுகளுடன் சேர்ந்து கேரள மாநிலத்தார்
முழுப் பயன்களை அனுபவித்த பின் மீண்டும் சிறு பகுதியாக
சிறிதளவு நீர் நமது அத்திக்கடவு வழி பில்லூர் அணைக்கு
வருகிறது. மூல இடமாகிய தமிழ்நாட்டிலே இந்தத் தண்ணீரைத்
தடுத்தால் நம் மாநிலத்திற்கு அதிகப் பயன் கிடைக்கும் என்பதை
நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூடலூர் பகுதியில் உள்ள பல சிறு ஆறுகள் வீணாகக் கேரள
மாநிலத்திற்குச் சென்று, தமிழகத்திற்குப் பயனில்லாமல்
வீணாகச் செல்கின்றன. இது சம்பந்தமாக முன்பிருந்த
மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய
காலத்தில் கூடலூரிலே கபினி அணை என்ற பெரிய அணையைக்
கட்டி தண்ணீரைத் தேக்கி தமிழகத்திற்கு அதன் வாயிலாக முழுப்
பலனைப் பெறலாம் என்ற ஒரு திட்டம் இடப்பட்டிருப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு வந்த திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சியில் அது கைவிடப்பட்டது என்றும்
இன்றையதினம் குறிப்புகள் காட்டுகின்றன. இருந்தாலும்
அந்தத் திட்டங்களை நம்முடைய மரியாதைக்குரிய தமிழக
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், பொதுப்பணித் துறை
அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு
அமைச்சர்வர்களும் இந்தக் கபினி அணைத் திட்டத்தை நிறை

[திரு. வே. கு. சின்னசாமி] [1987 ஏப்ரல் 29

வேற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறோம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரி
யாற்றுக்கு மொத்தமாகச் சேர்ந்து கீழ்பவானிக்கு வருகின்ற
தண்ணீரினுடைய அளவுகூடும். கீழ்பவானி அணைக்குத் தேவைப்
படுகின்ற தண்ணீர் போக தஞ்சைக்கும் செல்லுகின்ற ஒரு நல்ல
வாய்ப்பும் இருக்கும். கர்நாடக மாநிலத்திடம் நாம் கையேந்தி
அவர்களிடம் கேட்கின்ற நிலைமையிலேகூட நாம் இன்னும்
சிரமமில்லாமல் இந்தத் தண்ணீரைக் காவிரிக்குத் திருப்பி
விடுவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதை இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பகுதியிலே இருக்கின்ற மலைப் பகுதியிலே
சில காட்டாறுகள் நம்முடைய தமிழகத்தினுடைய பகுதியிலே
யிருந்து—அந்தக் காட்டாறுகளில் மழைக்காலத்தில் வரும்
தண்ணீர்—கர்நாடக மாநிலத்திற்குச் சென்று வீணாகச் செல்
கிறது. அந்த ஆறுகளையும் தடுத்து நிறுத்தினால், அதனை
பவானி ஆற்றிலே, சத்தியமங்கலத்திலே இருக்கின்ற பகுதி
களில் பவானி ஆற்றோடு இணைக்கின்ற ஒரு நிலைமை உரு
வாகும். அப்பொழுது காவிரிக்கும் தண்ணீர் வரும். பவானி
ஆற்றிலே அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, காளிங்கராயன்
போன்ற பகுதிகளுக்கும், காட்டாற்றைத் தடுத்து நிறுத்தி
விடுவோமேயானால் இன்னும் நீர் வரத்து அதிகமாகக் கூடும்
என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்
திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பவானிசாகர் அணை கட்டப்
படும் நேரத்தில் அங்கே பல கட்டிடங்கள் கட்டப்பட்டன.
அதிலே அங்கே கூலிஸ் லைன் என்று இருக்கின்ற அந்தக்
கட்டிடங்கள் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை.
அந்தக் கட்டிடங்களெல்லாம் கண்டெம்ட் ரிஜிஸ்தரில் பதிவு
செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டிடங்கள் குடியிருப்புக்குத்
தகுதியற்றவை என்று அரசாங்க பைலிலே இருக்கிறது. இருந்
தாலும் அந்தக் கட்டிடங்களைப் பொதுப்பணித் துறை இடித்து
சுத்தப்படுத்துவதற்கு—ஒருமுறை ஆறு பிளாக்குகளை இடிக்க
டெண்டர் வைக்கப்பட்டது. அதிலே ஒரு பிளாக்கை இடிப்
பதற்கு மட்டும் 3,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆகவே,
செலவு அதிகமாகச் செய்து சுத்தப்படுத்த வேண்டியதாக இருப்
பதால் அங்கே இருக்கின்ற ஏழை எளிய அரிசனங்கள் சாதாரணக்



1987 ஏப்ரல் 29] [திரு. வே. கு. சின்னசாமி]

கூலி வேலை செய்கின்ற அரிசனங்கள் 300 குடும்பங்கள் 40, 50
ஆண்டுக்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடம் வாட
கையாக 1 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை வசூல் செய்கிறார்
கிறார்கள். சிலபேர் அதைக்கூடக் கொடுக்க இயலாது, கொடுக்க
முடியாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்கள் பலமுறை
விண்ணப்பித்திருக்கிறார்கள். நம்முடைய பொதுப்பணித்
துறை அமைச்சருக்கு நான் நேரடியாகக் கவனத்திற்குக் கொண்டு
வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் குடியிருப்புகளை
அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே
பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அதே அடிப்படையில் மேட்டூர் டவுன்ஷிப்பிலேயிருந்த
பொதுப்பணித் துறையைச் சேர்ந்த குடியிருப்புகளை
10—6—1954 அன்று அரசாணை எண் எம்.எஸ். 2084-படி அவர்
களுக்கே கொடுத்திருக்கிறார்கள். கூலிஸ் குடியிருப்புகளுக்கு
75 ரூபாயும், பிட்டர் குடியிருப்புகளுக்கு 175 ரூபாயும், பியூன்
குடியிருப்புகளுக்கு 175 ரூபாயும் என்று அவர்களிடம் வரி
வசூல் செய்து தந்திருக்கிறார்கள். அதே அடிப்படையில்
இவற்றையும் தர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் பணிவன்
போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய
டாக்டர் பொன்னுசாமி அவர்களுடைய பெருந்துறையிலுள்ள
நொய்யலாற்றின் குறுக்கே மண்ணரை என்ற இடத்தில் அணை
கட்ட வேண்டும். பெரியார் மாவட்டத்தில் வறண்ட பகுதி
யான ஊத்துக்குளி, தென்னைமரப் பகுதிகள் பயன்பெறும்.
பத்து கோடி ரூபாய் மதிப்பிலுள்ள இந்த அணையை நிறை
வேற்றினால் பத்தாயிரம் ஏக்கர்கள் நிலம் பயன் பெறுகின்ற
வகையிலே உள்ளதால் இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பவானி தொகுதியிலே அட்டவணைப்புதூரில் சித்தார்
ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டித் தர வேண்டு
மென்றார். இதனால் 2,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்
என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது).

[1987 ஏப்ரல் 29

(இரவு 6-30)

*திரு. மு. இராசாங்கம்-: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின்மீது ஒருசில கருத்துக்களை நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்று காலையிலிருந்து பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அந்தக் கருத்துக்களுடன் காங்கிரஸ் பேரியக்கத்தின் அதே கருத்தையும் இணைத்துக் கொண்டு மற்ற சில கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கிடைக்க மத்திய அரசோடு பேசி, அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் 1970-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 36,000 ஏரிகளும், குளங்களும் இருக்கின்றன. அந்த ஏரிகளையும், குளங்களையும் சரியாகச் செப்பனிடாமல், அதன் காரணமாக நீர்தேங்கி நிற்க முடியாததால் நிலத்தடி நீர் குறைந்துவிட்டது. அதன் காரணமாக பூமியில் ஈரத்தன்மை குறைந்து, பருவகாலங்களில் உரிய அளவிற்கு மழை பெய்யவில்லை. ஆகவே, அரசு முழுமையாக தன்னுடைய பொதுப்பணித் துறையின் மூலமாக எல்லா ஏரிகளையும் குளங்களையும் தூர் எடுத்து, பாசனக் கால்வாய்களையும் செப்பனிட்டுத் தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஆறுகளை முன்பு பராமரிப்பு செய்தது போல் இப்போது பராமரிக்க முடியாத காரணத்தால் கடைமடைப் பகுதியில் தண்ணீர் பாய்வதில்லை. தேவையான பல இடங்களில் 'ரிவிட்மென்ட்' கட்டாத காரணத்தால் ஒன்றிரண்டு நாட்கள் மழை பெய்தாலும்கூட பல இடங்களில் உடைப்பு ஏற்படுகிறது. ஆகவே, தேவையான இடங்களில் ரிவிட்மென்ட்



1987 ஏப்ரல் 29] [திரு. மு. இராசாங்கம்]

கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். புதிதாக ரிவிட்மென்ட் கட்டுவதோடு, ஏற்கெனவே கட்டப்பட்ட ரிவிட்மென்ட்டுகள் சில இடங்களில் பழுதடைந்திருக்கின்றன; ஒரு சில ஆயிரம் ரூபாயில் அவற்றைப் பழுதுபார்க்க முடியும்; பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் எல்லாம் புதிதாக ரிவிட்மென்ட் கட்டுவதிலே ஆர்வம் காட்டுகிறார்களே தவிர பழுதடைந்திருக்கிற பழைய ரிவிட்மென்டுகளை பழுதுபார்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இது சரியான நடைமுறை இல்லை. பழுதடைந்தவைகளைப் பழுதுபார்த்து பராமரிக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் ஆறுகளில் சில இடங்களில் தண்ணீர் வராததாலும் குறைவாக வருவதாலும் ஆற்றுப்படுகையில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் ஆற்று நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து, அதனுடைய அகலத்தைக் குறைத்துவிடுகிறார்கள். ஆகவே அவசியமான இடங்களிலும் ஆங்காங்கே ரிவிட்மென்ட் கட்ட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தண்ணீருக்கு முக்கியத்துவம் காட்டுவதைப்போல் வடிகால்களுக்கு முக்கியத்துவம் காட்டுவதில்லை. அதே அளவுக்கு இதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் இன்றைக்கு 696 பெரிய வடிகால் திட்டங்களுக்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. அதிலே தஞ்சை மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 1986-87 ஆம் ஆண்டிலே பொதுப்பணித் துறையின் மூலமாக சுமார் 2½ கோடி ரூபாய்க்கு தவறு நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை வலியுறுத்தி நான் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 2½ கோடி ரூபாய்க்கு வேலை செய்ததில் ஒருசில இலட்சம் ரூபாய்க்குத்தான் வேலை நடந்திருக்கிறது. அதனால் கிட்டத்தட்ட 2¼ கோடி ரூபாய்க்கு தவறு

நடந்திருக்கிறது. அதன் காரணமாக கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரும், நிர்வாகப் பொறியாளர் இருவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதோடு விட்டு விடாமல் அதற்கு சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகள் மீதும் இதேபோன்று நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அது சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு கண்காணிப்புப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருப்பது போதுமானது அல்ல. அந்த அந்த கிராமத்திலுள்ள விவசாயிகளிடம் அந்த அந்த ஆறுகள், கால்வாய்கள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றனவா என்று விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் 2½ கோடி ரூபாய் அளவுக்கு முழுமையாக, உண்மையாக மராமத்து செய்திருந்தால் தஞ்சை மாவட்டத்தின் தண்ணீர்த் தேவை ஓரளவுக்கு . . .

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலே இரண்டரைக் கோடி ரூபாயக்கு தவறுகள் நடந்திருப்பதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 2½ கோடி ரூபாய் என்று அறுதியிட்டுச் சொல்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த கணக்கு தஞ்சை மாவட்டத்தில் வெண்ணாறு, காவிரியில்—ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிற ரூபாய் அளவைது—ஒவ்வொன்றுக்கும் 60 இலட்சம் ரூபாய் தான். அந்த அளவுக்குத்தான் ஒதுக்குகிறார்கள். ஆனால் இரண்டரைக் கோடி ரூபாய் போன ஆண்டில் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அதுகுறித்து உரிய விளக்கத்தைத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு காவிரி, வெண்ணாறு பகுதியில், அதாவது இரண்டு பகுதிகளுக்கும் சேர்த்து அரசு சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் அனுமதித்ததாகவும், பின்னர் அங்கே உள்ள அதிகாரிகளுடைய முயற்சியின் காரணமாக அங்கே 2½ கோடி ரூபாய் அளவுக்கு வேலைகள் செய்யப்பட்டது போல் பில் போடப்பட்டு இன்னும் உரிய தொகை வழங்காத நிலை [illegible] என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் [illegible] விரும்புகிறேன்.



அதேநேரத்தில் நம்முடைய மாண்புமிகு அரசு தரப்பின் கொறடா அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்கள். ஒவ்வொரு ஆண்டும் தஞ்சை மாவட்ட விவசாயத்தைப் பற்றி மிகவும் அக்கறையோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே காலையிலே உரையாற்றியபோது சத்துணவில் தவறுகள் நடந்ததுபோல் ஒருசில தவறுகள் நடந்திருக்கக்கூடும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் காட்டிய வழியிலேயே நான் சொல்கிறேன், அங்கே அதிகப்படியான தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை வலியுறுத்தி முறையான விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இரண்டரைக் கோடி ரூபாய் என்று சொல்வது தவறு. ஒன்றரைக்கோடி ரூபாய் அளவுக்குத்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதைவிட அதிகப்படியாக எஸ்டிமேட் போட்டிருப்பதாகத் தகவல் வந்ததன் காரணமாகத்தான் அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே பூராவும் காட்டாமணக்கு வெட்டியதாகவோ அல்லது மண்ணை வெட்டியதாகவோ இல்லை. வேறு பகுதிகளில் கரைகள் கட்டியிருக்கிறார்கள். செங்கல் வேலை செய்திருக்கிறார்கள். இத்தனை வேலைகளுக்கும் சேர்ந்துதான் இந்த ஒதுக்கீடு. அதிலே எவ்வளவு காட்டாமணக்கு வெட்டியது, எவ்வளவு மண் வெட்டியது என்று பிரித்து இப்போது வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலைக் குறிப்பிட்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசே தவறு நடந்திருக்கின்றது என்பதை உணர்ந்துதான் மூவரை தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான திருவிடைமருதூரில் காவிரி மற்றும் 8 ஆறுகள் ஓடுகின்றன. எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒருசில நிமிடங்கள் கூடுதலாகக் கொடுக்க

வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள மண்ணியாறு, பாபநாசம் தாலுக்காவிலி ருந்து அதாவது காவிரியிலிருந்து பிரிந்து வருகிறது. அதனு டைய தலைப்பிலே 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு 3 அடி உயரத்தில் மண்மேடு ஏற்பட்டு இருக்கிறது. அந்த ஆற்றைப் பொறுத்தவரையில் தலைப்பிலே நீர் கொள்ளளவு 900 கன அடி தண்ணீராகும். ஆனால் மண்மேடு ஏற்பட்டு இருப்பதன் காரணத்தால் எங்களுடைய தாலுக்காவிற்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே அந்த மண்மேட்டை அகற்றுவதற்கு அரசு உத்திரவிடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் மண்ணியாற்றில் குழிச்சியில் ஒரு ரெகுலேட்டர் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால் ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கிடைக்கக்கூடிய வகையில் சாதகமாக அமையும்.

அடுத்து கொள்ளிடத்திலிருந்து பிரியும் குமுக்குமண்ணி என்ற வாய்க்கால் தலைப்பை விரிவுபடுத்தினால் அதன்மூலம் 10 கிராமங்களில் உள்ள கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணியாற்றில் 10.4 கிலோ மீட்டர் அளவுக்கு லைனிங் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மற்ற பகுதிகளிலும் லைனிங் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முன்பு செய்ததுபோல் செங்கல்லால் லைனிங் செய்தால் நீண்ட நாட்களுக்கு நிரந்தரமாக இருக்கும் என்று ஆலோசனை கூற விரும்புகிறேன்.

அடுத்து பழவாறு பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே இரண்டு நாட்கள் மழை பெய்தால்கூட அந்தப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவதன் காரணத் தால் அந்தப் பழவாறை ஆழப்படுத்தித் தரவேண்டும். கரை களைப் பலப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து காவிரியிலிருந்து பிரியக்கூடிய வண்ணக்குடி, திருபுவனம் வாய்க்கால்களை ஆழப்படுத்தி இருபுறமும் லைனிங் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீர





சோழன் ஆற்றிலிருந்து மருத்துவக்குடி வாய்க்கால், சாத்த னூர் வாய்க்கால் ஆகியவை ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்குப் பயன்படுகிற காரணத்தால் அதற்கு லைனிங் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கீர்த்திமான் ஆற்றின் மூலம் விளங்குடி ஊராட்சிக்குப் பாசன வசதி கிடைக்கக்கூடிய வகையில் விளங்குடி கால்வாய்த் தலைப்பை மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருமலைராஜபுரம், பவுண்டரீபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும் பெட் டேம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதனை நிறை வேற்றித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். திருமலைராஜன் ஆற்றை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. . . . . (மணியடிக்கப் பெற்றது).

(இரவு 6-40)

**திரு. க. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கை எண். 36, 37, 38, 52 மற்றும் 53 ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதா விவாதத்தில் பங்கு கொள்ள எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றியைச் சொல்லி ஒரு சில கருத்துக்களை இங்கே வைக்க ஆசைப்படுகிறேன்.

நீர்ப்பாசனம் என்றாலே தமிழகத்தைப் பொறுத்த வரை யில் காவிரி நீர்ப் பாசனம் தான் பலருக்கும் நினைவுக்கு வரும். காவிரி நீர்ப் பாசனத்திற்கு கர்நாடகத்திலிருந்து தண்ணீரைப் பெற்று மேட்டூரிலே தண்ணீரைத் தேக்கி அதன்பிறகு முழுவது மாக தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயத்திற்குப் பயன்படும் நிலைமையாகத்தான் இதுவரையில் இருந்து வருகிறது. ஆனால் என்னுடைய தொகுதியான தஞ்சை மாவட்டத்தின் கடைமடைப் பகுதியில் கடை மடைப்பகுதியாக இருப்ப தால் மேட்டூரை திறந்து 1 மாதம் கழித்துத்தான் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது எப்பொழுதும் அதுதான் வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணங்கள் என்று

இதுவரையில் நான் நினைத்துக் கொண்டிருந்தது தவறு என்பதை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். ஆனால் நாங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்றால் கல்லணையிலும் மேலணையிலும் நீர்வந்து தேங்கியபிறகுதான் அந்தப் பகுதியில் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று நினைத்திருந்தோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் சொன்னபோது கீழ் பவானியிலிருந்து நாங்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்திற்கு விடமாட்டோம் என்று அவர்கள் சொன்ன திலிருந்து எங்களுக்கு அச்சம் அதிகமாக வந்து கொண்டிருக் கிறது. ஆகவே அந்த நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர் களிடத்திலும், இங்கே இருக்கின்ற அதிகாரி பெருமக்களுக்கும் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். எனவே மேட்டூரி லிருந்து தண்ணீர் வந்தாலும் தஞ்சை மாவட்டத்தின் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் வருவதற்கு சாத்தியக் கூறு மிகவும் குறைவாக இருப்பதன் காரணத்தால் வடக்குப் பகுதியிலே கொள் ளிடத்திலே குறுக்கே ஒரு அணையைக் கட்டி அதிலே நீரைத் தேக்கினால்தான் எங்கள் பகுதிக்கு நீர்ப் பாசனத்திற்கும், நிலத்தடி நீராக பெர்குலேஷன் வாட்டர் என்று சொல்லுவார் களே அப்படி பைப்புகள் போட்டு எடுத்துக் கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். எங்களுக்கு இருக்கிற அச்சம் எல்லாம் இனிமேல் மேட்டூரிலிருந்து தஞ்சை மாவட்டத்தின் கடைப் பகுதியான எங்களுக்கு நீரை எதிர் பார்க்க முடியாது என்பது தான். ஏனென்றால் வளர்ந்து வருகின்ற சமுதாயத்திலே அவர் களும் தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை யில்தான் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் கீழ் பவானி தண்ணீரை நாங்கள் அங்கேயே பயன்படுத்திக் கொள் கிறோம் என்று சொன்னார்கள்.

நான் அவர் பெயரிலே குறை சொல்வதற்காகக் கூறவில்லை. அவர்கள் அங்கும் அந்த பக்கத்திலே வருகிற தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்கிறார்கள். பயன்படுத்திக் கொள்கிறார்கள். எங்களுக்கு இருக்கிற அச்சம் எல்லாம் இப்போதே மேட்டூரி லிருந்து வருகிற தண்ணீர் வருவதற்கு மாதக் கணக்கில் ஆகிறது.



இவர்களும் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக தண்ணீர் வரவே வராது என்ற நிலைமைதான் தோன்றுகிறது. அதனால் மேட்டூர் தண்ணீரை நேரிடையாக எதிர் பார்க்க முடியாது.

அண்மையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்பு மிகு முதல்வர் அவர்களும் என் தொகுதிக்கு வந்து சர்க்கரை ஆலையைத் துவக்கி வைத்தார்கள். அதனால் அங்கு கரும்பு விவசாயம் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே போல என்னுடைய தொகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு கொள்ளிடத்திலிருந்துதான் வருவதாகச் சொன்னார்கள். இதற்கெல்லாம் நீர் வேண்டும் என்று சொன்னால் எப்படி முடியும்? நிச்சயமாக கர்நாடகத்திலிருந்து நீர் மேட்டூருக்கு வந்தாலும் அதை எதிர்பார்க்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே கொள்ளிடத்திலே கண்டிப்பாக ஒரு அணை யைக் கட்ட வேண்டும். இதை நான் மட்டும் சொல்லவில்லை. ஏறக்குறைய 30, 40 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தவர்களே சொல்லியிருக்கிறார்கள். கொள்ளிடத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு தடுப்பு அணையைக் கட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதே அதைப் பரிசீலனையும் செய்திருக்கிறார்கள். அந்த மறு பரிசீலனை செய்வதன் மூலம் தண்ணீரைப் பாசனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றால் கூட நிலத்தடி நீர் என்ற வகையில் பெர்குலேஷன் வாட்டர் என்று சொல்லுவார்களே அந்த வகையில் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை பைப்புகள் மூலம் உறிஞ்சி எடுத்துக் கொள்ளவாவது அது வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். குடிதண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரி களும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லவில்லை. அதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகக் கருது கிறேன். மேட்டூர் தண்ணீர் எங்களுக்குக் கிடைக்கவில்லை யென்றாலும் குள்ளக்கால் என்ற பகுதியில் இன்னும் ஒரு மாதத்தில் அறுவடையாக இருக்கிறது. அதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. சமீபத்தில் சிறிது தாமதம் இருந்தது. இந்த

ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சொல்கிறபோது குள்ளக்கால் சாகுபடி செய்ய வேண்டாம் என்று சொன்னோம். இருந்தாலும் சாகுபடி செய்து விட்டார்கள். இருக்கிற நிலவரத்தை அறிந்து நாங்கள் தண்ணீர் வழங்குகிறோம் என்று சொல்லி இன்றுவரையில் தண்ணீர் வழங்கி வருவதற்கு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு எங்கள் தொகுதியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல தொடர்ந்து எங்களுக்கு மேட்டூர் தண்ணீரில் இருக்கிற உரிமை பாதிக்கப்படுகிறது. இதை நினைக்கும்போது விரிவாகப் பேசினால் நமக்குள்ளேயே கருத்து வித்தியாசங்கள் ஏற்படும் என்பதால் அதற்குமேல் பேச விரும்பவில்லை. மழை அதிகமாகப் பெய்து வீணாகக் கடலில் கலக்கிற நீரைத் தேக்கி வைப்பதற்குரிய சாத்தியக்கூறுகளைப் பார்த்து நடவடிக்கை யெடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிலே கொடுமுடியார் திட்டப்பணிகள் வனத்துறையின் காரணமாக தடைபட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை யெல்லாம் பார்க்கிறபோது கர்நாடகம்தான் தடைசெய்து கொண்டிருக்கிறது என்று நாம் சொல்கிறோம். நம்முடைய வனத்துறையும் இப்படி இருக்கிறதென்றால், மத்திய அரசு தடையாக இருக்குமானால் அதற்கு உடனடியாக நிவர்த்தி செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியோடு 200 ஹெக்டேருக்குக் குறைவான ஆயக்கட்டுடைய, மழைநீரை எதிர்பார்த்துச் செயல்படும் 150 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன்முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். என்னுடைய தொகுதியில் இரண்டு பெரிய ஏரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஏரியும் ஏறக்குறைய 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியைத் தருகிறது. அந்த ஏரிகள் திருமால் ஏரி, பெருந்தோட்டம் ஏரி



[illegible]யாகும். அப்படிப்பட்ட ஏரிகளை தஞ்சை மாவட்டத் [illegible] பகுதியும் [illegible] நிச்சயமாகச் செய்ய முடியும். அதுமட்டுமல்ல தண்ணீரைத் தேக்குவதற்கு, தூர் எடுப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். அதனால் அந்தப் பகுதி மக்களின் நாற்பாசனத்திற்கும் பயன் கிடைக்கும். பூமியால உறிஞ்சப்படும் தண்ணீரை நாம் பம்ப்செட் மூலமாக, கை பம்ப் மூலமாக எடுத்து குடிநீராகப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதைத் தயவுசெய்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே ஒரு கருத்தைச் சொல்வது தவறாக இருக்காது என்று கருதுகிறேன். கால்வாய்களின் லைனிங் என்று சொல்கிறோம். அதைத் தஞ்சை மாவட்டத்தில் அருள்கூர்ந்து செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே நஞ்சை நிலமாக இருப்பதால் ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணியைச் சரியாகச் செய்ய முடிவதில்லை. ஒப்பந்தத்தை எடுத்து விடுகிறார்கள். அவர்களின் பொருளாதாரத்தில் அதிகமாகச் செய்ய முடிவதில்லை. அந்தப் பணியை முடித்து அடுத்த ஆண்டில் தண்ணீர் வருவதற்குள்ளாக சிமெண்ட் பிளேட் என்று சொல்லக்கூடிய சிமெண்ட் பலகைகள் எல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் கீழே விழுந்து நொறுங்கி விடுகின்றன. ஆகவே அதனைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி சிமெண்ட் பலகைகளைப் போடுவதால் நிலத்திற்கு அடியில் தண்ணீர் போக வாய்ப்பில்லை. அதனால் தஞ்சை மாவட்டத்தில் எங்கள் பகுதியில் தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேர்கிறது. இப்படி கடலில் சேர்வதனால் மண் தரையாக இருந்தால் கால்வாய்த் தண்ணீர் பூமியால் உறிஞ்சப்பட்டு பம்ப் செட் மூலமாகவோ வேறு வகையிலோ அதனை நாம் எடுப்பதற்கு வாய்ப்பிருக்கும். அது மட்டுமல்லாமல் தமிழகத்தில் நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். இப்படி லைனிங் பலகைகள் போடுகிற பகுதிகளில் பல கால்வாய்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. பக்கத்தில் எந்தவிதமான மரங்களோ, செடிகளோ வளர்வதில்லை. அதற்குக் காரணம் வாட்டர் பெர்குலேஷன் என்று சொல்லக்கூடிய உறிஞ்சும் தன்மை பூமிக்கு இல்லாமல் போய் விடுவது தான். ஆகவே சிமெண்ட் பலகைகள் அமைப்பது மற்ற பகுதிகளுக்கு எப்படியிருந்தாலும் தஞ்சை மாவட்டத்திற்கு வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 29

அடுத்து ஒரு ஆலோசனையை முன்வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் யார், யார், எத்தனை பேர், எந்த எந்த இடங்களில் வேலை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அவர்களை அந்தக் குழுவிற்கு அறிமுகப்படுத்தி, அதிகாரிகள் வேலைகள் எப்படி நடக்கின்றன என்ற விவரங்களை உறுப்பினர்களுக்குக் கொடுத்தால் அந்த வேலைகள் முறையாக நடைபெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். இதனால் தவறு நடந்தது என்று பேசுவதற்குக்கூட ஒரு வாய்ப்பில்லாமல் இருக்கும். அதைச் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட குழுவிலே நியமிக்கப்படுபவர்கள், நீர்ப்பாசனத்திலே தேர்ச்சி பெற்றவர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள் அல்லது அரசியலிலே கூட இருந்து ஓய்வு பெற்றவர்கள் போன்றவர்களை எல்லாம் இந்தக் குழுவிலே போட்டு இந்தக் குழுவைச் செயல்படுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்குப் பொதுப்பணித் துறையிலே சீர்படுத்தப்படுகின்ற அல்லது செப்பனிடப்படுகின்ற வாய்க்கால்களை எல்லாம் முதல் வகுப்புக் கால்வாய்கள், அதாவது 'பர்ஸ்ட் கிளாஸ் சானல்ஸ்' என்று சொல்கிறார்கள். பிறகு இரண்டாம் வகுப்புச் சானல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். முதல் வகுப்புச் சானலைப் பொதுப்பணித்துறை பராமரிக்கிறது. ஆனால் இந்த 'பி' கிளாஸ் சானல்ஸ் என்று சொல்கிற கால்வாய்கள் நம்முடைய உள்ளாட்சி மன்றங்களினாலோ, ஒன்றியத்தினாலோ பராமரிக்கப்படுகின்றன. ஊராட்சிகளிலும், ஒன்றியங்களிலும் பணம் இல்லாத காரணத்தால், அவர்கள் இவைகளைச் சரியாகப் பராமரிக்க முடிவதில்லை. 'ஏ' கிளாஸ் சானல்களினுடைய அதே வேலையைத்தான் 'பி' கிளாஸ் சானல்களும் செய்வதால் இதையும் பொதுப்பணித்துறையே பராமரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-50)

அடுத்து, கட்டிடங்களைப் பொறுத்தவரையில், இந்தக் கட்டிடங்களைப் பராமரிக்கின்றவர்கள், அதைச் சரியான முறையில் கவனிப்பதில்லை. குறிப்பாக சீர்காழியிலே ஒரு அரசு



1987 ஏப்ரல் 29] [திரு. மா. மணிமாறன்]

மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையிலே ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி இருக்கிறது. அதிலே கசிவு தொடர்ந்து ஏற்படுவதால், அதில் உள்ள தண்ணீர் முழுவதும் வீணாகப் போய்விடுகிறது. இதைப் பார்ப்பதற்குக்கூட நாங்கள் கொடுத்தாலும் அவர்கள் வருவதில்லை . . . (மணி அடிக்கப் பெற்றது).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் இதைப் பற்றிக் காரசாரமாக விவாதித்தார்கள். அப்படிப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் தனி நாடு கேட்போம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்களே தனி நாடு கேட்க மாட்டோம் என்று சொன்னார்கள். இப்போது அவர்களுடைய கொள்கையை மாற்றிவிட்டு, மணிமாறன் அவர்கள் சொன்னார்களா அல்லது அவர்களிடம் கேட்டுதான் மணிமாறன் அவர்கள் சொன்னார்களா அல்லது மணிமாறன் அவர்கள் தானாகச் சொன்னார்களா. என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று மரியாதைக்குரிய உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, சட்டத்தை, பணக்காரர்கள்தான் . . .

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தனி நாடு கேட்கவில்லை. அப்படிப்பட்ட உணர்வுகள் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக, ஒரு நியாயத்தை மற்ற மாநிலங்களுக்கு வழங்குவதற்கு மத்திய அரசு, நடுவாக இருந்து தீர்த்து வைத்து, தமிழகத்தினுடைய தண்ணீரிலே அக்கறை எடுத்துக்கொள்ளவில்லையே என்று, வருத்தப்பட்டுத்தான் கூறினேன். உணர்வு பூர்வமாக இல்லாவிட்டாலும் கூட, வேறு நாட்டோடு நீங்கள் உடன்பாடு செய்து கொள்கிறீர்களே, இந்த நாட்டுக்கு உள்ளேயே இருக்கிற ஒரு மாநிலத்திற்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறதே, அந்த நிலையைப் பார்த்து, இதைத் தீர்த்து வைக்க மத்திய அரசு ஏன் முன்வரவில்லை? வேறு ஒரு நாட்டோடு, நீருக்காக நீங்கள் உடன்பாடு செய்து

கொள்கிறபோது, இந்த மாநிலத்திற்கு இருக்கிற பிரச்சினையைத் தீர்த்து ஒரு உடன்பாடு செய்துகொள்வதற்கு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு எந்த முயற்சியையும் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னால, இந்த மாநிலமும் வெளிநாடாக இருந்தால்தான் நமக்குப் பலன் கிடைக்கும் என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே உருவாகிவிடாதா என்று தான் சொன்னேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு எடுத்தாலும் மத்திய அரசைச் சொல்கிறீர்கள். மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்று இந்த மன்றத்திலே சொல்வதை நான் கேட்டு இருக்கிறேன். இப்போது, எஜுகேசனை கன்கரன்ட் லிஸ்டிலே சேர்த்திருப்பதை ஸ்டேட் லிஸ்டிலே கொண்டுவரவேண்டும் என்று சொல்வது திராவிட முன்னேற்றக் கழகம் தான். இப்போது பாசனத்தை மத்திய அரசு கன்கரன்ட் லிஸ்டிலே எடுத்துக்கொண்டால்,—நம்முடைய மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கலாம்—கர்நாடக மாநிலத்திலே இருக்கிற ஹெக்டே அவர்கள், மத்திய அரசு அதிகாரத்தை எடுத்துக்கொண்டது, என்று சொல்லமாட்டார்களா? இப்போது கலைஞர் அவர்களுக்கும், கர்நாடக மாநில முதல்வர் அவர்களுக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. இரண்டு பேர்களும் பேசி முடிவு எடுக்கக் கூடாதா? தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் கலைஞர் கருணாநிதி அவர்கள். அரசியலை விட்டுவிட்டு, அதற்கும் மத்திய அரசுமீது பழிபோடுவது சரியல்ல என்பதை நான் மாணிமாறன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. இந்த காவிரி நீர்ப் பிரச்சினை என்பது இப்போது ஏற்பட்டதல்ல; 1924-லேயிருந்து இந்தப் பிரச்சினை எழும்பியிருக்கிறது. 1924-லே அன்றைக்குக் காம்போசிட் ஸ்டேட் ஆப் மெட்ராஸ்-ஆக இருந்தது. அப்போது நம்முடைய கேரளாவும், கர்நாடக மாநிலமும் இதிலே சேரவில்லை. இந்த இரண்டு மாநிலங்களை விட்டு, மற்ற மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து காம்போசிட் மெட்ராசாக இருந்தது. அந்தக் காலத்திலே மரியாதைக்குரிய சி. சீனிவாச ஐயர் என்பவர்தான் சட்ட அமைச்சராக இருந்தார்கள். அவர்கள்தான் இந்த நதிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, தமிழகத்திற்கு வரவேண்டும் என்று





சொல்கிற ஒரு காம்போசிட் ஸ்கீமை உருவாக்கினார்கள். அது சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னால, அன்றைக்கு இருந்த வெள்ளைக்காரன் ஆட்சியால் நிராகரிக்கப்பட்டது. ஆகையினாலே அவர்கள் ரிசைன் செய்தார்கள். அந்தக் காலத்திலே கூட கர்நாடகம் தனியான மாநிலமாக இருந்தது. இந்தக் காம்போசிட் மெட்ராசிலே வரவில்லை. அதற்கு இணங்க, அவர்கள் அதற்கு ஒரு ஒப்பந்தம் கொண்டு வந்தார்கள். அந்த ஒப்பந்தத்தைக்கூட அன்றைக்கு இருந்த வெள்ளையர் ஆட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால்தான் அவர்கள் தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்தார்கள். அதற்குப் பின்னால் திரு. சி. பி. இராமசாமி ஐயர் அந்தப் பதவிக்கு வந்தார்கள். அவர்கள்கூட ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அந்த ஒப்பந்தத்தைக்கூட வெள்ளையர் ஆட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. 1924-லே இருந்த அந்த நிபந்தனைகூட வரவில்லை. இங்கே காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயிருந்து காவிரிப் பிரச்சினை கர்நாடக அரசுக்கு இருந்துகொண்டிருக்கிறது. இது இப்போது வந்த பிரச்சினை அல்ல. காவிரியிலிருந்து நமக்குத் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் தமிழகம் பாலைவனம் ஆகிவிடும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆகையால் ஒவ்வொரு அரசுக்கும் இந்தத் தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. கர்நாடக மாநிலம் என்று சொல்கிறோம் என்று சொன்னால், மத்தியிலே இருக்கிற மரியாதைக்குரிய பாசனத்துறை அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கிறார் என்பது உண்மைதான். அந்த அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால் அந்த மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று சொல்லி நம்முடைய மாநிலத்திற்குத் தண்ணீர் வாங்கமுடியாது என்று சொல்கிறார்கள். அவர்கள் மேலணை கட்டுகிறார்கள்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே ஒரு அரசு இருக்கிறது. தமிழகத்திலே ஒரு அரசு இருக்கிறது. இது இரண்டு மாநிலங்களுக்கும் உள்ள ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இரண்டு மாநிலங்களுக்கும் ஒரு பிரச்சினை ஏற்படும்போது இதில் தலையிட்டு செட்டில்மெண்ட் செய்யக்கூடிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டா, இல்லையா என்று உறுப்பினர் அவர்களிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு இல்லை என்று யாரும் சொல்ல வில்லை. ஆனால் இருக்கிற நடைமுறை என்ன?

It is in the State List. Therefore, how the Centre can interfere in the State matter. It is purely a State administration.

இதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மாநிலத்திலுள்ள அதிகாரத்தில் கை வைக்கும் போது மத்திய அரசு பார்த்துத்தான் செய்யவேண்டும். மத்தியிலே அதிகாரங்களெல்லாம் குவிந்து இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். இந்தச் சட்டமன்றத்திலேகூட இதுபற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது. தோழமைக் கட்சியாக இருந்தும்கூட சில நேரங்களில் சொல்வது உண்டு. ஆனால் ஒரு மாநிலத் தினுடைய அதிகாரத்தில் கை வைக்கும்போது, அதை அந்த அரசு ஏற்றுக்கொள்வது இல்லை. உங்களுக்கு வேண்டுமென்று சொன்னால் மரியாதைக்குரிய எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலர் இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர்களை அணுகி இந்தக் காவிரிப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் இல்லை. ஆகவே இதற்கு முடிவு என்னவென்று சொன்னால், தென் மாநிலங்களிலே இருக் கிற அனைத்து மாநிலங்களும் கலந்து இதற்கு ஒரு முடிவு எடுத்தால்தான் இது செயல்பட முடியும். இங்கே மாத்திரமல்ல, கேரள மாநிலத்திலே இருக்கின்ற, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற Neyyar Left Bank Channel- அங்கே 150 கன அடி தண்ணீர் தர வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசு பாதிப் பணத்தைக் கட்டியிருக்கிறது. அந்த டேமைக் கட்டுவதற்கு. 50 per cent from Tamil Nadu and 50 per cent from Kerala State. 75 per cent catchment area from Tamil Nadu was taken. ஆனால் அவர்கள் தண்ணீர் தருவதில்லை. அங்கே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற Nyyadar Left Bank Channel- ஐப் பொறுத்தவரையில், 10, 20 கியூஎம்டி. என்று கேட்டு அங்கே இருக்கிற விவசாயிகள் கலெக்டரை அணுகிச் சொன்னால்தான் 150 அடி தண்ணீர் கேட்டால், 50 அடி தண்ணீர்கூட கொடுப்ப தில்லை. அங்கே என்ன சொல்கிறார்கள் என்றால், காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி சொல்வதற்கு அதிக எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரைக்கும் நான் ஒரு எம்.எல்.ஏ.-தான் இருக்கிறேன். அவர்கு





நன்றாகத் தெரியும்; நான் அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள்கூட வந்து பார்த்தார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை மட்டும் அல்ல, கர்நாடக காவிரிப் பிரச்சினை மட்டுமல்ல; ஆந்திராவிலே ஒப்பந்தம் செய்து கொண்ட கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை தீர்ந்து விட்டதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குப் பல கோடி ரூபாய் கொடுத்ததற்குப் பின்னால, இந்தத் திட்டம் தீர்க்கப்பட்டதா? அவர்கள் கொடுக்கிறார்களா? என். டி. ராமா ராவ் அவர்கள் கொடுக்கிறாரா? அதேபோல கேரளாவிலே இருந்த கருணாகரன் அவர்கள் கொடுக்கவில்லை. அதேபோல் இப்போது இருக்கின்ற நாயனார் அவர்களும் கொடுக்கப்போவது இல்லை. ஆகையால், இந்தப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை யாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. நமது நாட்டிலே இருக் கிற, இந்தியாவிலே இருக்கிற நதிகளையெல்லாம் மத்திய அரசு 'நேஷனலைஸ்' செய்வதற்கு அனைத்து மாநிலங்களும், எல்லா மாநிலங்களின் அரசுகளும் ஒத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஒத்துக்கொள்ளாமல், மத்திய அரசுதான் காரணம் என்று மத்திய அரசின் மேல் பழி சொல்கிறார்கள். இதை மாண்புமிகு உறுப் பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே நமக்கு நாட்டை விட அரசியல் முக்கியமாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தப் பிரச்சினை வரத்தான் செய்யும். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு இதைத் தீர்க்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை. இது ஸ்டேட் லிஸ்டிலே இருக்கிற காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சந்தேகத்தை, அதற்கு ஒரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மாநிலங்களிலே இருக்கிற எல்லா அரசுகளும் ஒத்துக்கொண்டால்தான் மைய அரசு நதிகளை தேசியமயமாக்க முடியும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாநிலங்களெல்லாம் எதிர்த்தபோது எதையும் பொருட்படுத்தாமல், கல்வியை மட்டும் கன்கரன்ட் லிஸ்டிலே எடுத்துக்கொண்டீர்களே, அதைப்போன்று இதையும் கன்கரன்ட் லிஸ்டிலே எடுத்துக்கொண்டு, இந்த நதி நீர்ப்பிரச்சினையைத்

தீர்ப்பதற்கு ஏன் மைய அரசு முன் வரக்கூடாது? அதற்கான விளக்கத்தை உறுப்பினர் அவர்கள் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கன்கரன்ட் லிஸ்டிலே எடுப்பதற்கு வெஸ்ட் பெங்கால் முதலமைச்சர் அவர்கள் போர்க்கொடி காட்டுகிறார்கள். மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் போர்க் கொடி காட்டுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குப் போர்க்கொடி காட்டுவதில்லை. தென் மாநிலங்களில் இருக்கின்ற, காங்கிரஸ் ஆட்சி அல்லாத முதலமைச்சர்கள் எல்லாம் போர்க்கொடி காட்டுகிறார்கள். இதுபோன்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால்தான் மத்திய அரசு இந்தக் கொள்கையில் இண்டர்பியர் செய்யாமல் இருக்கிறது. அதேபோன்று இந்தப் பிரச்சினையையும் உருவாக்கி, இருக்கிற பிரச்சினைகளை அதிகமாக்குவதற்கு மத்திய அரசு விரும்பவில்லை. ஆகையால்தான் நான் கேட்டுக்கொள்வது ஒரு

Comprehensive Scheme for connecting the rivers in South India, with the consent of the concerned Chief Ministers of South India, could be drawn up

அனைத்துத் தென் மாநிலங்களின் முதலமைச்சர்களும் உட்கார்ந்து பேசி இதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்பது தான் எங்களுடைய வேண்டுகோளே தவிர இதை நீட்டிக்க வேண்டுமென்பதோ, இதைத் தீர்க்கக்கூடாது என்பதோ அல்ல. காவிரி மாத்திரம் இங்கே பிரச்சினை இல்லை. எல்லா மாநிலங்களோடும் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. என்னுடைய பகுதியிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் பிரச்சினை இருக்கிறது; ஆந்திராவிற்கும் தமிழகத்திற்கும் பிரச்சினை இருக்கிறது; கர்நாடக மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நல்லமுறையிலே பேசி முடிக்கவேண்டுமென்று நான் 'கேட்கிறேனே தவிர, இதை விட்டுவிடவேண்டுமென்று நான் சொல்லத் தயாராக இல்லை.





(இரவு 7-00)

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. என். இராமச்சந்திரன் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள் ** அரசியல் சட்டத்தை உருவாக்கினார்கள் என்று சொன்னார்கள். அவர் சட்டம் படித்தவர்கள், அரசியல் சட்டத்தை எழுதியவர்கள் ** என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ளுவது அந்த எக்ஸ்பஞ்ச் செய்யுங்கள். ** என்று சொன்னால் அம்பேத்கர் போன்ற அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்தான் அதை உருவாக்கியிருக்கிறார்கள். பொறுப்பானவர்கள் அதை உருவாக்கியிருக்கிறார்கள். நாம் உருவாக்கவில்லை. ஆகவே அந்த வார்த்தையை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கேட்டுச் சொல்லுகிறேன்.

**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * என்று நான் சொன்னேன். உண்மை. இப்போதும் அதை வலியுறுத்துகிறேன். அரசியல் நிர்ணய சபையினுடைய வாக்காளர்களாக இருந்தவர்கள் சொத்து வரி கட்டியவர்கள், கல்வி அறிவு படைத்தவர்கள்தான் வோட்டர்கள். அதிலே தேர்தலிலே நின்றவர்களும் அப்படித்தான் இருந்தார்கள். அறிவு அற்றவர்கள். பாமரர்கள், ஏழைகள் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இல்லை. அப்படிப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள்தான் அரசியல் சட்டத்தைத் தொகுக்கின்ற ஒரு குழுவை அமைத்தார்கள். இவர்கள் தொகுத்த குழு எப்படி இருக்கும்? ஆகவேதான் மக்களுடைய அடிப்படை ஜீவாதாரப் பிரச்சினை, பசிப் பிரச்சினை, காவிரி நீர்ப் பிரச்சினை போன்றவை எல்லாம் அவர்கள் கவனத்திற்குப் படவில்லை என்று சொன்னேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்?

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * என்ற வார்த்தையை அவர் சொன்னார். அந்த வார்த்தையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1987 ஏப்ரல் 29

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொன்னதைத்தான் சரியில்லை என்று சொன்னேனே தவிர ** என்பது எல்லாம் பிரச்சினை அல்ல. அது அவருடைய கருத்து. உறுப்பினருடைய கருத்துக்கு இங்கே மாற்று கருத்துக்கள் இருக்கலாம். அவருடைய கருத்துக்களை இந்த அவையில் அவர் சொல்லலாம். ** என்ற வார்த்தையை மாற்றுவது நல்லது. என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதை மாண்புமிகு பேரவைத் தலைவருடைய முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி Neyyar Left Bank Channel- ஐப் பற்றி சொன்னேன். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் 50 அடி தண்ணீர்கூட அங்கே கிடைப்பது இல்லை. அந்தக் கால்வாயைப் பொறுத்தவரையில் 150 அடியிலிருந்து 200 அடி வரை deep cutting இருக்கிறது. அதைப் பராமரிப்பதற்கு ஒதுக்குகின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்குகின்ற பணத்தைப் போலவே இதற்கும் ஒதுக்குகிறார்கள். ஆகவே கான்டிராக்டர்கள் தண்ணீர் திறந்துவிட்டதற்குப் பின்னால் வேண்டும் என்றே வேலை செய்யாமல் பில் வாங்கிக் கொண்டு போகிறார்கள். அங்கே தூர் எடுப்பதே இல்லை. ஆனால் அது அவர்களுடைய குறை இல்லை. 5 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் நிச்சயமாக செய்ய முடியாததுதான் காரணம். ஆகவேதான் அதைத் தூர் வாருவதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கவேண்டும் என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மடிச்சல் கால்வாய் என்று சொல்லுகின்ற கால்வாய் என்னுடைய பகுதியில் இருக்கிறது. அதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருக்குக் காண்பித்து இருக்கிறேன். அங்கே 20 லட்சம் ரூபாய் செலவு செய்து பொது மக்களாகவே அந்தக் கால்வாயை வெட்டினோம். அங்கே இருக்கின்ற பொதுமக்களே நிலத்தை இனாமாகக் கொடுத்தார்கள். அந்தப் பகுதியில் 20 லட்சம் ரூபாய் பொதுமக்கள் செலவு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

செய்ததற்குப் பின்னால், அரசு 5 லட்ச ரூபாய் செலவு செய்தால், அந்த கால்வாய் சரியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்தார்கள். ஆகவே, வருகின்ற ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்துக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதில் இதற்கு 5 லட்ச ரூபாய் ஒதுக்கி, அந்த மடிச்சல் கால்வாயைச் சரியாகத் தூர் வாரித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முன்னால்கூட மடிச்சல் கால்வாய்க்கு எஸ்டிமேட் எடுக்கப்பட்டபோது, அங்குள்ள என்ஜினியர்கள், பி.டி.ஏ.-க்கள் அந்த எஸ்டிமேட்டைக் கூட தயாரித்துக் கொடுக்கவில்லை. அந்த அளவுக்கு அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசைக் குறை சொல்ல நான் தயாராக இல்லை. அரசு பணம் ஒதுக்கியதற்குப் பின்னால்கூட எஸ்டிமேட் தயார் செய்ய வராத காரணத்தால் இந்த மடிச்சல் கால்வாய் விடுபட்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த ஆர்.எல்.இ.ஜி.பி.-யில் கொடுக்கின்ற 10 கோடி ரூபாயில் 10 லட்ச ரூபாய் ஒதுக்கி, அந்தக் கால்வாயை வெட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த மாடர்னைசேஷன் என்று சொல்லுகின்ற வகையில் இந்த Neyyar Left Bank Channel- ஐ மாடர்னைசேஷன் செய்து தரவேண்டும். அதற்கு ஆணை பிறப்பிப்பதாக கூட சீப் என்ஜினியர் என்னிடம் நேரடியாகச் சொன்னார்கள்.

அடுத்து காட்டுப்பிக்காடு லிப்ட் இர்ரிகேஷன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நேரடியாக வந்து பார்த்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. என். இராமச்சந்திரன் அவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களைப் பற்றி பேசினார்கள். அதில் சிலவற்றை நீக்குவதற்கு முன்பு அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சொன்னால் உங்களுக்கு எல்லாம் புரியும்.

We, the people of India, having solemnly resolved to constitute India into a sovereign socialist secular democratic Republic

* * என்று சொன்ன காரணத்தால் இதைச் சொல்கிறேன்.

and to secure to all its citizens Justice, social, economic and political இதை எல்லாம் தெரிந்து வைத்துதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சேபணை * * என்று சொன்னார்கள். அதை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எடுத்து விடுகிறேன். இதில் சொல்லியிருப்பதுதான் அதற்குப் பதில்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களிலே அறிஞர்களும் இருந்தார்கள், மேதைகளும் இருந்தார்கள், விற்பன்னர்களும் இருந்தார்கள், சமுதாயத்தில் உள்ள சகல துறையில் உள்ளவர்களும் இருந்தார்கள். அவர்கள் இந்தத் தலைமுறையை மட்டும் எண்ணவில்லை. இந்த நூற்றாண்டு, அடுத்த நூற்றாண்டையும் எண்ணிப் பார்த்து அரசியல் சட்டத்தை அவர்கள் உருவாக்கினார்கள். நான் மேலும் சொல்லுவேன், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் போன்றவர்கள் சாதாரண நிலையில் இருந்து தெரு விளக்கில் படித்தவர்கள். வறுமை என்ன என்று அறிந்தவர்—அவர்கள் எல்லாம் அதில் இருந்தார்கள். ஆகவே * * அதில் இருந்தார்கள் என்று சொல்லுவது முற்றிலும் பொருந்தாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் கொடுத்த உரிமைகளைத்தான் நாம் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். எல்லா உரிமைகளையும் அன்றைக்கே வழங்கியவர்கள் அவர்கள்.

**திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினருடைய பதிலில் நான் நிறைவடையவில்லை. காரணம் * * (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேவையில்லை. இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

Directive Principles of State Policy. The State shall provide everything for the citizens. Right to life has also been given. அப்போதே எழுதும்போதே எல்லாவற்றையும் நினைத்தே எழுதியிருக்கிறார்கள். அவர்களைவிட நாம் யாரும் அறிவாளிகளே இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





**திரு. மா. சுந்தரதாஸ் :** மிக்க நன்றி. அதேபோன்று இலட்சம் என்று சொல்லுகின்ற அந்தத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 65 இலட்சம் ஒதுக்கப்பட்டு, உலக வங்கியிலிருந்து கடன் வாங்கி செய்ய இருக்கிறோம். உலக வங்கிப் பணம் எப்போது வரும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவேதான் மக்களுக்கு மிக முக்கியமான காரணத்தால் ரூ. 10 கோடி கேட்கின்ற இடத்தில் ரூ. 65 இலட்சம் ஒதுக்கியதில், அந்த வேலையைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக்கட்டு அணையைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக 'வாட்டர் டாக்ஸ்'—அதாவது நகரங்களிலே 'வாட்டர் டாக்ஸ்'' இருந்தாலுமகூட, கிராமங் களிலே, அந்த இடங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காத இடங்களுக்கும் நீங்கள் தண்ணீர் வரி வாங்கு கிறீர்கள். அதைப்பற்றிக் கலெக்டரிடம் கேட்டால், பி.டபிள்யூ.டி. எங்களுக்கு ரிப்போர்ட் தரவில்லை என்று சொல்கிறார்கள். தொடர்ந்து, மழையில்லாமல், வறட்சியின் காரணத்தால் குமரி மாவட்டத்தில் 75 சதவீதம் இன்றைக்குப் பாசன வசதி இல்லாமல் இருக்கிறது. ஆனால் வரி தள்ளுபடி செய்யப்படவில்லை. கேட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார்கள். எங்களுக்கு பி.டபிள்யூ.டி. ரிப்போர்ட் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, தமிழ்நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை இருந்துகொண்டி ருக்கிறது. ஆகவே, தண்ணீர் வரிவசூல் செய்யும்போது தண்ணீர் வசதிகள் இல்லாத அந்தப் பகுதிகளில், உடனடியாக அந்த விவசாயிகளுக்கு இலகு செய்கின்ற வகையிலே டாக்ஸ் பிடிக்கக் கூடாது என்பதை நான் அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்க்ரோச்மெண்ட்ஸ்—ஆறுகளை என்க்ரோச் செய்கிறார்கள், என்னுடைய பகுதியில், தாமிரபரணி ஆற்றிலே, குழித்துறையிலே ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட இடங்களில் என்க்ரோச் செய்திருக்கிறார்கள். அங்கே எல்.இ.கேஸ் போடு கிறார்கள். எல்.இ.கேஸ் என்றால், ஆற்றுப் படுகையிலே புகுந்துகொண்டால், அவனுக்குப் பகுதி டாக்சுடன் ஒரு வில்லேஜ் ஆபீசர் சான்றிதழையும் கொடுக்கிறார்கள். அதை

[திரு. மா. சுந்தரதாஸ்]. [1987 ஏப்ரல் 29

வைத்துக்கொண்டு அவன் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போகிறான். முதன் முதலாக எல்.இ. கேஸ் போடுகிறார்கள். எல்.இ. கேசிற்கு கம்ப்ளெயிண்ட் கொடுத்தால் அதற்கு அடுத்து தாசில்தாரிடம் சென்றால், வில்லேஜ் ஆபீசரிடம் போகச் சொல்கின்றார்கள். வில்லேஜ் ஆபீசரிடம் சொல்லிக் கேன்சல் செய்கிறார்கள். நீதிமன்றம் செல்கிறார்கள். நான்கூட பல கேஸ்களைப் பார்த்திருக்கிறேன். அங்கே போய் முன்பே முன்சீப் கோர்ட்டில் ஸ்டே வாங்குகிறார்கள். அந்தத் துண்டுப் பேப்பரை வைத்துக்கொண்டு, சுப்ரீம் கோர்ட்டிற்குப் போகிறார்கள். ஆகையால் நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்வதெல்லாம், முதலில் எல்.இ. கேசிற்குச் சான்றிதழைக் கொடுக்கின்ற அதிகாரிகளை 'டிஸ்மிஸ்' செய்யவேண்டும். இல்லையென்றால் 'என்க்ரோச்மென்ட்களை' அகற்றுவதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. சாதாரண இடங்களிலும், இர்ரிகேஷன் டாங்குகளிலும் நதிகளின் கரைகளிலும், என்க்ரோச்மெண்ட் இருப்பதற்கான காரணம், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் தான். அதையும் பி.டபிள்யூ.டி. வந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 8,000 இர்ரிகேஷன் டாங்குகள், அதாவது பாசனக் குளங்கள் இருக்கின்றன. ஒரு ரெவின்யூ அதிகாரியைப் பார்த்து பாசனக் குளங்கள் எங்கே இருக்கின்றன என்று கேட்டால், அவர்கள் பேப்பர்களை வைத்துத்தான் சொல்கிறார்களே தவிர, நேரிலே காண்பித்துத் தரமுடியாது என்று சொல்லக் கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே கேங்க் பணியாளர்கள் இருக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. கீழ்மட்டத்தில் இருக்கின்ற கேங்க் பணியாளர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், அங்கே வேலை செய்ய ஆட்கள் இல்லாமல் இருக்கின்றன. இர்ரிகேஷன் டாங்குகளைப் பராமரிப்பதற்கு ஆட்கள் இல்லை. ஒருவர் ரிடையர் ஆனால், பதிலுக்கு ஆள்போடுவதில்லை. ஆகையால், நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நிச்சயமாக அதற்குப் பதில் ஆட்களை நியமனம் செய்யவேண்டுமென்பதுதான். எல்.இ. கேசில் புரொவிஷனல் டாக்ஸ் போடுவதில் அந்த வில்லேஜ் ஆபீசர்கள் பொறுப்பு ஏற்கவேண்டும்.



1987 ஏப்ரல் 29] [திரு. மா. சுந்தரதாஸ்]

(இரவு 7-10)

அந்த வில்லேஜ் ஆபீசர்களை, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் யார் யார் என்று நீங்கள் பார்த்து வேலை நீக்கம் செய்தால் தவிர, இந்தக் குழப்பம் தீருவது இல்லை. எங்கள் பகுதியிலே பேச்சிப்பாறை பெருந்துறை டாம் கட்டுவதற்கு முன்னால் கூட அங்கே பாசன வசதி இருந்தது. ஆனால், இப்போது ஒரு இர்ரிகேஷன் டாங்க் கூட இல்லை. எல்லாம் நிலச்சுவான்தார்கள் கையிலே இருக்கிறது. அங்கே சென்று பார்த்தால் அதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால், அந்த இர்ரிகேஷன் டாங்குகளை பி.டபிள்யூ.டி.-க்காரர்களும் செய்யவில்லை, பஞ்சாயத்துக்காரர்களும் செய்யவில்லை. இதை யார் செய்வது என்று கேட்டால், சிலர் பஞ்சாயத்துக்காரர்கள் என்று சொல்கிறார்கள், வேறு சிலர் பஞ்சாயத்து யூனியன் என்று சொல்கிறார்கள். சிலர் பி.டபிள்யூ.டி. என்று சொல்கிறார்கள். இப்படித் தட்டிக்கழித்து விட்டு, மழை இல்லாத காலத்தில் சில்ட் எடுக்கச்சொன்னால் யாரும் எடுப்பதில்லை. அதேபோல, பாசனத்திற்கு இருக்கின்ற குளங்கள் எல்லாம் இன்று நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. நான் கேட்டுக்கொள்வது—நிச்சயமாக இந்த அரசு என்க்ரோச்சர்ஸ்களை எவிக்ட் செய்தாக வேண்டும். இர்ரிகேஷன் டாங்க்குகளை சில்ட் எடுத்துச் சீர்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல 'இந்து' பத்திரிகையில் இருந்து வந்த ஒரு செய்தியை வாசிக்கிறேன்., பக்கிங்காம் கேனாலைப் பொறுத்தவரையில் ஒரு குழு மத்திய அரசிலிருந்து வந்திருக்கிறது. The Inland Waterways Authority of India— அது எதற்காக வந்திருக்கிறது என்றால் ............is helping a project to develop Buckingham canal from Madras to Kakinada. For this purpose, Andhra Pradesh has been promised Rs. 12 crores.

Mr. Xavier Arakal, Chairman of I.W.A.I. discussed the issue with the Andhra Chief Minister and Irrigation Minister and already handed over Rs. 3 lakhs for preliminary expenses.

I.W.A.I. is willing to finance the development of this waterway falling within Tamil Nadu and is prepared to extend assistance up to Rs. 6 crores in the first phase. But when he visited Madras in the third week of February he could not meet any senior official to discuss the scheme.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1987 ஏப்ரல் 29

மத்திய அரசிலிருந்து ஒரு குழு வந்ததற்குப் பின்னால் அதைப் பற்றி பேசுவதற்குக்கூட நம்முடைய டாப் அபிஷியல்ஸ் இல்லை என்று சொல்கின்ற ஒரு கருத்து 'இந்து' பத்திரிகையிலே வந்தது. அதை நான் படித்துக் காண்பித்தேன். கீழ்மட்டத்தில் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவ்வளவு அதிகாரிகள் இருந்தும் அமைச்சராலே செய்ய முடியவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று நமது திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்தவரையில் பாரதியினுடைய தொகுதியிலே பக்கிங்ஹாம் கேனாலிலே ஒரு பிரிட்ஜ் கட்ட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று பல பகுதிகளில் டாங்க்குகளைத் தூர் எடுப்பது இல்லை. கடைசியாக பி.டபிள்யூ.டி. பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி முடிக்கிறேன். The P.W.D. buildings are not being maintained properly.

கடந்த வாரத்திலே கூட மத்திய அரசினுடைய எஸ்டிமேட் கமிட்டி சென்ட்ரல் பி.டபிள்யூ.டி.-யிலே கட்டிடங்கள் சரியாகப் போடவில்லை என்று பத்திரிகையிலே படித்தேன். ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற மாநில அரசு டிராவலர்ஸ் பங்களாவிலே கூட no doors. அந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது. நாகர்கோயில் டி.பி.-யிலே கலெக்டர் வந்து சொன்னால்தான் அங்கே எங்களுக்கு வரம் கிடைக்கும். அந்த அளவிற்கு அங்கே லாக் அண்ட் கீ ஸிஸ்டம் கிடையாது. அந்த அளவிற்குக் கேவலமான முறையில் பி.டபிள்யூ.டி.-யிலே திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 354.19 இலட்சம் ஒதுக்கியிருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக அந்தப் பணம் போதாது. அந்த அளவிற்கு மாவட்டத்தில் பள்ளிக்கூடங்கள் சரியாக இல்லாமல் இருக்கிறது. ஆகையால் நான் கேட்டுக் கொள்வது அதிகமான நிதியை ஒதுக்கி இந்தப் பள்ளிக்கூடங்கள், ஹாஸ்பிடல்கள் போன்றவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக என்னுடைய தொகுதியிலே குளித்தலை சப்-ஜெயில், பெரிய சப்-ஜெயில். அது தாலுகா அலுவலகத்தோடு சேர்ந்திருக்கிறது. அதற்குத் தனியாக சப்-ஜெயில் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.



1987 ஏப்ரல் 29]

திரு. துரை கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்கள் சொல்கின்றபோது மாநிலங்களுக்குள்ளே இருக்கின்ற நதிநீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிடுவதற்கு ஒன்றுமே வழியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் 1956 ஆம் ஆண்டு பன் மாநில நதி நீர்ச் சட்டத்தில் 4-வது பிரிவின்படி மத்திய அரசு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும். அப்படி மாநிலத்திற்குள் மாநிலம் வருவதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அமைத்திருக்கிறதே. அந்தச் சட்டத்தின்படி இன்றைக்கு நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடவேண்டும் என்றுதான் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். அதற்குண்டான பதிலை நான் படிக்கிறேன்.

*Cauvery Waters—Shri M. Ruthnaswamy :—5—8—1969.*

Shri M. Ruthnaswamy had put the following question :—

Will the Minister of Irrigation and Power be pleased to state :—

(*a*) whether any approach has been made by the Governments of Tamil Nadu and Mysore to settle their differences over Cauvery waters ; and

(*b*) if so, the action taken by the Central Government thereon?

The following was the answer :—

The use of Cauvery waters by Tamil Nadu and Mysore is governed by agreements entered into between the two Governments in 1892 and 1924 which include also provisions for the mode of settlement of differences.

Some references have however been made by the Government of Tamil Nadu in regard to some new projects proposed to be undertaken by the Government of Mysore, particularly the Hemavathi project. Efforts are being made to settle this amicably in consultation with the two States.

இது பாராளுமன்றத்திலே—ராஜ்ய சபையிலே கொடுக்கப்பட்ட பதில். அதைத்தான் சொல்கிறேன். அதை நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் . . .

திரு. துரை கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைச் சொல்கிறபோது, மாநிலங்களுக்குள்ளே இருக்கிற நதி நீர்ப்

பிரச்சினைகளில் மத்திய அரசு ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடையது—1956-ஆம் ஆண்டின் பன் மாநில நதி நீர்த் தாவாச் சட்டத்தின் 4-வது பிரிவின்படி, இப்படி ஏற்படுகிறபோது அதற்கு நடுவர் மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற விதி இருக்கிறது. அது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லையென்று சொல்லவில்லை. அதிலே உள்ள சிக்கலைத் தான் சொன்னேன். ஒவ்வொரு மாநிலங்களும் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு, மத்திய அரசின் மீது பழி போடுகின்ற காரணத்தினால்தான் சொல்கிறோமே தவிர, அது . . . .

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றி எல்லாம் விளக்கத்தைத் தாங்களே சொன்னீர்கள், எல்லா விஷயங்களையுமே அன்றைக்கு உருவாக்கியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று. இங்கே இருந்து சொல்கிற குற்றச்சாட்டே, அது அரசியல் அமைப்புச் சட்டத்திலே சொல்லியிருந்தாலும் கூட, அந்த மத்திய அரசு பயன்படுத்தவில்லை என்பதுதான். டிரிபியூனல் அமைக்கவேண்டும் என்றாலும் முடியாது என்கிறீர்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய 264-வது பிரிவில் மாநிலங்களுக்கிடையே குழுவை உருவாக்க வேண்டும் என்று அன்றைக்கே சொன்னார்கள். இதுவரையிலும், எந்த மாநிலங்களிலும், 'இன்டர்-ஸ்டேட் கவுன்சிலே' உருவாகவில்லை. அது ஏன் என்பதுதான். அதிலே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் விளக்கினால் எங்களுக்குத் தெளிவு ஏற்படும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** அதற்கு எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதிலே உள்ள சிக்கலைத் தான் சொன்னேன். (குறுக்கீடு) நாங்கள் சொல்வது . . . (குறுக்கீடு, கூச்சல்)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** அப்போது, டிரிபியூனல் அமைக்கவேண்டும் என்பதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய கோரிக்கையும்கூட, அல்லவா? அதைத் தான் எதிர்பார்க்கிறோம்.





**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுவே எங்களுடைய கருத்து. ஆனால் அதில் சிக்கல் இருக்கிறது என்றுதான் சொல்கிறோம். (குறுக்கீடு) நான் சொல்வது, அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை . . .

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும், மறுபடியும் சிக்கல் என்றே சொல்லிக் கொண்டு வந்தார்கள். எனக்கு, நான் பொதுப் பணித் துறையிலே பொறுப்பேற்றபின் 4, 5 மாத காலத்திலே அந்தச் சிக்கல் என்ன என்று நான் பார்க்கிறபோது, டெல்லிக்குச் செல்கிற நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நதி நீர் வளங்கள் அத்தனையும் தேசியவுடைமையாக்கப்படவேண்டும் என்ற உணர்வைச் சொன்னார்கள். அப்படி கீழ்ப்பகுதியிலிருந்து நம்மைப் போன்றவர்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற உணர்வைச் சொல்கிற நேரத்தில், காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் அதை எதிர்த்தார்கள். அதுதான் சிக்கலே தவிர, வேறு ஒன்றும் சிக்கல் இல்லை.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தில் இருக்கின்ற ஹெக்டே அவர்கள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்களா, என். டி. ராமாராவ் அவர்கள் ஒத்துக் கொண்டார்களா என்பதைத்தான் நான் கேட்கக் கடமைப் பட்டிருக்கின்றேன் . . . (குறுக்கீடு, கூச்சல்).

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு, மூன்று மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் எதிர்த்து இருப்பார்கள் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் அதிலே ஒரு முடிவை எடுத்திருக்கும். ஆனால், ஆளுகிற பொறுப்பிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் அதை எதிர்த்ததன் விளைவாகத்தான் அதில் ஒரு முடிவு எடுக்கமுடியாமல் போய் விட்டது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாம் பாதிக்கப்பட்ட காரணத்தால், நாம் அதை வரவேற்கிறோம்.

ஆனால் அந்தந்த மாநிலங்களில் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். முதலமைச்சர்கள் காங்கிரஸ் என்பதல்ல பிரச்சினை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சிக்கலை முடிப்போம், நீங்களும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து சிக்கலை முடித்து வையுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நேரமாக காலையிலும், மாலையிலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுப்பணித் துறையினுடைய இந்த மானியக் கோரிக்கையிலே கலந்து கொண்டு, மிகச் சிறப்பாக நல்ல கருத்துக்களை இந்த அரசாங்கத்திற்கு வழங்கியதில் உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினர்களும் பேசிய நேரத்தில் இந்த மானியக் கோரிக்கை, தங்களுடைய மானியக் கோரிக்கை என்ற உணர்வோடு, விவாதம் மூலமாக தமிழகத்திலே இருக்கின்ற நீர் ஆதாரங்களைப் பெருக்கு வதற்கு ஒரு வழிவகை கிடைக்கும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஒவ்வொருவரும் மிகச் சிறப்பாகப் பேசியதை நான் இந்த நேரத்தில் நன்றியுணர்வோடு சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் அமைச்சுப் பொறுப்பை நாங்கள் ஏற்று இருந்தாலும், எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, இருக்கின்ற பிரச்சினைகளை நாங்கள் தெள்ளத் தெளிவாக அறிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் இன்றையதினம் பேசிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய பகுதியினுடைய பிரச்சினைகளை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியதை நான் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியோடு சொல்லக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

நமக்கிருக்கின்ற பிரச்சினையெல்லாம், பொதுப்பணித் துறை யிலே இன்றைக்குப் பாசனம் என்ற தலைப்பின் கீழ் எடுத்துக் கொள்கிற நோக்கில் நமக்குத் தமிழகத்திலே மொத்தம் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் 51 உள்ளன. அதன் மூலமாக வருடத்திற்கு 27.24 லெட்சம் ஏக்கர் நிலப் பாசனத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நமக்கு இருக்கின்ற





ஒரு துரதிர்ஷ்டம் எல்லாம் நதி நீரினுடைய நீர் வரத்து இன்றைக்கு நமக்குக் குறைந்திருக்கிறது. மிகப் பெரிய நதிகளில் எல்லாம் இன்றைக்கு நீர்த் தேக்கங்களைக் கட்டி முடித்தாகி விட்டது. ஆகவே, புதிய நீர்த் தேக்கங்களைக் கட்டுவதில் இன்றைக்கு மிகச் சிரமத்திற்குள்ளான சூழ்நிலையில் தமிழகம் இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே, இருக்கிற நீர் ஆதாரங்களை, அதாவது வருகிற நீரை மிகச் சிக்கனமாகச் சேமித்து, அதன் மூலமாக நிரம்ப விளைச்சலை எடுக்க வேண்டிய கால கட்டத்தில் இன்றையதினம் தமிழகம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 7-20)

நாம் கருநாடகத்தைப்பற்றி பேசிக்கொண்டும், பக்கத்தில் இருக்கிற ஆந்திரத்தைப்பற்றி பேசிக்கொண்டும், அண்டையில் இருக்கிற கேரளத்தைப்பற்றி பேசிக் கொண்டும் இருப்பதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு நம் மாநிலத்தில் இருக்கிற தண்ணீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்; அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற நல்லுணர்வைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை யெல்லாம் நவீனப்படுத்த வேண்டும் என்ற உணர்வை அதிகாரி களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் இன்றைக்குப் பெரியார், வைகை போன்ற நதிகளின் மேம்பாட்டுத் திட்டங்கள் எல்லாம் உலக வங்கி உதவியோடு, அதன் தண்ணீரைத் தேக்கி அதிகப்படியான ஏக்கருக்குப் பாசன வசதி செய்யும் அளவுக்கு நம்முடைய வல்லுநர்கள் முயற்சியை மேற்கொண்டிருக் கிறார்கள்; அந்த வகையிலே வேலைகளும் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் இந்த ஆண்டு உலக வங்கி உதவியோடு, தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக ரூ. 42 கோடி செலவில் ஐந்து திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம். இந்த ஆண்டிலேயே சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கான வேலைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளும் உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்க இருக்கிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒன்றை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நவீனப்படுத்தியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். புதிய அணைக்கட்டுகளைக் கட்டுகிற பணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நாம் நவீனப்படுத்தாமல் விட்டுவிட்டால், வருகிற நீரைத் தேக்கி வைக்கத் தவறியவர்கள் ஆவோம் என்பதை அவர் அதிகாரிகளுக்குச் சொல்லியதன் விளைவாகத்தான் தமிழகத்தில் இருக்கிற அத்தனை நீர்ப்பாசனத் திட்டங்களும் உலக வங்கி உதவியோடு அல்லது வேறு நாடுகளின் உதவியோடு நவீனப்படுத்தப்படுகின்றன. அந்த உணர்வை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். என்பதை நான் மகிழ்ச்சியோடு இன்றைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் கோதையாறு நவீனப்படுத்தும் திட்டம் மற்றும் பொன்னியாறு நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவற்றை ஏறத்தாழ ரூ. 60 கோடி செலவில் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம். அதற்குக் காரணம் இருக்கிற நீர் ஆதாரங்களைச் சிக்கனமாகப் பயன் படுத்துவதற்காகவும் விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட குறிப்பிட்டு அளவுக்குத் தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வை தமிழகப் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊட்டியிருப்பதுதான். அந்த வகையிலே அவர்களும் முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டுமென்றால் 1967 முதல் 1977 வரை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆண்ட நேரத்தில் மேற்கொண்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை 23. திராவிட முன்னேற்றக்கழக அரசு அன்றைக்கு அந்தத் திட்டங்களுக்காகச் செலவிட்ட தொகை ரூ. 32 கோடிதான். அதன் மூலமாகப் பாசனத்திற்குக் கிடைத்த நிலத்தின் பரப்பளவு 0.93 லட்சம் ஏக்கர். அதாவது புதிதாக அன்றைக்கு பாசனத்திற்கு வந்த நிலங்களின் பரப்பளவு அது.



1987 ஏப்ரல் 29] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

இன்றைக்கு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிறகு 1977 முதல் 1987 வரை அங்கீகரிக்கப்பட்ட பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை 50. இந்தத் திட்ட காலத்தில் மதிப்பீட்டு செலவு ரூ. 289 கோடி என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பாசன நிலங்களின் பரப்பளவு 6.06 லட்சம் ஏக்கர். இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் "இந்த அரசாங்கம் சரியாகச் செயல்படவில்லை, இந்த அரசாங்கம் சோம்பி இருக்கிறது, இந்த அரசாங்கத்தில் வேலை நடக்கவில்லை" என்று சொல்லுகிற நண்பர்கள் இந்தப் புள்ளி விவரங்களைச் சொல்லுகிற நேரத்தில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசாங்கம் உங்களைவிட 6 மடங்கு வேகமாக இன்றைக்குச் செயல்படுகிறது. இதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

இதைச் சொல்லுவதற்குக் காரணம் தமிழக முதலமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனப் பிரச்சினையானாலும் சரி, விவசாயிகளுடைய பிரச்சினையானாலும் சரி, இவைகள் தமிழகத்தினுடைய தலையாய பிரச்சினைகள் என்ற உணர்வோடு இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதாகும்.

மேலும் இன்றையதினம் நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக ஆய்வு செய்வதற்காகவும் திட்ட வேலைகளை விரைவாக நிறைவேற்றுவதற்காகவும் இந்த அரசாங்கம் மிகுந்த முனைப்போடு இறங்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக என்று ஒரு தலைமைப் பொறியாளரை ஏற்படுத்தும் உத்தரவைப் பிறப்பிக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு தலைமைப் பொறியாளரும் அவரைச் சார்ந்த அதிகாரிகளும் நியமிக்கப்படுகிற நேரத்தில் நீர் மேலாண்மைத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கும் உலக வங்கியோடு தொடர்பு கொண்டு இன்னும் பல திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள ஒரு தலைமைப் பொறியாளரை நியமிக்கும் முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போன ஆண்டு பொதுப்பணித்துறை மானியத்தின்மீது பேசுகிறபோது கேளவரப்பள்ளி திட்டத்தைப்பற்றி பேசியிருக்கிறார்கள். 7 ஆண்டுக்காலமாக இந்தத் திட்டம் முடங்கியிருக்கிறது. இந்தத் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்திடவில்லை என்றால் போராட்டம் வெடிக்கும் என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் அந்த அன்பர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் போகிறார்கள். அவர் போகிற நேரத்தில் அங்கேயுள்ள கேளவரப்பள்ளித் திட்டத்தைப் பற்றி ஆய்வு நடத்துகிறபோது எங்களையும், அதிகாரிகளையும் அழைத்து உடனடியாக இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும், டில்லிக்கு அதிகாரிகளை அனுப்பி இந்தத் திட்டத்திற்கான அனுமதியை வாங்கி வரவேண்டும், அதுவும் நான் சென்னைக்குத் திரும்புவதற்கு முன்பே அந்தச் சட்டம் இங்கே வரவேண்டும் என்று கடுமையாக எங்களுக்குச் சொன்னார்கள். அதை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் இப்படி மாவட்டங்களுக்குச் செல்லுகிறார்கள், பல கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள், ஊர்ப் பணத்தை, அரசாங்கப் பணத்தை வாரி இறைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முதலமைச்சர் அவர்கள் செல்லும்போது அதிகாரிகள், அமைச்சர்கள் உடன் போகிறோம். எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்தத் திட்டங்கள் கிடப்பிலே இருக்கின்றன, என்ன காரணத்திற்காகக் கிடப்பிலே இருக்கின்றன, பணம் இல்லையா, வேறு பிரச்சினை இருக்கிறதா என்று கேட்டு உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் மிகச் சிறந்த முதலமைச்சர்தான் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறார் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி.)

நீங்கள் போய் அரசாங்கத்தினுடைய பணத்தைச் செலவழித்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் உங்களுடைய தலைவர் இன்றைக்கு ஊர் ஊராக வசூல் செய்து





கொண்டிருக்கிறார் என்பதை அந்த நண்பர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அரசாங்கத்தின் பணத்தைச் செலவழித்து . . .

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டந் தோறும் சென்று தேங்கிக் கிடப்பதை பார்த்த பிறகுதான் பணம் கொடுக்க முடியும் என்று கருதுகிறாரா? கேளவரப்பள்ளி திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏழு, எட்டு ஆண்டுக் காலம் ஆகிறது. காலம் கடந்த பிறகு இப்போது அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் கொண்டு வந்து, அதனால் சீ.இ. பாதிக்கப்பட்டு, ரிடையர் ஆனது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். அப்போதே சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றாமல் ஏழு, எட்டு ஆண்டுக் காலம் எடுத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். அவ்வளவுதான்.

**திரு. மா. மணிமாறன்:** தலைவர் அவர்களே, வசூல் என்பது கட்சிக்காரர்களால், கட்சிக்காகக் கொடுப்பதே தவிர யாரையும் கசக்கிப் பிழிந்து வேறு தவறான நடவடிக்கையில் வாங்கிய தில்லை. இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் . . . (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளவரப்பள்ளித் திட்டம் ஆரம்பிக்கும் நேரத்தில் கோர்ட்டுக்குப் போய், கோர்ட்டில் தடையாணை வாங்கி மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முடிவு தாப்படவில்லை. ஆகவே அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லி, டில்லிக்கு அனுப்பியிருந்தோம். டில்லியிலே இந்தச் சட்டம் முடங்கிக் கிடந்தது. தமிழக முதலமைச்சர் அவர்கள் விரட்டிவிட்டு உடனடியாக வாங்க வேண்டும் என்று சொன்னார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் வெளியே பேசும்போது, தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களுக்குச் செல்கிறார்கள். அரசாங்கத்தின் வரிப் பணத்தைச் செலவழிக்கிறார்கள், மாவட்டங்கள் வறட்சியாக இருக்கின்றன. இந்த

வறட்சியான நேரத்தில் இப்படிச் செய்யலாமா? என்று கேட்டிருக்கிறார்கள். வறண்டு கிடக்கும் நேரத்தில் ஊருக்கு ஊர் கட்சிக்காரர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் அவர் வசூல் செய்வது மட்டும் எப்படி நியாயம் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கைக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்களா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தில் நடக்கிற நடவடிக்கைகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அதற்கென்று தனியாக விவாதம் வைத்தால் நாங்களும் பதில் சொல்லலாம். இல்லாவிட்டால் நன்றாக இருக்காது. பொதுப் பணித் துறையில் எங்கெங்கே வாங்கியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் சொல்ல வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வசூல் பற்றி பேசும்போது எனக்குப் பட்டதைச் சொல்லுகிறேன்.

A Member of Legislative Assembly is a public servant. A Municipal Chairman is also a public servant. A Panchayat Union Chairman is also a public servant. If they collect money, it is for the House to decide whether it is donation or corrupt money.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகளாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக மன்னர் காலத்திலேயிருந்த கண்மாய்கள் தமிழகத்திலே இருக்கின்றன. 39,000 கண்மாய்கள் பொதுப் பணித் துறையின் பொறுப்பிலே இருக்கின்றன. எக்ஸ்-ஜமீன் ஏரியாவில் 9,900 கண்மாய்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து ஒன்றியத்தின் கீழ் 20,400 கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் கண்மாய்கள் ஆழப்படுத்தப்படாமல் தூர்ந்து போயிருக்கின்றன, கரைகள் பலப்படுத்தப்படாமல் இருக்கின்றன, சுலூயிஸ் கெட்டுப் போயிருக்கிறது. கால்வாய்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன, மிகப் பெரிய ஆபத்தைத் தமிழகம் சந்திக்க இருக்கிறது என்ற உணர்வை இங்கே பேசிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும்





ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள். அந்த உணர்வை இன்றைக்குத் தமிழக முதல்வரவர்கள் மிகத் தெளிவாகப் புரிந்திருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்குக் கண்மாய்கள் மூலமாக தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 22 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே முதற் கட்டமாக ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் மூலம் 150 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். நவீனப்படுத்தும் அந்தக் கண்மாய்களைப் பார்க்கும் நேரத்தில், அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் எங்கள் கண்மாய்களையும் நவீனப்படுத்த வேண்டும், கால்வாய்களுக்கு சிமென்ட் கரை போட்டு சிறப்பாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னதால், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மேற்கொண்டு 150 கண்மாய்களை நவீனப்படுத்த அவர்கள் ஒத்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 7-30)

அடுத்து, முன்னாள் ஜமீன் ஏரிகளை 60 கோடி ரூபாயில் சீர் செய்ய அயல் நாட்டு உதவி வேண்டுமென்று மத்திய அரசுக்குத் திட்டங்கள் அனுப்பியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழகத்தின் முதல்வரவர்கள் மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே 400 கோடி ரூபாய் செலவிலே கண்மாய்கள் சீரமைக்கப்பட வேண்டுமென்ற உணர்வைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சரவர்கள் 50 ஏக்கருக்கு மேலே ஆயக்கட்டுள்ள 14,500 ஏரிகளை சுமார் 1,618 கோடி செலவில் நவீனபடுத்த வேண்டிய வழிமுறைகளைப் பற்றி ஆலோசனை செய்து, மத்திய அரசோடு பேசி, வெளி நாட்டு உதவிகளைப் பெறும் முயற்சியில் ஈடுபடுவதென்று இந்த அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

நீண்ட நெடிய காலமாகக் கண்மாய்கள் சீரமைக்கப்படாமல், தூர்ந்து போயிருக்கின்றன என்பதை மாற்றும் முயற்சிகளில் மாண்புமிகு முதல்வரவர்கள் இறங்கியிருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல், இன்றைக்கு நமக்குள்ள பிரச்சினை எல்லாம், நாம் நதி நீரை எல்லாம் பயன்படுத்திவிட்டோம், மழை நீரைப் பயன்படுத்தி விட்டோம். நமக்கு மீதம் இருப்பது எல்லாம் நிலத்தடி நீர்தான். நிலத்தடி நீரை நாம் பயன்படுத்த வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம் என்பதைப் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் வருடத்திற்கு 995 டி.எம்.சி. தண்ணீர் நிலத்தடி நீராகக் கிடைக்கும் என்ற கணக்கை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 11 இலட்சம் மின் வசதி பெற்ற கிணறுகள் மூலமும், மின் வசதி பெறாத 6 லட்சம் கிணறுகள் மூலமும் இ்ளவுக்கு ஏறத்தாழ 400 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். மீதி இருக்கின்ற 595 டி.எம்.சி. தண்ணீரை இன்றைக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற உணர்வைச் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழகத்தில் தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக் கோட்டையில் ஒரு பகுதி, பசும்பொன், காமராஜ் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பகுதியில் நிலத்தடி நீர் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கின்றது. அங்கே ஆழ் குழாய்க் கிணறுகள் மூலமோ அல்லது சாதாரணக் கிணறுகள் மூலமோ தண்ணீரை வெளிக் கொணர வேண்டுமென்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அதிகாரிகள் அந்தப் பகுதிகளில் ஆய்வுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்யும்போது, ஆழ் குழாய்க் கிணறு அல்லது கிணறுகள் தோண்டும்போது, பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் வைத்து மணிக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு, அந்தத் தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்றும் அமைச் செய்யும்போதுதான் அங்கேயுள்ள பம்புசெட்டுகளை மெயின்டெயின் பண்ண முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு எத்தனை கோடியானாலும், அந்தத் திட்டங்களைத் தீட்டுங்கள் என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



1987 ஏப்ரல் 29] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் கட்டிடங்கள் பற்றிசொல்லும்போது குறியீடு வைத்த அளவுக்கு நாம் கட்டி முடித்திருக்கிறோம். ஒருசில இடங்களில் மெயின்டனன்ஸ் இல்லை என்று சொன்னார்கள். அதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஒரு சில இடங்களல்ல, நிறைய இடங்களில் அப்படி இருப்பதை நானே கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். அதற்காக நல்ல நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைப் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கா, விருதுநகர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை நாகரீகமான முறையில் சிறப்பாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டிடங்களைப் பார்க்கிற நேரத்தில் மிக அழகும் நவீன வசதிகளோடு அந்தக் கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. திண்டுக்கல், வேலூர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடங்களைக் கட்டும் முயற்சியையும் அரசு மேற்கொள்ளும். கன்னியா குமரியில் 432 இலட்சம் செலவில் திருவள்ளுவர் சிலையை நிறுவும் பணியைப் பொதுப்பணித் துறைக்கு அரசாங்கம் வழங்கி இருக்கிறது. அந்தச் சிலையை வழங்கும் நல்ல வல்லுநர்கள் இந்தத் துறையிலே இருக்கிறார்கள். அதன் மூலமாக இந்தத் துறை பெருமைப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய நேரத்திலே ஆய்வு பற்றிச் சொன்னார்கள். நீண்ட நாட்கள் ஆகிறது. ஆக இந்த உணர்வைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இன்றைக்கு நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆய்விலே உள்ள காலதாமதத்தை, அன்றைக்கு ஆய்வு

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

செய்யும் திட்டங்களிலே வரக்கூடிய தவறுகளைத் தவிர்ப்பதற்காகவும் நவீன முறைகளை அந்தத் துறையிலே புகுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை இன்றைக்கு செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களும், கொறடா அவர்களும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அங்கு உள்ள குறைகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ளுவதெல்லாம் தமிழக முதலமைச்சர் அவர்கள் உங்களுடைய மாவட்டத்திற்கு நாலே முக்கால் கோடி ரூபாய் ஒதுக்கி இன்றைக்கு தஞ்சை மாவட்டம் கிராண்ட் அணைக் கட்டுக் கால்வாய் வருகிறது. இன்றைக்கு ஆழ்குழாய்க் கிணறு வாரியம், ஆழ்குழாய் கிணறுகள் 250 தோண்டுவதற்கு, தஞ்சை மாவட்டத்தில் தோண்டுவதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நான் சொல்வதெல்லாம், இங்கே பேசிய நேரத்தில் அத்தனை பேர்களும் ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி அத்தனை பேர்களும் சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதில் மிகத் தெளிவான கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்தச் சூழ்நிலையிலும் பேச்சு வார்த்தைக்கு நாம் தயாராக இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் காரணம் 1924-ல் அந்த காவிரி நீர்ப் பங்கீடு உடன்படிக்கை அன்றைக்குப் போடப் பட்டது. 50 ஆண்டுக்காலம் கழித்து காவிரி நீர், உபரி நீர் எவ்வளவு வருகிறதோ அதை எப்படிப் பிரிப்பது என்பதைப் பற்றி மறு ஆய்வு செய்யலாம் என்று சொல்லி, அந்தத் திட்டத்திலே உடன் படிக்கை இருந்தது. ஆனால் 1974-லிலே அந்தத் திட்டம் காலாவதியாகிவிட்டது. அது எங்களைக் கட்டுப் படுத்தாது என்ற உணர்வை இன்றைக்கு கர்நாடக அரசாங்கம் மேற்கொண்டு இருக்கின்றது. நான் இந்த நேரத்திலே, மத்திய அரசாங்கத்திடம் சொல்லிக்கொள்வதெல்லாம்—மத்திய அரசின்



1987 ஏப்ரல் 29] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

பாசனத் துறை அமைச்சர் ஒன்றை டெல்லியிலே, நாடாளு மன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்க்கப்படலாம் என்று உணர்வைச் சொல்லியிருக் கின்றார்கள்.—நான் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகச் சொல்லிக் கொள்வதெல்லாம், எத்தனை முதலமைச்சர்கள் பேசிப் பார்த்து விட்டார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தி லிருந்து, அதற்குப் பின்னர் மறைந்த பக்தவத்சலம் அவர்கள், பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள், மதிப்பிற்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள், பின்னர் ஜனாதிபதி ஆட்சி, இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதே போன்று பாரதப் பிரதமர்கள், மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்கள், லால்பகதூர் சாஸ்த்திரி அவர்கள், அன்னை இந்திரா காந்தி அவர்கள், மொரார்ஜி தேசாய் அவர்கள், இப்படி எத்தனையோ பிரதம அமைச்சர்கள், எத்தனையோ முதலமைச்சர்கள் எல்லாம் தொடர்ந்து பேசிப் பார்த்துவிட்டார்கள். நீர்ப்பாசன அமைச்ச ராக இருந்த கே. எல். ராவ் அவர்கள் இந்தப் பிரச்சினையை முதலிலே பேசியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னர் ஜகஜீவன் ராம் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னர் நிவாஸ் கான் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னர் சங்கரானந்த் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். 17 ஆண்டுக் காலம் பல முதலமைச்சர்கள் எல்லாம் பேசி, பல பிரதமர்களும் பேசி, பல பொதுப்பணித் துறை அமைச்சர்கள் எல்லாம் பேசிப் பார்த்துவிட்ட பிறகும் இன்றும் பேசுவோம் என்று சொன்னால், தமிழக காவிரிப் பகுதி வறண்ட பகுதியாகும் என்ற அச்சம் தான் எங்களுக்கு இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே கர்நாடக அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மத்திய அமைச்சர் ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள். டிரிபியூனல் போடுவோம் என்றால் நீண்டகாலம் ஆகும். 10 ஆண்டுகள் காலமாகும், 15 ஆண்டுகள் காலமாகும். நம்முடைய பிரச்சினைக்கு ஒரு முடிவு இருக்காது என்று சொல்கின்றார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம்—அவர்கள் கோடிட்டுக் காட்டுவதெல்லாம், நர்மதா டிரிபியூனல், கோதாவரி டிரிபியூனல், கிருஷ்ணா டிரிபியூனல் பற்றிதான், நர்மதா டிரிபியூனல் 10 ஆண்டுக் காலம் நடந்திருக்கின்றது. அதற்குக் காரணம்

டிரிபியூனல் போட்டபிறகு அவர்கள் பேசித் தீர்க்கலாம், பேசித் தீர்க்கலாம் என்று சொல்லியே 3, 4 ஆண்டுக்காலம் ஆகியிருக்கின்றது. மறுபடியும் பேசிப் பார்த்து இருக்கின்றார்கள். பேசி முடிக்கமுடியாமல் மறுபடியும் டிரிபியூனலுக்குப் போய்தான் முடிந்திருக்கிறது. அதேபோன்று கோதாவரி டிரிபியூனல். அது 11 ஆண்டுக் காலம் நடந்திருக்கின்றது. அதற்குக் காரணம் அதிலே நீதிபதிகளாக இருந்த இரண்டு பேர்கள் இறந்து போனார்கள். அதிலே 11 ஆண்டுக் காலம் ஆனது. கிருஷ்ணா டிரிபியூனல் 7 ஆண்டுக்காலம் ஆனது. ஆனாலும் ஒரு உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்கள் டிரிபியூனல் ஆரம்பித்த பிறகுதான் புள்ளிவிவரங்கள் தயாராகி இருக்கின்றன. இன்றைக்கு டிரிபியூனல் அமைப்பார்கள் என்று சொன்னால் இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே நமக்கு நியாயங்கள் கிடைக்கும் என்பதிலே யாருக்கும் மன மாச்சரியங்கள் இல்லை. ஆகவே எங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும் என்று நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். திரு. சங்கரானந்த் அவர்கள் சொல்வதெல்லாம் நீங்கள் பேச்சு வார்த்தையில் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நான் ஒன்றை நினைவுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் கோர்ட்டிலே இருந்தது. அதற்கு மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் நீங்கள் வாபஸ் வாங்குங்கள். பேசிப்பார்க்கலாம் என்று சொன்னதாகச் சொன்னார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்களே வாபஸ் வாங்கச் சொன்ன பிறகு, பேசிப் பார்ப்போம் என்று சொன்ன பிறகு அவர்களாலேயே முடியாத காரியத்தை நாம் சாதிக்கப் போகிறோமா என்பதை இந்த நேரத்தில் கேள்விக் குறியாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தமிழகத்தினுடைய நியாயம், தமிழகத்திற்குப் பாரம்பரியமாக 2 ஆயிரம் ஆண்டுக் காலமாகக் கிடைத்து வந்த அந்த நியாயம் எங்களுக்கு இப்போதும் கிடைத்தாக வேண்டும். நாங்கள் நியாயங்களைப் பெறத் தவறுவோம் என்று சொன்னால், அரசியல் மனமாச்சரியங்களைப் பேசிக் கொண்டிருப்போம் என்று சொன்னால், வருகிற தலைமுறைக்கு நாங்கள் துரோகம் செய்தவர்களாவோம் என்ற அந்த அச்சம் எங்கள் மத்தியில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இருபது தடவை முதலமைச்சர்கள் கூடிப் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர்கள் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நான்கு தடவை நடந்திருக்கிறது. இத்தனையும் முடிந்த பிறகும் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாத நிலையில் பேச்சுவார்த்தை அவசியமா என்பதை நான் இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களிடம் கேட்கிறேன். நிச்சயமாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இனியும் பேச்சுவார்த்தையில் இணக்கம் இல்லை, நிச்சயமாக நமக்கு டிரிபியூனல்தான் வேண்டும். நமக்கு வேண்டிய நியாயம் கிடைத்தாக வேண்டும்.

(இரவு 7-40)

இங்கே மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அன்பர்கள் பேசிய நேரத்தில் ஒரு பிரச்சினைபற்றிச் சொன்னார்கள். நான் கர்நாடக அமைச்சர் மத்தியிலே பேசிய நேரத்தில் ஒன்றை மிகத் தெளிவாகச் சொன்னேன். அரசியலுக்கு நீங்களும் பயப்படுகிறீர்கள், நாங்களும் பயப்படுகிறோம், நமக்கு நியாயம் சொல்வதற்காக பொதுவாக ஒரு நீதிபதி இருப்பார் என்று சொன்னால், எங்களுக்குப் பாதகமாக வந்தாலும் கூட அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம், அதுபோல உங்களுடைய மாநிலத்தில் உங்கள் அரசியல் கட்சிகள் விமர்சிப் பார்களோ என்ற அச்சம் உங்கள் மத்தியில் இருக்கிறது, ஆகவே, நடுவர் ஒருவர் இருப்பார் என்று சொன்னால், யாருக்கு எந்த விதமான பாதகம் வந்தாலும், சாதகம் வந்தாலும், நடுவர் சொல்லிவிட்டார் என்கின்ற அந்த உணர்வை நாம் பெற முடியும். ஆகவே, நியாயங்களைத்தான் நாங்கள் கேட்கிறோம் என்கின்ற அந்த உணர்வை இன்றைக்கு நான் அங்கே கர்நாடக அமைச்சரிடத்தில் சொல்லி வந்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 4, 5 தினங்களுக்கு முன்பாக பேப்பரைப் பார்க்கின்ற நேரத்தில் காவிரியிலே இன்றைக்கு பெங்களூருக்குக் குடிநீருக்காக அணை கட்டுவதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டிருப்பதாக நான் ஒரு குறிப்பைப் பார்த்தேன். நாங்கள் ஏற்கெனவே இந்த அரசின் உணர்வை மத்திய அரசாங்கத்துக்குச் சொல்லியிருக்கின்றோம். பெங்களூருக்குத் தேவையான குடிநீருக்காக அணை கட்டுகிற நேரத்தில் நம்முடைய மாநிலத்தையும் சேர்த்துக்

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பெங்களூரினுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசாமல், எங்களுக்கு இருக்கின்ற காவிரியை நவீனபடுத்தும் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதுபோல பவானிக்குக் கீழே இருக்கின்ற மூன்று மின் திட்டங்களையும் சேர்த்துப் பேசியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு திட்டத்தையும்பற்றி பேசாமல் மொத்தமாக 'இணைப்பாகப் பேச' வேண்டுமென்று நாங்கள் அன்றைக்கே மத்திய அரசாங்கத்திடம் சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு நடைபெற்ற கூட்டத்தில் கேரள அரசாங்கமும், பாண்டிச்சேரி அரசாங்கமும் தங்கள் உணர்வுகளைச் சொல்லியிருந்தன. அந்த மாநிலங்களிலிருந்து வந்திருந்தவர்களும் ஒட்டுமொத்தமாக அவைகளைப்பற்றி பேச வேண்டுமேயொழிய தனித் தனியாகப் பேசக் கூடாது என்கின்ற உணர்வினைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, பெங்களூருக்கு மட்டும் இன்றைக்கு அனுமதி வழங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பெரியார் அணையினுடைய கொள்ளளவு பற்றி சொன்னார்கள். எல்லாமே இன்றைக்கு அரசியலாக இருக்கிறது. பெரியார் அணை நன்றாக பலமாகத்தான் இருக்கிறது. நானே அங்கே போய்ப் பார்த்திருக்கிறேன். இங்கே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே போய்ப் பார்த்திருக்கிறார்கள். இன்றையதினம் கேரளாவிலே, இடுக்கியில் அணை கட்டியிருக்கிறார்கள். அவர்கள் நினைத்த அளவு தண்ணீர் வரவில்லை என்கிற நிலை ஏற்பட்டட. உடனே நம் மாநிலத்தில் இருக்கிற அணையிலுள்ள தண்ணீரைக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக அன்றைக்கு அந்த அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாங்கள் அந்த அணையைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறோம். பாதி அளவு வேலை முடிந்திருக்கிறது. மீதிப் பாதியை முடிப்பதற்கு இன்றைக்கு டெண்டர்கள் விட்டிருக்கிறோம். வெகு விரைவில் அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 29] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

அடுத்து, நதி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, வேறு தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான நலன் பற்றிய பிரச்சினைகளாக இருந்தாலும் சரி இங்கேயுள்ள அத்துணை பேரும் சேர்ந்து அரசியல் மனமாச்சர்யங்களை மறந்துவிட்டு ஒட்டுமொத்தமாக நிற்கிற நிலையில்தான் நமக்கு வேண்டிய நியாயங்களை நாம பெற முடியும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய அருமைச் சகோதரர் மரியாதைக்குரிய ஜெயச்சந்திரன் அவர்கள் வீராணம் ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். வீராணம் ஏரி என்பது காவிரித் தண்ணீர் போகின்ற ஏரி. ஆகவே அதிலே காவிரித் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், அதிலேயுள்ள கொள்ளளவு இன்றையதினம் குறைந்திருந்தால் கூட பாசனம் சரியாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த ஏரியைத் தூர் வாருவது என்று சொன்னால் அந்த மண்ணை எங்கே கொண்டு போய்க் கொட்டுவது? அதற்குப் பணம் எவ்வளவு செலவாகும் என்று பார்க்கின்ற நேரத்தில், மிக அதிகமாக ஆகும் என்கிற காரணத்தால்தான் அந்தத் திட்டம் அப்படியே தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுப்போம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் பேசிய நேரத்தில் கொடுமுடியாறு திட்டத்தைப் பற்றி சொன்னார்கள். இங்கே 10 நாட்களுக்கு முன்பு கூட நான் இது பற்றி சொல்லியிருக்கிறேன். கொடுமுடியாறு திட்டத்தை நாங்கள் நிறுத்தவில்லை. தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். மத்திய அரசாங்கத்தினுடைய வன இலாகாவுக்குச் சொந்தமான இடம் அங்கே இருக்கின்ற காரணத்தால் அந்த அணையைக் கட்டக்கூடாது என்று உத்தரவு வந்திருக்கிறது.

நாங்கள் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்த அதிகாரிகளிடம் வன இலாகா சட்டத்தை நீங்கள் 1987-லே போட்டீர்கள். அதற்கு முன்பாகவே நாங்கள் கொடுமுடியாறு அணைத் திட்ட வேலைகளை ஆரம்பித்து விட்டோம், அதற்குரிய கணக்கு வழக்குகள்,

கோப்புகள் எல்லாம் எங்களிடத்தில் இருக்கின்றன. அதைச் சரி பாருங்கள் என்று சொன்னோம். அதற்கு அவர்கள் எங்களுக்கு முன்னாலே நீங்கள் வேலையை ஆரம்பித்திருந்தீர்கள் என்று சொன்னால் அதைச் செய்வதற்குத் தடை இல்லை, உங்கள் மத்தியிலே இருக்கிற கணக்குகளைக் கொண்டு வாருங்கள் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை இன்றையதினம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதுபோல மணிமுத்தாறு பாசனக் கால்வாய்த் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் அங்கே சிமெண்ட் லைனிங் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மணிமுத்தாறை நவீனப் படுத்துகிற வேலையைச் செய்கிற நேரத்தில் அப்படிப்பட்ட வேலையையும் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனிக் கால்வாய்த் திட்டங்கள் 12 குளங்களுக்கு வேண்டும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தையும் இந்த அரசாங்கம் ஏற்றுச் செய்யும் என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பிரணவநாதன் அவர்கள் பேசிய நேரத்திலே, காவிரிப் பிரச்சினையையும், பாம்பிக்குளம் ஆழியாறு பிரச்சினையையும் எழுப்பினார்கள். அந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்லியிருக்கிறேன். மேட்டூர் தண்ணீர்ப் பிரச்சினையையும், பெரியாறு டேம் தண்ணீர்ப் பிரச்சினையையும் சொல்லியிருக்கிறார்கள். பெரியாறில் இப்பொழுது 136 அடி இருக்கின்றது; 152 அடி ஆகின்ற நேரத்திலே நம்முடைய மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கெல்லாம் அது உபயோகமாகும் என்று எனக்கும் தெரியும். ஆகவே, அந்த ஆர்வத்தில் வேகமாக முடித்துக் கொடுப்போம் என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் கண்மாய்க்கு ஆண்டுக்கு ஒருமுறை தண்ணீர் வர வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது மதுரையையே வைகைத் தண்ணீர் தாண்டுவதாக எனக்குத் தெரியவில்லை.





வந்தாலு மாத காலத்தில் மதுரையைத் தாண்டி தண்ணீர் போகுமா என்றால் தெரியவில்லை. காரணம் தண்ணீர் இல்லை. தண்ணீர் வருகிற நேரத்திலே அப்படிப்பட்ட முயற்சியிலே இறங்கும்; அதற்கு வேண்டிய ஆர்வம் எனக்கும் இருக்கிறது. நானும்கூட அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன்; பொதுப்பணித் துறையின் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் எனக்கும் அந்த ஆர்வம் இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று காவிரியிலே தவறு நடந்ததைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே எஸ்.இ., ஈ.இ. மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை மட்டும் நாங்கள் சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். கீழே இருக்கின்ற ஏ.இ., ஏ.எஸ்.ஓ. போன்றவர்களை வேறிடத்திற்கு அந்தப் பகுதியை விட்டு மாறுதல் செய்திருக்கிறோம். அந்தக் கோப்பினை விஜிலன்ஸோ அல்லது எதுவோ விசாரிக்கச் செய்து சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டுமென்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்தப் பிரச்சினையில் நாங்கள் கடுமையாகத் தான் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் நான் இங்கே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மலட்டாறு திட்டத்தைப்பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நானும் மாவட்டத்தினுடைய அமைச்சர் என்கின்ற வகையில் நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் மத்தியிலே பேசி அதற்கு வேண்டிய நல்ல முடிவுகளை நான் பெற்றுத் தருவேன் என்பதையும் நான் இந்த நேத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல கிருதமால், கும்பாறு பிரச்சினைகளையும் நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு செல்வோம் என்பதையும் நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் கோறடா அவர்கள் இங்கே பேசிய நேரத்தில் காவிரி வழக்கில் அரசும் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற உணர்வைச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த வேலையையும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எந்த எந்த வழிகளிலே நமக்கு நியாயங்கள் கிடைக்க முடியுமோ அந்த வழிகளையெல்லாம் கையாள்வதற்கு

நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆகவே, வழக்கிலேயும் சேர்ந்து அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதற்கு வேண்டிய நல்ல நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள்—தஞ்சாவூர்க்காரர்கள் சோம்பேறி என்று சொன்னார்கள். இப்பொழுது சோம்பேறியாக இல்லை. ஒருகாலத்திலே இருந்திருக்கலாம். அவர் சொன்னதெல்லாம், இரண்டு மூன்று வருடகாலத்திற்கு முன்பாக—இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 74-க்கு முன்பாக இருந்திருக்கலாம். இப்பொழுது கர்நாடகத்துக்காரன் என்றைக்குத் தண்ணீரைக் குறைக்க ஆரம்பித்தானோ அன்றையிலிருந்து நஞ்சைக்குப் போக ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, இப்பொழுது சோம்பேறியாக இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவேதான் ஓரளவுக்கு, மிகச் சிறப்பான அளவிற்கு நெல் விளைச்சல் இந்த ஆண்டிலே இருந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அணைகளைக் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். வெள்ளத் தண்ணீரை வெளியேற்றுவதற்கு வேண்டிய இந்த முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர் எப்படியாவது அவர் தொகுதியிலே ஒரு அணையைக் கட்ட வேண்டுமென்ற முயற்சியிலே தீவிரமாக இருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக கொறடா அவர்களுடைய உணர்வைப் புரிந்திருக்கிறோம். நானே நேரடியாகப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவருடைய பகுதியிலேயே வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக அந்த டேமைக் கட்டலாம் என்பதை அதிகாரிகளோடு போய்ப் பார்த்திருக்கிறேன். மறுபடியும் முதலமைச்சரோடு பேசி அதற்கு வேண்டிய முயற்சிகளை நாங்கள் எடுப்போம் என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்ற அந்த உணர்வுகளைச் சொன்னார்கள். நிச்சயமாக ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு வேண்டிய அந்த நல்ல நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்





வாய்க்காலிலே இருக்கின்ற சிமெண்ட் ஸ்லாப்களெல்லாம் திருடு போவதைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களே காட்டினார்கள். ஒரு சில இடங்களில் பார்ப்போம் என்று சொன்னால் வீட்டுக்கு வீடு படிக்கல்லும் சரி, துவைப்பதற்கும் சரி நம்முடைய பி.டபிள்யூ.டி. சிமெண்ட் கல்தான் இருக்கிறது. அதைக் கொறடாவே காட்டினார்கள். நீங்கள் போட்ட கல்லெல்லாம் எங்கே இருக்கின்றது என்று பாருங்கள், வாய்க்காலிலே காணோம், எல்லா வீட்டுக்கும் படிக்கல்லாகவும், தளமாகவும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அதை நான் நேரடியாகவே பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட தவறுகள் நடக்காதவண்ணம் அதிகாரிகள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதைத் தடுப்பதற்கு செங்கல் மூலமாக அந்தச் சேனலைப் போட முடியும். அந்தக் கால்வாய்களைச் சீரமைக்க முடியும் அல்லது பெரியார் இம்ப்ரூவ்மெண்டிலே போடக்கூடிய அளவிற்கு கான்கிரீட்களை அந்தக் கால்வாயிலே போட்டால் சரியாக இருக்கும். அதற்கு வேண்டிய ஆய்வுகளை அதிகாரிகளிடத்திலே சொல்லி, வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம் என்பதையும் நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் 76-லே உள்ள ஒப்பந்தம் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற கேள்வியைக் கேட்டார்கள். 76-லே அன்றைக்கு ஜனாதிபதி ஆட்சி நடந்திருக்கிறது. வருகின்ற அரசாங்கம்—பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் வந்து அதை முடிக்கட்டும் என்று சொல்லி அன்றைக்கு அதை அப்படியே தள்ளிப் போட்டுக்கொண்டே போனார்கள், பின்னாலே இந்தப் பிரச்சினை நீண்டு கொண்டே போயிற்று என்பதையும் நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று காட்டாமணி பிரச்சினையைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் தைரியமாக இருக்கலாம். போன ஆண்டு நடந்த வேலை வேறு. அதிலே வேலை நடந்ததா இல்லையா என்று சொல்லித்தான் இப்பொழுது நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டிலே வருகிற பணத்தை வைத்து இந்த ஆண்டிலே எங்கே காட்டாமணிச் செடி இருக்கிறதோ அல்லது எங்கே வேலை நடக்க

வேண்டுமோ அங்கே வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிடுவோம் என்பதனையும் நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 7-50)

ஆனாலும் இதைப்போன்று இந்த சிமிண்ட் ஸ்லாபுகளுக்குப் பதிலாக சீரமைப்புப் பணிகளுக்கு செங்கற்களை வைத்துக் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய அரசு அதற்கான முயற்சிகளை எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சமுதாயக் கிணறுகள் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகள் பற்றி அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அதைப்போன்று இராமநாதபுரம் கண்மாய் பற்றிச் சொன்னார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எப். எம். ஆர். அவர்கள் பேசும்போது கோதையாறு மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீரேற்றுப் பாசனத் திட்டமாக 3, 4 திட்டங்கள் அதிலே இடம் பெறுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போன்று பேச்சிப்பாறைத் திட்டத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளையும் எடுப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகரன் அவர்கள் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப்பற்றிச் சொன்னார்கள். அந்த நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பி விட்டாக வேண்டும் என்று சொன்னார்கள். அப்படித் திருப்பி விடுகின்றபோது தென் மாவட்டங்களுக்குக் குடிநீர் வசதியும், பாசன வசதியும் செய்து கொடுக்க முடியும் என்ற உணர்வை இந்த அரசு பெற்றிருக்கிறது. ஆகவே, அத்தகைய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் பேசும்போது நாலகாருசியார் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமான கோப்பு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. நான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, நல்ல முடிவினைப் பெற்றுத் தருவேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போன்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் குடகனாறு அணை கட்டவேண்டிய இடம் அவர் சார்ந்திருக்கிற பக்கத்தில் இருக்கிறது; அங்கே கட்டாமல் வேறு பகுதியில் கட்டினார்கள் என்று சொன்னார்கள். அப்போது தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் இந்த அரசு அதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கும். இலட்சுமணகுடி பக்கத்தில் கட்ட முடியுமா என்று ஆய்வு செய்து, அதற்கான உத்தரவினை இந்த அரசு பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று திற்பலூர் திட்டம் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் இந்த நிதியாண்டில் எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமலைச்சாமிக் கவுண்டர் அவர்கள் பேசும்போது பொதுப்பணித் துறை மானியம் மட்டும் அல்லாமல் எல்லா மானியங்கள் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். மற்ற மானியங்களில் செய்யவேண்டிய பணிகள்பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. என்னுடைய துறை சம்பந்தப்பட்டவரையில் தேவையான நடவடிக்கைகளை நான் நிச்சயமாக எடுப்பேன் என்பதை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனி அவர்கள் சாத்தனூர் திட்டத்தை இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். சாத்தனூர் திட்டத்தை இந்த ஆண்டு எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின்கீழ் செய்யப்படுகின்ற பணிகளைப் பற்றிச் சொல்லும் போது 200 ஏக்கருக்குக் கீழே உள்ள குளமாக இருந்தாலும் இந்தத்

[illegible] எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொள்ளுகின்றபோது நமக்குப் பயனடையும் ஏக்கரின் அளவு குறைந்துவிடும். 150 குளங்களுக்கு என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர, அந்தக் குளத்தின் அளவு எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. அது 100 ஏக்கராகவும் இருக்கலாம்; 500 ஏக்கராகவும் இருக்கலாம். அதிகப் பயன்பெறும் வகையில்தான் நாமாக இந்த அளவுகோலை நிர்ணயித்திருக்கிறோம். 200 ஏக்கர் முதல் 500 ஏக்கர் வரையிலான குளங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஒரு ஏக்கருக்கு 8,000 ரூபாய் கிடைக்கும். அந்தவகையில் நாம் அதிக பரப்புள்ள ஏரிகளை எடுத்துக்கொள்ளுகிறபோது அதிகமாகப் பணம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இங்கே பேசியவர்கள் பாலாற்றுப் பகுதிகளில் 'கிரவுண்ட் வாட்டரை டெவலப்' பண்ண வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றி பலர் இங்கே விளக்கினார்கள். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது நமக்கு அவசியம் வேண்டும். ஆனால் பலர் இது முடியும் என்கிறார்கள்; சிலர் முடியாது என்று சொல்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் நிச்சயமாகத் தேவை. ஆகவே நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வற்புறுத்திக் கேட்போம.

அதைப்போன்று ராஜாதோப்பு திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். வனவிலங்குகள் பாதுகாப்பு, வன நிலம் சம்பந்தப்பட்டிருப்பதால் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றுத்தான் அதைச் செய்ய முடியும். அதற்கு வேண்டிய முயற்சிகளை நம்முடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாதையன் அவர்கள் வழுக்குப் பாறைத் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அதுசம்பந்தமாக அதிகாரிகளுடன் கலந்து பேசி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் அவர்கள் கண்மாய்களை எல்லாம் குடிமராமத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது யாரும் குடிமராமத்து செய்வதாகத் தெரியவில்லை. குடிமராமத்து என்ற பெயரால் இன்றைக்கு அந்தப் பணி பாழாகிக்கொண்டிருக்கிறது; குளங்கள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் ஏதாவது ஒரு வகையில் உதவி பெற்று, அந்தப் பணிகளைச் செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முயற்சியின் ஒரு பகுதியாக 60 கோடி ரூபாய்க்கான செலவில் எக்ஸ் ஜமீன் கண்மாய்களைப் பராமரிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்னம்பட்டுத் திட்டம் இந்த நிதியாண்டில் எடுத்துச் செய்யப்படும். நிலையூர் கண்மாய்ப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து நிதியாதாரங்களின் அடிப்படையில் அந்த வேலைகள் எடுத்துச் செய்யப்படும் என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கண்மாயிலே இருக்கின்ற மரங்களை எல்லாம் ஏலம் விடுகிறபோது அது ரெவின்யூ கணக்கில் சேர்க்கப்படுகிறது என்றும் அப்படி இல்லாமல் பொதுப்பணித்துறைக்கே அது வேண்டுமென்றும் சொன்னார்கள். அதுபற்றி சம்பந்தப்பட்ட ரெவின்யூ அமைச்சரோடு பேசி, முதலமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வந்து அதனை மாற்ற முடியுமா, அவ்வாறு மாற்றி பொதுப்பணித் துறையில் கண்மாய்கள் கட்டுவதற்கும், கலுங்குகள் கட்டுவதற்கும் பயன்படுத்துகிற வகையில் ரிசர்வ் பாங்க் பணத்தோடு வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி முடிவு செய்யலாம்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ரத்தினம் அவர்கள் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் பற்றிச் சொன்னார்கள். தல்லார், ஆனைமலைத் திட்டத்தில் 2½ டி.எம்.சி.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 29

தண்ணீர் பெருக்குகிற முயற்சி எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதுகுறித்து பல தடவை கேரள அரசோடு பேசி 24.36 கோடி ரூபாய்க்கான திட்டங்களை நாம் தயாராக வைத்திருக்கிறோம். ஆனால் குயில்குட்டி என்ற இடத்தில் இருக்கிற நீர் மின்சாரத் திட்டத்தையும் அதோடு சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் இதிலே காலதாமதம் ஆகிறது என்பதை மிகப் பணிவன்போடு நான். இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து பி.எம்.பி. அலுவலகத்தை அந்த இடத்தில் நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற உணர்வைச் சொன்னார்கள். அதிகாரிகள் மட்டத்தில் அது குறித்துப் பேசி நிச்சயமாக நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுப்பேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 15 நாட்களுக்கு ஒருமுறை விட்டுவிட்டு தண்ணீர் கொடுக்க முடியுமா, தென்னைக்குத் தண்ணீர் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதிகாரிகளிடத்தில் பேசி அதற்கு வேண்டிய நல்ல முயற்சி எடுப்போம். உங்களையும் அதிகாரிகளையும் வைத்துப் பேசி அதிலே எந்த அளவுக்குச் சாத்தியக்கூறு இருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் பேசி நிச்சயமாக அதற்கு ஒரு முடிவு எடுப்போம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் உலக வங்கியில் கடனைப் பெறவேண்டும், அவ்வாறு கடன் பெறுகிற நேரத்தில்—அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசிய நேரத்தில் 2½ கோடி ரூபாய் அளவில் பொதுப்பணித் துறையில் தவறு நடந்திருப்பதாகச் சொன்னார்கள். அது அவர்களுக்கே தெரியும். தவறு நடந்ததாக நாங்களாகவே கண்டுபிடித்தோம். எங்களுக்கு வந்த தகவலை வைத்துக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தோம். வேறு யாரும் எங்களுக்குச் சொல்லவில்லை. அதுபற்றிய விவரம் தெரிய வந்ததும் உடனடியாக எஸ்.இ. மட்டத்தில் அது குறித்து விசாரிக்கச் செய்து, தவறு செய்த அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்து வைத்து இருக்கிறோம். ஒப்பந்தக்காரர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே பணம் எப்படிக்



1987 ஏப்ரல் 29] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

கொடுப்பது என்பதைப்பற்றி அதிகாரிகளோடு பேசிக்கொண்டிருக்கிறோம். ஒரு நல்ல முடிவு எடுப்போம். தவறு செய்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, அதாவது அத்தனைபேர் மீதும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதை திரு. மணிமாறன் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து திரு. பி. என்.ஆர். அவர்கள் வழக்கு திரும்பப் பெறப்பட்டதை எல்லாம் பற்றிச் சொன்னார்கள். நடந்துபோனதைப் பற்றிச் பேசிப் பயன் இல்லை. இதற்காக நாம் செய்யவேண்டிய முயற்சியை எடுக்கிறோம். நாமும் சேர்ந்து உச்சநீதிமன்றத்தில் நமக்கு வேண்டிய நியாயங்களைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆறுகளைத் தேசியமயமாக்குவது பற்றிச் சொன்னார்கள். சமீபத்திலே நாங்கள் என்.டபிள்யூ.ஏ. மீட்டிங்கிலே கலந்துகொண்டோம். அப்போது நம்மைப் போன்று தண்ணீர் பெறக்கூடிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தான் தேசியமயமாக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தோமே தவிர தண்ணீர் உற்பத்தியாகின்ற அத்தனை மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், அதாவது காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலமானாலும், எதிர்க்கட்சி இருக்கின்ற மாநிலமானாலும் அத்தனை பேரும் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதை நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். அவர்கள் தண்ணீர் எவ்வளவு இருந்தாலும் கூட, தண்ணீர் இல்லை, இல்லை என்றுதான் சொன்னார்களே தவிர ஒருவர் கூட தண்ணீர் இருப்பதாகச் சொல்லவே இல்லை.

மகாநதியிலிருந்து, கிருஷ்ணா, கோதாவரி, காவிரிக்கு தண்ணீர் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். அப்போதுகூட நாங்கள் சிரித்துக்கொண்டே சொன்னோம். நீங்கள் கொண்டு வரும்போது நாங்கள் இருக்கவே மாட்டோம் என்று சொல்லி விட்டோம். அப்படிச் சொன்னதற்குப் பிறகு மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருக்கிற தண்ணீரையாவது திருப்பிக் கொடுங்கள், அதற்கு வேண்டிய ஆய்வினைச் செய்யுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டிக்கொண்டதன் விளைவாகத்தான் இப்போது மேற்குத் தொடர்ச்சி மலையிலே எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கு இரண்டு

டிவிஷன்களை மத்திய அரசினர் போட்டிருக்கிறார்கள். நம்முடைய சார்பாகவும் ஒரு டிவிஷன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறேன். எனவே நம்மால் முடிந்த காரியத்தை அவசியம் நாம் செய்துதான் இருக்கிறோம் என்பதை இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து திரு. வி. சுப்பிரமணியன் அவர்கள் தனது தொகுதியில் நந்தன் கால்வாய்த் திட்டம் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்தும் அதிகாரிகளோடு கலந்து பேசி முடிவு செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 'ஈரோப்பியன் எக்கனாமிக்' திட்டத்தில் அவர்கள் தொகுதியில் உள்ள 3 கண்மாய்களை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதனை இந்த ஆண்டில் எடுப்போம் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் கீழ்பவானியிலிருந்து தஞ்சைக்குத் தண்ணீர் அனுப்பக்கூடாது என்று சொன்னார்கள் —அப்போது கொறடா அவர்கள்கூட திரும்பிப் பார்த்தார்கள்— காவிரிப் பிரச்சினை என்றாலே சண்டை நடக்காமல் இருக்காது. கீழ்பவானிக்காரர்கள் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் அதிலிருந்து தண்ணீர் பாசனத்திற்கு வேண்டுமென்று இவர்கள் சொல்கிற நிலைமையில் அதற்கு அங்கே அவசியம் இல்லை; பாசனத்திற்காக நாம் தண்ணீரைத் திறக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம் என்பதையும் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் இருக்கிற மலைகளிலே இருந்து வருகின்ற காட்டாற்றுத் தண்ணீர் எல்லாம் கர்நாடகத்திற்குப் போவதாக அவரும், அவரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். வருவது தண்ணீராக இருந்தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி கர்நாடகத்திற்கு போவதாக சொல்லுகிறார்கள். அதை ஆய்வு செய்து உடனடியாக கொடுக்கப்பட





வேண்டும் என்ற உணர்வை அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறோம். தண்ணீர் போவதாக இருந்தால் நிச்சயமாக அணையைக் கட்டி நம்முடைய பகுதிக்கு திருப்பிக் கொள்வோம் என்பதையும் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல பவானிசாகரில் அணை கட்டுகிற நேரத்தில் அந்த கூலிகள் வசித்து வந்த குடிசைகளில் பல ஏழைகள் போய் தங்கியிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு அந்த இடத்தை சொந்தமாக்க வேண்டும் என்றும் கேட்டார்கள். அந்தக் கோப்பை பார்த்து முதலமைச்சரோடு கலந்துகொண்டு நிச்சயமாக அந்த உதவியை அவர்களுக்குச் செய்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(இரவு 8-00)

டாக்டர் பொன்னுசாமி அவர்களும் மன்னார் அணை திட்டத்தைப்பற்றி சொன்னார்கள். அது இந்த அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இத்தகைய திட்டங்களையெல்லாம் முதலமைச்சரோடு கலந்து பேசி நம்முடைய நிதி நிலைமைக்கு ஏற்ப எடுப்பதற்குண்டான முயற்சிகளை எடுப்போம் என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்கள் பேசுகிற நேரத்தில் வடிகால்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் தஞ்சைக்கு சென்று சுற்றிப் பார்க்கிற நேரத்தில் வடிகால்களால்தான் அங்கே பிரச்சினையே இருக்கிறது என்பதைப் பார்த்தேன். அங்கே மழை பெய்யும் நேரத்தில் இந்த வடிகால்களினால் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதேபோல கடல் தண்ணீர் 10 கி.மீ. தூரத்திற்கு உள்ளே வந்ததையும் நான் பார்த்தேன். ஆகவே அதை எப்படி மாற்றலாம் என்பது குறித்து ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். கொல்லத்தாறு தண்ணீரைப் பற்றிச் சொன்னார்கள். அது வேண்டாம் என்று சொன்னாலும் தஞ்சாவூர்க்காரர்கள் கேட்பதில்லை. போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எப்படியும் புரட்சித் தலைவர் அவர்களிடம் தண்ணீர் வாங்கி விடலாம் என்று போடுகிறார்கள். அதேபோல கொல்லத்தாறு வரைக்கும் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல ஐரோப்பிய பொருளாதார திட்டத்திலிருந்து கண்மாய் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதிலே கண்மாயை எடுக்க வேண்டும் என்று சொன்னால் நீர் வருகிற கண்மாயை எடுக்கக்கூடாது என்று அந்த ஐரோப்பிய பொருளாதார திட்டத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். மழை நீர் வரக்கூடிய கண்மாயாக இருந்தால் எடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை எப்படி பார்த்து செய்ய வேண்டுமோ அதற்கான முயற்சிகளை செய்வோம் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல லைனிங் செய்ய வேண்டாம் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையும் இப்போது ஆதரிப்பதற்கில்லை. காரணம் மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று சொன்னால் வேதாரண்யத்திற்கு தண்ணீர் வருவதற்கு 45 நாட்கள் ஆகிறது. நாம் லைனிங் செய்து சிமெண்ட் போட்டோம் என்று சொன்னால் எங்களுடைய கணக்கின்படி 15 அல்லது 20 நாட்களுக்குள் வேதாரண்யத்திற்கு தண்ணீர் வந்து விடும். தண்ணீரை மிச்சப்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். 320 டி.எம்.சி. தண்ணீர் வரவேண்டிய இடத்தில் 180 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்துகொண்டிருக்கிறது. அதுவும் உலக வங்கியிலே சிமெண்ட் கான்கிரிட் போட்டால்தான் ஒப்புக் கொள்வார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் பேசுகிறபோது அவர்கள் காங்கிரசில் இருக்கிறார் என்பதற்காக காங்கிரசுக்கே சாதகமாக பேசினார்கள். நான் அவருக்கு சொல்லிக் கொள்வதெல்லாம் நாம் தமிழகத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறோம். தமிழக மக்களின் நலம்தான் முக்கியம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மைய அரசாங்கம் தவறு செய்தாலும் சரி நாங்கள் தவறு செய்தாலும் சரி, சரியான சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டும் போதுதான், தவறு நடந்திருந்தால்கூட திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திலிருந்து காப்பிக்காடு திட்டத்தை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் என்று சொல்லுகிறபோது அது மனிதர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிற திட்டமாக இருக்கிற காரணத்தால் அந்தத் திட்டத்தின் கீழ் அதை எடுக்க முடியாது என்றாலும், நீங்கள் சொல்லியிருக்கிற காரணத்தால் வேறு எந்தத் திட்டத்தின் கீழாவது செய்ய முடியுமா என்பதைப் பார்க்க முயற்சிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் ஆக்கிரமிப்பைப் பற்றி சொன்னார்கள். ஆக்கிரமிப்பை அகற்ற இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. நான் இங்கே சொல்லிக்கொள்வது எல்லாம் ஆக்கிரமிப்பை எடுக்கிற நேரத்தில் எந்த சட்டமன்ற உறுப்பினரோ அல்லது அரசியல்வாதியோ அதில் தலையிடவில்லை என்று சொன்னால் ஒரே வாரத்திற்குள்ளாக அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றை சொன்னார்கள். பி. கேனால் பிரச்சினையைப் பற்றி சொன்னார்கள். இது போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்டது என்றாலும்கூட, அந்த வேலைகளை நாங்களே பார்க்கிறோம் என்ற காரணத்தால் மத்திய அரசாங்கத்திற்கு கடன் வழங்க வேண்டும் என்று கேட்டு எழுதியிருக்கிறோம். அதிலே பணம் ஒதுக்குவதாகக் கூட தகவல் வந்திருக்கிறது என்பதைப் பணிவன்போடு சொல்லிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையில் மிகச் சிறப்பாகப் பேசி எனக்கும் பல கருத்துக்களைச் சொல்லி அரசாங்கத்தையும் உற்சாகப்படுத்தி பங்கு கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டி, அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் முன்மொழிந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. த. புஷ்பராசு:** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்ட பேச்சிக் கண்மாய் அணைக்கட்டுத் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள 15 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஒவ்

[திரு. த. புஷ்பராசு] [1987 ஏப்ரல் 29

வொரு ஆண்டும் மண் அணை கட்டி வெள்ளப் பெருக்கக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரை தேக்கி 5,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப் பாசனம் பெறுகிறார்கள். வெள்ளம் வருகிற காலங்களில் அந்த மண் அணை உடைந்து விவசாயிகள் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இதனை மனதில் கொண்டு இந்த அணைக்கட்டுத் திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படுமா? மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தருகிறபோது அவர்களுடைய திருக்கரத்தால் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற இந்தத் திட்டத்தைப் பற்றி அதிகாரிகளோடு கலந்து பேசி நல்ல முடிவெடுக்கப்படும். இரண்டு தினங்களில் என்னை தனியாக பார்ப்பார்களானால் அந்தக் கோப்பு எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்து நல்ல முடிவையெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 36—பாசனம்.**

திருவாளர்கள் பி. கே. எம். முத்துராமலிங்கம், எஸ். ரெத்தின ராஜ் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் கோ. வீரய்யன், எஸ். பி. மணவாளன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,33,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1987 ஏப்ரல் 29]

**கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள்.**

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,49,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் .**

திரு. ஜே. முகம்மது கனி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள், பணியாளரமைப்பும், கருவிகளும்—தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,81,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.**

திரு. கே. எம். தங்கமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 65, 43, 69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 53—பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.**

திருவாளர்கள் கோ. வீரய்யன், மு. இராசாங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 57,24,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (30—4—1987) காலை 10.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

197. பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் உரை, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

198. பொதுப் பணித் (கட்டடப் பிரிவு) துறையின் பணிகள் பற்றிய ஆய்வுரை, 1986-87. (தமிழ், ஆங்கிலம்).

199. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1986-87. (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I

(581 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**பாசனம்—கட்டடங்கள் மீதான மானியக் கோரிக்கைகள்—1987-88.**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரைகளின் பேரில் இவ்வரசுக்கு கோரிக்கை 36—பாசனம் என்பதன்கீழ் ரூ. 76,33,16,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 52—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 65,43,69,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்புதன்கீழ் ரூ. 3.49,74,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 38—பொதுப்பணிகள்—பணியாளர்கள் அமைப்புக் கருவிகளும், தளவாடங்களும் என்பதன்கீழ் ரூ. 25,81,02,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 53—பொதுப் பணிகள்—கட்டடங்கள் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 57,24,15,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1987 ஏப்ரல் 29

2. தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கும், அவற்றை இயல்பாகப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும் கோரிக்கை 36—பாசனம் என்பதன்கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

3. புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர்வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு கோரிக்கை 52—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

4. கட்டடங்கள் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பலவகைப் பணிகள் மற்றும் மூலப்பணிகளுக்கும், கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள கட்டடங்களின் இயல்பான பராமரிப்பு ஆகியவை போன்ற செப்பனீட்டுப் பணிகளுக்கும் செய்யப்படுகிற நிதி ஒதுக்கீடு கோரிக்கை 37-ன் கீழ் வருகிறது. பொதுப்பணியின்கீழ் வருகின்ற கட்டடங்களின் சொத்து வரி கட்டுவதற்கான செலவும் இக்கோரிக்கையில் அடங்கும்.

5. கோரிக்கை எண் 38—பொதுப்பணித் துறை நிர்வாகம், கருவிகளும், தளவாடங்களும், பணியாளர் அமைப்பின் மொத்தச் செலவு இக்கோரிக்கையின்கீழ் வருகிறது.

6. புதிய கட்டடப் பணிகளுக்கு, தனித்தனியே ஆகும் செலவு ரூபாய் ஒரு லட்சத்துக்கு மேற்படுமாயின் அல்லது தனித்தனியே இந்த அளவுக்கு குறைவாகச் செலவு ஏற்படுவதாயினும், திட்டத்தின் ஒரு பகுதியாக அமைத்து ரூ. 5 லட்சத்துக்குமேல் செலவாகுமாயின், அப்பணிகள் மீதான செலவு, கோரிக்கை—53 என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து செலவு செய்யப்படும்.

பொதுப்பணித் துறை தமிழக அரசின் முக்கியத் துறைகளுள் ஒன்று. தமிழ்நாட்டின் செழுமைக்கும் வளத்திற்கும் கணிசமான அளவில் உணவு தானியங்கள் பெருக்கத்திற்கும் இத்துறை ஆற்றியிருக்கும் பணி மகத்தானது. விவசாயத்திற்குத் தேவையான சீரான நீர்ப்பாசனம், பொதுமக்களுக்கு தேவையான மருத்துவமனைக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள், குடியிருப்புகள் போன்றவைகள் மற்றும் மக்களுக்கு மிக தேவையான



1987 ஏப்ரல் 29]

குடிநீருக்கான நிலத்தடி நீர் ஆதாரங்களையும், விவசாயத்திற்காக தேவைப்படும் நீர் ஆதாரங்களையும் ஆய்வு செய்து, திட்டங்களைத் தீட்டி, உரிய காலத்தில் அவற்றைச் சீரிய முறையில் செவ்வனே நிறைவேற்றிய பெருமை இத்துறைக்கு உண்டு. நீர் கட்டுப்பாடும், வறட்சி நிலையும் தமிழ்நாட்டை அதிகமாக பாதித்திருந்த ஆண்டுகளில்கூட இத்துறை தன் நிர்வாகத் திறத்தாலும், பயன் அளிக்கக்கூடிய பல திட்டங்களை காலம் தவறாது நிறைவேற்றியமையாலும், முன் யோசனையுடன் கூடி செயல்பட்டதாலும், பல பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது.

தமிழகத்திலுள்ள நீர் ஆதாரங்களை விவசாய பாசனத்திற்கு அநேகமாக முழு அளவில் ஏற்கனவே பயன்படுத்தி விட்டோம். புதிதாக பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு இனி வாய்ப்பு இல்லை. எனவே, இப்போதுள்ள பாசனத் திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தவும், தண்ணீரினை வீணாக்காமல் தடுக்கவும், தண்ணீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்தவும், பல திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயத்திற்கான நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது பற்றிய பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைத் தவிர நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு அதனை சீராக பயன்படுத்தவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற திட்டங்களுக்கு மாநில, மத்திய அரசுகளின் நிதி உதவி தவிர, அயல்நாட்டு நிறுவனங்களின் நிதி உதவிகளைப் பெறுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ள காவிரி நீர்ப் பிரச்சினை விரைவிலே தீர்க்கப்படுவதற்கு, அதனை ஒரு நடுவர் குழுவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளோம். குடிநீருக்கு மட்டுமல்லாது மேற்கு நோக்கிப் பாயும் நதிகளிலிருந்து தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

சென்ற பத்து ஆண்டு காலத்தில் அண்டை மாநிலங்களுடன் தண்ணீர் பற்றிய பல பிரச்சினைகள் தோன்றியும்கூட, கடுமையான நிதி பற்றாக்குறை இருந்தும்கூட, சுமார் 48,000 ஹெக்டேர்

நிலத்திற்கு கூடுதல் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பெரியாறு—வைகைத் திட்டம், ஏரிகளை மேம்படுத்தும் திட்டம் முதலிய பெரிய திட்டங்கள் அயல்நாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலத்தடி நீர்த்துறை மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. பல்வேறு துறைகளுக்கான பல பெரிய, சிறிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதிய மாவட்டங்களின் தலைநகருக்கான மூலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, பல்வேறு வறட்சி நிவாரணத் திட்டங்களும் இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பெரிய மற்றும் நடுத்தர பாசனம்:**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் 1985-86-ல் துவங்கி 1989-90-ல் முடிவடைகிறது. இத்திட்ட காலத்தில் பெரிய மற்றும் நடுத்தர பாசனப் பிரிவிற்கு ரூ. 212 கோடியும், 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பகுதியைக் கொண்ட சிறுபாசனத் திட்டங்களுக்காக ரூ. 32.00 கோடியும் முதலீடாக ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் பெரிய மற்றும் நடுத்தர பாசனப் பிரிவிற்கு ரூ. 232 கோடியும், சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ. 61.00 கோடியும் தேவைப்படும். இத்திட்ட காலத்தில் 40,000 ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1986-87-ல் பெரிய, நடுத்தர மற்றும் 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பரப்பைக் கொண்ட சிறுபாசன திட்டங்களுக்கென ரூ. 44.78 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 20,100 ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. பெரிய, நடுத்தர மற்றும் 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பரப்பைக் கொண்ட சிறு பாசனத் திட்டங்களுக்கு செலவு செய்திட ரூ. 50.54 கோடி (திருத்திய மதிப்பீட்டில்) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் கூடுதல் பாசன வசதிக்கான இலக்கு 20,450 ஹெக்டேராக நிர்ணயிக்கப்பட்டது.

1987-88 ஆம் ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக ரூ. 39.57 கோடியும், 2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பரப்பைக் கொண்ட சிறு பாசனத் திட்டங்களுக்காக ரூ. 9.24 கோடியும் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் கூடுதல் பாசன வசதிக்கான இலக்கு 10,000 ஹெக்டேராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





**பெரிய பாசனத் திட்டங்கள்:**

உலக வங்கியின் உதவித் தொகையுடன் 1977-ம் ஆண்டு துவங்கப்பட்ட பெரியார்-வைகை நவீனப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் 1984-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு ரூ. 56.86 கோடிக்கு அரசு அங்கீகாரம் அளித்து, வேலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவித் தொகை 35 மில்லியன் (அமெரிக்கா) டாலராகும். இரண்டாவது கட்டப் பணிகள் மார்ச் 1988-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 14.44 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரூ. 18.63 கோடி செலவில் கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 56,660 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனப் பகுதி விரிவாக்கத் திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தில் மேலும் 14,170 ஹெக்டேர் (35,000 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் இத்திட்டத்தின் மூன்றாவது கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 743.50 இலட்சம்.

**தேசீய நீர்வள மேலாண்மைத் திட்டம்:**

தற்போது நடைமுறையிலுள்ள பாசனத் திட்டங்களில் நீர்வள மேலாண்மையை மேம்படுத்தி அதனால் மிச்சமாகும் தண்ணீரைக் கொண்டு மேலும் அதிக பரப்பளவில் பாசனம் செய்வதற்காக மத்திய அரசு உலக வங்கி உதவியுடன் தீட்டப்பட்டுள்ள தேசீய நீர்வள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டுள்ள திட்டங்களை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

சாத்தனூர் திட்டம்
கோதையார் திட்டம்
தாமிரபரணி திட்டம்
கம்பம் பள்ளத்தாக்கு திட்டம்
அமராவதி பழைய கால்வாய்களை மேம்படுத்துதல்.

இதில் முதல் கட்டமாக சாத்தனூர் திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதலளித்துள்ளது.

**நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள் :**

வாணியார், வெம்பக்கோட்டை, குள்ளூர்சந்தை, சூளகிரி சின்னார், நாகாவதி, தொப்பையார், கேசரிகுலிஹல்லா, ஈச்சம் பாடி மற்றும் திருப்பரப்பு அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புப் பணிகள் ஆகிய திட்டங்களுக்கான பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. மேலும் எட்டு நடுத்தர பாசனத் திட்டங்கள் மற்றும் ஐந்து சிறுபாசனத் திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

தவிர, கீழே குறிப்பிட்டுள்ள 4 சிறு பாசனத் திட்டங்கள் (2,000 ஹெக்டேருக்குக் குறைவான பாசன பரப்பைக் கொண்டவை) நடப்பு ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 39.83 கோடியாகும்.

1. மதுராந்தகம் ஏரியிலிருந்து வலதுபுறக் கால்வாய் வெட்டுதல்.
2. சின்னவேடப்பட்டி ஏரித் திட்டம்.
3. சண்முகா நதி ஏரித் திட்டம்.
4. கொடுமுடியார் நீர்த்தேக்கத் திட்டம்.

இவற்றில் கொடுமுடியார் நீர்த்தேக்கத் திட்டம் தவிர மற்ற பணிகள் துவக்கப்பட்டுவிட்டன. கொடுமுடியார் திட்டப் பணிகள் வனத்துறையினருக்குச் சொந்தமான நிலங்களை கையகப்படுத்த வனத்துறையின் ஒப்புதல் கிடைக்காதது காரணமாக அணைப் பகுதியில் கட்டுமான பணிகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபின் கீழ்க்கண்ட திட்டங்களும் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன :—

**பெரிய திட்டங்கள் :**

1. நல்லார் திட்டம்.
2. ஆனமலையார் திட்டம்.
3. மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைத் திருப்பிவிடும் திட்டம்.



**தற்போதைய பாசன முறைகளை நவீனப்படுத்துதல் :**

தமிழ்நாட்டில் நிலப்பரப்பு நீர் ஏறத்தாழ முற்றிலும் பயன் படுத்தப்பட்டுவிட்ட நிலையில் கிடைக்கும் நீரைப் பாதுகாத்து மேலும் சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்டு கால்வாய்களை லைனிங் செய்தும், நீர்ப்பங்கீட்டை முறைப்படுத்தியும் பழைய பாசன வழிமுறைகளை நவீனப்படுத்தும் திட்டம் அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட கருதப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவித் தொகையுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரியார்—வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டமானது பெரிய திட்டங்களில் ஒன்றாகும்.

தஞ்சாவூர் டெல்டா பாசன வாய்க்கால்கள் நவீனப்படுத்தும் பணிகளும் ஒவ்வொரு கட்டமாக செயலாக்கப்பட்டு வருகின்றது. காவிரி டெல்டா பகுதி முழுவதையும் உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்துவதற்காக ரூ. 366.60 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டு ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. முதல் கட்ட பணிகளுக்கு திட்ட மதிப்பீடு ரூ. 90.20 கோடிக்கு தயாரிக்கப்பட்டு மத்திய நீராணைக் குழுவின் அனுமதிக்காக 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு மத்திய அரசின் பரிசீல னையில் உள்ளது.

இத்திட்டத்தை இறுதி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக படுகை மாநிலங்களுக்கு இடையிலான நீர்ப் பங்கீட்டுத் தாவாவில் ஒரு உடன்படிக்கை எட்டப்படவேண்டும் என உலக வங்கிக் குழு வலியுறுத்துகிறது. இதனைத் தொடர்ந்து கர்நாடக அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக அரசு மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறாக திட்டத்தின் இறுதி ஆய்வு, மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்த் தாவா முடிவுறாத நிலையில், தாமதப் படுகிறது.

இவை தவிர, கோதையாறு பாசன முறையின் கீழ் ரூ. 444.56 லட்சம் மதிப்பீட்டில் (1) அனந்தனாறு கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை சீரமைக்கும் திட்டம் ஒன்றும் (2) திருப் பரப்பு அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாயை விரிவாக்கம்

செய்து கால்வாயின் முழு நீளத்தையும் நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றும் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இவற்றால் 2,050 ஹெக்டேர் நிலங்கள் கூடுதல் பாசனம் பெறும்.

**வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் :**

1986-87 ஆம் ஆண்டில் எட்டு வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 1986-87 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 266.92 லட்சம் நடைபெற்று வரும் பணிகளுக்கும், முடிவுபெற்ற பணிகளில் எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் மேலும் எதிர்பார்க்கும் செலவினத்தைக் கருத்தில் கொண்டு பணிகளை முடிக்க 1987-88 ஆம் ஆண்டுக்கு ரூ. 2.03 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்துதல்:**

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் 20,000 ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பாம்பிக்குளம்-ஆழியார் பாசனப் பகுதி விரிவாக்க திட்டத்தின் பாசன பரப்பில் ஒரு பகுதியும், தொப்பையார் நீர்த்தேக்கத் திட்டத்தின் பாசன பரப்பில் ஒரு பகுதியும், நொய்யல், சித்தமல்லி நீர்த்தேக்கத் திட்டங்களின் பாசனப் பரப்பு முழுமையாகவும் மொத்தம் 20,100 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றன.

1986-87 ஆம் ஆண்டில் 20,450 ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1987-88-ம் ஆண்டில் அதாவது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டில், 10,000 ஹெக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சென்னை பெருநகருக்கு கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கும் திட்டம் :**

சென்னை நகரின் குடிநீர்த் தேவைகளுக்கென கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னை நகருக்கு திருப்புவது கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டமாகும்.



ஆந்திர மாநில எல்லைக்குள் பாசன வசதியளிக்கவும் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கவும் ஒருங்கிணைந்த திட்டமாக செயல் முறைப்படுத்த 18—4—1983 அன்று ஆந்திரப் பிரதேச மற்றும் தமிழ்நாடு முதல் அமைச்சர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் கையொப்ப மிடப்பட்டது.

தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை 24 கி.மீ. நீளமுள்ள கால்வாய் பணிகள் காப்புக்காடு அல்லாத பகுதிகளில் துவக்கப்பட்டு நடந்து வருகின்றன. காப்புக்காட்டுப் பகுதியில் வெட்டப்பட வேண்டிய எஞ்சியுள்ள 1.25 கி.மீ. நீள கால்வாய் பகுதிக்கு வனப்பகுதியிலிருந்து விலக்கு அளிக்க இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. 37 குறுக்கு கட்டுமான பணிகளில் 18 வேலைகள் முடிக்கப்பட்டன. மீதி 19 குறுக்கு கட்டுமான வேலைகளில், பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பூண்டி நீர்த்தேக்கத்தின் கரைகளை உயர்த்துவதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்தும் வேலைகள் துவக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன.

இத்திட்டத்தில் இவ்வருடத்திய வரவு-செலவு நிதி ஒதுக்கீடு ரூ. 173.92 இலட்சங்கள். இத்திட்டத்தின் மண் தோண்டும் வேலையில் 45.75 விழுக்காடும், கான்க்ரீட் கட்டைகள் தயார் செய்யும் வேலையில் 44.56 விழுக்காடும், படுகைக்கு காரை பூசும் வேலையில் 17.67 விழுக்காடும், கரைக்கு காரை பூசும் பணி 9.27 விழுக்காடும் முடிக்கப்பட்டுள்ளது. 1986-87-ல் மொத்தம் ரூ. 191.38 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட மொத்த தொகை சுமார் ரூ. 8.60 கோடிகள்.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் நிறைவுற்றால், சென்னை நகரின் குடிநீர் வளம் தற்போதைய 67 எல்.பி.சி.டி.-யிலிருந்து கி.பி. 2000 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் ஏழு மில்லியன் மக்கள் தொகைக்கு 145 எல்.பி.சி.டி.யாக உயரும்.

**காவிரி நீர்ப் பிரச்சினை:**

23—11—1985 அன்று தமிழக முதல்வருக்கும் கர்நாடக முதல்வருக்குமிடையே சென்னையில் இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. மத்திய நீர்வளத் துறை அமைச்சர்

அவர்கள் 16—6—1986-ல் பெங்களூரில் படுகை மாநில முதலமைச்சர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். இக்கூட்டத்தில் கடந்த 16 ஆண்டுகளாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயனளிக்கவில்லை என்றும், எனவே 1956 ஆம் ஆண்டு பன்மாநில நீர்தாவாச் சட்டத்தின்படி, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு நடுவர் மன்றம் அமைக்க, விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அமைச்சர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதைத் தொடர்ந்து 6—7—1986 அன்று தமிழக அரசிடமிருந்து மத்திய நீர்வளத்துறைக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. இக்கோரிக்கையின் மேல் நடவடிக்கை எடுத்து நடுவர் மன்றம் விரைவில் அமைக்கும்படி பாரதப் பிரதமரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமரிடம் இது குறித்து நேரடியாக 1986 அக்டோபர் திங்களிலும், 1987 பிப்ரவரி திங்களிலும் நினைவூட்டியுள்ளார்.

**மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்புதல் :**

மத்திய அரசால் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாட்டின் வறண்ட பகுதிகளுக்கு நீர்ப் பாசனம் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக, கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் சில ஆறுகளின் உபரி நீரைத் திருப்பி விடுவது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த, தமிழக முதல்வர் கேரள முதல்வருக்கு 1982-ல் கடிதம் எழுதினார்.

இது குறித்து தமிழகத் தலைமைச் செயலர் கேரளத் தலைமைச் செயலருடன் ஜூன் 1986-ல் பேச்சு வார்த்தை நடத்தினார். இது தொடர்பாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் 9—3—1987 அன்று மத்திய நீர்வள அமைச்சர் சென்னையில் மத்திய நீர்வளக் குழுவின் ஒப்புதலுக்காக நிலுவையிலுள்ள திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலின்போது, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை திசை திருப்பி தமிழகத்திற்கு விடுவது குறித்து விவாதிக்க சம்பந்தப்பட்ட முதல்வர்களின் கூட்டம் ஒன்றை தாம் கூட்டுவதாக உறுதியளித்துள்ளார்.

**தேசிய நெடுநோக்குத் திட்டம் :**

தேசிய நெடுநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியான தீபகற்ப நதிகளின் வளர்ச்சித் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை தேசிய நீர் வளர்ச்சிக் குழு முதற்கட்டமாக மேற்கொண்டுள்ளது.



டிசம்பர் 1986-ல் நடந்த 5-வது கூட்டத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரிநீரைத் திருப்புவது பற்றிய ஆய்வுப் பணிகளை 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும், இதற்குத் தேவையான நிதி வசதி அளிக்கப் படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**பருவ நிலைகள், 1986-87.**

1986-87 ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை காவிரியின் மேல் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், பெரியார், தாமிரபரணி, கோதையாறு, பரம்பிக்குளம்-ஆழியாறு ஆகிய நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் சராசரிக்கும் குறைவாக இருந்தது. தென்மேற்கு பருவ காலத்தில் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீர் வரத்து சராசரியைவிட 50 விழுக்காடு குறைவாக இருந்தது. பவானிசாகர், சாத்தனூர், பேச்சிப்பாறை, பெருஞ்சானி, பெரியாறு ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர்வரத்து சராசரியைவிட 50 முதல் 75 விழுக்காடு வரை குறைவாக இருந்தது. அமராவதி நீர்த்தேக்கம் ஆகஸ்டு 1986-லும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் செப்டம்பர் 1986-லும், சாத்தனூர் நீர்த்தேக்கம் நவம்பர் 1986-லும் வழிந்தோடியது. இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் அடையப்பெற்ற மிக அதிகமான கொள்ளளவு, அதன் முழுக் கொள்ளளவான 93.47 டி.எம்.சி.-யில் 2/3 பங்கே ஆகும். பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்த் தேக்கங்களின் கொள்ளளவும் 65 விழுக்காடு வரை இருந்தாலும் மற்ற பல நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 50 விழுக்காடு வரை கூட நிரம்பவில்லை.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் வழக்கமாக திறக்கவேண்டிய தேதியான ஜூன் 12 அன்று கொள்ளளவு 4.9 டி.எம்.சி.யே இருந்ததால் பாசனத்திற்காக 21—8—1986 அன்றுதான் திறக்கப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட நாளிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் தேதி நீண்ட நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது இந்த ஆண்டே ஆகும். மிகத் தாமதமாக பாசனத்திற்காக திறக்கப்பட்டதால் குறுவைப் பயிர் கைவிடப்பட்டது. அதற்கு பதிலாக 11.5 இலட்சம் ஏக்கரில் ஒரு போக பயிர் மட்டும் பயிரிடப்பட்டது. முறைப்பாசனம் ஆரம்ப காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டது. டெல்டா பகுதியில் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் முதல் பகுதியில் பெய்த மழையினால் மேட்டூர்

நீர்த்தேக்கத்தில் ஓரளவிற்கு நீர் சேமிக்க முடிந்தது. 1987 சனவரி திங்களிலும், பிப்ரவரி திங்களிலும் 5 டி.எம்.சி. தண்ணீர் வீதம் கர்நாடகத்திலிருந்து காவேரியில் திறந்து விடப்பட்டது. மார்ச்சு திங்களில் 3 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட்டது. வறட்சி நிலைமையைக் கருத்தில் கொண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கீழுள்ள மேட்டூர் கால்வாய்கள், புதிய கட்டளை மேல் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய்களுக்கு பாசனத்திற்காக 5—10—1986 முதல் தண்ணீர் அனுப்பப்பட்டது (வழக்கமாக திறக்கப்படும் தேதி ஆகஸ்டு 1).

பவானிசாகர் பிரதான கால்வாய் முதல்முறை பாசனத்திற்காக 7—8—1986 அன்று திறக்கப்பட்டது. நீர்த்தேக்கத்தில் குறைவான கொள்ளளவே இருந்ததால் முறைப் பாசனம் அமுல்படுத்தப்பட்டது. பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் இருக்கும் கொள்ளளவை ஈடு செய்வதற்காக மின் நீர்த்தேக்கத்திலிருந்து 1,5 டி.எம்.சி. தண்ணீர் அளிக்கப்பட்டது. பயிரிடப்பட்ட பயிர்களைக் காப்பதற்காக பாசனத்திற்குத் தண்ணீர் அளிப்பது நீட்டிக்கப்பட்டது. 26—1—1987 வரை தண்ணீர் விட்டுவிட்டு அனுப்பப்பட்டது. இப்போது இருக்கும் நிலையில் பவானி பிரதான வாய்க்கால் இரண்டாம் முறை சாகுபடிக்காக திறக்க இயலாது.

அமராவதி நீர்த்தேக்கம், பெரியாறு—வைகை நீர்த்தேக்கம், பாபநாசம் நீர்த்தேக்கம் ஆகியவற்றின் கீழுள்ள பாசனத்திற்கும் தண்ணீர் அனுப்புவதில் சிரமங்கள் ஏற்பட்டன. ஆரம்ப காலத்திலிருந்தே முறைப்பாசனம் அமுல்படுத்தப்பட்டு இருக்கும் தண்ணீர் பாசனத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அமராவதி நீர்த்தேக்கம் பாசனத்திற்காக 15—8—1986 அன்று திறக்கப்பட்டது. நீர்த்தேக்கத்தில் கொள்ளளவு மிகவும் குறைவாக இருப்பதால் தண்ணீர் பாசனத்திற்காக 31—1—1987 வரை தான் கொடுக்க முடிந்தது.

பெரியாறு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவும், வைகை நீர்த்தேக்கத்தில் உள்ள பெரியாறு நீர் வரவு வைப்பும் மோசமாக இருந்ததால் பெரியாறு பிரதான கால்வாய் திறக்கப்பட வேண்டிய தேதியான 1—5—1986 அன்று இருபோக பாசனத்திற்காக திறக்கப்படவில்லை. 15—8—1986 அன்று ஒருபோக





பாசனத்திற்காகவும் திறக்கப்படவில்லை. பெரியாறு பிரதான கால்வாய் ஒருபோக பாசனத்திற்காக 1—9—1986 முதல் திறந்து விடப்பட்டது. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு மோசமாக இருந்ததால் தண்ணீர் 5—1—1987 வரைதான் அனுப்ப முடிந்தது.

தாமிரபரணி ஆற்றின் கீழ் கடைசியில் உள்ள அணைக்கட்டின் கீழுள்ள 10,000 ஏக்கரில் 1—4—1986 முதல் 1—8—1986 வரை 'அட்வான்ஸ் கார்' பயிரிட அனுமதி அளிக்கப்பட்டது. மேலும் ஏழு கால்வாய்களின் கீழ் 40,000 ஏக்கரில் 30—6—1986 முதல் 'கார் பயிர்' பயிரிடுவதற்காக படிப்படியாக அனுமதி அளிக்கப்பட்டது. (மொத்தம் பதினொன்று கால்வாய்கள்) பாபநாசம் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு 18—11—1986 முதல் 'பிசானம் பயிருக்காக' தண்ணீர் அளிக்கப்பட்டது.

மணிமுத்தாறு பிரதான கால்வாயின் முதல் பகுதியில் உள்ள குளங்கள் பாசனம் பெறுவதற்காக 23—1—1987 முதல் திறந்து விடப்பட்டது.

பேச்சிப்பாறை-பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் கொள்ளளவு மிகவும் குறைவானதாக இருந்ததால் கோதையாறு, பட்டணங்கால் திட்டங்கள் பாசனத்திற்காக திறக்கப்படவில்லை. பயிரிடப்பட்டுள்ள பயிர்களை பாதுகாப்பதற்கு மட்டும் தண்ணீர் அனுப்பப்படுகிறது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் பாசனத்திற்காக 7—11—1986 முதல் திறக்கப்பட்டது.

சாத்தனூர் வலது கரை கால்வாய் பாசனத்திற்காக 9—10—1986 அன்று திறக்கப்பட்டது. சாத்தனூர் இடது கரை கால்வாய் 5—12—1986 அன்று திறக்கப்பட்டது.

பாம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் பாம்பிக்குளம் பிரதான கால்வாய் இரண்டாம் பகுதி பாசனத்திற்காக 29—8—1986 அன்று திறக்கப்பட்டது. 22—1—1987 முதல் 15 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து தண்ணீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. 15—9—1986 அன்று பாசனத்திற்காக சேதுமடைக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் 'பி' பிரிவு,

பொள்ளாச்சி கால்வாய் 'ஏ' பிரிவு ஆகியவைகள் திறக்கப்பட்டு 28—1—1987 முதல் 15 நாட்களுக்கு தண்ணீர் நீடிப்பு செய்யப்பட்டது.

கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை இயல்பைவிட குறைவாக இருந்தது.

வடகிழக்கு பருவ மழையை நம்பியுள்ள சில சிறிய நீர்த் தேக்கங்கள் பாசனத்திற்காக திறந்துவிடப்பட முடியவில்லை.

**சிறு பாசனம்.**

**1. சிறப்பு சிறுபாசனம் :**

1986-87 ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத்திற்காக ரூ. 218.73 இலட்சமும், தூர்வாரி புனரமைக்கும் பணிக்கு அடையாள தொகையாக ரூ. 0.01 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 13 பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இப்பணிகள் முடிவடையும்போது 1,550 ஹெக்டேர் நிலங்கள் கூடுதலாகப் பாசன வசதி பெறும் 29 பணிகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்ற நிலையில் உள்ளன.

1987-88 ஆம் ஆண்டில் சிறப்பு சிறு பாசன திட்டத்திற்கு ரூ. 250 இலட்சம் செலவிட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் 15 பணிகள் முடிக்கவும் 1,200 ஹெக்டேர் கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**2. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ஏரிப்பாசன புத்தாக்க திட்டம் :**

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன், 200 ஹெக்டேருக்கு குறைவான ஆயக்கட்டுடைய, மழைநீரை எதிர்பார்த்துச் செயல்படும் 150 ஏரிகளை நவீனப்படுத்தும் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து இத்திட்டத்திற்கு 25 மில்லியன் இ.சி.யூ. (சுமார் 27.60 கோடி ரூபாய்) உதவியாக கிடைக்கும். இத்திட்டத்தில் மாநில அரசின் செலவு 16.30 மில்லியன் இ.சி.யூ. (சுமார் ரூ. 17.99 கோடி) ஆகும். இந்தத் திட்டம் செங்கல்பட்டு,



வட ஆற்காடு, தென்னாற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன்முத்து ராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 903.90 இலட்சம் செலவில், 44 வேலைகள் செய்து முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக 931.04 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். 1987-88 ஆம் ஆண்டிற்காக ரூ. 800.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. தீவிரப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம் :**

40 ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை பொதுப்பணித்துறை மேற்கொள்ளுகிறது. 40 ஹெக்டேருக்கு குறைவான ஆயக்கட்டு உள்ள ஏரிகள், தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. அவற்றைத் தரப்படுத்தும் பணியை பொதுப்பணித்துறை மேற்கொள்ளுகிறது. அதேபோல் முன்னாள் ஜமீனைச் சார்ந்த ஏரிகளையும் பொதுப்பணித்துறை தரப்படுத்துகிறது.

1987-88 ஆம் ஆண்டில் பொதுப்பணித் துறை ஏரிகளுக்கு ரூ. 70 இலட்சமும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 20 இலட்சமும், முன்னாள் ஜமீன் ஏரிகளுக்கு ரூ. 90 இலட்சமும் செலவிட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

**4. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் :**

"ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்"— நிலமற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், நிலையான பாசன உடைமைகளை உருவாக்கவும் நோக்கமாக கொண்டதாகும்.

பொதுப்பணித் துறை, இத்திட்டத்தின் மூலம், புதிய குளங்கள் அமைத்தல், குட்டைகள் அமைத்தல், அணைகள் கட்டுதல், வாய்க்கால்களை திருத்தியமைத்தல், நீர்ப்பாசன ஆதாரங்களைச் சீரமைத்தல் போன்ற வேலைகளை எடுத்து செயல்படுத்தி வருகிறது. மைய அரசின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

[1987 ஏப்ரல் 29

1986-87 ஆம் ஆண்டில் 11,994 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதியும், 25,005 ஹெக்டேர் நிலங்கள் பாசன உறுதியும் பெறுகின்றன.

1987-88 ஆம் ஆண்டில் சுமார் 10 கோடி மதிப்புள்ள வேலைகளை செயல்படுத்தவும், அதனால் 57.56 இலட்சம் மனித நாட்களுக்கு நிலமற்றோர்க்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும், 1,822 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதியும், 5,183 ஹெக்டேர் நிலங் களுக்கு பாசன உறுதியும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் நிலநீர் ஆய்வு.

நிலத்தடி நீர் வளத்தை அதிக அளவில் உபயோகப்படுத்தி வரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். ஏறத்தாழ 10.88 இலட்சம் கிணறுகள் 31—10—1986 வரை மின் விசை வசதி யளிக்கப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள மின்விசையளிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

50 ஆண்டுகளின் சராசரி மழையளவுப்படி தமிழகத்தில் சராசரி ஆண்டு மழையளவு 1063.00 மில்லி மீட்டராகும். இந்த மழையானது வடகிழக்குப் பருவக் காற்றினாலும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) மற்றும் தென்மேற்குப் பருவக் காற்றி னாலும் (ஜுன் முதல் செப்டம்பர் வரை) பெறப்படுகின்றது.

இந்திய துணைக்கண்டத்தின் ஒரு பகுதியான தமிழகம் 73 விழுக்காடுகள் கடினப்பாறைப் பகுதிகளை உள்ளடக்கி யுள்ளது. மீதமுள்ள 27 விழுக்காடுகள் படிவுப்பாறைகளாக கடலோரப் பகுதிகளில் காணப்படுகின்றது. இப்படிவுப்பாறைப் பகுதிகளில் நிலநீர் வளத்திற்கு அதிக அளவில் வாய்ப்பிருக் கின்றது. நிலநீர் பெருக்கத்திற்கு அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வு இம்மாநிலத்திற்கு அத்யாவசியமாகத் தேவைப்படுகிறது.

பொதுப்பணித் துறை 1965 ஆம் ஆண்டு நிலநீர் ஆய்வினை மேற்கொண்டது. பின்னர் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பகுதிகளில் ஆற்றுப்படுகை வாரியான நிலநீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1. கொரட்டலையாறு மற்றும் ஆரணியாற்றுப்படுகை.
2. பாலாற்றுப் படுகையின் ஒரு பகுதி.
3. நெய்வேலிப் பகுதி.
4. காவிரி வடிநிலப் பகுதி



1987 ஏப்ரல் 29]

முன்பு மேலோட்டமாக நிலநீர் ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் தற்பொழுது இந்த நிலநீர்த் துறையானது நுண்ணிய அளவில் கிராமவாரியான நிலநீர் ஆய்வை மேற்கொண்டு வருகின்றது. இந்நுண்ணிய ஆய்வு ஆரம்பத்தில் நிலநீர் பெருவாரியாக எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் முடிக்கப்பட்டு மற்ற பகுதிகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

நிலத்தடி நீர் வளம் ஆற்று துணைப்படுகை வாரியாக கணக்கிடப்பட்டு இருப்பில் உள்ள வளத்தை ஆற்று துணைப் படுகைகளில் அமைந்துள்ள கிராமங்களுக்கு சிறுபாசன திட்டங்களுக்காக பங்கிட்டு ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 378 ஒன்றியங்கள் இருக்கின்றன. முதல் மதிப்பீட்டின்படி 180 ஒன்றியங்கள் அதிக அளவில் நிலத்தடி நீரை எடுத்து உபயோகப்படுத்திய ஒன்றியங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து ஆராய்ச்சிக் குழுவின் அளவீட்டின்படி நிலத்தடி நீர் திரும்பவும் மதிப்பிடப்பட்டது. இதன்படி 80 ஒன்றியங்கள் கருமை நிற ஒன்றியங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன (அதாவது 80 விழுக்காடுக்கு மேல் நிலத்தடி நீரை எடுக்கும் ஒன்றியங்கள்), 113 ஒன்றியங்கள் சாம்பல் நிற ஒன்றியங்களாகவும் (அதாவது 60 விழுக்காடுக்கு மேலும் 80 விழுக்காடுக்குள்ளும் நிலத்தடி நீரை எடுத்தல்). மீதம் உள்ள ஒன்றியங்கள் வெள்ளை நிற ஒன்றியங்களாகவும் (அதாவது 60 விழுக்காடுக்குள் நிலத்தடி நீரை எடுத்தல்) பிரிக்கப் பட்டிருக்கின்றன.

தற்பொழுது 18 ஒன்றியங்கள் மட்டும் கருமை நிறப் பகுதிகளாக இருக்கின்றன. மேற்கொண்டு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இவைகள் தவிர கீழ்க்கண்ட தனி ஆய்வுகள் இத்துறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1. தூய்மைக்கேடு ஆய்வு:

நிலநீரின் தூய்மைக் கேடு, அதற்குரிய காரணம், இவைகளைக் கண்டறிவதற்காக வட ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய பாலார் ஆற்றுப் படுகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகள் கண்டறியப்படுகின்றன. இது போன்ற ஆய்வுகள் மாநிலத்தில் உள்ள ஏனைய ஆற்றுப் பகுதிகளிலும் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

**2. நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் இணைந்து செயல்படும் திட்டம்:**

நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் இரண்டையும் இணைத்து செயல்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டம், தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வு மூலம் நல்ல பலன்கள் அறியப் படுகின்றன. இதுபோன்ற ஆய்வு தென் ஆற்காடு, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3. செயற்கை முறை நீர்ப் பெருக்கம்:**

நிலநீர் அதிகம் எடுக்கப்படுவதால் நீர்மட்டம் தாழ்ந்துள்ள நீர்த் தாங்கிகளை வீணாக ஓடும் நீர் அல்லது தேவைக்கு மேலாக உள்ள நீரைக் கொண்டு செயற்கை முறை நீர்ப் பெருக்கம் ஏற்படுத்தப் பயன்படுகின்றது. மாநிலத்தில் நான்கில் மூன்று பங்கு கடினப் பாறைகளால் அமைந்துள்ளது. நிலநீரின் சேர்க்கை உபயோகத்திற்கு மேல் உள்ளதால் இதைக் கவனத்தில் கொண்டு செயற்கை முறை நீர் பெருக்கும் திட்டம் வட ஆற்காடு, தென்னாற்காடு மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற் கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும் கசிவு நீர்க்குட்டைகளில் ஏற்படும் நிலநீர் ஊற்று வளத்தினைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது இரண்டு கசிவு நீர்க்குட்டைகள் தேர்ந்தெடுக்கப் பட்டு ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு சுமார் 36 கசிவு நீர்க்குட்டைகள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளின் ஆய்வு முன்னேற்றத்தில் இருக்கிறது.

**4. ஆலோசனைப் பணி:**

பொதுப் பணித் துறையின் நிலநீர்ப் பிரிவில், நிலநீர் ஆலோசனைப் பணியின் கீழ் கிணறுகள் வெட்டவும், துளைக் கிணறுகள் அமைக்கவும் மற்றும் கிணறுகளை ஆழப்படுத்தவும் நில பௌதிக ஆய்வின் மூலம் சாதகமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆலோசனைப் பணிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் பெருவாரியான விவசாயிகள் பயனடைகின்றனர். இந்த நிலநீர் ஆலோசனைப் பணி குறைந்த செலவில் நடத்தப்படுகின்றது. இந்தப் பணி வரும் ஆண்டுகளில் பெருமளவில் மேற்கொள்ளப்படும்.



**5. கடல் நீர் உட்புகுதல் கண்காணிப்பு:**

இத்துறை பம்பாய் பாபா அணுமின் நிலைய ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து சென்னை மீஞ்சூர் கடலோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகும் நிலைமையை ஆராய்ந்து வருகிறது. இதில் தொடர்ந்து நீர்மட்ட ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலநீர்ப் பகுப்பு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. தற்பொழுது பாபா அணுமின் ஆராய்ச்சி மையம் இப்பகுதியில் நீர் மாதிரிகளைச் சேகரித்து ஐசோடோப் ஆய்வு நடத்தி வருகின்றது.

**6. நீர் ஆய்வு நிறுவனம்:**

தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆற்றுப் படுகைகளின் நீர் உள்ளாற்றலை கணித்து மதிப்பிடவும், பிற்காலத் தேவையை சமாளிக்க தகுதி வாய்ந்த நீர் மேலாண்மை செயற்குறிப்புகள் கொண்டு வரவும் நீர் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழக உதவியாக ரூ. 2,74,000 அமெரிக்க டாலர்களைப் பெற்றிருக்கிறது. மேலும், தமிழ்நாடு அரசு ரூ. 29 இலட்சம் வைகைப் படுகையின் விரிவான ஆய்வுக்காக தன் பங்காக வழங்கியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழகம் இத்திட்டத்தை 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 15 மாதங்களுக்கு விரிவாக்க முன்வந்திருக்கிறது. இந்த விரிவாக்கப்பட்ட திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழகம் 1,94,000 அமெரிக்க டாலர் களும், தமிழக அரசு ரூ. 27,70,000-ம் வழங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டின் வறட்சி பாதிக்கப்பட்ட ஆற்றுப் படுகைகளின் குடிநீர் வாய்ப்பு வளத்தைக் கண்டு பிடிக்கவும், நீர் வாய்ப்பு வளத்தை மதிப்பிடவும் இந்த நிறுவனம் ஏப்ரல் 1988 வரை விரிவாக்கப்பட்டிருக்கிறது.

வைகைப் படுகையின் நீர்வாய்ப்பு ஆய்வு பற்றி முதல் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கழகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட் டிருக்கிறது. இப்பொழுது பாம்பார், கோட்டைக்கரையார், குண்டார் மற்றும் தாமிரபரணி படுகைகளில் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 29

ஜனவரி 1987 முதல் ஏப்ரல் 1988 வரை உள்ள காலங்களில் நீர் வாய்ப்பு வள ஆய்வு, குடிநீர் பிரச்னையைச் சிறப்பாக மனதில் கொண்டு வெள்ளாறு, வைப்பார் மற்றும் நம்பியார் படுகைகளில் மேற்கொள்ளப்படும்.

இந்நிறுவனம், நான்கு கணிப்பங்களைப் (கம்ப்யூட்டர்) பெற்றிருக்கிறது. இந்தக் கணிப்பங்களைக் கொண்டு நிலநீர் விபரங்கள் ஆவணம் செய்யப்படுகின்றன. இவ்விவரங்களை தமிழ்நாடு நீர் வழங்குதல் மற்றும் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை முதலிய அமைப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன.

**நீர் ஆய்வு நிறுவனத்தின் நீர்வள ஆதார மேலாண்மை ஆய்வு:**

இந்த ஆய்வின் நோக்கம், பொன்னையார், பெரியார், வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் நீர்வள ஆதார மேலாண்மை ஆய்வு நடத்துதலும் கி.பி. 2011-க்குள் எல்லா கிராமங்களுக்கும் நீர்த் தேவையை மதிப்பிடுதலும், கிடைக்கக் கூடிய நீர்வள ஆதாரத்தை அதிகபட்சம் உபயோகப்படுத்த நீர் மேலாண்மைக் கொள்கைகளை ஏற்படுத்துதலும் ஆகும். இதற்காக சர்வதேச வளர்ச்சிக் கழகம், 1,318,000 அமெரிக்க டாலர்கள் இந்தத் திட்டத்திற்கு வழங்கியிருக்கிறது. தேசிய ஒத்த நிலை ரூ. 60,90,000-ஐத் தன் பங்கீடாக வழங்கியிருக்கிறது. இத்திட்டத்தின் காலம், செப்டம்பர் 1986-லிருந்து ஆகஸ்டு 1988 வரை இரண்டு வருடங்களாகும். இரண்டு கணிப்பங்களுக்கும், 8 குறுகிய கால கலந்தறியதற்குரியர்களும் மற்றும் 2 நீண்ட கால கலந்தறியதற்குரியர்களும் ஐக்கிய நாடுகளிலிருந்து இந்தத் திட்டத்திற்காக அமர்த்தப்படவிருக்கிறார்கள். இப்பணி முன்னேற்றத்தில் இருக்கிறது.

**7. நீர்நிலை அறிக்கை வெளியீடு:**

ஒவ்வொரு மாதமும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அறியப்படும், நீர்மட்ட ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிய புத்தக வடிவ அறிக்கை தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகிறது.

**திட்ட ஆய்வு.**

பொதுப்பணித் துறையில் பாசனத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளை கவனிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் பெரிய, நடுத்தர, சிறிய மற்றும்



1987 ஏப்ரல் 29]

சிறப்பு சிறுபாசனத் திட்டங்களை ஆய்வு செய்வதுடன் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்படுகைகளில் உபரியாக உள்ள நீரின் அளவைக் கணக்கிட ஓடைகள் மற்றும் ஆறுகளில் நீரளவைகள் எடுக்கும் பணிகளையும் செய்கின்றது. இதைத் தவிர கண்மாய் சீரமைப்புத் திட்ட ஆய்வுப் பணிகளும் இந்த ஆய்வுப் பிரிவுகளின் கீழுள்ளது. தற்சமயம் ரூ. 326.73 கோடி மதிப்புள்ள 4 நடுத்தரப் பாசனத் திட்டங்களும் 37 சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன. இதைத் தவிர, ரூ. 119.32 கோடி மதிப்புள்ள 9 முதல்நிலை திட்ட அறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தவிர, மொத்தம் சுமார் ரூ. 186 கோடி மதிப்புள்ள 39 நீர்ப் பாசனத் திட்டங்களின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. மற்றும் பல திட்டங்கள் ஒவ்வொரு தலங்களிலும் உபரியாக உள்ள நீரின் அளவை பொறுத்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளின் முன்னோடி ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆய்வு செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ள சில முக்கிய திட்டங்கள் கீழ்வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. (ரூ. கோடி) |
|---|---|
| 1. கோதையார் பாசன முறையை நவீனப்படுத்தல் | 34.54 |
| 2. நங்காஞ்சியார் நீர்த்தேக்கத் திட்டம் | 16.35 |
| 3. கொட்டரை நீர்த்தேக்கத் திட்டம் | 16.47 |
| 4. இருக்கன்குடி நீர்த்தேக்கத் திட்டம் | 19.00 |
| 5. பொன்னியார் பாசனமுறையை நவீனப்படுத்துதல் | 25.40 |
| 6. சிறுமலயார் நீர்த்தேக்கத் திட்டம் | 16.05 |
| 7. அடவிநைனார்கோயில் நீர்த்தேக்கத் திட்டம் | 25.80 |
| 8. நிலையூர் கால்வாய் மேம்படுத்துதல் | 18.07 |
| 9. மூலவைகை நீர்த்தேக்கத் திட்டம் | 48.95 |
| 10. அய்யார் நீர்த்தேக்கத் திட்டம் | 17.20 |

[1987 ஏப்ரல் 29

இவை தவிர கீழ்பவானி பாசன அமைப்பு மற்றும் தாமிரபரணி மணிமுத்தாறு பாசன அமைப்பை நவீனப்படுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் ரூ. 5.99 கோடி மதிப்புள்ள 50 சிறுபாசனத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மேலும் சுமார் ரூ. 10.76 கோடி மதிப்புள்ள 105 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் ஆய்வில் உள்ளன.

### கட்டடங்கள்.

மாநில அரசின் நில வளர்ச்சி உட்பட பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து கட்டடங்கள் கட்டுவது கட்டடப் பிரிவின் முக்கியப் பொறுப்பாகும். மாநில அரசின் கட்டடங்களைப் பராமரிப்பதோடு அவற்றிற்கான பழுதுபார்ப்புப் பணிகளையும் இப்பிரிவு கவனித்து வருகிறது. மத்திய அரசு துறைகள், அரசுத்தன்மை வாய்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், தொழிலாளர் காப்புறுதிக் கழகம், ஒழுங்கு முறை அங்காடிக் குழுக்கள், உள்ளாட்சி நூலக ஆணைக் குழு ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டும் பணிகளையும் முகைமை முறையில் மேற்பார்வைக் கட்டணம் வசூலித்து இப்பிரிவு மேற்கொள்கிறது.

இப்பொருள் தொடர்பான ஆய்வுக்குறிப்பு பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. 1986-87 கால அளவில் துறை முடித்துள்ள பணிகள் தற்போது நடைபெற்று வரும் பணிகள் அனுமதிக்கப் பட்டு நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகள் ஆகியவற்றின் விவரங்களை அது காட்டுகிறது. 1985-86 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும் ரூ. 3,503.843 இலட்ச ரூபாய் செலவில் தொடங்கப்பட்ட பணிகள் 1986-87 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தம் ரூ. 8,338.58 இலட்சம் ரூபாய் செலவாகக்கூடிய பணிகள் இவ்வாண்டில் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. ரூ. 4,497.10 இலட்சம் ரூபாய் செலவு ஆகக் கூடிய பணிகளுக்கு இவ்வாண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்தின் தலைமையிட மான சிவகெங்கையிலும், காமராஜர் மாவட்டத்தின் தலைமையிட மான விருதுநகரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமை யிடமான இராமநாதபுரத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்



1987 ஏப்ரல் 29]

தொகுதிகளையும், குடியிருப்புகளையும் கட்டும் பணியைப் பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவு ஏற்றுக்கொண்டுள்ளது.

அண்ணா மாவட்டத்தின் தலைமையிடமான திண்டுக்கல்லுக்கு பெருந்திட்டம் தயாரிக்கும் பணி முடிவுறும் நிலையிலுள்ளது. ஏறத்தாழ ரூ. 4.40 கோடிக்கான முதனிலை வேலைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

